உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவசமயாசாரியர்களருளிச்செய்த

# தேவாரம் திருவாசகமுதலிய தமிழ்வேதத் திருமுறைத்திரட்டு.

இது

பன்னிரு திருமுறைகளினின்றும் முக்கியமானவைகளை
சமயாசாரிய சரித்திரசங்கிரகம், திருப்புகழ், திருவகுப்பு
முதலியவைகளுடன் திரட்டப்பட்டு

சென்னை புரசை
ஸ்ரீகணேச அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

1910

OF THE REGISTRAR ... 12 APR 1910 ... MADRAS.
126
1910/11
1685
1685

Q23: 417x1
N10

118905



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

சந்திர மௌலீசரது சரணாரவிந்தத்தை சதாகாலமுந் தியானிக்கும் பெரும்பாக்கியம்பெற்ற பரமசாம்பவ சிகாமணிகளே !

தமிழ்மொழியின் மாத்திரம் பரிசயமுடைய சைவர்க்கும், பிறர்க்கும், இகபர சாதனமாகவுள்ள பன்னிரண்டு திருமுறைகளாந் திருநெறித் தமிழ்களுள், தமிழ் வேதங்களாகிய தேவார, திருவாசகங்களை நித்திய பாராயணஞ் செய்பவர்களுக் குபயோக மாமாறு முக்கியமானவைகளையும், நால்வர் சரித்திரசங்கிரகமும் திரட்டி; மற்றைய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினோராந் திருமுறை, பெரியபுராணம் முதலிய பன்னிரண்டு திருமுறைகளினின்றுந் தோத்திரத்துக் குரியவற்றைச் சேர்த்து திருப்புகழ், திருவருட்பா முதலியவைகளுடன் சுமார் 244 - பக்கங்கொண்ட புத்தகமாக்குவித்து வெளியிட்டிருக்கின்றேம்; சம்பிரதாய வழுவின்றி நித்திய பாராயணஞ்செய்வோர்களுக் குபயோகப்படும் இத்திருமுறைத்திரட்டினை ஒவ்வொருவரும்பெற்றுப் பாராயணஞ்செய்து பசுபதிப்பெயரிய தனிமுதற் கடவுளின் சரணாரவிந்தத்துக் குவப்பச் செய்வீராக. இதனை எல்லாரும் வாங்கிப் படிக்கவேண்டுமென்னுங் கருத்தா லிதன்விலையை 8 - அணாவாகக் குறைத்திருக்கின்றேம்.

இப்புத்தகம் வேண்டுபவர் கீழ்க்குறிக்கும் விலாசதாரிடம் விலை அணா 8-க்குப் பெற்றுக்கொள்ளலாம். வி. பி. மார்க்கமாயும் அனுப்பப்படும். போஸ்டேஜ் பிரத்தியேகம்.

☞ விலாசம்:—மானேஜர்,
"கணேசப்ரெஸ்,"
வேப்பேரி N. C.
சென்னை

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தமிழ்வேதத் திருமுறைத் திரட்டு.

## அட்டவணை.

திருவலிவலம் - வியாழக்குறிஞ்சி.
பிடியதனுருவுமை 1

திருக்கடவூர் - திருக்குறுந்தொகை.
தக்கடம்பனை 1

திருக்கோழம்பம் - திருக்குறுந்தொகை.
சமரசூலன்மாலை 2

திருப்பிரமபுரம் - நட்டபாடை.
தோடுடையசெவியன் 2

திருவதிகை வீரட்டானம் - கொல்லி.
கூற்றாயினவாறு 3

திருவெண்ணெய்நல்லூர் - இந்தளம்.
பித்தாபிறைசூடி 4

திருவாலவாய்ப்பதிகம் - காந்தாரம்.
மந்திரமாவதுநீறு 5

திருப்பஞ்சாக்கரப்பதிகம் - காந்தாரபஞ்சமம்.
துஞ்சலுந்துஞ்சலிலாத 5

நமச்சிவாயத்திருப்பதிகம் - கௌசிகம்.
காதலாகிக்கசிந்து 6

நமச்சிவாயத்திருப்பதிகம் - காந்தாரம்.
சொற்றுணைவேதியன் 7

திருப்பாண்டிக்கொடுமுடி - பழம்பஞ்சுரம்.
மற்றுப்பற்றெனக் 8

திருத்தொண்டத்தொகை - கொல்லிக்கௌவாணம்.
தில்லைவாழந்தணர் 9

### திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்
### முதற்றிருமுறை.

திருவலிதாயம் - நட்டபாடை.
பத்தரோடுபலரும் 10

திருவேணுபுரம் - நட்டபாடை.
வண்டார்குழலரிவை 11

திருவண்ணாமலை - நட்டபாடை.
உண்ணாமுலையுமை 12
திருவீழிமிழலை - நட்டபாடை.
சடையார்புனல் 12
திருக்கோலக்கா - தக்கராகம்.
மடையில்வாளை 13
திருக்குரங்கணின்முட்டம் - தக்கராகம்.
விழுநீர்மழுவாட் 13
திருப்பாச்சிலாச்சிராமம் - தக்கராகம்.
துணிவளர்திங்கள் 14
திருநள்ளாறு - பழந்தக்கராகம்.
போகமார்த்தபூண் 15
திருவேட்களம் - பழந்தக்கராகம்.
மறையுடையாய 16
திருவோத்தூர் - பழந்தக்கராகம்.
பூத்தேர்ந்தாயன 17
திருவேற்காடு - பழந்தக்கராகம்.
ஒள்ளித்துள்ள 17
திருக்கோளிலி - பழந்தக்கராகம்.
நாளாயபோகாமே 18
திருப்பழனம் - தக்கேசி.
வேதமோதிவெண்ணூல் 19
திருவண்ணாமலை - தக்கேசி.
பூவார்மலர்கொண் 19
திருஅச்சிறுபாக்கம் - குறிஞ்சி.
பொன்றிரண்டன்ன 20
கோயில் - குறிஞ்சி.
கற்றாங்கெரி 21
திருஅம்பர்மாகாளம் - குறிஞ்சி.
அடையார்புர 22
திருவாரூர் - குறிஞ்சி.
சித்தந்தெளிவீர் 23
திருவீழிமிழலை - குறிஞ்சி.
வாசிதீரவே 23
திருச்சிராப்பள்ளி - குறிஞ்சி.
நன்றுடையானை 24
திருவல்லம் - வியாழக்குறிஞ்சி.
எரித்தவன்முப்புர 25
திருநீலகண்டம் - வியாழக்குறிஞ்சி.
அவ்வினைக்கிவ்வினை 25
திருக்கழுமலம் - வியாழக்குறிஞ்சி.
பந்தத்தால்வந்தெப்பால் 26
திருவையாறு - மேகராகக்குறிஞ்சி.
புலனைந்தும்பொறி 27
திருப்பராய்த்துறை - மேகராகக்குறிஞ்சி.
நீறுசேர்வதோர் 28
திருத்தருமபுரம் - யாழ்மூரி.
மாதர்மடப்பிடியு 28

## இரண்டாந்திருமுறை.

திருமருகல் - இந்தளம்.
சடையாயெனுமால் 29
திருநல்லாறு - இந்தளம்.
ஏடுமலிகொன்றை 30
திருமறைக்காடு - இந்தளம்.
சதுரம்மறைதான் 31
திருப்பிரமபுரம் - சீகாமரம்.
எம்பிரானெனக் 31
திருச்சாய்க்காடு - சீகாமரம்.
மண்புகார்வான் 32
திருப்புள்ளிருக்குவேளூர் - சீகாமரம்.
கள்ளார்ந்தபூங் 33
திருமயிலாப்பூர் - சீகாமரம்.
மட்டிட்டபுன்னை 34
திரு ஆமாத்தூர் - சீகாமரம்.
குன்றவார்சிலை 35
திருப்புறவார்பனங்காட்டூர் - சீகாமரம்.
விண்ணமர்ந்தனமும் 35



திருப்பெரும்புலியூர் - காந்தாரம்.
மண்ணுமோர்பாக 36
திருவாரூர் - காந்தாரம்.
பவனமாய்ச்சோடையாய் 37
வேயுறுதோளி - பியந்தைக்காந்தாரம்.
வேயுறுதோளிபங்கன் 38
திருநெல்வாயில் - பியந்தைக்காந்தாரம்.
எந்தையீசனெம்பெருமான் 39
சீகாழி - நட்டராகம்.
நம்பொருண்மக்க 39
திருக்கோடிகா - நட்டராகம்.
இன்றுநன்று 40
திருவலஞ்சுழி - நட்டராகம்.
என்னபுண்ணியஞ் 41
[illegible] - செவ்வழி.
[illegible] 41

## மூன்றாந்திருமுறை.

கோயில் - காந்தாரபஞ்சமம்.
ஆடினாய்நறுநெய்யொடு 42
திருவாவடுதுறை - காந்தாரபஞ்சமம்.
இடரினுந்தளரினு 43
திருக்கொள்ளம்பூதூர் - காந்தாரபஞ்சமம்.
கொட்டமேகமழும் 44
திருக்கழுமலம் - கொல்லி.
மண்ணினல்ல 44
திருக்காளத்தி - கொல்லி.
சந்தமாரகிலொடு 45
திருவாலவாய் - கொல்லி.
மானின்னேர்விழி 46
திருவாலவாய் - கௌசிகம்.
செய்யனே திரு 47
வீடலாலவாயிலாய் 48
திருப்பாசுரம் - கௌசிகம்.
வாழ்கவந்தணர் 48
திரு[illegible] - பஞ்சமம்.
விடையவன்விண்ணுமு 49
திருச்செங்காட்டங்குடி -
பைங்கோட்டு 50
திருவேட்டக்குடி - பஞ்சமம்.
வண்டிரைக்குமலர்க் 51
திருக்காளத்தி - சாதாரி.
வானவர்கடானவர் 51
திருமாகறல் - சாதாரி.
விங்குவிளைகழனி 52
திரு[illegible] - சாதாரி.
[illegible] 53
திரு[illegible] - சாதாரி.
[illegible] 53
திரு[illegible]குன்றம் - சாதாரி.
முரசதிர்ந் 54
திருவாலவாய் - [illegible].
வேதவேள்வியை 55
திருப்பல்லவனீச்சரம் - [illegible].
பரசுபாணியர் 56
திருக்க[illegible] - திருவியமகம்.
உற்றுமைசேர்வது 56
திருவாலவாய் - திருவியமகம்.
ஆலநீழலுகந்த 57
சீகாழி - திருமாலைமாற்று.
யாமாமாநீயாமா 58
திருவீழிமிழலை - புறநீர்மை.
புள்ளித்தோலாடை 58
திருவாலவாய் - புறநீர்மை.
மங்கையர்க்கரசி 59
திருநல்லூர்ப்பெருமணம் - அந்தாளிக்குறிஞ்சி.
கல்லூர்ப்பெருமணம் 60
திருஞானசம்பந்தசுவாமிகள் புராணசாரம் 61-71

## திருநாவுக்கரசு சுவாமிகள்

### நான்காந்திருமுறை.


திருக்கெடிலவீரட்டானம் - காந்தாரம்.
சுண்ணவெண்சந்தன 72

திருவையாறு - காந்தாரம்.
மாதர்பிறைக்கண்ணி 73

திருவாரூர் - காந்தாரம்.
பாடிளம்பூதத்தினு 74

திருக்கழிப்பாலை - காந்தாரம்.
வனபவளவாய் 74

திருவொம்பம் - காந்தாரம்.
கரவாடும்வன்னெஞ் 75

திரு அங்கமாலை - சாதாரி.
தலையேநீவணங்காய் 76

திருப்பழனம் - பழந்தக்கராகம்.
சொன்மாலைபயில் 77

திருவையாறு - பழந்தக்கராகம்.
விடகிலேனடி 78

திருவாரூர் - சோமம்.
காண்டலேகருத்தாய் 79

திருவாரூர் - குறிஞ்சி.
முத்துவிதானம் 79

திருநேரிசை 80-84

திருவிருத்தம் 85-92


### ஐந்தாந்திருமுறை.


கோயில் - திருக்குறுந்தொகை.
அன்னம்பாலிக்கும் 93

திருவண்ணாமலை - திருக்குறுந்தொகை.
வட்டனைமதிசூடியை 94

திருவொற்றியூர் - திருக்குறுந்தொகை.
ஒற்றியூருமொளி 95

திருமயிலாடுதுறை - திருக்குறுந்தொகை.
கொள்ளுங்காதன் 95

திருவேட்களம் - திருக்குறுந்தொகை.
நன்றுநாடொறு 96

திருவாட்போக்கி - திருக்குறுந்தொகை.
காலபாசம்பிடித்தெழு 97

தனித்திருக்குறுந்தொகை.
மாசில்வீணையு 98


### ஆறாந்திருமுறை.


திருத்தாண்டகம்........................................100-115

ஸ்ரீதிருநாவுக்கரசு சுவாமிகள் புராணசாரம் 116-124


6 (9)



## ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள்

### ஏழாந்திருமுறை.


திருவெண்ணெய்நல்லூர் - இந்தளம்.
செய்யும்பாலும் 125

திருமுதுகுன்றம் - இந்தளம்.
மத்தயானையேறி 126

திருப்பாச்சிலாச்சிராமம் - தக்கராகம்.
வைத்தனன்றனக்கே 127

திருவொட்டியத்தான்குடி - தக்கராகம்.
பூணுவதோரரவம் 128

திருக்கலயநல்லூர் - தக்கராகம்.
குரும்பைமுலைமலர்க்குழலி 128

திருக்கோளிலி - பழந்தக்கராகம்.
நீளநினைந்தடியேன் 129

திருப்பழமண்ணிப்படிக்கரை - பழந்தக்கராகம்.
முன்னவன்எங்கள் 130

திருமழபாடி - பழந்தக்கராகம்.
பொன்னார்மேனி 131

திருக்காளத்தி - பழந்தக்கராகம்.
செண்டாடும்விடையாய் 131

திருக்குருகாவூர் - பழந்தக்கராகம்.
இத்தனையாமாற்றை 132

நமக்கடிகளாகியவடிகள் - கொல்லி.
பாறுதாங்கியகாடரோ 133

திரு...ர் - கொல்லி.
தம்மையேபுகழ்ந்திச்சை 134

திருப்பருப்பதம் - கொல்லி.
காருலாவியநஞ்சை 134

திருக்கச்சூர் ஆலக்கோயில் - கொல்லிக்கௌவாணம்.
முதுவாயோரிகதற 135

திருஆமாத்தூர் - கொல்லிக்கௌவாணம்.
காண்டனன்காண்டனன் 136

திருநாகைக்காரோணம் - கொல்லிக்கௌவாணம்.
பத்தூர்புக்கிரந்துண்டு 137

சார்த்திதரை - பழம்பஞ்சுரம்.
காட்டூர்க்கடலே 138

திருமுருகன்பூண்டி - பழம்பஞ்சுரம்.
கொடுகுவெஞ்சிலை 138

திருவாரூர் - பழம்பஞ்சுரம்.
பத்திமையுமடிமை 139

திருவாலங்காடு - பழம்பஞ்சுரம்.
முத்தாமுத்தித 140

திருவொற்றியூர் - தக்கேசி.
...க்குமெய்கொடு 140

திருப்புன்கூர் - தக்கேசி.
அந்தணாளன் 141

திருவாரூர் - தக்கேசி.
பொன்னுமெய்ப்பொருளும் 143

திருவெண்பாக்கம் - தக்கேசி.
ஆலந்தானுகந் 143

திருநாவலூர் - தக்கேசி.
திருவுமெய்ப்பொருளுஞ் 144

திருவாவடுதுறை - தக்கேசி.
கங்கைவார்சடையாய் 145

திருவாரூர் - காந்தாரம்.
கரையுங்கடலுமலையும் 147

திருவாவிக்கா - காந்தாரம்.
மறைகளாயினநான்கும் 147

திருவையாறு - காந்தாரபஞ்சமம்.
பரவும்பரிசொன்றறி 148

திருக்கேதாரம் - பழம்பஞ்சுரம்.
வாழ்வாவதுமாயம் 149

திருக்கழுக்குன்றம் - பழம்பஞ்சுரம்.
கொன்றுசெய்தகொடுமை 149

திருவாரூர் - புறநீர்மை.
அந்தியுங்கண்பகலும் 150
திருக்கூடலையாற்றூர் - புறநீர்மை.
வடிவுடைமழு 151
திருவன்பார்த்தான் பனங்காட்டூர் - சீகாமரம்.
விடையின்மேல் 151
திருப்பனையூர் - சீகாமரம்.
மாடமாளிகை 152
திருவெண்பாக்கம் - சீகாமரம்.
பிழையுளனபொறுத்திடுவர் 153
கோயில் - குறிஞ்சி.
மடித்தாடுமடிமை 154
திருவொற்றியூர் - குறிஞ்சி.
பாட்டும்பாடிப்பரவி 154
திருப்புக்கொளியூரவிநாசி - குறிஞ்சி.
எற்றான்மறக்கேன் 155
திருவாரூர் - செந்துருத்தி.
மீளாவடிமை 156
திருநொடித்தான்மலை - பஞ்சமம்.
தானெனைமுன்படைத்தான் 157
ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள்
புராணசாரம் 158-169


## ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள்

### எட்டாந்திருமுறை — (திருவாசகம்.)


நமச்சிவாயவாழ்க 170
திருச்சதகம்.
மெய்தானரும்பி 174
திருவெம்பாவை.
ஆதியுமந்தமும் 178
திருவம்மானை.
செங்கணெடுமாலும் 184
திருக்கோத்தும்பி.
பூவேறுகோனும் 185
திருத்தெள்ளேணம்.
திருமாலும் 186
திருச்சாழல்.
பூசுவதும்வெண்ணீறு 186
திருப்பூவல்லி.
இணையார்திருவடி 188
திருவுந்தியார்.
வளைந்ததுவில்லு 189
திருத்தோணோக்கம்.
பங்கயமாயிரம் 189
அன்னைப்பத்து.
வேதமொழியர் 190
குயிற்பத்து.
கீதமினியகுயிலே 191
திருப்பள்ளியெழுச்சி.
போற்றியென் 191
கோயின்மூத்ததிருப்பதிகம்.
உடையாளுன்றன் 192
அடைக்கலப்பத்து.
செழுக்கமலத்திரளன 193
அதிசயப்பத்து.
வைப்புமாடென்று 193
வாழாப்பத்து.
பாரொடுவிண்ணாய் 194
அருட்பத்து.
சோதியேசுடரே 195
திருக்கழுக்குன்றப்பதிகம்.
பிணக்கிலாதபெருந் 196





கண்டபத்து.
இந்திரியவயமயங்கி 197
பிரார்த்தனைப்பத்து.
கலந்துநின்னடியாரோ 198
குழைத்தபத்து.
கூறுநாவேமுதலாகிய 198
பிடித்தபத்து.
உம்பர்கட்கரசே 199
திருப்புலம்பல்.
பூங்கமலத்தயனொடு 200
எண்ணப்பதிகம்.
பாருருவாயபிறப் 201
திருவெண்பா.
வெய்யவினையிரண்டு 201
திருப்படையாட்சி.
கண்களிரண்டு 202
ஆனந்தமாலை.
மின்னேரனைய 202
அச்சோப்பத்து.
முத்திநெறி 203
திருக்கோவையார்.
திருவளர்தாமரை 204
ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள்
புராணசாரம் 205-209


## திருவிசைப்பா திருப்பல்லாண்டு.

### ஒன்பதாந்திருமுறை.


கோயில் - பஞ்சமம்.
ஒளிவளர்விளக்கே 210
திருப்பல்லாண்டு கோயில் பஞ்சமம்.
மன்னுகதில்லை 213


## திருமந்திரம்.

### பத்தாந்திருமுறை.


சிவனொடொக்குந்தெய்வம் 215-217


### பதினோராந்திருமுறை.


காரைக்காலம்மையார்.
கொங்கைதிரங்கி 218
அற்புதத்திருவந்தாதி.
பிறந்துமொழிபயின்ற 218
சேத்திரத்திருவெண்பா.
ஓடுகின்றநீர்மை 219
பொன்வண்ணத்தந்தாதி.
பொன்வண்ணம் 220
திருமுருகாற்றுப்படை.
குன்றமெறிந்தமையும் 220

பன்னிரண்டாந்திருமுறை.

பெரியபுராணம் ........................ 221-225

திருப்புகழ்.

| | | | |
|---|---|---|---|
| திருச்செந்தூர் | 226 | திருவொற்றியூர் | 230 |
| திருப்பழநி | 228 | திருமயிலை | 231 |
| சுவாமிமலை | 229 | இராமேச்சரம் | 232 |
| திருத்தணிகை | 229 | | |

திருவகுப்பு.

| | | | |
|---|---|---|---|
| சீர்பாதவகுப்பு | 233 | சிவகிரிவகுப்பு | 241 |
| வேல்வகுப்பு | 235 | திருச்செந்தில்வகுப்பு | 242 |
| மயில்வகுப்பு | 237 | திருப்பழனிவகுப்பு | 242 |
| கொலுவகுப்பு | 238 | திருப்பரங்கிரிவகுப்பு | 243 |

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
12 APR 1910
MADRAS.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருநெறித்தமிழ்வேதமாகிய

# தேவாரப்பதிகங்கள்.

திருவலிவலம் - பண் - வியாழக்குறிஞ்சி. (க - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

பிடியதனுருவுமைகொளமிகுகரியது
வடிகொடுதனதடிவழிபடுமவரிடர்
கடிகணபதிவரவருளினன்மிகுகொடை
வடிவினர்பயில்வலிவலமுறையிறையே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கடம்பூர் - பண் - திருக்குறுந்தொகை. (ரு - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

நக்கடம்பனைப்பெற்றவள்பங்கினன்
தென்கடம்பைத்திருக்கரக்கோயிலான்
தன்கடனடியேனையுந்தாங்குதல்
என்கடன்பணிசெய்துகிடப்பதே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கோழம்பம் - பண் - திருக்குறுந்தொகை. (ரு-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

சமரசூரபன்மாவைத்தடிந்தவேற்
குமரன்றாதைநற்கோழம்பமேவிய
அமரர்கோவினுக்கன்புடைத்தொண்டர்கள்
அமரலோகமதாளுடையார்களே.

திருச்சிற்றம்பலம்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

திருப்பிரமபுரம் - பண் - நட்டபாடை. (௧-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

தோடுடையசெவியன்விடையேறியோர்தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடிபூசியென்னுள்ளங்கவர்கள்வ
னேடுடையமலரான்முனைநாட்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௧)

முற்றலாமையிளநாகமோடேனமுளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகலனாப்பலிதேர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடையார்பெரியார்கழல்கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௨)

அருநெறியமறைவல்லமுனியகன்பொய்கையலர்மேய
பெருநெறியபிரமாபுரமேவியபெம்மானிவன்றன்னை
யொருநெறியமனம்வைத்துணர்ஞானசம்பந்தனுரைசெய்த
திருநெறியதமிழ்வல்லவர்தொல்வினைதீர்தலெளிதாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.



## திருநாவுக்கரசு நாயனார்.

திருவதிகைவீரட்டானம்-பண்-கொல்லி. (௪-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

கூற்றாயினவாறுவிலக்ககிலீர்
கொடுமைபலசெய்தனநானறியே
னேற்றாயடிக்கேயிரவும்பகலும்
பிரியாதுவணங்குவனெப்பொழுதுந்
தோற்றாதென்வயிற்றினகம்படியே
குடரோடுதுடக்கிமுடக்கியிட
ஆற்றேனடியேனதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே.

நெஞ்சமுமக்கேயிடமாகவைத்தே
னினையாதொருபோதுமிருந்தறியேன்
வஞ்சம்மிதுவொப்பதுகண்டறியேன்
வயிற்றோடுதுடக்கிமுடக்கியிட
நஞ்சாகிவந்தென்னைநலிவதனை
நணுகாமற்றுரந்துகரந்துமிடீர்
அஞ்சேலுமென்னீரதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே.

போர்த்தாயங்கோரானையினீருரிதோல்
புறங்காடரங்காநடமாடவல்லா
யார்த்தானரக்கன்றனைமால்வரைக்கீ
ழடர்த்திட்டருள்செய்தவைகருதாய்

வேர்த்தும்புரண்டும்விழுந்துமெழுந்தா
லென்வேதனையானவிலக்கியிடா
யார்த்தார்புனல்சூழதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## ஸ்ரீசுந்தரமூர்த்தி நாயனார்.

### திருவெண்ணெய்நல்லூர் - பண் - இந்தளம். (எ-ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

பித்தாபிறைசூடீபெருமானேயருளாளா
வெத்தான்மறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னை
வைத்தாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (௧)

நாயேன்பலநாளுநினைப்பின்றிமனத்துன்னைப்
பேயாய்த்திரிந்தெய்த்தேன்பெறலாகாவருள்பெற்றேன்
வேயார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாயாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (௨)

காரூர்புனலெய்திக்கரைகல்லித்திரைக்கையாற்
பாரூர்புகழெய்தித்திகழ்பன்மாமணியுந்திச்
சீரூர்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாரூரனெம்பெருமாற்காளல்லேனெனலாமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.



## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

### திருநீற்றுப்பதிகம். பண் - காந்தாரம். (௨ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

மந்திரமாவதுநீறுவானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறுதுதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறுசமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன்றிருவாலவாயான்றிருநீறே. (௧)

வேதத்திலுள்ளதுநீறுவெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறுபுன்மைதவிர்ப்பதுநீறு
வோதத்தகுவதுநீறுவுண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்ததிருவாலவாயான்றிருநீறே. (௨)

ஆற்றலடல்விடையேறுமாலவாயான்றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவும்பூசுரன்ஞானசம்பந்தன்
றேற்றித்தென்னனுடலுற்றதீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும் வல்லவர்நல்லவர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

### திருப்பஞ்சாக்கரப்பதிகம் - பண் - காந்தாரபஞ்சமம். (௩ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

துஞ்சலுந்துஞ்சலிலாதபோழ்தினு
நெஞ்சகநைந்துநினைமினாடொறும்
வஞ்சகமற்றடிவாழ்த்தவந்தகூற்
றஞ்சவுதைத்தனவஞ்செழுத்துமே. (௧)

மந்திரநான்மறையாகிவானவர்
சிந்தையுணின்றவர்தம்மையாள்வன
செந்தழலோம்பியசெம்மைவேதியர்க்
கந்தியுண்மந்திரமஞ்செழுத்துமே. (௨)

நற்றமிழ்ஞானசம்பந்தனான்மறை
கற்றவன்காழியர்மன்னனுன்னிய
அற்றமின்மாலையீரைந்துமஞ்செழுத்
துற்றனவல்லவரும்பராவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

நமச்சிவாயத்திருப்பதிகம்-பண்-கௌசிகம். (௩-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

காதலாகிக்கசிந்து கண்ணீர்மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது
வேதநான்கினு மெய்ப்பொருளாவது
நாதனாம நமச்சிவாயவே. (௧)

நம்புவாரவர் நாமநவிற்றிடில்
வம்புநாண்மலர் வார்மதுவொப்பது
செம்பொனார் திலகமுலகுக்கெலா
நம்பனாம நமச்சிவாயவே. (௨)



நந்திநாமநமச்சிவாயவென்னுஞ்
சந்தையாற்றமிழ்ஞானசம்பந்தன்சொற்
சிந்தையான்மகிழ்ந்தேத்தவல்லாரெல்லாம்
பந்தபாசமறுக்கவல்லார்களே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு நாயனார்.

நமச்சிவாயத்திருப்பதிகம்-பண்-காந்தாரம். (௪-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

சொற்றுணைவேதியன்சோதிவானவன்
பொற்றுணைத்திருந்தடிபொருந்தக்கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர்கடலிற்பாய்ச்சினு
நற்றுணையாவதுநமச்சிவாயவே. (௧)

பூவினுக்கருங்கலம்பொங்குதாமரை
யாவினுக்கருங்கலமரனஞ்சாடுதல்
கோவினுக்கருங்கலங்கோட்டமில்லது
நாவினுக்கருங்கலநமச்சிவாயவே. (௨)

மாப்பிணைதழுவியமாதோர்பாகத்தன்
பூப்பிணைதிருந்தடிபொருந்தக்கைதொழ
நாப்பிணைதழுவியநமச்சிவாயப்பத்
தேத்தவல்லார்தமக்கிடுக்கணில்லையே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

## ஸ்ரீசுந்தரமூர்த்தி நாயனார்.

### திருப்பாண்டிக்கொடுமுடி - பண் - பழம்பஞ்சரம். (எ-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

மற்றுப்பற்றெனக்கின்றிநின்றிருப்பாதமேமனம்பாவித்தேன்
பெற்றலும்பிறந்தேனினிப்பிறவாததன்மைவந்தெய்தினேன்
கற்றவர்தொழுதேத்துஞ்சீர்க்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
கற்றவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (௧)

ஓவுநாளுணர்வழியுநாளுயிர்போகுநாளுயர்பாடைமேற்
காவுநாளிவையென்றலாற்கருதேன்கிளர்புனற்காவிரிப்
பாவுதண்புனல்வந்திழிபரஞ்சோதிபாண்டிக்கொடுமுடி
காவலாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (௨)

கோணியபிறைசூடியைக்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
பேணியபெருமானைப்பிஞ்ஞகப்பித்தனைப்பிறப்பில்லியைப்
பாணுலாவரிவண்டறைகொன்றைத்தாரனைப்படப்பாம்பரை [மே.
நாணனைத்தொண்டனூரன்சொல்லிவைசொல்லுவார்க்கில்லைதுன்ப

திருச்சிற்றம்பலம்.

### திருத்தொண்டத்தொகை - பண் - கொல்லிக்கௌவாணம்.
### (எ-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

தில்லைவாழந்தணர்தமடியார்க்குமடியேன்
திருநீலகண்டத்துக்குயவனார்க்கடியே
னில்லையேயென்னாதவியற்பகைக்குமடியே
னிளையான்றன்குடிமாறனடியார்க்குமடியேன்



வெல்லுமாமிகவல்லமெய்ப்பொருளுக்கடியேன்
விரிபொழில்சூழ்குன்றையார்விறன்மிண்டர்க்கடியே
னல்லிமென்முல்லையந்தாரமர்நீதிக்கடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே. (௯)

பத்தராய்ப்பணிவார்களெல்லார்க்குமடியேன்
பரமனையேபாடுவாரடியார்க்குமடியேன்
சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார்க்குமடியேன்
திருவாரூர்ப்பிறந்தார்களெல்லார்க்குமடியேன்
முப்போதுந்திருமேனிதீண்டுவார்க்கடியேன்
முழுநீறுபூசியமுனிவர்க்குமடியே
னப்பாலுமடிச்சார்ந்தவடியார்க்குமடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே. (௧௦)

மன்னியசீர்மறைநாவனின்றவூர்ப்பூசல்
வரிவளையாண்மானிக்குநேசனுக்குமடியேன்
றென்னவனாயுலகாண்டசெங்கணார்க்கடியேன்
திருநீலகண்டத்துப்பாணனார்க்கடியே
னென்னவனாமரனடியேயடைந்திட்டசடைய
னிசைஞானிகாதலன்றிருநாவலூர்க்கோ
னன்னவனாமாரூரனடிமைகேட்டுவப்பா
ராரூரிலம்மானுக்கன்பராவாரே.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்

அருளிச்செய்த

# தேவாரப்பதிகங்கள்.

## முதற்றிருமுறை.

### திருவலிதாயம் - பண் - நட்டபாடை - க - ம் (திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

பத்தரோடுபலரும்பொலியம்மலரங்கைப்புனல்தூவி
யொத்தசொல்லியுலகத்தவர்தாந்தொழுதேத்தவுயர்சென்னி
மத்தம்வைத்தபெருமான்பிரியாதுறைகின்றவலிதாயஞ்
சித்தம்வைத்தவடியாரவர்மேலடையாமற்றிடர்நோயே. (௧)

படையிலங்குகரமெட்டுடையான்படியாகக்கனலேந்திக்
கடையிலங்குமனையிற்பலிகொண்டுணுங்கள்வனுறைகோயில்
மடையிலங்குபொழிலின்னிழல்வாய்மதுவீசும்வலிதாய
மடையநின்றவடியார்க்கடையாவினையல்லற்றுயர்தானே. (௨)



வண்டுவைகும்மணமல்கியசோலைவளரும்வலிதாயத்
தண்டவாணனடியுள்குதலாலருமாலைத்தமிழாகக்
கண்டல்வைகுகடற்காழியுண்ஞானசம்பந்தன்றமிழ்பத்துங்
கொண்டுவைகியிசைபாடவல்லார்குளிர்வானத்துயர்வாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

### திருவேணுபுரம் - பண் - நட்டபாடை. (க - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

வண்டார்குழலரிவையொடுபிரியாவகைபாகம்
பெண்டானெனமிகவானவன்பிறைச்சென்னிப்பெருமானூர்
தண்டாமரைமலராளுறைதவளந்நெடுமாடம்
விண்டாங்குவபோலும்மிகுவேணுபுரமதுவே. (௧)

படைப்புந்நிலையிறுதிப்பயன்பருமையொடுநேர்மை
கிடைப்பல்கணமுடையானிறைவிருப்புடையானூர்
குடைப்பாளையின்கமுகின்னெருபுன்னைமலர்நாற்றம்
விடைத்தே[illegible]ன்றல்மிகுவேணுபுரமதுவே. (௨)

வேதத்தொலியானம்மிகுவேணுபுரந்தன்னைப்
பாதத்தினின்மனம்வைத்தெழுபந்தன்றனபாட
லேதத்தினையில்லாவிவைபத்துமிசைவல்லார்
சேதத்தினையில்லார்சிவகதியைப்பெறுவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருவண்ணாமலை - பண் - நட்டபாடை. (௧-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

உண்ணாமுலையுமையாளொடுமுடனாகியவொருவன்
பெண்ணாகியபெருமான்மலைதிருமாமணிதிகழ
மண்ணார்ந்தனவருவித்திரண்மழலைம்முழவதிரு
மண்ணாமலைதொழுவார்வினைவழுவாவண்ணமறுமே. (௧)

தேமாங்கனிகடுவன்கொளவிடுகொம்பொடுதீண்டித்
தூமாமழைதுறுகன்மிசைசிறுநுண்டுளிசிதற
வாமாம்பிணையணையும்பொழிலண்ணாமலையண்ணல்
பூமாங்கழல்புனைசேவடிநினைவார்வினையிலரே. (௨)

வெம்புந்தியகதிரோனொளிவிலகும்விரிசார
லம்புந்திமூவெயிலெய்தவனண்ணாமலையதனைக்
கொம்புந்துவகுயிலாலுவகுளிர்காழியுண்ஞான
சம்பந்தன்றமிழ்வல்லவரடிபேணுதறவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருவீழிமிழலை - பண் - நட்டபாடை. (௧-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

சடையார்புனலுடையானொருசரிகோவணமுடையான்
படையார்மழுவுடையான்பலபூதப்படையுடையான்
மடமான்விழியுமைமாதிடமுடையானெனையுடையான்
விடையார்கொடியுடையானிடம்வீழிம்மிழலையே. (௧)



ஈறாய்முதலொன்றாயிருபெண்ணாண்குணமூன்றாய்
மாறாமறைநான்காய்வருபூதம்மவையைந்தா
யாறார்சுவையேழோசையொடெட்டுத்திசைதானாய்
வேறாயுடனானானிடம்வீழிம்மிழலையே. (௨)

வீழிம்மிழலைம்மேவியவிகிர்தன்றனைவிரைசேர்
காழிந்நகர்க்கலைஞானசம்பந்தன்றமிழ்பத்து
மியாழின்னிசைவல்லார்சொலக்கேட்டாரவரெல்லா
மூழின்வலிவினைபோயிடவுயர்வானடைவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருக்கோலக்கா - பண் - தக்கராகம். (௧-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

மடையில்வாளைபாயமாதரார்
குடையும்பொய்கைக்கோலக்காவுளான்
சடையும்பிறையுஞ்சாம்பர்பூச்சுங்கீ
ழுடையுங்கொண்டவுருவமென்கொலோ. (௧)

பெண்டான்பாகமாகப்பிறைச்சென்னிக்
கொண்டான்கோலக்காவுகோயிலாக்
கண்டான்பாதங்கையாற்கூப்பவே
யுண்டானஞ்சையுலகமுய்யவே. (௰)

நலங்கொள்காழிஞானசம்பந்தன்
குலங்கொள்கோலக்காவுளானையே
வலங்கொள்பாடல்வல்லவாய்மையா
ருலங்கொள்வினைபோயோங்கிவாழ்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருக்குரங்கணின்முட்டம் - பண் - தக்கராகம்.

(க - ம் திருமுறை).

திருச்சிற்றம்பலம்.

விழுநீர்மழுவாட்படையண்ணல்விளங்குங்
கழுநீர்குவளைம்மலரக்கயல்பாயுங்
கொழுநீர்வயல்சூழ்ந்தகுரங்கணின்முட்டந்
தொழுநீர்மையர்தீதுறுதுன்பமிலரே. (க)

விடைசேர்கொடியண்ணல்விளங்குயர்மாடக்
கடைசேர்கருமென்குளத்தோங்கியகாட்டிற்
குடையார்புனல்மல்குகுரங்கணின்முட்ட
முடையானெனையாளுடையெந்தைபிரானே. (உ)

கல்லார்மதிற்காழியுண்ஞானசம்பந்தன்
செல்லார்மழுவேந்திகுரங்கணின்முட்டஞ்
சொல்லார்தமிழ்மாலைசெவிக்கினிதாக
வல்லார்க்கெளிதாம்பிறவாவகைவீடே. (கக)

திருச்சிற்றம்பலம்.

## திருப்பாச்சிலாச்சிராமம் - பண் - தக்கராகம்.

(க- ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

துணிவளர்திங்கள்துளங்கிவிளங்கச்சுடர்ச்சடைசுற்றிமுடித்துப்
பணிவளர்கொள்கையர்பாரிடஞ்சூழவாரிடமும்பலிதேர்வ
ரணிவளர்கோலமெலாஞ்செய்துபாச்சிலாச்சிராமத்துறைகின்ற [பே
மணிவளர்கண்டரோமங்கையைவாடமயல்செய்வதோவிவர்மாண

கலைபுனைமானுரிதோலுடையாடைகனல்சுடராலிவர்கண்கள்
தலையணிசென்னியர்தாரணிமார்பர்தம்மடிகளிவரென்ன
அலைபுனல்பூம்பொழில்சூழ்ந்தமர்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
இலைபுனைவேலரோவேழையைவாடவிடர்செய்வதோவிவரீடே. (உ)

அகமலியன்பொடுதொண்டர்வணங்கப்பாச்சிராமத்துறைகின்ற
புகைமலிமாலைபுனைந்தழகாயபுனிதர்கொலாமிவரென்ன
நகைமலிதண்பொழில்சூழ்தருகாழிநற்றமிழ்ஞானசம்பந்தன்
தகைமலிதண்டமிழ்கொண்டிவையேத்தச்சாரகிலாவினைதானே. ()

திருச்சிற்றம்பலம்.

## திருநள்ளாறு - பண் - பழந்தக்கராகம். (க - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

போகமார்த்தபூண்முலையாள்தன்னோடும்பொன்னகலம்
பாகமார்த்தபைங்கண்வெள்ளேற்றண்ணல்பரமேட்டி
யாகமார்த்ததோலுடையன்கோவணவாடையின்மேல்
நாகமார்த்தநம்பெருமான்மேயதுநள்ளாறே. (க)

தோடுடையகாதுடையன்றோலுடையன்றொலையாப்
பீடுடையபோர்விடையன்பெண்ணுமோர்பாலுடைய
வேடுடையமேலுலகோடேழ்கடலுஞ்சூழ்ந்த
நாடுடையநம்பெருமான்மேயதுநள்ளாறே.

தண்புனலும்வெண்பிறையுந்தாங்கியதாழ்சடையன்
நண்புநல்லார்மல்குகாழிஞானசம்பந்தனல்ல
பண்புநன்மாமேத்துப்பாடல்பத்துமிவைவல்லார்
நுண்புநீங்கிவானவரோடுலகிலுறைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

திருநெடுங்களம் - பண் - பழந்தக்கராகம். (க-ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

மறையுடையாய்தோலுடையாய்வார்சடைமேல்வளரும்
பிறையுடையாய்பிஞ்ஞகனேயென்றுன்னைப்பேசினல்லாற்
குறையுடையார்குற்றமோராய்கொள்கையினாலுயர்ந்த
நிறையுடையாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (க)

கனைத்தெழுந்தவெண்டிரைசூழ்கடலிடைநஞ்சுதன்னைத்
தினைத்தனையாமிடற்றில்வைத்ததிருந்தியதேவநின்னை
மனத்தகத்தோர்பாடலாடல்பேணியிராப்பகலு
நினைத்தெழுவாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (உ)

நின்னடியேவழிபடுவான்நிமலாநினைக்கருத
வென்னடியானுயிரைவவ்வேலென்றடற்கூற்றுதைத்த
பொன்னடியேபரவிநாளும்பூவொடுநீர்சுமக்கு
நின்னடியாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (ங)

நீடவல்லவார்சடையான்மேயநெடுங்களத்தைச்
சேடர்வாழுமாமறுகிற்சிரபுரக்கோனலத்தால்
காடவல்லபனுவன்மாலைஞானசம்பந்தன்சொன்ன
பாடல்பத்தும்பாடவல்லார்பாவம்பறையுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.



ருவோத்தூர் - பண் - பழந்தக்கராகம் (க - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

பூத்தேர்ந்தாயனகொண்டுநின்பொன்னடி
யேத்தாதாரில்லையெண்ணுங்கா
லோத்தூர்மேயவொளிமழுவாளங்கைக்
கூத்தீரும்மகுணங்களே. (க)

இடையீர்போகாவிளமுலையாளையோர்
புடையீரேபுள்ளிமானுரி
யுடையீரேயும்மையேத்துதுமோத்தூர்ச்
சடையீரேயுமதாளே. (உ)

தாதார்கொன்றைதயங்குமுடியுடை
நாதாவென்றுநலம்புகழ்ந்
தோதாதாருணராதிருவோத்தூ
ராதீரேயருணல்குமே. (எ)

குரும்பையாண்பனையின்குலையோத்தூ
ரரும்புகொன்றையடிகளைப்
பெரும்புகலியுண்ஞானசம்பந்தன்சொல்
விரும்புவார்வினைவீடே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

ருவேற்காடு - பண் - பழந்தக்கராகம். (க - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

ளிதுள்ளக்கதிக்காமிவனொளி, வெள்ளியானுறைவேற்கா
ள்ளியாருயர்ந்தாரிவ்வுலகினில், தெள்ளியாரவர்தேவரே (க)

ஆடல்நாகமசைத்தளவில்லதோர், வேடங்கொண்டவன்வேட்களம்
பாடியும்பணிந்தாரிவ்வுலகினிற், சேடராகியசெல்வரே. (௨)

விண்டமாம்பொழில்சூழ்திருவேட்களங், கண்டுசேம்பன்கழல்பேணிச்
சண்பைஞானசம்பந்தனசெந்தமிழ், கொண்டுபாடக்குணமாமே. ()

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்கோளிலி - பண் - பழந்தக்கராகம். (௧-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

நாளாயபோகாமேநஞ்சணியுங்கண்டனுக்கே
ஆளாயவன்புசெய்வோமடநெஞ்சேயரனாமங்
கேளாய்நங்கிளைகிளைக்குங்கேடுபடாத்திறமருளிக்
கோளாயநீக்குமவன்கோளிலியெம்பெருமானே. (௧)

ஆடரவத்தழகாமையணிகேழற்கொம்பார்த்த
தோடரவத்தொருகாதன்றுணைமலர்நற்சேவடிக்கே
பாடரவத்திசைபயின்றுபணிந்தெழுவார்தம்மனத்திற்
கோடரவந்தீர்க்குமவன்கோளிலியெம்பெருமானே. (௨)

வஞ்சமனத்தஞ்சொடுக்கிவைகலுநற்பூசனையால்
நஞ்சமுதுசெய்தருளுநம்பியெனவேநினையும்
பஞ்சவரிற்பார்த்தனுக்குப்பாசுபதமீந்துகந்தான்
கொஞ்சுகிளிமஞ்சனையுங்கோளிலியெம்பெருமானே. (௩)

நம்பனைநல்லடியார்கணாமுடைமாடென்றிருக்குங்
கொம்பனையாள்பாகனெழிற்கோளிலியெம்பெருமானை
வம்பமருந்தண்காழிச்சம்பந்தன்வண்டமிழ்கொண்
டின்பமரவல்லார்களெய்துவர்களீசனையே. (௧௧)



## திருப்பழனம் - பண் - தக்கேசி. (௧-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

வேதமோதிவெண்ணூல்பூண்டுவெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப்பொலியவருவார்புலியினுரிதோலார்
நாதாவெனவுநக்காவெனவுநம்பாவெனநின்று
பாதந்தொழுவார்பாவந்தீர்ப்பார்பழனநகராரே. (௧)

கண்மேற்கண்ணுஞ்சடைமேற்பிறையுமுடையார்காலனைப்
புண்ணாறுதிரமெதிராவோடப்பொன்றப்புறந்தாளா
லெண்ணாதுதைத்தவெந்தைபெருமானிமவான்மகளோடும்
பண்ணார்களிவண்டறைபூஞ்சோலைப்பழனநகராரே. (௨)

வேய்முத்தோங்கிவிரைமுன்பாக்கும்வேணுபுரத்தன்னு
ணேயத்தனையதிறலான்மிக்கஞானசம்பந்தன்
பேசற்கினியபாடல்பயிலும்பெருமான்பழனத்தை
வாயிற்பொலிந்தமாலைபத்தும்வல்லார்நல்லாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவண்ணாமலை - பண் - தக்கேசி. (௧-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

பூவார்மலர்கொண்டடியார்தொழுவார்புகழ்வார்வானோர்கள்
மூவார்புரங்களெரித்தவன்றுமூவர்க்கருள்செய்தார்
தூமாமழைநின்றதிரவெருவித்தொறுவினிரையோடு
மாமாம்பிணைவந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. (௧)

மஞ்சைப்போழ்த்தமதியஞ்சூடும்வானோர்பெருமானார்
நஞ்சைக்கண்டத்தடக்குமதுவுநன்மைப்பொருள்போலும்
வெஞ்சொற்பேசும்வேடர்மடவாரிதணமதுவேறி
யஞ்சொற்கிளிகளாயோவென்னுமண்ணாமலையாரே. (௰)

அல்லாடரவமியங்குஞ்சாரலண்ணாமலையாரை
நல்லார்பரவப்படுவான்காழிஞானசம்பந்தன்
சொல்லான்மலிந்தபாடலானபத்துமிவைகற்று
வல்லாரெல்லாம்வானோர்வணங்கமன்னிவாழ்வாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருஅச்சிறுபாக்கம் - பண் - குறிஞ்சி. (க-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

பொன்றிரண்டன்னபுரிசடைபுரளப்
பொருகடற்பவளமொடழனிறம்புரையக்
குன்றிரண்டன்னதோளுடையகலங்
குலாயவெண்ணூலொடுகொழும்பொடியணிவர்
மின்றிரண்டன்னநுண்ணிடையரிவை
மெல்லியலாளையோர்பாகமாப்பேணி
யன்றிரண்டுருவாயவெம்மடிக
ளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (க)

தேனினுமினியர்பாலனநீற்றர்
தீங்கரும்பனையர்தந்திருவடிதொழுவா
ருனயந்துருகவுவகைகடருவா
ருச்சிமேலுறைபவரொன்றலாதூரார்



வானகமிறந்துவையகம்வணங்க
வயங்கொளநிற்பதோர்வடிவினையுடையா
ரானையினுரிவைபோர்த்தவெம்மடிக
ளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (௨)

மைச்செறிகுவளைதவளைவாய்நிறைய
மதுமலர்ப்பொய்கையிற்புதுமலர்கிழியப்
பச்சிறவெறிவயல்வெறிகமழ்காழிப்
பதியவரதிபதிகவுணியர்பெருமான்
கைச்சிறுமறியவன்கழலலாற்பேணாக்
கருத்துடைஞானசம்பந்தன்றமிழ்கொண்
டச்சிறுபாக்கத்தடிகளையேத்து
மன்புடையடியவரருவினையிலரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## கோயில் - பண் - குறிஞ்சி. (க-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

கற்றாங்கெரியோம்பிக்கலியைவாராமே
செற்றார்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
முற்றாவெண்டிங்கண்முதல்வன்பாதமே
பற்றாநின்றாரைப்பற்றாபாவமே. (க)

பறப்பைப்படுத்தெங்கும்பசுவேட்டெரியோம்புஞ்
சிறப்பர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
பிறப்பில்பெருமானைப்பின்றாழ்சடையானை
மறப்பிலார்கண்டீர்மையப்பீர்வாரே. (௨)

மையாரொண்கண்ணார்மாடநெடுவீதிக்
கையாற்பந்தோச்சுங்கழிசூழ்தில்லையுட்
பொய்யாமறைபாடல்புரிந்தானுலகேத்தச்
செய்யானுறைகோயில்சிற்றம்பலந்தானே. (௯)

செல்வநெடுமாடஞ்சென்றுசேணோங்கிச்
செல்வமதிதோயச்செல்வமுயர்கின்ற
செல்வர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
செல்வன்கழலேத்துஞ்செல்வஞ்செல்வமே. (௰)

ஞாலத்துயர்காழிஞானசம்பந்தன்
சீலத்தார்கொள்கைச்சிற்றம்பலமேய
சூலப்படையானைச்சொன்னதமிழ்மாலை
கோலத்தாற்பாடவல்லார்நல்லாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருஅம்பர்மாகாளம் - பண் - குறிஞ்சி. (க - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

அடையார்தம்புரமூன்றுமனல்வாயில்விழவெய்து
மடையார்புனலம்பர்மாகாளம்மேய
விடையார்கொடியெந்தைவெள்ளைப்பிறைசூடுஞ்
சடையான்கழலேத்தச்சாராவினைதானே. (க)

பண்டாழ்கடனஞ்சையுண்டுகளிமாந்தி
வண்டார்பொழிலம்பர்மாகாளம்மேய
விண்டார்புரம்வேவமேருச்சிலையாகக்
கொண்டான்கழலேத்தக்குறுகாகுற்றமே. (௨)



பெருநீர்கொளவோங்குவேணுபுரத்தன்னுட்
டிருமாமறைஞானசம்பந்தன்சேரார்
பெருமான்மலியம்பர்மாகாளம்பேணி
யுருகாவுரைசெய்வாருயர்வானடைவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவாரூர் - பண் - குறிஞ்சி. (க - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

சித்தந்தெளிவீர்கா, ளத்தனாரூரைப்
பத்திமலர்தூவ, முத்தியாகுமே. (க)

பிறவியறுப்பீர்கா, ளறவனாரூரை
மறவாதேத்துமின், றுறவியாகுமே. (௨)

துன்பந்துடைப்பீர்கா, ளன்பனணியாரூர்
நன்பொன்மலர்தூவ, வின்பமாகுமே. (௩)

சீரூர்சம்பந்த, னாரூரைச்சொன்ன
பாரூர்பாடலார், பேராரின்பமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவீழிமிழலை - பண் - குறிஞ்சி. (க - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

வாசிதீரவே, காசுநல்குவீர்
மாசின்மிழலையீ, ரேசலில்லையே. (க)

இறைவராயினீர், மறைகொண்மிழலையீர்
கறைகொள்காசினை, முறைமைநல்குமே. (உ)

காழிமாநகர்வாழிசம்பந்தன்
வீழிமிழலைமேற், றாழுமொழிகளே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

## திருச்சிராப்பள்ளி - பண் - குறிஞ்சி. (க - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

நன்றுடையானைத்தீயதிலானைநரைவெள்ளே
றொன்றுடையானையுமையொருபாகமுடையானைச்
சென்றடையாததிருவுடையானைச்சிராப்பள்ளிக்
குன்றுடையானைக்கூறவென்னுள்ளங்குளிருமே. (க)

கைம்மகவேந்திக்கடுவனொடூடிக்கழைபாய்வான்
செம்முகமந்திகருவரையேறுஞ்சிராப்பள்ளி
வெம்முகவேழத்தீருரிபோர்த்தவிகிர்தாநீ
பைம்முகநாகம்மதியுடன்வைத்தல்பழியன்றே. (உ)

தேனயம்பாடுஞ்சிராப்பள்ளியானைத்திரைசூழ்ந்த
கானல்சங்கேறுங்கழுமலவூரிற்கவுணியன்
ஞானசம்பந்தனலமிகுபாடலிவைவல்லார்
வானசம்பந்தத்தவரொடுமன்னிவாழ்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.



## திருவல்லம் - பண் - வியாழக்குறிஞ்சி. (க - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

எரித்தவன்முப்புரமெரியின்மூழ்கத்
தரித்தவன்கங்கையைத்தாழ்சடைமேல்
விரித்தவன்வேதங்கள்வேறுவேறு
தெரித்தவனுறைவிடந்திருவல்லமே. (க)

தாயவனுலகுக்குத்தன்னொப்பிலாத்
தூயவன்றூமதிசூடியெல்லா
மாயவனமரர்க்குமுனிவர்கட்குஞ்
சேயவனுறைவிடந்திருவல்லமே. (உ)

கற்றவர்திருவல்லங்கண்டுசென்று
நற்றமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
குற்றமில்செந்தமிழ்கூறவல்லார்
பற்றுவரீசன்பொற்பாதங்களே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

## திருநீலகண்டம் - பண் - வியாழக்குறிஞ்சி. (க-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

அவ்வினைக்கிவ்வினையாமென்றுசொல்லுமஃதறிவீ
ருய்வினைநாடாதிருப்பதுமுந்தமக்கூனமன்றே
கைவினைசெய்தெம்பிரான்கழல்போற்றுதுநாமடியோஞ்
செய்வினைவந்தெமைத்தீண்டப்பெறாதிருநீலகண்டம். (க)

காவினையிட்டுங்குளம்பலதொட்டுங்கனிமனத்தா
லேவினையாலெயின்மூன்றெரித்தீரென்றிருபொழுதும்
பூவினைக்கொய்துமலரடிபோற்றுதுநாமடியோந்
தீவினைவந்தெமைத்தீண்டப்பெறாதிருநீலகண்டம். (௨)

விண்ணுலகாள்கின்றவிச்சாதரர்களும்வேதியரும்
புண்ணியரென்றிருபோதுந்தொழப்படும்புண்ணியரே
கண்ணிமையாதனமூன்றுடையீருங்கழலடைந்தோந்
திண்ணியதீவினைதீண்டப்பெறாதிருநீலகண்டம். (௰)

பிறந்தபிறவியிற்பேணியெஞ்செல்வன்கழலடைவா
னிறந்தபிறவியுண்டாகிலிமையவர்கோனடிக்கட்
டிறம்பயில்ஞானசம்பந்தனசெந்தமிழ்பத்தும்வல்லார்
நிறைந்தவுலகினில்வானவர்கோனொடுங்கூடுவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கழுமலம் - பண் - வியாழக்குறிஞ்சி. (க-ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

பந்தத்தால்வந்தெப்பால்பயின்றுநின்றவும்பரப்
பாலேசேர்வாயேனோர்கான்பயில்கணமுனிவர்களுஞ்
சிந்தித்தேவந்திப்பச்சிலம்பின்மங்கைதன்னொடுஞ்
சேர்வார்நாணீள்கயிலைத்திகழ்தருபரிசெல்லாஞ்
சந்தித்தேயிந்தப்பார்சனங்கணின்றுதங்கணாற்
றாமேகாணாவாழ்வாரத்தகவுசெய்தவனதிடங்
கந்தத்தாலெண்டிக்குங்கமழ்ந்திலங்குசந்தனக்
காடார்பூவார்சீர்மேவுங்கழுமலவளநகரே. (



கஞ்சத்தேனுண்டிட்டேகளித்துவண்டுசென்பகக்
கானேதேனேபோராருங்கழுமலநகரிறையைத்
தஞ்சைச்சார்சண்பைக்கோன்சமைத்தநற்கலைத்துறை
தாமேபோல்வார்தேனேரார்தமிழ்விரகன்மொழிக
ளெஞ்சத்தேய்வின்றிக்கேயிமைத்திசைத்தமைத்துகொண்
டேயுயேழோகாவேயொன்றியவிசையிசையியல்பா
வஞ்சத்தேய்வின்றிக்கேமனங்கொளப்பயிற்றுவோர்
மாறாப்பேறுசேர்வாள்வானோர்சீர்மதிநுதன்மடவரலே. (௧௨)

திருச்சிற்றம்பலம்.

---

திருவையாறு - பண் - மேகராகக்குறிஞ்சி. (க-ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

புலனைந்தும்பொறிகலங்கிநெறிமயங்கியறிவழிந்திட்டைமேலுந்தி
யலமந்தபோதாகவஞ்சேலென்றருள்செய்வானமருங்கோயில்
வலம்வந்தமடவார்கணடமாடமுழவதிரமழையென்றஞ்சிச்
சிலமந்தியலமந்துமரமேறிமுகில்பார்க்குந்திருவையாறே. (௧)

விடலேறுபடநாகமரைக்கசைத்துவெற்பரையன்பாவையோடு
மடலேறொன்றதுவேறியஞ்சொலீர்பலியென்னுமடிகள்கோயில்
கடலேறித்திரைமோதிக்காவிரியினுடன்வந்துகங்குல்வைகித்
திடலேறிச்சுரிசங்கஞ்செழுமுத்தங்கீன்றலைக்குந்திருவையாறே. (௨)

அன்னமலிபொழில்புடைசூழையாற்றெம்பெருமானையந்தண்காழி
மன்னியசீர்மறைநாவன்வளர்ஞானசம்பந்தன்மருவுபாட
லின்னிசையாலிவைபத்துமிசையுங்காலீசனடியேத்துவார்க
டன்னிசையோடமருலகிற்றவநெறிசென்றெய்துவார்தாழாதன்றே

திருச்சிற்றம்பலம்.

### திருப்பராய்த்துறை - பண் - மேகராகக்குறிஞ்சி.
### (க - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

நீறுசேர்வதோர்மேனியர்நேரிழை, கூறுசேர்வதோர்கோலமாய்ப்
பாறுசேர்தலைக்கையர்பராய்த்துறை, யாறுசேர்சடையண்ணலே. ()

கந்தமாமலர்க்கொன்றைகமழ்சடை, வந்தபூம்புனல்வைத்தவர்
பைந்தண்மாதவிசூழ்ந்தபராய்த்துறை, யந்தமில்லவடிகளே. (உ)

வேதர்வேதமெல்லாமுறையால்விரித், தோதநின்றவொருவனார்
பாதிபெண்ணுருவாவர்பராய்த்துறை, யாதியாயவடிகளே. (ரு)

செல்வமல்கியசெல்வர்பராய்த்துறை, செல்வமேசிவனாதனை
செல்வன்ஞானசம்பந்தனசெந்தமிழ், செல்வமாமிவைசெப்பவே. ()

திருச்சிற்றம்பலம்.

---

### திருத்தருமபுரம் - பண் - யாழ்மூரி. (க - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

மாதர்மடப்பிடியு-மட-வன்னமுமன்னதோர்
நடை-யுடை-ம-லை-மக-ளிணையெனமகிழ்வர்
பூதவினப்படைநின்-றிசை-பாடவுமாடுவ
ரவர்-படர்-சடை-நெடு-முடியதொர்புனலர்
வேதமொடேழிசைபா-டுவ-ராழ்கடல்வெண்டிரை
யிரைந்-நுரை-கரை-பொரு-து-விம்மிநின்றயலே
தாதவிழ்புன்னைதயங்-குமலர்ச்சிறைவண்டறை
யெழில்-பொழில்-குயில்-பயில்-தருமபுரம்பதியே. (க)



பொன்னெடுங்கணிமணிமா-ளிகை-சூழ்விழவமலி
பொரு-புனல்-திரு-வமர்-புகலியென்றுலகிற்
றன்னெறிநேர்பிறவில்-பதி-ஞானசம்பந்தன
துசெந்-தமிழ்த்-தட-ங்-கடற்-றருமபுரம்பதியைப்
பின்னொடுமுன்னொர்சடையிற்-பிறை-யும்மரவும்முடை
யவன்-பிணை-துணை-கழல்கள்-பேணுதலுரியா
ரினிதெனல்லுலகெய்-துவ-ரெய்தியபோகமு
முறு-வர்க-ளிடர்-பிணி-துயரணைவிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

# இரண்டாந்திருமுறை.

### திருமருகல் - பண் - இந்தளம் (உ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

சடையாயெனுமாற்சரணீயெனுமால்
விடையாயெனுமால்வெருவாவிழுமால்
மடையார்குவளைம்மலரும்மருக
லுடையாய்தகுமோவிவளுண்மெலிவே. (க)

சித்தாயெனுமாற்சிவனேயெனுமால்
முத்தாவெனுமான்முதல்வாவெனுமால்
கொத்தார்குவளைகுலவும்மருக
லெத்தாய்தகுமோவிவளேசறவே. (ரு)

வயஞானம்வல்லார்மருகற்பெருமா
னுயர்ஞானமுணர்ந்தடியுள்குதலா
லியன்ஞானசம்பந்தனபாடல்வல்லார்
வியன்ஞாலமெல்லாம்விளங்கும்புகழே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருநள்ளாறு - பண் - இந்தளம். (௨-ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

ஏடுமலிகொன்றையரவிந்துவிளவன்னி
மாடவலசெஞ்சடையெம்மைந்தனிடமென்பர்
கோடுமலிஞாழல்குரவேறுசுரபுன்னை
நாடுமலிவாசமதுவீசியநள்ளாறே. (௧)

விண்ணியல்பிறைப்பிளவறைப்புனன்முடித்த
புண்ணியனிருக்குமிடமென்பர்புவிதன்மேற்
பண்ணியநடத்தொடிசைபாடுமடியார்க
ணண்ணியமனத்தின்வழிபாடுசெய்நள்ளாறே. (௨)

ஆடலரவார்சடையனாயிழைதனோடு
நாடுமலிவெய்திடவிருந்தவனள்ளாற்றை
மாடமலிகாழிவளர்பந்தனதுசெஞ்சொற்
பாடலுடையாரையடையாபழிகளேயே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.



## திருமறைக்காடு - திருக்கதவடைக்கப்பாடியது - பண் - இந்தளம். (௨-ம் திருமுறை)

---

திருச்சிற்றம்பலம்.

சதுரம்மறைதான்றுதிசெய்துவணங்கும்
மதுரம்பொழில்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
இதுநன்கிறைவைத்தருள்செய்கவெனக்குன்
கதவந்திருக்காப்புக்கொள்ளுங்கருத்தாலே. (௧)

வேதம்பலவோமம்வியந்தடிபோற்ற
வோதம்முலவும்மறைக்காட்டிலுறைவா
யேதில்சமண்சாக்கியர்வாக்கிவையென்கொ
லாதரோடுதாமலர்தூற்றியவாறே. (௧௦)

காழிந்நகரான்கலைஞானசம்பந்தன்
வாழிம்மறைக்காடனைவாய்ந்தறிவித்த
வேழின்னிசைமாலையீரைந்திவைவல்லார்
வாழிபுலகோர்தொழவானடைவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருப்பிரமபுரம் - பண் - சீகாமரம். (௨-ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

எம்பிரானெனக்கமுதமாவானுந்தன்னடைந்தார்
தம்பிரானாவானுந்தழலேந்துகையானுங்
கம்பமாகரியுரித்தகாபாலிகறைக்கண்டன்
வம்புலாம்பொழிற்பிரமபுரத்துறையும்வானவனே. (௧)

நன்னெஞ்சேயுனையிரக்கே னம்பெருமான் றிருவடியே
யுன்னஞ்செய் திருகண்டாயுய்வதனை வேண்டுதியே
லன்னஞ்சேர்பிரமபுரத்தாரமுதையெப்போதும்
பன்னுஞ்சீர்வாயதுவேபார்க்கண்ணேபரிந்திடவே. (௮)

எங்கேனுமியாதாகிப்பிறந்திடினுந்தன்னடியார்க்
கிங்கேயென் றருள்புரியுமெம்பெருமானெருதேறிக்
கொங்கேயுமலர்ச்சோலைக்குளிர்பிரமபுரத்துறையுஞ்
சங்கேயொத்தொளிர்மேனிச்சங்கரன்றன் றன்மைகளே. (௯)

திருச்சிற்றம்பலம்.

## திருச்சாய்க்காடு - பண் - சீகாமரம். (௨ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

மண்புகார்வான்புகுவர்மனமிளையார்பசியாலும்
கண்புகார்பிணியறியார்கற்றாருங்கேட்டாரும்
விண்புகாரெனவேண்டாவெண்மாடநெடுவீதித்
தண்புகார்ச்சாய்க்காட்டெந்தலைவன்றாள்சார்ந்தாரே. (௧)

போய்க்காடேமறைந்துறைதல்புரிந்தானும்பூம்புகார்ச்
சாய்க்காடேபதியாகவுடையானும்விடையானும்
வாய்க்காடுமுதுமரமேயிடமாகவந்தடைந்த
பேய்க்காடல்புரிந்தானும்பெரியோர்கள்பெருமானே. (௨)

நீநாளுநன்னெஞ்சேநினைகண்டாயாரறிவார்
சாநாளும்வாழ்நாளுஞ்சாய்க்காட்டெம்பெருமாற்கே
பூநாளுந்தலைசுமப்பப்புகழ்நாமஞ்செவிகேட்ப
நாநாளுநவின்றேத்தப்பெறலாமேநல்வினையே. (௩)



வையநீரேற்றானுமலருறையுநான்முகனு
மையன்மாரிருவர்க்குமளப்பரிதாலவன்பெருமை
தையலார்பாட்டோவாச்சாய்க்காட்டெம்பெருமானே
தெய்வமாப்பேணுதார்தெளிவுடைமைதேறேமே. (௧

திருச்சிற்றம்பலம்.

## திருப்புள்ளிருக்குவேளூர் - பண் - சீகாமரம். (௨-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

கள்ளார்ந்தபூங்கொன்றைமதமத்தங்கதிர்மதிய
முள்ளார்ந்தசடைமுடியெம்பெருமானாருறையுமிடந்
தள்ளாயசம்பாதிசடாயென்பார்தாமிருவர்
புள்ளானார்க்கரையனிடம்புள்ளிருக்குவேளூரே. (௧)

தையலாளொருபாகஞ்சடைமேலாளவளோடு
மையத்தேர்ந்துழல்வாரோராந்தணனாருறையுமிடம்
மெய்சொல்லாவிராவணனைமேலோடியீடழித்துப்
பொய்சொல்லாதுயிர்போனான்புள்ளிருக்குவேளூரே. (௨)

கீதத்தைமிகப்பாடுமடியார்கள்குடியாகப்
பாதத்தைத்தொழநின்றபரஞ்சோதிபயிலுமிடம்
வேதத்தின்மந்திரத்தால்வெண்மணலேசிவமாகப்
போதத்தால்வழிபட்டான்புள்ளிருக்குவேளூரே. (௩)

திறங்கொண்டவடியார்மேற்றீவினைநோய்வாராமே
யறங்கொண்டுசிவதன்மமுரைத்தபிரானமருமிடம்
மறங்கொண்டங்கிராவணன்றன்வலிகருதிவந்தானைப்
புறங்கண்டசடாயென்பான்புள்ளிருக்குவேளூரே. (௪)

செடியாயவுடறீர்ப்பான்றீவினைக்கோர்மருந்தாவான்
பொடியாடிக்கடிமைசெய்தபுள்ளிருக்கும்வேளூரைக்
கடியார்ந்தபொழிற்காழிக்கவுணியன்சம்பந்தன்சொன்
மடியாதுசொல்லவல்லார்க்கில்லையாமறுபிறப்பே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருமயிலாப்பூர் - பண் - சீகாமரம். (உ-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

மட்டிட்டபுன்னையங்கானன்மடமயிலைக்
கட்டிட்டங்கொண்டான்கபாலீச்சரமமர்ந்தா
னொட்டிட்டபண்பினுருத்திரபல்கணத்தார்க்
கட்டிட்டல்காணாதேபோதியோபூம்பாவாய். (௧)

மைப்பயந்தவொண்கண்மடநல்லார்மாமயிலைக்
கைப்பயந்தநீற்றான்கபாலீச்சரமமர்ந்தா
னைப்பசியோணவிழாவுமருந்தவர்க
டுய்ப்பனவுங்காணாதேபோதியோபூம்பாவாய். (௨)

வளைக்கைமடநல்லார்மாமயிலைவண்மறுகிற்
றுளக்கில்கபாலீச்சரத்தான்றொல்கார்த்திகைநாட்
டளத்தேந்திளமுலையார்தையலார்கொண்டாடும்
விளக்கீடுகாணாதேபோதியோபூம்பாவாய். (௩)

கானமர்சோலைக்கபாலீச்சரமமர்ந்தான்
றேனமர்பூம்பாவைப்பாட்டாகச்செந்தமிழான்
ஞானசம்பந்தனலம்புகழ்ந்தபத்தும்வல்லார்
வானசம்பந்தத்தவரோடும்வாழ்வாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.



## திருஆமாத்தூர் - பண்-சீகாமரம். (உ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

குன்றவார்சிலைநாணராவரிவாளிகூரெரிகாற்றின்மும்மதில்
வென்றவாறெங்ஙனேவிடையேறும்வேதியனே
தென்றலார்மணிமாடமாளிகைசூளிகைக்கெதிர்நீண்டபெண்ணைமே
லன்றில்வந்தணையுமாமாத்தூரம்மானே. (௧)

பரவிவானவர்தானவர்பலருங்கலங்கிடவந்தகார்விடம்
வெருவவுண்டுகந்தருளென்சொல்விண்ணவனே
விரவின்மாமணிபொன்கொழித்திழிசந்துகாரகிறந்துபம்பைநீ
ரருவிவந்தலைக்குமாமாத்தூரம்மானே. (௨)

தொண்டர்வந்துவணங்கிமாமலர்தூவிநின்கழலேத்துவாரவ
ருண்டியால்வருந்தவிரங்காததென்னைகொலாம்
வண்டலார்கழனிக்கலந்துமலர்ந்ததாமரைமாதர்வாண்முக
மண்டுவாணர்தொழுமாமாத்தூரம்மானே. (௩)

வாடல்வெண்டலைமாலையார்த்துமயங்கிருள்ளெரியேந்திமாநட
மாடன்மேயதென்னென்றுமாத்தூரம்மானைக்
கோடனாகமரும்புபைம்பொழிற்கொச்சையாரிறைஞானசம்பந்தன்
பாடல்பத்தும்வல்லார்பரலோகஞ்சேர்வாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருப்புறவார்பனங்காட்டூர்-பண்-சீகாமரம். (உ-திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

விண்ணமர்ந்தனமும்மதில்களைவீழவெங்கணையாலெய்தாய்விரி
பண்ணமர்ந்தொலிசேர்புறவார்பனங்காட்டூர்ப்

பெண்ணமர்ந்தொருபாகமாகியபிஞ்ஞகாபிறைசேர்நுதலிடைக்
கண்ணமர்ந்தவனேகலந்தார்க்கருளாயே. (க)

சீடல்கோடலலரிவெண்முல்லைநீர்மலர்நிரைத்தாதளஞ்செய்யப்
பாடல்வண்டறையும்புறவார்பனங்காட்டூர்த்
தோடிலங்கியகாதயன்மின்றுளங்கவெண்குழைதுள்ளநள்ளிரு
ளாடுஞ்சங்கரனேயடைந்தார்க்கருளாயே. (உ)

மையினார்மணிபோன்மிடற்றனைமாசில்வெண்பொடிபூசுமார்பனைப்
பையதேன்பொழில்சூழ்புறவார்பனங்காட்டூ
ரையனைப்புகழானகாழியுளாய்ந்தநான்மறைஞானசம்பந்தன்
செய்யுள்பாடவல்லார்சிவலோகஞ்சேர்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

## திருப்பெரும்புலியூர் - பண்-காந்தாரம். (உ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

மண்ணுமோர்பாகமுடையார்மாலுமோர்பாகமுடையார்
விண்ணுமோர்பாகமுடையார்வேதமுடையவிமலர்
கண்ணுமோர்பாகமுடையார்கங்கைசடையிற்கரந்தார்
பெண்ணுமோர்பாகமுடையார்பெரும்புலியூர்ப்பிரியாரே. (க)

துன்னுகடற்பவளஞ்சேர்தூயநீண்டதிரடோள்கண்
மின்னுசுடர்க்கொடிபோலுமேனியினொடொருகங்கைக்
கன்னிகளின்புனையோடுகலைமதிமாலைகலந்த
பின்னுசடைப்பெருமானார்பெரும்புலியூர்ப்பிரியாரே. (உ)



பிறைவளருமுடிச்சென்னிப்பெரும்புலியூர்ப்பெருமானை
நறைவளரும்பொழிற்காழிநற்றமிழ்ஞானசம்பந்தன்
மறைவளருந்தமிழ்மாலைவல்லவர்தந்துயர்நீங்கி
நிறைவளர்நெஞ்சினராகிநீடுலகத்திருப்பாரே (கக)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவாரூர் - பண் - காந்தாரம். (உ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

பவனமாய்ச்சோடையாய்நாவெழாப்பஞ்சுதோய்ச்சட்டவுண்டு
சிவனதாட்சிந்தியாப்பேதைமார்போலநீவெள்கினாயே
கவனமாய்ப்பாய்வதோரேறுகந்தேறியகாளகண்ட
னவனதாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (க)

தந்தையார்போயினார்தாயரும்போயினார்தாமும்போவார் [வா
கொந்தவேல்கொண்டொருகூற்றத்தார்பார்க்கின்றார்கொண்டுபோ
ரெந்தநாள்வாழ்வதற்கேமனம்வைத்தியாலேழைநெஞ்சே
யந்தணாரூர்தொழுதுய்யலாம்மையல்கொண்டஞ்சனெஞ்சே. (உ)

நீதியால்வாழ்கிலைநாள்செலாநின்றதுநித்தநோய்கள்
வாதியாவாதலானாளுநாளின்பமேமருவினியே
சாதியார்கின்னரர்தருமனுக்குருணர்கடொத்துமுக்க
ணாதியாரூர்தொழுதுய்யலாம்மையல்கொண்டஞ்சனெஞ்சே. (ங)

பல்லிதழ்மாதவிபல்லிவண்டியாழ்செய்யுங்காழியூ
னல்லவேநல்லவேசொல்லியஞானசம்பந்தனாரூ
ரெல்லியம்போதெரியாடிமெய்யீசனையேத்துபாடல்
சொல்லவேவல்லவர்தீதிலாரோதநீர்வையகத்தே.

திருச்சிற்றம்பலம்.

வேயுறுதோளி-பண்-பியந்தைக்காந்தாரம். (௨-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

வேயுறுதோளிபங்கன்விடமுண்டகண்டன்மிகநல்லவீணைதடவி
மாசறுதிங்கள்கங்கைமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனால்
ஞாயிறுதிங்கள்செவ்வாய்புதன்வியாழம்வெள்ளிசனிபாம்பிரண்டுமு
யாசறுநல்லநல்லவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. [டனே

என்பொடுகொம்பொடாமையிவைமார்பிலங்கவெருதேறியே
ழையுடனே, பொன்பொதிமத்தமாலைபுனல்சூடிவந்தெனுளமேபுகு
ந்தவதனால், ஒன்பதொடொன்றொடேழுபதினெட்டொடாறுமுடனாய
நாள்களவைதாம், அன்பொடுநல்லநல்லவைநல்லநல்லவடியா
ரவர்க்குமிகவே. (௨)

உருவளர்பவளமேனியொளிநீறணிந்துவுமையோடும்வெள்ளை
விடைமேன், முருகலர்கொன்றைதிங்கண்முடிமேலணிந்தெனுளமே
புகுந்தவதனாற், றிருமகள்கலையதூர்திசெயமாதுபூமிதிசைதெய்வமா
னபலவு, மருநெதிநல்லநல்லவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே.

தேனமர்பொழில்கொளாலைவிளைசெந்நெறுன்னிவளர்செம்பொ
னெங்குநிகழ, நான்முகனாதியாயபிரமாபுரத்துமறைஞானஞான
முனிவன், றானுறுகோளுநாளுமடியாரைவந்துநலியாதவண்ணமுரை
செ, யானசொன்மாலையோதுமடியார்கள்வானிலரசாள்வராணை
நமதே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

21



OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 12 APR 1910 MADRAS.

திருநெல்வாயில் திருஅரத்துறை-பண்-பியந்தை
(௨-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

எந்தையீசனெம்பெருமானேறமர்கடவுளென்றேத்திச்
சிந்தைசெய்பவர்க்கல்லால்சென்றுகைகூடுவதன்றால்
கந்தமாமலருந்திக்கடும்புனனிவாமல்குகரைமே
லந்தண்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௧)

ஈரவார்சடைதன்மேலிளம்பிறையணிந்தவெம்பெருமான்
சீருஞ்செல்வமுமேத்தாச்சிதடர்கடொழுஞ்செல்வதன்றால்
வாரிமாமலருந்திவருபுனனிவாமல்குகரைமே
லாருஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௨)

கறையினார்பொழில்சூழ்ந்தகாழியுண்ஞானசம்பந்த
னறையும்பூம்புனல்பரந்தவரத்துறையடிகடம்மருளை
முறைமையாற்சொன்னபாடன்மொழியுமாந்தர்தம்வினைபோய்ப்
பறையுமையுறவில்லைப்பாட்டிவைபத்தும்வல்லார்க்கே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீகாழி - பண் - நட்டராகம். (௨-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

நம்பொருணம்மக்களென்றுநச்சியிச்சைசெய்துநீ
ரம்பரமடைந்துசாலவல்லலுய்ப்பதன்முன
மும்பர்நாதனுத்தமனொளிமிகுத்தசெஞ்சடை
நம்பன்மேவுநன்னகர்நலங்கொள்காழிசேர்மினே. (௧)

பாவமேவுமுள்ளமோடுபத்தியின்றிநித்தலு
மேவமானசெய்துசாவதன்முனமிசைந்துநீர்

தீபமாலைதூபமுஞ்செறிந்தகையராகிநீர்
தேவதேவன்மன்னுமூர்திருந்துகாழிசேர்மினே. (௯)

சோறுகூறையின்றியேதுவண்டுதூரமாய்த்தமக்
கேறுசுற்றமெள்கவேயிடுக்கணுய்ப்பதன்முனம்
மாறுமோர்சடையினானாதியானைசெற்றவ
னாறுதேன்மலர்ப்பொழினலங்கொள்காழிசேர்மினே. (௰)

தக்கனார்தலையரிந்தசங்கரன்றனதரை
யக்கினோடரவணைந்தவண்ணல்காழியை
யொக்கஞானசம்பந்தனுரைத்தபாடல்வல்லவர்
மிக்கவின்பமெய்திவீற்றிருந்துவாழ்தன்மெய்ம்மையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கோடிகா - பண் - நட்டராகம். (௨ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

இன்றுநன்றுநாளைநன்றென்றுநின்றிச்சையாற்
பொன்றுகின்றவாழ்க்கையைப்போகவிட்டுப்போதுமின்
மின்றயங்குசோதியான்வெண்மதிவிரிபுனற்
கொன்றைதுன்றுசென்னியான்கோடிகாவுசேர்மினே. (௧)

அல்லன்மிக்கவாழ்க்கையையாதரித்திராதுநீர்
நல்லதோர்நெறியினைநாடுதுநடம்மினோ
வில்லைவென்றநுண்புருவவேனெடுங்கணாளொடுங்
கொல்லைவெள்ளையேற்றினான்கோடிகாவுசேர்மினே. (௨)

கொந்தணிகுளிர்பொழிற்கோடிகாவுமேவிய
செந்தழலுருவனைச்சீர்மிகுதிறலுடை



யந்தணர்புகலியுளாயகேள்விஞானசம்
பந்தனதமிழ்வல்லார்பாவமானபாறுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

திருவலஞ்சுழி - பண் - நட்டராகம். (௨ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

என்னபுண்ணியஞ்செய்தனைநெஞ்சமேயிருங்கடல்வையத்து
முன்னைநீபுரிநல்வினைப்பயனிடைமுழுமணித்தரளங்கள்
மன்னுகாவிரிசூழ்திருவலஞ்சுழிவாணனைவாயாரப்
பன்னியாதரித்தேத்தியும்பாடியும்வழிபடுமதனாலே.

திருந்தலார்புரந்தீயெழச்செறுவனைவிறலின்கணடியாரைப்
பரிந்துகாப்பனைப்பத்தியில்வருவனைமத்தமாம்பிணிநோய்க்கு
மருந்துமாவனைமந்திரமாவனைவலஞ்சுழியிடமாக
விருந்தநாயகனிமையவரேத்தியவிணையடித்தலந்தானே.

மாதொர்கூறனைவலஞ்சுழிமருவியமருந்தினைவயற்காழி
நாதன்வேதியன்ஞானசம்பந்தன்வாய்நவிற்றியதமிழ்மாலை
யாதரித்திசைகற்றுவல்லார்சொல்லக்கேட்டுகந்தவர்தம்மை
வாதியாவினைமறுமைக்குமிம்மைக்கும்வருத்தம்வந்தடையாவே. (

திருச்சிற்றம்பலம்.

---

திருக்குடந்தைக்காரோணம் - பண் - செவ்வழி.
(௨ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

கூனற்றிங்கட்குறுங்கண்ணிகான்றநெடுவெண்ணிலா
வேனற்பூத்தம்மராங்கோதையோடுவிராவுஞ்சடை

வானநாடனமரர்பெருமாற்கிடமாவது
கானல்வேலிகழிசூழ்கடனாகைக்காரோணமே. (௧)

விலங்கலொன்றுசிலையாமதின்மூன்றுடன்வீட்டிரு
ளிலங்குகண்டத்தெழிலாமைபூண்டாற்கிடமாவது.
மலங்கியோங்கிவருவெண்டிரைமல்கியமால்கடற்
கலங்களோதங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. (௨)

மல்குதண்பூம்புனல்வாய்க்கொழுதும்வயற்காழியா
னல்லகேள்வித்தமிழ்ஞானசம்பந்தனல்லோர்கண்முன்
வல்லவாறேபுனைந்தேத்துக்காரோணத்துவண்டமிழ்
சொல்லுவார்க்குமிவைகேட்பவர்க்குந்துயரில்லையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

# மூன்றாந்திருமுறை.

கோயில் - பண் - காந்தாரபஞ்சமம். (௩-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

ஆடினாய்நறுநெய்யொடுபாறயிரந்தணர்பிரியாதசிற்றம்பலம்
நாடினாயிடமாநறுங்கொன்றைநயந்தவனே [கள்
பாடினாய்மறையோடுபல்கீதமும்பல்சடைப்பனிகால்கதிர்வெண்டிங்
சூடினாயருளாய்சுருங்கவெந்தொல்வினையே. (௧)

கொட்டமேகமழுங்குழலாளொடுகூடினாயெருதேறினாய்நுதல்
பட்டமேபுனைவாயிசைபாடுவபாரிடமா



நட்டமேநவில்வாய்மறையோர்தில்லைநல்லவர்பிரியாதசிற்றம்பல
மிட்டமாயுறைவாயிவைமேவியதென்னைகொலோ. (௨)

காருலாம்பொழினண்ணியகாழியுண்மறைவல்லஞானசம்பந்த
னாருமின்றமிழாலுயர்ந்தாருறைதில்லைதன்னு [வை
ளேறுதொல்புகழேந்துசிற்றம்பலத்தீசனையிசையாற்சொன்னபத்தி
கூறுமாறுவல்லாருயர்ந்தாரொடுங்கூடுவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவாவடுதுறைநாலடிமேல்வைப்பு-பண்-காந்தாரபஞ்சமம்.
(௩-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

இடரினுந்தளரினுமெனதுறுநோய்,தொடரினுமுனகழற்றொழு
தெழுவேன்,கடறனிலமுதொடுகலந்தநஞ்சை,மிடறினிலடக்கியவே
தியனே, யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே,லது
வோவுனதின்னருளாவடுதுறையரனே. (௧)

வாழினுஞ்சாவினும்வருந்தினும்போய்,வீழினுமுனகழல்விடுவே
னல்லேன், றாழிளந்தடம்புனறயங்குசென்னி, போழிளமதிவைத்த
புண்ணியனே,யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே,
லதுவோவுனதின்னருளாவடுதுறையரனே. (௨)

நனவினுங்கனவினுநம்பாவுன்னை,மனவினும்வழிபடன்மறவேனம்
மான், புனல்விரிநறுங்கொன்றைப்போதணிந்த,கனலெரியனல்பு
ல்குகையவனே, யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லை
யே, லதுவோவுனதின்னருளாவடுதுறையரனே. (௩)

அலைபுனலாவடுதுறையமர்ந்த,இலைநுனைவேற்படையெம்மிறை யை, நலமிகுஞானசம்பந்தன்சொன்ன, விலையுடையருந்தமிழ்மாலை வல்லார்,வினையாயினநீங்கிப்போய்விண்ணவர்வியனுலகம்,நிலையாக முன்னேறுவார்நிலமிசைநிலையிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கொள்ளம்பூதூர் - பண் - காந்தாரபஞ்சமம்.
(௩ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

கொட்டமேகமழுங்கொள்ளம்பூதூர், நட்டமாடியநம்பனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ, நல்குமாறருணம்பனே. (க)

கோட்டகக்கழனிக்கொள்ளம்பூதூர், நாட்டகத்துறைநம்பனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ, நல்குமாறருணம்பனே. (உ)

குலையினேர்தெங்குசூழ்கொள்ளம்பூதூர், விலையிலாட்கொண்ட விகிர்தனையுள்கச், செல்லவுந்துகசிந்தையார்தொழ, நல்குமாறரு ணம்பனே. (௩)

கொன்றைசேர்சடையான் கொள்ளம்பூதூர், நன்றுகாழியுண் ஞானசம்பந்தன், இன்றுசொன்னமாலைகொண்டேத்தவல்லார்போ, யென்றும்வானவரோடிருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கழுமலம் - பண் - கொல்லி. (௩ - ம் திருமுறை.)

---

மண்ணினல்லவண்ணம் வாழலாம்வைகலு
மெண்ணினல்லகதிக் கியாதுமோர்குறைவிலைக்



கண்ணினல்லஃதுறுங் கழுமலவளநகர்ப்
பெண்ணினல்லாளொடும் பெருந்தகையிருந்ததே. (க)

குறைவளைவதுமொழி குறைவொழிநெஞ்சமே
நிறைவளைமுன்கையா ணேரிழையவளொடுங்
கறைவளர்பொழிலணி கழுமலவளநகர்ப்
பிறைவளர்சடைமுடிப் பெருந்தகையிருந்ததே. (எ)

கருந்தடத்தேன்மல்கு கழுமலவளநகர்ப்
பெருந்தடங்கொங்கை யோடிருந்தவெம்பிரான்றனை
யருந்தமிழ்ஞானசம் பந்தனசெந்தமிழ்
விரும்புவாரவர்கள்போய் விண்ணுலகாள்வரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

திருக்காளத்தி - பண் - கொல்லி. (௩ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

சந்தமாரகிலொடு சாதிதேக்கமர
முந்துமாமுகலியின் கரையினிலுமையொடு
மந்தமார்பொழில்வளர் மல்குவண் காளத்தி
யெந்தையாரிணையடி யென்மனத்துள்ளவே. (க)

ஆலமாமரவமோ டமைந்தசீர்ச்சந்தனஞ்
சாலமாபீலியுஞ் சண்பகமுந்தியே
காலமார்முகலிவந் தணைதருகாளத்தி
நீலமார்கண்டனை நினையுமாநினைவதே. (உ)

கோங்கமேகுரவமே கொன்றையம்பாதிரி
மூங்கில்வந்தணைதரு முகலியின்கரையினி

லாங்கமர்காளத்தி யடிகளையடிதொழ
வீங்குவெந்துயர்கெடும் வீடெளிதாகுமே. (௯)

அட்டமாசித்திக ளணைதருகாளத்தி
வட்டவார்சடையனை வயலணிகாழியான்
சிட்டனான்மறைவல ஞானசம்பந்தன்சொ
லிட்டமாப்பாடுவார்க் கில்லையாம்பாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

திருவாலவாய் - பண் - கொல்லி. (௩ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

மானினேர்விழிமாதராய்வழுதிக்குமாபெருந்தேவிகேள்
பானல்வாயொருபாலனீங்கிவனென்றுநீபரிவெய்திடே
லானைமாமலையாதியாயவிடங்களிற்பலவல்லல்சே
ரீனர்கட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௧)

சந்துசேனனுமிந்துசேனனுந்தருமசேனனுங்கருமைசேர்
கந்துசேனனுங்கனகசேனனுமுதலதாகியபெயர்கொளா
மந்திபோற்றிரிந்தாரியத்தொடுசெந்தமிழ்ப்பயனறிகிலா
வந்தகர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௨)

கனகநந்தியும்புட்பநந்தியும்பவணநந்தியுங்குமணமா
சுனகநந்தியுங்குனகநந்தியுந்திவணநந்தியுமொழிகொளா
வனகநந்தியர்மதுவொழிந்தவமேதவம்புரிவோமெனுஞ்
சினகருக்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௩)

எக்கராமமண்கையருக்கெளியேனலேன்றிருவாலவாய்ச்
சொக்கனென்னுளிருக்கவேதுளங்கும்முடித்தென்னன்முன்னிவை



தக்கசீர்ப்புகலிக்குமன்றமிழ்நாதன்ஞானசம்பந்தன்வா
யொக்கவேயுரைசெய்தபத்துமுரைப்பவர்க்கிடரில்லையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

திருவாலவாய் - பண் - கௌசிகம். (௩ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

செய்யனே திருவாலவாய்மேவிய
வையனேயஞ்சலென்றருள்செய்யெனைப்
பொய்யராமமணர்கொளுவுஞ்சுடர்
பையவேசென்றுபாண்டியற்காகவே. (௧)

சித்தனே திருவாலவாய்மேவிய
அத்தனேயஞ்சலென்றருள்செய்யெனை
யெத்தராமமணர்கொளுவுஞ்சுடர்
பத்திமன்றென்னன்பாண்டியற்காகவே. (௨)

தக்கன்வேள்விதகர்த்தருளாலவாய்ச்
சொக்கனேயஞ்சலென்றருள்செய்யெனை
யெக்கராமமணர்கொளுவுஞ்சுடர்
பக்கமேசென்றுபாண்டியற்காகவே. (௩)

அப்பனாலவாயாதியருளினால்
வெப்பந்தென்னவன்மேலுறமேதினிக்
கொப்பஞானசம்பந்தனுரைபத்துஞ்
செப்பவல்லவர்தீதிலாச்செல்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருவாலவாய் - பண் - கௌசிகம். (௩ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

வீடலாலவாயிலாய்விழுமியார்கணின்கழல்
பாடலாலவாயிலாய்பரவநின்றபண்பனே
காடலாலவாயிலாய்கபாலிநீள்கடிம்மதிற்
கூடலாலவாயிலாய்குலாயதென்னகொள்கையே. (௧)

பட்டிசைந்தவல்குலாள்பாவையாளோர்பாகமா
மொட்டிசைந்ததன்றியுமுச்சியாளொருத்தியாக்
கொட்டிசைந்தவாடலாய்கூடலாலவாயிலா
யெட்டிசைந்தமூர்த்தியாயிருந்தவாறிதென்னையே. (௨)

குற்றநீகுணங்கணீகூடலாலவாயிலாய்
சுற்றநீபிரானுநீதொடர்ந்திலங்குசோதிநீ
கற்றநூற்கருத்துநீயருத்தமின்பமென்றிவை
முற்றுநீபுகழ்ந்துமுன்னுரைப்பதென்முகம்மனே. (௩)

போயநீர்வளங்கொளும்பொருபுனற்புகலியான்
பாயகேள்விஞானசம்பந்தனல்லபண்பினா
லாயசொல்லின்மாலைகொண்டாலவாயிலண்ணலைத்
தீயதீரவெண்ணுவார்கள்சிந்தையாயதேவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருப்பாசுரம் - பண் - கௌசிகம். (௩ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

வாழ்கவந்தணர்வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக



ஆழ்கதீயதெல்லாமரனாமமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே. (௧)

அரியகாட்சியராய்த்தமதங்கைசே
ரெரியரேறுகந்தேறுவர்கண்டமுங்
கரியர்காருறைவாழ்க்கையராயினும்
பெரியராரறிவாரவர்பெற்றியே. (௨)

வெந்தசாம்பல்விரையெனப்பூசியே
தந்தையாரொடுதாயிலர்தம்மையே
சிந்தியாவெழுவார்வினைதீர்ப்பரா
லெந்தையாரவரெவ்வகையார்கொலோ. (௩)

நல்லார்கள்சேர்புகலிஞானசம்பந்தனல்ல
வெல்லார்களும்பரவுமீசனையேத்துபாடல்
பல்லார்களும்மதிக்கப்பாசுரஞ்சொன்னபத்தும்
வல்லார்கள்வானோருலகாளவும்வல்லரன்றே. (௧௨)

திருச்சிற்றம்பலம்.

## திருவொற்றியூர் - பண் - பஞ்சமம். (௩ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

விடையவன்விண்ணுமண்ணுந்தொழநின்றவன்வெண்மழுவாட்
படையவன்பாய்புலித்தோலுடைகோவணம்பல்கரந்தைச்
சடையவன்சாமவேதன்சசிதங்கியசங்கவெண்டோ
டுடையவனூனமில்லியுறையும்மிடமொற்றியூரே. (௧)

பாரிடம்பாணிசெய்யப்பறைக்கட்செறுபல்கணப்பேய்
சீரொடும்பாடலாடலிலயஞ்சிதையாதகொள்கைத்

தாரிடும்போர்விடையன் றலைவன் றலைமேகலஞ்
ஊரிடும்பிச்சைகொள்வானுறையும்மிடமொற்றியூரே. (௰)

ஒண்பிறைமல்குசென்னியிறைவன் னுறையொற்றியூரைச்
சண்பையர்தந்தலைவன் றமிழ்ஞானசம்பந்தன் சொன்ன
பண்புனைபாடல்பத்தும்பரவிப்பணிந்தேத்தவல்லார்
விண்புனைமேலுலகம்விருப்பெய்துவர்வீடெளிதே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருச்செங்காட்டங்குடி - பண் - பஞ்சமம். (௩-ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

பைங்கோட்டுமலர்ப்புன்னைப்பறவைகாள்பயப்பூச்
சங்கோட்டந்தவிர்த்தென்னைத்தவிராநோய்தந்தானே
செங்காட்டங்குடிமேயசிறுத்தொண்டன்பணிசெய்ய
வெங்காட்டுளனலேந்திவிளையாடும்பெருமானே. (௯)

குட்டத்துங்குழிக்கரையுங்குளிர்பொய்கைத்தடத்தகத்து
மட்டத்தாவிரைதேருமிருஞ்சிறகின்மடநாராய்
சிட்டன்சீர்ச்சிறுத்தொண்டன்செங்காட்டங்குடிமேய
வட்டவார்சடையார்க்கென்வருத்தஞ்சென்றுரையாயே. (௰)

செந்தண்பூம்புனல்பரந்தசெங்காட்டங்குடிமேய
வெந்தநீறணிமார்பன்சிறுத்தொண்டனவன்வேண்ட
வந்தண்பூங்கலிக்காழியடிகளையேயடிபரவுஞ்
சந்தங்கொள்சம்பந்தன்றமிழுரைப்போர்தக்கோரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.



## திருவேட்டக்குடி - பண் - பஞ்சமம். (௩-ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

வண்டிரைக்குமலர்க்கொன்றைவிரிசடைமேல்மதியரவங்
கண்டிரைக்கும்பிறைச்சென்னிக்காபாலிகழல்க [ளங்
கொண்டிரைத்துத்தொழுதிறைஞ்சத்துளங்கொளிநீர்ச்சுடர்ப்பவ
ளத்திரைக்கண்கொணர்ந்தெறியுந்திருவேட்டக்குடியாரே. (௧)

[illegible]திரமாமணிவிளக்கந்தொடக்கியவானிலையிற்பால்
[illegible]திரமாவாட்டுத்துலுப்பருஞ்சோதிபரிக்கருளி
[illegible]மெய்ம்மறைநால்வர்க்கறம்புரிநூலன்றுரைத்த
தீர்த்தமல்குசடையாருந்திருவேட்டக்குடியாரே. (௰)

தெண்டிரைசேர்வயலுடுத்ததிருவேட்டக்குடியாரைத்
தண்டலைசூழ்கலிக்காழித்தமிழ்ஞானசம்பந்த
னொண்டமிழ்நூலிவைபத்துமுணர்ந்தேத்தவல்லார்போ
யுண்டிடப்பில்வானவரோடியர்வானத்திருப்பாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்காளத்தி - பண் - சாதாரி. (௩-ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

வானவர்தானவர்கள்வாதைபடவந்ததொருமாகடல்விடந்
தானமுதுசெய்தருள்புரிந்தசிவன்மேவுமலைதன்னைவினவில்
ஏனமினமானினொடுகின்னரிதினைக்கொள்ளவெழிலார்கவணினாற்
கானவர்தமாமகளிர்கனகமணிவிலகுகாளத்திமலையே. (௧)

முதுசினவில்லவுணர்புரமூன்றுமொருநொடிவரையின்மூளவெரிசெய்
சதுரார்மதிபொதிசடையர்சங்கரர்விரும்புமலைதன்னைவினவில்

வெதிரெதிரவெதிர்பிணையவெழுவெபொறிகள்சிதறவெழிலேனமுழுதக்
கதிர்மணியின்வளரொளிகொளிருளகலநிலவுகாளத்திமலையே. (௯)

வேயனையதோளுமையோர்பாகமதுவாகவிடையேறிசடைமேற்
றூயமதிசூடிசுடுகாடினடமாடிமலைதன்னைவினவில்
வாய்தலசமாகவழிபாடுசெயும்வேடன்மலராகுநயனங்
காய்கணையினாலிடந்தீசனடிகூடுகாளத்திமலையே. (௰)

காடதிடமாகநடமாடுசிவன்மேவுகாளத்திமலையை
மாடமொடுமாளிகைகணீடுவளர்கொச்சைவயமன்னுதலைவ
னாடுமலிநீடுபுகழ்ஞானசம்பந்தனுரைநல்லதமிழின்
பாடலொடுபாடுமிசைவல்லவர்களல்லர்பரலோகமெளிதே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

திருமாகறல் - பண் - சாதாரி. (௩-ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

விங்குவிளைகழனிமிகுகடைசியர்கள்பாடல்விளையாடலரவ,மங்குலொடுநீள்கொடிகண்மாடமலிநீடுபொழின்மாகறலுளான், கொங்குவிரிகொன்றையொடுகங்கைவளர்திங்களணிசெஞ்சடையினான், செங்கண்விடையண்ணலடிசேர்பவர்கடீவினைகடீருமுடனே. (௧)

கலையிலொலிமங்கையர்கள்பாடலொலியாடல்கவினெய்தியழகார், மலையினிகர்மாடமுயர்நீள்கொடிகள்வீசமலிமாகறலுளா, னிலையின்மலிவேலுனையசூலம்வலனேந்தியெரிபுன்சடையினுள்ளலை கொள்புனலேந்துபெருமானடியையேத்தவினையகலுமிகவே. (௨)

கடைகொணெடுமாடமிகவோங்குகமழ்வீதிமலிகாழியவர்கோ, னடையும்வகையாற்பரவியரனையடிகூடுசம்பந்தனுரையான், மடை



கொள்புனலோடுவயல்கூடுபொழின்மாகறலுளானடியையே,யுடைய தமிழ்பத்துமுணர்வாரவர்கடொல்வினைகணொல்குமுடனே. ()

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சண்பைநகர் - பண் - சாதாரி. (௩-ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

எந்தமதுசிந்தைபிரியாதபெருமானெனவிறைஞ்சியிமையோர்
வந்துதுதிசெய்யவளர்தீபமொடுதூபமலிவாய்மைய[illegible]
லந்தியமர்சந்திபலவர்ச்சனைகள்செய்யவமர்கின்றவழகன்
சந்தமலிகொந்தளனன்மாதினொடுமேவுபதிசண்பைநகரே. (௧)

கொட்டமுழவிட்டவடிவட்டணைகடட்டநடமாடிகுலவும்
பட்டநுதல்கட்டுமலர்மட்டுமலிபாவையொடுமேவுபதிதான்
வட்டமதிதட்டுபொழிலுட்டமதுவாய்மைவழுவாதமொழியாற்
சட்டகலையெட்டுமருவெட்டும்வளர்தத்தைபயில்சண்பைநகரே. (௰)

வாரின்மலிகொங்கையுமைநங்கையொடுசங்கரன்மகிழ்ந்தமருமூர்
சாரின்முரறெண்கடல்விசும்புறமுழங்கொலிகொள்சண்பைநகர்மேற்
பாரின்மலிகின்றபுகழ்நின்றதமிழ்ஞானசம்பந்தனுரைசெய்
சீரின்மலிசெந்தமிழ்கள்செப்புமவர்சேர்வர்சிவலோகநெறியே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

திருஇன்னம்பர்-திருமுக்கால்-பண்-சாதாரி. (௩-திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

---

எண்டிசைக்கும்புகழின்னம்பர்மேவிய
வண்டிசைக்குஞ்சடையீரே

வண்டிசைக்குஞ்சடையீருமைவாழ்த்துவார்
தொண்டிசைக்குந்தொழிலோரே. (௧)

யாழ்நரம்பினிசையின்னம்பர்மேவிய
தாழ்தருசடைமுடியீரே
தாழ்தருசடைமுடியீருமைச்சார்பவ
ராழ்துயரருவினையிலரே.

ஏடமர்பொழிலணியின்னம்பரீசனை
நாடமர்ஞானசம்பந்த
னேடமர்ஞானசம்பந்தனற்றமிழ்
பாடவல்லார்பழியிலரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

திருமுதுகுன்றம் - திருமுக்கால் - பண் - சாதாரி
(௩ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

முரசதிர்ந்தெழுதருமுதுகுன்றமேவிய
பரசமர்படையுடையீரே
பரசமர்படையுடையீருமைப்பரவுவா
ரரசர்களுலகிலவரே.

முழவமர்பொழிலணிமுதுகுன்றமேவிய
பையரவம்மசைத்தீரே
பையரவம்மசைத்தீருமைப்பாடுவார்
நைவிலர்நாடொறுநலமே.



மூடியசோலைசூழ்முதுகுன்றத்தீசனை
நாடியஞானசம்பந்த
னாடியஞானசம்பந்தனசெந்தமிழ்
பாடியவர்பழியிலரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

திருவாலவாய் - ஈரடிமேல்வைப்பு. (௩ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

வேதவேள்வியைநிந்தனைசெய்துழ - லாதமில்லியமணொடுதேர ரை, வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே-பாதிமாதுடனாயபரமனே, ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்-னாலவாயிலுறையுமெம்மாதியே.

வைதிகத்தின் வழியொழுகாதவக்-கைதவமுடைக்காரமண்டே ரரை, யெய்திவாதுசெயத்திருவுள்ளமே-மைதிகழ்தருமாமணிக்கண் டனே, ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்-னாலவாயிலுறையுமெம் மாதியே. (௨)

மறைவழக்கமிலாதமாபாவிகள்-பறிதலைக்கையர்பாயுடுப்பார்களை முறியவாதுசெயத்திருவுள்ளமே-மறியுலாங்கையின்மாமழுவாளனே ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென் னாலவாயிலுறையுமெம்மாதியே.

கூடலாலவாய்க்கோனைவிடைகொண்டு - வாடன்மேனியமணரை வாட்டிட, மாடக்காழிச்சம்பந்தன் மதித்தவிப்-பாடல்வல்லவர் பாக்கியவாளரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருப்பல்லவனீச்சரம் - ஈரடி. (ங-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

பரசுபாணியர்பாடல்வீணையர் பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தரசுபேணிநின்றா ரிவர்தன்மையறிவாரார்? (க)
பட்டநெற்றியர்நட்டமாடுவர் பட்டினத்துறைபல்லவனீச்சரத்
திட்டமாயிருப்பா ரிவர்தன்மையறிவாரார்? (உ)
ப[illegible]மேனியர்திகழுநீற்றினர் பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தழகராயிருப்பா ரிவர்தன்மையறிவாரார்? (ங)
பச்சைமேனியர்பிச்சைகொள்பவர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
திச்சையாயிருப்பா ரிவர்தன்மையறிவாரார்? (ச)
வானமாள்வதற்கூனமொன்றிலை மாதர்பல்லவனீச்சரத்தானை
ஞானசம்பந்தனற்றமிழ் சொல்லவல்லவர்நல்லரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

## திருக்கழுமலம் - திருஇயமகம். (ங-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

உற்றுமைசேர்வதுமெய்யினையேயுணர்வதுநின்னருண்மெய்யினையே
கற்றவர்காய்வதுகாமனையேகனல்விழிகாய்வதுகாமனையே
யற்றமறைப்பதுமுன்பணியேயமரர்கள்செய்வதுமுன்பணியே
பெற்றுமுகந்ததுகந்தனையேபிரமபுரத்தையுகந்தனையே. (க)
சதிமிகவந்தசலந்தரனே தடிசிரநேர்கொள்சலந்தரனே
யதிரொளிசேர்திகிரிப்படையாலமர்ந்தனரும்பர்துதிப்படையின்
மதிதவழ்வெற்பதுகைச்சிலையேமருவிடமேற்பதுகைச்சிலையே
விதியினினிட்டார்விரும்பரனேவேணுபுரத்தைவிரும்பரனே. (உ)



பருமதின்மதுரைமன்னவையெதிரேபதிகமதெழுதிலையவையெதி
வருநதியிடைமிசைவருகரனேவசையொடுமலர்கெடவருகரனே[ரே
கருதலிலிசைமுரறருமருளேகழுமலமமரிறைதருமருளே
மருவியதமிழ்விரகன்மொழியேவல்லவர்தம்மிடர்திடமொழியே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

## திருவாலவாய் - திரு இயமகம். (ங-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

ஆலநீழலுகந்ததிருக்கையே யானபாடலுகந்ததிருக்கையே [னே
பாலினேர்மொழியாளொருபங்கனே பாதமோதலர்சேர்புரபங்க
கோலநீறணிமேதகுபூதனே கோதிலார்மனமேவியபூதனே
யாலநஞ்சமுதுண்டகளத்தனே யாலவாயுறையண்டர்களத்தனே. ()

பாதியாயுடன்கொண்டதுமாலையே பாம்புதார்மலர்க்கொன்
றைநன்மாலையே, கோதினீறதுபூசியோகனே கொண்டநற்கையின்
மானிடமாகனே, நாதனாடொறுமாடுவதானையே நாடியன்றுரிசெய்
ததுமானையே, வேதநூல்பயில்கின்றதுவாயிலே விகிர்தனூர்திரு
வாலவாயிலே. (உ)

ஈனஞானிகடம்மொடுவிரகனே யேறுபல்பொருண்முத்தமிழ்
விரகனே, யானகாழியுண்ஞானசம்பந்தனேயாலவாயினின்மேயசம்
பந்தனே, யானவானவர்வாயிலுளத்தனேயன்பரானவர்வாயிலுளத்த
னே, நானுரைத்தனசெந்தமிழ்பத்துமே வல்லவர்க்கிவைநற்றமிழ்
பத்துமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

## ஸ்ரீசீகாழி - திருமாலைமாற்று (௩ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

யாமாமாநீயாமாமா யாழீகாமாகாணாகா
காணாகாமாகாழீயா மாமாயாநீமாமாயா. (௧)

யாகாயாழீகாயாகா தாயாராராதாயாயா
யாயாதாராராயாதா காயாகாழீயாகாயா. (௨)

மேலேபோகாமேமேதே ழீகாலாலேகாலாணயே
யேணலாகாலேலாகா ழீதேமேகாபோலேமே. (௩)

சேரகழாமிதயாசழிதா யேனனியேனனிளாயுழிகா
காழியுளானினையேனினையே தாழிசயாதமிழாகரனே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருவீழிமிழலை - பண் - புறநீர்மை. (௩ - ம் - திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

புள்ளித்தோலாடை பூண்பது நாகம்பூசசாந்தம் பொடிநீறு,
கொள்ளித்தீவிளக்குக்கூளிகள்கூட்டங்காளியைக்குணஞ்செய் கூத்
துடையோ, னள்ளற்காரமையகடுவான்மதியமேய்க்கமுட்டா
ழைசுளாலே,வெள்ளைக்கொக்கீனும்விரிபொழில் வீழிமிழலையானெ
னவினைகெடுமே. (௧)

பாதியோர்மாதர்மாலுமோர்பாகர்பங்கயத்தயனுமோர்பால
ரோதியாய்வேயாய்த்தமாய்நின்றவடிகளாமமரர்கட்கமரர்
போதுசேர்சென்னிப்புரிவாப்பணிசெய்பூசுரர்பூமகனனைய
வேதியர்வேதகீதொலியாவீழிமிழலையானெனவினைகெடுமே. (௨)



வேந்தர்வந்திறைஞ்சவேதியர் வீழிமிழலையுள் விண்ணிழிவிமா
னத், தேய்ந்தகன்றேவியோடுறைகின்ற வீசனையெம்பெருமானைத்,
தோய்ந்தநீர்த்தோணிபுரத்துறை மறையோன்றமிழ்ஞானசம்
பந்தன், வாய்ந்தபாமாலைவாய்நவில்வாரைவானவர்வழிபடுவாரே. ()

திருச்சிற்றம்பலம்.

## திருவாலவாய் - பண் - புறநீர்மை. (௩ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

மங்கையர்க்கரசிவளவர்கோன்பாவைவரிவளைக்கைமடமானி
பங்கயச்செல்விபாண்டிமாதேவிபணிசெய்துநாடொறும்பரவப்
பொங்கழலுருவன்பூதநாயகனால்வேதமும்பொருள்களுமருளி
யங்கயற்கண்ணிதன்னொடுமமர்ந்தவாலவாயாவதுமிதுவே. (௧)

வெற்றவேயடியாரடிமிசைவீழும்விருப்பினன்வெள்ளைநீறணியுங்
கொற்றவன்றனக்குமந்திரியாயகுலச்சிறைகுலாவிநின்றேத்து
மொற்றைவெள்விடையனும்பர்தலைவனுலகினிலியற்கையையொ
ழித்திட்,டற்றவர்க்கற்றசிவனுறைகின்றவாலவாயாவதுமிதுவே. (௨)

செந்துவர்வாயாள்சேலனகண்ணாள்சிவன்றிருநீற்றினைவளர்க்கும்
பந்தணைவிரலாள்பாண்டிமாதேவிபணிசெயப்பாரிடைநிலவுஞ்
சந்தமார்தரளம்பாம்புநீர்மத்தந்தண்ணெருக்கம்மலர்வன்னி
யந்திவான்மதிசேர்சடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (௩)

பன்னலம்புணரும்பாண்டிமாதேவிகுலச்சிறையெனுமிவர்பணியு
மன்னலம்பெறுசீராலவாயீசன்றிருவடியாங்கவைபோற்றிக்
கன்னலம்பெரியகாழியுண்ஞானசம்பந்தன்செந்தமிழிவைகொண்
டின்னலம்பாடவல்லவரிமையோரேத்தவீற்றிருப்பவரினிதே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருநல்லூர்ப்பெருமணம் - பண் - அந்தாளிக்குறிஞ்சி.

(௩ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

கல்லூர்ப்பெருமணம்வேண்டாகழுமலம்
பல்லூர்ப்பெருமணம்பாட்டுமெய்யாய்த்தில
சொல்லூர்ப்பெருமணஞ்சூடலரேதொண்டர்
நல்லூர்ப்பெருமணமேயநம்பானே.

தருமணலோதஞ்சேர்தண்கடனித்திலம்
பருமணலாக்கொண்டுபாவைநல்லார்கள்
வருமணங்கூட்டிமணஞ்செயுநல்லூர்ப்
பெருமணத்தான்பெண்ணோர்பாகங்கொண்டானே.

அன்புறுசிந்தையராகியடியவர்
நன்புறுநல்லூர்ப்பெருமணமேவிநின்
றின்புறுமெந்தையிணையடியேத்துவார்
துன்புறுவாரல்லர்தொண்டுசெய்வாரே.

நறும்பொழிற்காழியுண்ஞானசம்பந்தன்
பெறும்பதநல்லூர்ப்பெருமணத்தானை
யுறும்பொருளாற்சொன்னவொண்டமிழ்வல்லார்க்
கறும்பழிபாவமவலமிலரே.

திருச்சிற்றம்பலம்.



திருச்சிற்றம்பலம்.

# திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

## புராணசாரம்.

---

காழிநகர்ச் சிவபாத விதயர்தந்த
    கவுணியர்கோ னமுதுமையாள் கருதியூட்டும்
ஏழிசையி னமுதுண்டு தாளம்வாங்கி
    யிலங்கியநித் திலச்சிவிகை யிசையவேறி
வாழுமுய லகன்கதற்றிப் பந்தரெய்தி
    வளர்கிழிபெற் றரவின்விட மருகற்றீர்த்து
வீழிநகர்க் காசெய்தி மறைக்கதவம் பிணித்து
    மீனவன்மே னியின்வெப்பு விடுவித்தாரே.

ஆரெரியிட் டெடுத்தவே டவைமுன்னேற்றி
    யாற்றில்விடு மேடெதிர்போ யணையவேற்றி
யோரமண ரொழியாமே கழுவிலேற்றி
    யோதுதிருப் பதிகத்தா லோடமேற்றிக்
காருதவு மிடிபுத்தன் றலையிலேற்றிக்
    காயாத பனைபின்முது கனிகளேற்றி
யீரமிலா வங்கமுயி ரெய்தவேற்றி
    யிலங்குபெரு மணத்தரனை யெய்தினாரே.

# சங்கிரகம்.

சோழமண்டலத்திலே சீகாழியிலே பிராமணகுலோத்துங்கரான சிவபாதவிருதயருடைய பத்தினி பகவதியார்வயிற்றில் திருவவதாரஞ்செய்து ஆளுடையபிள்ளையாரென்ற திருநாமத்தோடு வளர்ந்து மூன்றும்வயதில் தந்தையார் அழைத்துப்போய்த் தீர்த்தக்கரையில் உட்காரவைத்துவிட்டு ஸ்நானஞ்செய்யும்போது, பிள்ளையாருக்குப் பண்டைப் புணர்ச்சியுண்டாகிச் சிவபிரானுடைய திருவடியைப் பிரிந்திருக்குமனவருத்தத்தையுட்கொண்டு அவ்வாலயசிகரத்தைநோக்கி "அம்மேயப்பா"வென்றழ, அதனைக்கண்ட தோணியப்பர் திருவுளமிரங்கி தேவியாருடன் பிள்ளையாரையணுகலும், தேவியார் திருமுலைப்பாலுடன் ஞானமுதமுங்கலந்து பொற்கின்னத்திற் தந்தருளப் பிள்ளையாருண்டு அழுகை தீர்ந்திருக்கையில், பிதாவந்துபார்த்துப் பால்கொடுத்தவர் யாரென்று பயமுறுத்தினர். இவர்கொடுத்தாரென்று கைவிரலாற்சுட்டி "தோடுடையசெவிய" னென்னுந்திருப்பதிகமோதிச்சுவாமியைக் காட்ட, பிதா பேரானந்தமடைந்தனர்.

அன்றுமுதல் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரென்னுந் திருநாமங்கொண்டு, பிதா தோளிற்பொறுத்துச்செல்ல வாலயஞ்செல்வதுந் தோணியப்பரைத்தரிசிப்பதுந் திருப்பதிகமோதுவதுமாயிருந்தனர். பின்பு, திருக்கோலக்காவென்னுந் தலத்துக் கெழுந்தருளிச்சுவாமிபொற்றாளம் அருளப்பெற்றுப் பதிகமோதித்துதித்து, தமதூருக்குவந்து சிலநாளிருந்து, திருநனிபள்ளி முதலிய தலங்களுக்குச்சென்று பதிகமோதித்துதித்து மீண்டும் சீகாழிக்கு வந்து சுவாமியைத் தரிசித்துக்கொண்டிருந்தனர்.



இங்ஙனமிருக்கையில், தம்மைத்தரிசிக்கப் பத்தினியாருடன்வந்த திருநீலகண்டயாழ்ப்பாணநாயனாரைப் பேரன்புடனழைத்து, சுவாமிதரிசனஞ்செய்வித்து, விடுதியமைத்து, விருந்துசெய்வித்து உபசரித்தப்பின்னர். பிள்ளையாரருளிய திருப்பதிகங்களைத் தான்யாழிலமைத்து வாசிக்கக்கட்டளையிட்டருளும்படி யாழ்ப்பாணநாயனார்வேண்ட இவருமிசைந்தனர். பின்பு சிதம்பரஞ் சென்று நடராஜமூர்த்தியைத்தரிசித்துப்பரவசமெய்திப் பதிகமோதிவிடைபெற்றுப் புறம்வந்து அங்குவசிப்பதற்கஞ்சி, திருவேட்களத்திற்சென்று பரமசிவத்தைத்தரிசித்து, வசிக்குமிடம் அத்தலமாகக்கொண்டு, நடராஜரைத்தரிசித்துக்கொண்டிருக்குநாளில், தில்லைவாழந்தணர் நடராஜரையருச்சிக்கும் பேறுபெற்றார்களே யென்னுங்கருத்துடனொருநாள் சென்றபோது, அவ்வந்தணர்களெல்லாருஞ் சிவகணங்களாயிருக்கக்கண்டு, பாணருக்குங்காண்பித்தவணங்கி திருஎருக்கத்தம்புலியூர் முதலிய தலங்களையுந்தரிசித்து, திருநெல்வாயிலரத்துறைக்குப் போகவிரும்பி, திருவடிவருந்த மெல்ல மெல்லச்சென்று மாறன்பாடியென்னும் பதியில் இரவுதங்கினர்.

சுவாமி, தமது திருக்குமாரருடைய வழிவருத்தத்தைத் திருவுளங்கொண்டு, முத்துச்சிவிகையும் முத்துக்குடையும் முத்துச்சின்னங்களுந் தந்தருளநினைந்து, அத்தலப்பிராமணர்க்கெல்லாந் தனித்தனியே சொப்பனத்திற்றோன்றி "நம்மிடம்வரும் ஞானசம்பந்தனுக்கு இவைகளைக்கொண்டு போய்க்கொடுங்கள்" என்றுஞ்ஞாபித்தார். உடனே பிராமணர்கள் விழித்தெழுந்து, கனவின்படி ஆலயத்திலிருக்கக்கண்டு வியந்து, வாத்தியகோஷத்துடன் பிள்ளையாரையணுகி, சிவபெருமான் தந்த இவைகளையேற்றருளுமென்றார்கள். பிள்ளையாரும் தாம்கண்டகனவை யொத்திருக்கக்கண்டு திருவருளைவியந்து, "எந்தையீசனெம்பெருமா" னென்னும் பதிகமோதிச்சிவிகையை வலஞ்செய்து நமஸ்கரித்ததின்மேலேறியருளினார். பின்பு ஆலயஞ்சென்று சிவிகையைவிட்டிழிந்து சுவாமியைத் தரிசித்துத்துதித்து, சிலநாளங்கிருந்து, திருப்பழுவூர் முதலிய தலங்களுக்குச்சென்று தரிசித்துத் திரும்பவும் சீகாழிப்பதிக்கெழுந்தருளினார்.

பிள்ளையாருக்கு உபநயனப்பருவம்வர, அதனை முடித்துக்கொண்டிருக்குநாளில், திருநாவுக்கரசுநாயனார் வருவது கேள்விப்பட்டு எதிர்கொண்டு, வணங்கிய நாயனாரை அப்பரே யெழுந்தருளுமென் றிருகரங்களாலு மெடுத்துபசரித்தழைத்துப்போய், தோணியப்பரைத் தரிசிப்பித்தார். மற்ற தலங்களுக்குஞ் செல்லத் திருவுளங்கொண்டு பிதாவுக்கறிவிக்க, அவர் தானும்வருகிறேன் யாகத்திற்குப்பொருளும் வேண்டுமென்ன, பிதாவுடன் புறப்பட்டு, பலதலங்களினுஞ் சென்றுதரிசித்து, திருப்பாச்சிலாச்சிராமத்துக் கெழுந்தருளும்போது அவ்வூரையாளுங் கொல்லிமழவனென்னுமரசன் நகரையலங்கரித்து எதிர்சென்றுவணங்கினான். நாயனார் ஆலயத்துட்சென்று வலஞ்செய்து சந்நிதிக்கெழுந்தருளும்போது, ஆங்கோர்கன்னிகை சவம்போலிருக்கக்கண்டு, என்னென்றுவினவ, அரசன்றொழுது அவள் தன்புதல்வியென்றும், முயலக நோய்கண்டு நிராமையமாக்கக்கொணர்ந்து கிடத்தியதாகவுஞ்சொன்னான். அதனைக்கேட்டன்புகூர்ந்து "துணிவளர்திங்கள்" என்னும் பதிகமோதித் துதிசெய்ய, அவள் வியாதிநீங்கியெழுந்து பிதாவினருகிற்போய்நின்றாள். அரசன்கண்டு ஆனந்தங்கொண்டு மகளுடன்வந்து நாயனார் திருவடிகளைவணங்க, அதனைக்கண்டு கிருபைசெய்து, சுவாமியைத்தரிசித்து, சிலநாளங்கிருந்து பின்னர் திருக்கொடிமாடச் செங்குன்றூரில்வந்து வீற்றிருந்தனர். குளிர்காலமாகையா லங்கிருப்போர்களுக் கப்போதுவரும் நளிர்சுரம் தமது திருக்கூட்டத்தாருக்குங் கண்டதறிந்து "அவ்வினைக் கிவ்வினை" யென்னுந் திருநீலகண்டப்பதிகமோதித் துதிக்க, அப்பிணி திருக்கூட்டத்தாரையும் ஊரையும்விட்டு நீங்கியது.

அங்கிருந்து புறப்பட்டு ஏனைய தலங்களுக்குஞ்சென்று தரிசித்துத் திருப்பட்டீச்சரத்துக் கெழுந்தருளும்போது, நாயனாருக்குத் தெரியா வண்ணம் சிவகணங்கள் முத்துப் பந்தரைக்கொண்டுவந்து வெயில்வெப்பந் தணிப்பதற்குச் சிவ

பெருமான்கட்டளை யிட்டனுப்பியதென்று சொல்லுமொலியும் பந்தரும் ஆகாயத்திற்றோன்ற நோக்கி, இதுவும் நம்மிறைவர் கட்டளையாகில் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றிசைந்து சிவிகையை விட்டிறங்கிப்பணிந்தபோது, பந்தர்க்கால்களைப் பரிசனத்தார் கைக்கொண்டார்கள். பிறகு, திருப்பட்டீச்சர முதலிய தலங்களைத் தரிசித்து, திருவாவடுதுறைக் கெழுந்தருளி பிரானைத்தரிசித்துப் பதிகமோதி வீற்றிருந்தனர். வேள்விக்குப் பொருள்வேண்டுமெனப் பிதா சொல்ல, நாயனார் ஆலயஞ்சென்று பதிகமோதியவளவில் சிவபெருமானார்கட்டளையால் ஆயிரம்பொன்னுள்ள வொரு கிழியையொரு பூதங்கொண்டுவந்து பலிபீடத்தின்மேல்வைத்து நாயனாருக்கெதிரில் நின்று, இப்பொற்கிழி எடுக்கவெடுக்கக் குறையாது, இதனைச்சிவபெருமான் கட்டளையின்படியுமக்குக்கொண்டுவந்தேனென் றுரைக்க, நாயனார் பணிந்தெடுத்துப் பிதாவிடங்கொடுத்துப் பிறருக்கும் யாகஞ்செய்ய வுதவும்படி சொல்லியனுப்பி அங்கிருந்து புறப்பட்டு, பாணரது தாயின் ஜனன பூமியாகிய திருத்தருமபுரத்திற்கெழுந்தருளத் தம்மைவணங்கிய சுற்றத்தாரைப்பாணர்நோக்கி நாயனாரருளிச்செய்யும் பதிகங்களையாழிலமைத்துவாசிக்கும் பேறுபெற்றிருப்பதாகச்சொல்ல, அதற்கவர்கள் நீ யாழி லமைத்து வாசிப்பதினாலேயே அப்பதிகங்கள் எங்கும் விளக்கமுற்றிருக்கின்றனவென்று சொன்னார்கள். பாணரஞ்சி நாயனாரிடம் விண்ணப்பம்பண்ணி யாழிலமையாவண்ணமொரு பதிகமருள வேண்டுமென, அவ்வாறே யாழ்மூரி



யாகிய "மாதர்மடப்பிடி" என்னும்பதிகமருள அதுயாழிலிசையாமையாற் பயந்து யாழினையெடுத்ததினாலன்றோ வாசிப்பேறென்னுமெண்ணங்கொள்ள நேர்ந்ததென் றதனையுடைக்கவோங்கியபோது, நாயனார்தடுத்து பதிகம் சிவகிருபையால் வருவதாகலி னியன்றமட்டும் வாசிக்கவேண்டுமென்று சொல்லிக் கொடுத்தருள, வணங்கிப்பெற்றுத் துதித்தனர்.

பின்பு பிள்ளையார் திருச்சாத்தமங்கைக் கெழுந்தருளி திருநீலநக்க நாயனாராலுபசரிக்கப்பட்டு, திருக்கடனாகைக் காரோண முதலிய தலங்களைத்தரிசித்து சிறுத்தொண்டநாயனார் வந்து வணங்க திருச்செங்காட்டங்குடிக்குச்சென்று சுவாமியைத்தரிசித்து அந்நாயனாரைச் சிறப்பித்துப்பதிகமோதி அவராலுபசரிக்கப்பட்டுத் திருமருகலுக்கெழுந்தருளித் தரிசித்துவீற்றிருந்தனர். அங்கொருநாள், தரிசனத்திற்கெழுந்தருளும்போது ஓர்மடத்திலொரு கன்னிகையழுவதைக்கேட்டு அங்குசென்றுவினவ அவள் தன்றகப்பனுக்கேழு பெண்களென்றும், அவனது சகோதரிமகனுக்கு முறையே ஒவ்வொருபெண்ணையுந் தருவதாயேமாற்றி ஆறு பெண்களையும்பிறருக்கே விவாகஞ்செய்து கொடுத்துவிட்டதாயும், கடைசியாகத் தன்னையும் பிறனுக்குக் கொடுக்கவெத்தனித்ததை யவனறிந்து விசனப்படுவதைத் தான்பார்த்து மனஞ்சகியா தவனை யழைத்துக்கொண்டு வரும்பாதையிலிரவு இம்மடத்திற் றங்க, சர்பந்தீண்டி இறந்தானென்றுங் கூறி, இரட்சிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தாள், பிள்ளை

யார்கிருபைகூர்ந்து "சடையாயெனுமா" லென்னுந் திருப்பதிகமோதி யவனைப்பிழைப்பித்து, இருவருக்கும் மணமுஞ் செய்வித்தனுப்பினார்.

பிறகு, திருப்புகலூரைத் தொழச்செல்லும்போது, முருகநாயனாரெதிர்கொள்ளச் சென்று, வர்த்தமானீச்சரத்தை வணங்கி முருகநாயனாரது திருத்தொண்டைச் சிறப்பித்துப் பதிகம்பாடி அப்பதியி லிருந்தனர். அத்தருணத்தில், திருநாவுக்கரசுநாயனார் வருவதை நோக்கி யெதிர்கொண்டுபோ யொருவரையொருவர் வணங்கி, அப்பர் திருவாரூரிலிருந்து வருவதாகச்சொல்லக்கேட்டு, இப்போதாங்கு நடக்குஞ் சிறப்புயாதென்று வினவ அவரும் பதிகத்தாற் சிறப்பித்துச் சொல்லக்கேட்டு, அங்கிருந்து புறப்பட்டுத் திருவாரூர் முதலிய தலங்களுக்குப்போய்த்தரிசித்து மீண்டுந் திருப்புகலூருக்கெழுந்தருள அப்பரும் முருகநாயனாருமெதிர்கொள்ளச்சென்றங்கிருந்தனர். பிறகு அப்பருடன் புறப்பட்டு, திருவம்பர், திருக்கடவூர் முதலிய தலங்களைத்தரிசித்து, திருவீழிமிழலைக்குச் சென்று பதிகமோதி வீற்றிருக்குநாளில், மழையின்மையால்பஞ்சமதிகரித்துயிர்களெல்லாம்வருந்துகையால், இவ்விருவர் சொப்பனத்திலும் பெருமானெழுந்தருளிக் கருணைசெய்தபடி கிழக்கு மேற்குப் பீடங்களிலிருந்த பொற்காசுகளை முறையே சம்பந்தரும் அப்பருமெடுத்து, அடியார்களுக்கமுது படைத்துக் கொண்டிருந்து பஞ்சநீங்கியபின் புறப்பட்டு, திருமறைக்காட்டிற்



சேர்ந்து வேதம்பூசித்து மூடப்போனகதவை அப்பரால்திறப்பித்துப் பின்பு அது திறக்கவு மூடவுமா யிருக்கும்படி சம்பந்தமூர்த்தி பதிகமோதித் துதித்தங்கிருந்தனர்.

அந்நாளில் மதுரையில் சமணசமயமேலிட்டு, கூன்பாண்டியராஜனு மதற்குட்பட, சைவப்பற்று விடாதிருந்த அவ்வரசன் பத்தினி மங்கையர்க்கரசியாரும் மந்திரி குலச்சிறைநாயனாருஞ் சொல்லி யனுப்பியதைக் கேள்வியுற்று சம்பந்தர் மதுரைக்குச்சென்றாலவாயனைத்தரிசித்து, அங்கொருமடத்திலிருக்கையிலன்றிரவு சமணர்களம்மடத்தித் தீயிடக்கண்டு, இவ்வெப்பம் பாண்டியனைச் சேரக்கடவதென்று பதிகமோதியருளலு முடனே பாண்டியனுக்குச் சுரவியாதியுண்டாகி வருந்துகையில் சமணர்களுடைய மணிமந்திர ஔஷதங்களாற் றீராமைகண்டு, பத்தினியு மந்திரியும் வேண்ட, பிள்ளையாரெழுந்தருளினார். சமணர்கள் தாங்கள் அரசனிடப்பாகத்தைச் சுகப்படுத்துவதாயும் பிள்ளையார், வலப்பாகத்தைச் சுகப்படுத்தும்படிக்குஞ் சொல்ல, பிள்ளையார் "மந்திரமாவது நீறு" என்னுந்திருநீற்றுப் பதிகமோதி வலப்பாகத்தில் விபூதியைப்பூச, அப்பாகங் குணமாகி, இடப்பாகஞ் சமணர்களாற் குணமாகாமலிருமடங்காய்வருத்த அதனைச்சகிக்கொணாது பின்னுமரசன் வேண்ட, இடப்பாகத்திலும் விபூதியைப்பூசினார். உடனே வியாதிநீங்கி யரசனது கூனும் நிமிர்ந்தது. பின்பு சமணர்கள் தங்கள் நூற்பொருளையொரு ஏட்டிலெழுதித் தீயிலிட்டார்கள். பிள்ளையாரும் "போகமார்த்த பூண்முலையாள்" என்னுந் திருநள்ளாற்றுப் பதிக

மெழுதியிருக்குமேட்டினை யித்தீயிலிட்டனர். சமணர்களிட்ட ஏடு உடனே வெந்து சாம்பராய்ப் போய்விட்டது. பின்னையாரிட்ட ஏடுவேகாமலிருந்தது. மூன்று முறையாக தோற்றாற் கழுவிலேறுகிறோமென்று சமணர்கள் சொல்லித்,தாங்களுண்மையாகக்கொண்டிருக்கு மேட்டினையும்நாயனார் "வாழ்கவந்தணர்" என்னும் பாசுரம்பத்துந் திருக்கடைக்காப்புமெழுதிய வவ்வேட்டினையும் வைகையிலிட, சமணர்களேடு வெள்ளத்தின் வழியே சென்றது. நாயனாரேடு எதிரிட்டுச் சென்று திருஏடகமென்னுந் தலத்திற்கருகே நிற்க, மந்திரி குதிரைமேற்சென்று, ஏட்டினையெடுத்துவரக் கண்ட சமணர்கள் கழுவிலேறினார்கள். அந்நாட்டி லெல்லோருஞ்சைவரானார்கள்.

அதன் பின்பு பாண்டிநாட்டிலும், ஈழநாட்டிலும் சோழநாட்டிலுமுள்ள தலங்களையெல்லாந் தரிசித்துக்கொண்டு திருக்கொள்ளம்பூதூருக்குச் செல்லும்போது, எதிரே ஆறு பெருகுதலைக்கண்டு அங்கிருந்தவோடத்தின்கட்டையவிழ்த்தடியார்களை யதிலேற்றி "கொட்டமே கமழும்" என்னும்பதிகம்பாடி, அக்கரைசேர்ந்து சுவாமியைத்தரிசித்து திருத்தெளிச்சேரி யென்னுந் தலத்துக்கருகில் வரும்போது புத்தநந்தியென்னும் பௌத்தன் தடுத்தனன். அடியாருளொருவராகிய சம்பந்த சரணாலயரென்பவர் "புத்தர்சமண்கழுக்கையர்" என்று முன்னம் நாயனாரருளிய பதிகத்தை யோதியவளவிலவன் றலையிலிடிவிழுந்திறந்தான். இதுகண்டு பௌத்தரெல்லாமோடி மீண்டும் வந்து வாதுக்கிசைந்து தோல்வியடைந்து விபூதிதரித்துச்சைவரானார்கள். பிறகு தொண்டைநாட்டில் திருவோத்தூரில், ஆண்பனைகளைப்பெண்பனைகளாக்கித் திருவொற்றியூருக் கெழுந்தருளினார்.



திருமயிலையில்,சிவநேசச்செட்டியார்புத்திரி பூம்பாவை யென்பவள் தோழிகளோடு மலர்கொய்யப்போய்சர்ப்பந் தீண்டி யிறந்தனள். செட்டியார், தன்செல்வத்தோடு புத்திரியைத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருக்குக் கொடுப்பதாய் முன்னமே நியமித்திருந்தமையால் இறந்தமகளைத் தகனஞ்செய்து,சாம்பரை அஸ்தியுடன் குடத்தில்வைத்துப் பதனஞ்செய்திருந்தனர். அவர் திருவொற்றியூருக்குவந்து வணங்கியழைக்க,நாயனார் திருமயிலைக்கெழுந்தருளி, குடத்தைக் கொண்டு வரச்சொல்லி "மட்டிட்டபுன்னையங்கானல் மடமயிலை" யென்னும் பதிகமோதி யெலும்பைப்பெண்ணாக்கி, மற்றத்தலங்களையுந் தரிசித்துச் சீகாழிக்கெழுந்தருளினார்.

பின்னர், தந்தை முதலியோர்பிரார்த்திக்க, விவாகத்திற் கிணங்கி, நல்லூர்ப் பெருமணத்திற்குச்சென்று நம்பியாண்டாரதுகுமாரத்தியை விதிப்படிசிறப்புடன் திருமணங்கொண்டு,ஓமாக்கினியை வலம்வரவெழுந்து, தாம்விலஞ்செய்யத்தக்கவக்கினி ப[illegible]வனையென்று, மனைவியின்கையைப் பற்றி ஆலயஞ்சென்று "நல்லூர்ப்பெருமணம்"என்னும்பதிகமோதிய வளவில் பிரானார் கிருபைகூர்ந்து "உன்காதலியோடு நம்மிடத்துக்குவா" வென்றருளிய வுடன், அவ்வாலயமுழுவதுஞ் சோதியாய் வாயிலைவகுத்துக்காட்ட நமச்சிவாயத்திருப்பதிகமோதி அங்கெழுந்தருளிய வெல்லோரையுமதற்குட்புகுத்தியருளி பின்பு தாமுந் தம்முடைய மனைவியார் கையைப் பற்றியபடியே அந்தசோதியிற்கலந்தருளினார்.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுசுவாமிகள்

அருளிச்செய்த

# தேவாரப்பதிகங்கள்.

## நான்காம் திருமுறை.

திருக்கெடிலவடவீரட்டானம் - பண் - காந்தாரம்.

(௨ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

சுண்ணவெண்சந்தனச்சாந்துஞ்சுடர்த்திங்கட்சூளாமணியும்
வண்ணவுரிவையுடையும்வளரும்பவளநிறமு
மண்ணலரண்முரணேறுமகலம்வளாயவரவுந்
திண்ணன்கெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. (௧)

பூண்டதோர்கேழலெயிறும்பொன்றிகழாமைபுரள
நீண்டதிண்டோள்வலஞ்சூழ்ந்துநிலாக்கதிர்போலவெண்ணூலுங்
காண்டகுபுள்ளின்சிறகுங்கலந்தகட்டங்கக்கொடியு
மீண்டுகெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. (௨)



நரம்பெழுகைகள்பிடித்துநங்கைநடுங்கமலையை
யுரங்களெல்லாங்கொண்டெடுத்தானொன்பதுமொன்றுமலற
வரங்கள்கொடுத்தருள்செய்வான்வளர்பொழில்வீரட்டஞ்சூழ்ந்து
சிரம்புகெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நா
மஞ்சுவதியாதொன்றுமில்லையஞ்சவருவதுமில்லை. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருவையாறு - பண் - காந்தாரம். (௩ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

மாதர்ப்பிறைக்கண்ணியானைமலையான்மகளொடும்பாடிப்
போதொடுநீர்சுமந்தேத்திப்புகுவாரவர்பின்புகுவேன்
யாதுஞ்சுவடுபடாமலையாறடைகின்றபோது
காதன்மடப்பிடியோடுங்களிறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௧)

போழிளங்கண்ணியினானைப்பூந்துகிலாளொடும்பாடி
வாழியம்போற்றியென்றேத்திவட்டமிட்டாடாவருவே
னாழிவலவனின்றேத்துமையாறடைகின்றபோது
கோழிபெடையொடுங்கூடிக்குளிர்ந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௨)

வளர்மதிக்கண்ணியினானைவார்குழலாளொடும்பாடிக்
களவுபடாததோர்காலங்காண்பான்கடைக்கணிக்கின்றே
னளவுபடாததோரன்போடையாறடைகின்றபோது
இளமணநாகுதழுவியேறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருவாரூர் - பண் - காந்தாரம். (ச - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

பாடிளம்பூதத்தினானும்பவளச்செவ்வாய்வண்ணத்தானுங்
கூடிளமென்முலையாளைக்கூடியகோலத்தினானு
மோடிளவெண்பிறையானுமொளிதிகழ்சூலத்தினானு
மாடிளம்பாம்பசைத்தானுமாரூரமர்ந்தவம்மானே. (க)

நரியைக்குதிரைசெய்வானுநரகரைத்தேவுசெய்வானும்
விரதங்கொண்டாடவல்லானும்விச்சின்றிநாறுசெய்வானு
முரசதிர்ந்தானைமுன்னோடமுன்பணிந்தன்பர்களேத்த
வரவரைச்சாத்திநின்றானுமாரூரமர்ந்தவம்மானே. (உ)

நீறுமெய்பூசவல்லானுநினைப்பவர்நெஞ்சத்துளானு
மேறுகந்தேறவல்லானுமெரிபுரைமேனியினானு
நாறுகரந்தையினானுநான்மறைக்கண்டத்தினானு
மாறுசடைக்கரந்தானுமாரூரமர்ந்தவம்மானே. (௯)

பையஞ்சுடர்விடுநாகப்பள்ளிகொள்வானுள்ளத்தானுங்
கையஞ்சுநான்குடையானைக்கால்விரலாலடர்த்தானும்
பொய்யஞ்சிவாய்மைகள்பேசிப்புகழ்புரிந்தார்க்கருள்செய்யு
மையஞ்சினைப்புறத்தானுமாரூரமர்ந்தவம்மானே. (க0)

திருச்சிற்றம்பலம்.

## திருக்கழிப்பாலை - பண் - காந்தாரம் (ச - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

வனபவளவாய்திறந்து வானவர்க்குந்தானவனே யென்கின்று
ளாற், சினபவளத்திண்டோண்மேற்சேர்ந்திலங்குவெண்ணீற்றனெ



ன்கின்றாளா, லனபவளமேகலையோடப்பாலைக்கப்பாலானென்கின்
றாளாற், கனபவளஞ்சிந்துங்கழிப்பாலைச்சேர்வானைக்கண்டாள்கொ (க)
ல்லோ.

வண்டுலவுகொன்றைவளர்புன்சடையானேயென்கின்றாளால்,
விண்டலர்ந்துநாறுவதோர் வெண்ணெருக்கமலருண்டேயென்கின்
றாளா, லுண்டயலேதோன்றுவதோருத்தரியப்பட்டுடைய னென்
கின்றாளாற், கண்டயலேதோன்றுங்கழிப்பாலைச்சேர்வானைக்கண் (உ)
டாள்கொல்லோ.

அடற்பெரியவிராவணனையருவரைக்கீழடர்த்தவனேயென்கின்
றாளாற், சுடர்ப்பெரியதிருமேனிச்சுண்ணவெண்ணீற்றவனேயென்
கின்றாளான், மடற்பெரியவாலின்கீழறநால்வர்க் கன்றுரைத்தா
னென்கின்றாளாற், கடற்கருவிசூழ்ந்த கழிப்பாலைச்சேர்வானைக் (க0)
கண்டாள்கொல்லோ.

திருச்சிற்றம்பலம்.

## திருஏகம்பம் - பண் - காந்தாரம். (ச - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

கரவாடும்வன்னெஞ்சர்க்கரியானைக்கரவார்பால்
விரவாடும்பெருமானைவிடையேறும்வித்தகனை
யரவாடச்சடைதாழவங்கையினனலேந்தி
யிரவாடும்பெருமானையென்மனத்தேவைத்தேனே. (க)

தேனோக்குங்கிளிமழலையுமைகேள்வன்செழும்பவளத்
தானோக்குந்திருமேனிதழலுருவாஞ்சங்கரனை
வானோர்க்கும்வளர்மதிசேர்சடையானைவானோர்க்கு
மேனோர்க்கும்பெருமானையென்மனத்தேவைத்தேனே. (உ)

கைப்போதுமலர்தூவிக்காதலித்துவானோர்கள்
முப்போதுமுடிசாய்த்துத்தொழநின்றமுதல்வனை
யப்போதுமலர்தூவியைம்புலனுமகத்தடக்கி
யெப்போதுமினியானையென்மனத்தேவைத்தேனே. (௯)

அடுத்தானையுரித்தானையருச்சுனற்குப்பாசுபதங்
கொடுத்தானைக்குலவரையேசிலையாகக்கூரம்பு
தொடுத்தானைப்புரமெரியக்கனைமலர்க்குராவிலாய
மெடுத்தானைத்தடுத்தானையென்மனத்தேவைத்தேனே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

---

திருஅங்கமாலை - பண் - சாதாரி. (௯-ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

தலையேநீவணங்காய் தலைமாலைதலைக்கணிந்து
தலையாலேபலிதேருந்தலைவனைத்தலையேநீவணங்காய். (௧)

கண்காள்காண்மின்களோகடனஞ்சுண்டகண்டன்றன்னை, யெண்
டோள்வீசிநின்றாடும்பிரான்றன்னைக் கண்காள்காண்மின்களோ (௨)

செவிகாள்கேண்மின்களோசிவனெம்மிறைசெம்பவள, வெரிபோன்
மேனிப்பிரான்றிறமெப்போதுஞ் செவிகாள்கேண்மின்களோ. (௩)

மூக்கேநீமுரலாய் முதுகாடுறைமுக்கணனை
வாக்கேநோக்கியமங்கைமணாளனை மூக்கேநீமுரலாய். (௪)

வாயேவாழ்த்துகண்டாய் மதயானையுரிபோர்த்துப்
பேய்வாழ்காட்டகத்தாடும்பிரான்றன்னைவாயேவாழ்த்துகண்டாய்.

நெஞ்சேநீநினையாய் நிமிர்புன்சடைநின்மலனை
மஞ்சாடும்மலைமங்கைமணாளனை நெஞ்சேநீநினையாய். (௬)



கைகாள்கூப்பித்தொழீர் கடிமாமலர்தூவிநின்று
பைவாய்ப்பாம்பரையார்த்தபரமனைக் கைகாள்கூப்பித்தொழீர். (௭)

ஆக்கையாற்பயனென் அரன்கோயில்வலம்வந்து
பூக்கையாலட்டிப்போற்றியென்னாதவிவ்வாக்கையாற்பயனென். (௮)

கால்களாற்பயனென் கறைக்கண்டனுறைகோயிற்
கோலக்கோபுரக்கோகரணஞ்சூழாக் கால்களாற்பயனென். (௯)

உற்றாராருளரோ வுயிர்கொண்டுபோம்பொழுது
குற்றாலத்துறைகூத்தனல்லானமக் குற்றாராருளரோ. (௧0)

இறுமாந்திருப்பன்கொலோவீசன்பல்கணத்தெண்ணப்பட்டுச், சிறுமா
னேந்திதன்சேவடிக்கீழ்ச்சென்றங் கிறுமாந்திருப்பன்கொலோ.

தேடிக்கண்டுகொண்டேன் திருமாலொடுநான்முகனுந், தேடித்தே
டொணாத்தேவனையென்னுளே தேடிக்கண்டுகொண்டேன். (௧௨)

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பழனம் - பண் - பழந்தக்கராகம். (௬-ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

சொன்மாலைபயில்கின்றகுயிலினங்காள்சொல்லீரே
பன்மாலைவரிவண்டுபண்மிழற்றும்பழனத்தான்
முன்மாலைநகுதிங்கண்முகிழ்விளங்குமுடிச்சென்னிப்
பொன்மாலைமார்பனென்புதுநலமுண்டிகழ்வானோ. (௧)

கண்டகங்காண்முண்டகங்காள்கைதைகாணெய்தல்காள்
பண்டரங்கவேடத்தன்பாட்டோவாப்பழனத்தான்
வண்டுலாந்தடமூழ்கிமற்றவனென்றளிர்வண்ணங்
கொண்டநாடானறியான்குறிக்கொள்ளாதொழிவானோ. (௨)

மனைக்காஞ்சியிளங்குருகேமறந்தாயோமதமுகத்த
பனைக்கைம்மாவுரிபோர்த்தான்பலர்பாடும்பழனத்தான்
நினைக்கின்றநினைப்பெல்லாமுரையாயோநிகழ்வண்டே
சுனைக்குவளைமலர்க்கண்ணாள்சொற்றூதாய்ச்சோர்வாளோ. (௯)

வஞ்சித்தென்வளைகவர்ந்தான்வாரானேயாயிடினும்
பஞ்சிக்காற்சிறகன்னம்பரந்தார்க்கும்பழனத்தா
னஞ்சிப்போய்க்கலிமெலியவழலோம்புமப்பூதி
குஞ்சிப்பூவாய்நின்றசேவடியாய்கோடியையே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவையாறு - பண் - பழந்தக்கராகம். (௪-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

விடகிலேனடிநாயேன்வேண்டியக்காலியாதொன்று
மிடகிலேனமணர்கள்தமறவுரைகேட்டலமந்தேன்
றொடர்கின்றேனுன்னுடையதூமலர்ச்சேவடிகாண்பா
னடைகின்றேனையாறர்க்காளாய்நானுய்ந்தேனே. (௧)

செம்பவளத்திருவுருவர்திகழ்சோதிக்குழைக்காதர்
கொம்பமருங்கொடிமருங்குற்கோல்வளையாளொருபாகர்
வம்பவிழுமலர்க்கொன்றைவளர்சடைமேல்வைத்துகந்த
வம்பவளையையாறர்க்காளாய்நானுய்ந்தேனே. (௨)

கருவரைசூழ்கடலிலங்கைக்கோமானைக்கருத்தழியத்
திருவிரலாலுகக்காணஞ்செய்தசதுர்மூர்த்தி.
பெருவரைசூழ்வையகத்தார்பேர்நந்தியென்றேத்து
மருவரைசூழையாறர்க்காளாய்நானுய்ந்தேனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.



## திருவாரூர் - பண் - சீகாமரம். (௪-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

காண்டலேகருத்தாநினைந்திருந்தேன்மனம்புகுந்தாய்கழலடி
பூண்டுகொண்டொழிந்தேன்புறம்போயினாலறையோ
வீண்டுமாடங்கணீண்டமாளிகைமேலெழுகொடிவானிளம்மதி
தீண்டிவந்துலவுந்திருவாரூரம்மானே. (௧)

கடம்படந்நடமாடினாய்களைகணெனக்கொருகாதல்செய்தடி
யொடுங்கிவந்தடைந்தேனொழிப்பாய்பிழைப்பவெலா
முடங்கிறான்முதுநீர்மலங்கிளவாளைசெங்கயல்சேல்வரால்களி
றடைந்ததண்கழனியணியாரூரம்மானே. (௨)

கோடிதூர்க்கமலம்மலரயனோடிரணியனாகங்கீண்டவ
னாடிக்காணமாட்டாத்தழலாயநம்பானைப்
பாடுவார்பணிவார்பல்லாண்டிசைகூறுபத்தர்கள்சித்தத்துட்புக்குத்
தேடிக்கண்டுகொண்டேன்திருவாரூரம்மானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவாரூர்த் திருவாதிரைச்சிறப்பு - பண் - குறிஞ்சி. (௪-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

முத்துவிதானமணிப்பொற்கவரிமுறையாலே
பத்தர்களோடுபாவையர்சூழப்பலிப்பின்னே
வித்தகக்கோலவெண்டலைமாலைவிரதிகள்
அத்தனாரூராதிரைநாளாலதுவண்ணம். (௧)

நணியார்சேயார்நல்லார்தீயார்நாடோறும்
பிணிதான்றீருமென்றுபிறங்கிக்கிடப்பாரு
மணியேபொன்னேமின்னேதாமணாளாவென்பார்கட்
கணியாரூராதிரைநாளாலதுவண்ணம். (௮)

வீதிகடோறும்வெண்கொடியோடுவிதானங்கள்
சோதிகள்விட்டுச்சுடர்மாமணிகளொளிதோன்றச்
சாதிகளாயபவளமுமுத்துத்தாமங்க
ளாதியாரூராதிரைநாளாலதுவண்ணம். (௯)

பாரூர்பவ்வத்தானைப்பத்தர்பணிந்தேத்தச்
சீரூர்பாடலாடலறாதசெம்மாப்பார்ந்
தோரூரொழியாதுலகமெங்குமெடுத்தேத்து
மாரூரன்றனாதிரைநாளாலதுவண்ணம். (௧0)

திருச்சிற்றம்பலம்.

---

# திருநேரிசை.

---

திருச்சிற்றம்பலம்.

செஞ்சடைக்கற்றைமுற்றத்திளநிலாவெறிக்குஞ்சென்னி
நஞ்சடைகண்டனாரைக்காணலாநறவநாறு
மஞ்சடைசோலைத்தில்லைமல்குசிற்றம்பலத்தே
துஞ்சடையிருள்கிழியத்துளங்கெரியாடுமாறே. (௧)

பத்தனாய்ப்பாடமாட்டேன்பரமனேபரமயோகீ
யெத்தினாற்பத்திசெய்கேனென்னைநீயிகழவேண்டா
முத்தனேமுதல்வாதில்லையம்பலத்தாடுகின்ற
அத்தாவுன்னாடல்காண்பானடியனேன்வந்தவாறே. (௨)



கருத்தனாய்ப்பாடமாட்டேன்காம்பனதோளிபங்கா
வொருத்தராலறியவொண்ணாத்திருவுருவுடையசோதீ
திருத்தமாந்தில்லைதன்னுட்டிகழ்ந்தசிற்றம்பலத்தே
நிருத்தநான்காணவேண்டிச்சேர்படவந்தவாறே. (௩)

நம்பனேயெங்கள்கோவேநாதனேயாதிமூர்த்தி
பங்கனேபரமயோகீயென்றென்றேபரவிநாளுஞ்
செம்பொனேயனையகுன்றேதிகழ்மலர்ப்பாதங்காண்பா
னன்பனேயலந்துபோனேனதிகைவீரட்டனீரே. (௪)

நீதியால்வாழமாட்டேனித்தலுந்தூயனல்லேன்
ஓதியுமுணரமாட்டேனுன்னையுள்வைக்கமாட்டேன்
சோதியேசுடரேயுன்றன்றூமலர்ப்பாதங்காண்பா
னாதியேயலந்துபோனேனதிகைவீரட்டனீரே. (௫)

பூவாதமறவலாறுமோதநீர்வண்ணன்காணு
மூவாதபிறப்பிலாருமுனிகளாறோர்களோதும்
மூவானைமூன்றுமோர்நூற்றறுபதுமாகுமெந்தை
தேவாதிதேவரென்றுந்திருச்செம்பொன்பள்ளியாரே. (௬)

பழியுடையாக்கைதன்னிற்பாழுக்கேநீரிறைத்து
வழியிடைவாழமாட்டேன்மாயமுந்தெளியகில்லேன்
அழிவுடைத்தாயவாழ்க்கையைவராலலைக்கப்பட்டுக்
கழியிடைத்தோணிபோன்றேன்கடவூர்வீரட்டனீரே. (௭)

தந்தையாய்த்தாயுமாகித்தரணியாய்த்தரணியுள்ளார்க்
கெந்தையுமென்னநின்றவேழுலகுடனுமாகி
யெந்தையெம்பிரானேயென்றென்றுள்குவாருள்ளத்தென்றுஞ்
சிந்தையுஞ்சிவமுமாவார்திருப்பயற்றூரனாரே. (௮)

தானலாதுலகமில்லைசகமலாதடிமையில்லை
கானலாதாடலில்லைகருதுவார்தங்களுக்கு
வானலாதருளுமில்லைவார்குழன்மங்கையோடும்
ஆனலாதூர்வதில்லையையனையாறனார்க்கே. (௯)

மாயனும்மாலனுமலரவனுமண்ணொடும்
தேயமாய்த்திசையெட்டாகித்தீர்த்தமாய்த்திரிதர்கின்ற
காயமாய்க்காயத்துள்ளார்காஞ்சிமாநகர்தன்னுள்ளா
லேயமென்றெளிபாதரிலங்குமேற்றளியனாரே. (௰)

வெள்ளத்தைச்சடையில்வைத்தவேதியர்நன்பாத
மெள்ளத்தானடையவேண்டின்மெய்தருஞானந்தீயாற்
கள்ளத்தைக்கழியநின்றார்காயத்துக்கலந்துநின்று
உள்ளத்துளொளியுமாகுமொற்றியூருடையகோவே. (௧௧)

நம்பினேன்கூட்டையாளாவுள்ளத்தோர்கொடுமைவைத்துக்
காம்பிலாமூழைபோலக்கருதிற்றேமுகக்கமாட்டேன்
பாம்பின்வாய்த்தேரைபோலப்பலபலநினைக்கின்றேனை
யோம்பிநீயுய்யக்கொள்ளாயொற்றியூருடையகோவே. (௧௨)

மனமெனுந்தோணிபற்றிமதியெனுங்கோலையூன்றிச்
சினமெனுஞ்சரக்கையேற்றிச்செறிகடலோடும்போது
மதனெனும்பாறைதாக்கிமறியும்போதறியவொண்ணா
துனையுனுமுணர்வைநல்காயொற்றியூருடையகோவே. (௧௩)

காப்பதோர்வில்லுமம்புங்கையதோரிறைச்சிப்பாரந்
தோற்பெருஞ்செருப்புத்தொட்டுத்தூயவாய்க்கலசமாட்டித்
தீப்பெருங்கண்கள்செய்யக்குருதிநீரொழுகத்தன்கண்
கோப்பதும்பற்றிக்கொண்டார்குறுக்கைவீரட்டனாரே. (௧௪)



கேழற்வெண்கொம்புபூண்டவிளரொளிமார்பினானே
யேழையேனேழையேனானென்செய்கேனெந்தையெம்மான்
மாழையொண்கண்ணினார்கள்வலைதனின்மயங்குகின்றேன்
கூழையேறுடையசெல்வாகோடிகாவுடையகோவே. (௧௫)

பித்தனாய்வாழமாட்டேன்பாவியேன்பரவிவந்து
சித்தத்துள்ளையந்தீர்செய்வினைபலவுஞ்செய்ய
மத்துறுதயிரேபோலமறுகுமென்னுள்ளந்தானும்
அத்தனேயமரர்கோவேயாரூர்மூலட்டனீரே. (௧௬)

பாயிருஞாலமெல்லாமலரடிவணங்கும்போதும்
பாயிருங்கங்கையாளைப்படர்சடைவைப்பர்போலுங்
காயிரும்பொழில்கள்சூழ்ந்தகழுமலவூரர்க்கம்பொன்
னாயிரங்கொடுப்பர்போலுமாவடுதுறையனாரே. (௧௭)

வேதியாவேதகீதாவிண்ணவரண்ணாவென்றென்
றோதியேமலர்கள்தூவியொருங்குநின்கழல்கள்காணப்
பாதியோர்பெண்ணைவைத்தாய்படர்சடைமதியஞ்சூடு
மாதியேயாலவாயிலப்பனேயருள்செய்வாயே. (௧௮)

நம்பனேநான்முகத்தாய்நாதனேஞானமூர்த்தி
யென்பொனேயீசாவென்றென்றேத்திநானேசற்றென்றும்
பின்பினேதிரிந்துநாயேன்பேர்த்தினிப்பிறவாவண்ண
மன்பனேயாலவாயிலப்பனேயருள்செய்யாயே. (௧௯)

ஓதிமாமலர்கடூவியுமையவள்பங்காமிக்க
சோதியேதுளக்கமெண்டோட்சுடர்மழுப்படையினானே
யாதியேயமரர்கோவேயணியணாமலையுளானே
நீதியால்நின்னையல்லானினையுமாநினைவிலேனே. (௨௰)

மனைவிதாய்தந்தைமக்கண்மற்றுளசுற்றமென்னும்
வினையுளேவிழுந்தழுந்திவேதனைக்கிடமாகாதே
கனையுமாகடல்சூழ்நாகைமன்னுகாரோணத்தானை
நினையுமாவல்லீராகிலுய்யலாநெஞ்சினீரே. (௨௧)

நிறைந்தமாமணலைக்கூப்பிநேசமோடாவின்பாலைக்
கறந்துகொண்டாட்டக்கண்டுகறுத்தவன்றாதைதாளை
யெறிந்தமாணிக்கப்போதேயெழில்கொள்சண்டீசனென்னச்
சிறந்தபேறளித்தார்சேறைச்செந்நெறிச்செல்வனாரே. (௨௨)

அங்கத்தைமண்ணுக்காக்கிப்பார்வத்தையுனக்கேதந்து
பங்கத்தைப்போகமாற்றிப்பாவித்தேன்பரமாநின்னைச்
சங்கொத்தமேனிச்செல்வாசாதனாணாயேனுன்னை
யெங்குற்றமென்றபோதாலிக்குந்றோனென்கண்டாயே. (௨௩)

காயமேகோயிலாகக்கடிமனமடிமையாக
வாய்மையேதூய்மையாகமனமணியிலிங்கமாக
நேயமேநெய்யும்பாலாநிறையநீரமையவாட்டிப்
பூசனையீசனார்க்குப்போற்றவிக்காட்டினோமே. (௨௪)

வளைத்துநின்றைவர்கள்வர்வந்தென்னைநடுக்கஞ்செய்யத்
தளைத்துவைத்துலையையேற்றித்தழலெரிமடுத்தநீரிற்
றிளைத்துநின்றாடுகின்றவாமைபோற்றெளிவிலாதே
னிளைத்துநின்றாடுகின்றேனென்செய்வான்றோன்றினேனே. (௨௫)

திருச்சிற்றம்பலம்.

---



# திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பாளையுடைக்கமுகோங்கிப்பன்மாடநெருங்கியெங்கும்
வாளையுடைப்புனல்வந்தெறியாழ்வயற்றில்லைதன்னு
ளாளையுடைக்கழற்சிற்றம்பலத்தரனாடல்கண்டாற்
பீளையுடைக்கண்களாற்பின்னைப்பேய்த்தொண்டர்காண்பதென்னே

பொருவிடையொன்றுடைப்புண்ணியமூர்த்திப்புலியதள
னுருவுடையம்மலைமங்கைமணாளனுலகுக்கெல்லாந்
திருவுடையந்தணர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
றிருவடியைக்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (௨)

தொடுத்தமலரொடுதூபமுஞ்சாந்துங்கொண்டெப்பொழுது
மடுத்துவணங்குமயனொடுமாலுக்குங்காண்பரியான்
பொடிக்கொண்டணிந்துபொன்னாகியதில்லைச்சிற்றம்பலவ
னுடுத்ததுகில்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (௩)

வைச்சபொருணமக்காகுமென்றெண்ணிநமச்சிவாய
வச்சமொழிந்தேனணிதில்லையம்பலத்தாடுகின்ற
பிச்சன்பிறப்பிலிபேர்நந்தியுந்தியின்மேலசைத்த
கச்சினழகுகண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்பதென்னே. (௪)

ஊனத்தைநீக்கியுலகறியவென்னையாட்கொண்டவன்
றேனொத்தெனக்கினியான்றில்லைச்சிற்றம்பலவனெங்கோன்
வானத்தவருய்யவன்னஞ்சையுண்டகண்டத்திலங்கு
மேனத்தெயிறுகண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்பதென்னே.

கருநட்டகண்டனையண்டத்தலைவனைக்கற்பகத்தைச்
செருநட்டமும்மதிலெய்யவல்லானைச்செந்தீமுழங்கத்
திருநட்டமாடியைத்தில்லைக்கிறையைச்சிற்றம்பலத்துப்
பெருநட்டமாடியைவானவர்கோனென்றுவாழ்த்துவனே. (௬)

ஒன்றியிருந்துநினைமின்களுந்தமக்கூனமில்லைக்
கன்றியகாலனைக்காலாற்கடிந்தானடியவர்க்காச்
சென்றுதொழுமின்கள்தில்லையுட்சிற்றம்பலத்துநட்ட
மென்றுவந்தாயெனுமெம்பெருமான்றன்றிருக்குறிப்பே. (௭)

குனித்தபுருவமுங்கொவ்வைச்செவ்வாயிற்குமிண்சிரிப்பும்
பனித்தசடையும்பவளம்போன்மேனியிற்பால்வெண்ணீறு
மினித்தமுடையவெடுத்தபொற்பாதமுங்காணப்பெற்றான்
மனித்தப்பிறவியும்வேண்டுவதேயிந்தமாநிலத்தே. (௮)

வாய்த்ததுநந்தமக்கீதோர்பிறவிமதித்திடுமின்
பார்த்தற்குப்பாசுபதமருள்செய்தவன்பத்தருள்ளீர்
கோத்தன்றுமுப்புரந்தீவளைத்தான்றில்லையம்பலத்துக்
கூத்தனுக்காட்பட்டிருப்பதன்றோநந்தங்கூழைமையே. (௯)

முடிகொண்டமத்தமுமுக்கண்ணினோக்குமுறுவலிப்புந்
துடிகொண்டகையுந்துதைந்தவெண்ணீறுங்குழலாள்
படிகொண்டபாகமும்பாய்புலித்தோலுமென்பாவிநெஞ்சிற்
குடிகொண்டவாதில்லையம்பலக்கூத்தன்குரைகழலே. (௰)

படைக்கலமாகவுன்னாமத்தெழுத்தஞ்சென்னாவிற்கொண்டே
னிடைக்கலமல்லேனெழுபிறப்புமுனக்காட்செய்கின்றேன்
றுடைக்கினும்போகேன்றொழுதுவணங்கித்தூநீறணிந்துன்
னடைக்கலங்கண்டாயணிதில்லைச்சிற்றம்பலத்தரனே. (௧௧)



சாடவெடுத்ததுதக்கன்றன்வேள்வியிற்சந்திரனை
வீடவெடுத்ததுகாலனைநாரணனான்முகனுந்
தேடவெடுத்ததுதில்லையுட்சிற்றம்பலத்துநட்ட
மாடவெடுத்திட்டபாதமன்றோநம்மையாட்கொண்டதே. (௧௨)

பார்கொண்டுமூடிக்கடல்கொண்டஞான்றுநின்பாதமெல்லா
நாலஞ்சுபுள்ளினமேந்தினவென்பர்நளிர்மதியஞ்
சால்கொண்டவண்ணைச்சடைவிரித்தாரெங்குமலர்க்
காலொன்றிமற்றுமுண்டேயவர்க்குறுதியகவிடமே. (௧௩)

வேலைக்கடனஞ்சமுண்டுவெள்ளேற்றொடும்வீற்றிருந்த
மாலைச்சடையார்க்குறைவிடமாவதுவாழைகளுஞ்
சாலைக்கரும்பொடுசெந்நெற்கழனியருகணைந்த
சோலைத்திருவொற்றியூரையெப்போதுந்தொழுமின்களே. (௧௪)

பற்றிநில்லாமுமைவுக்குத்திக்கட்குங்கையென்றுஞ்
செற்றிசடையாட்குஞ்செறிதருவன்னிக்குஞ்சேர்விடமாம்
பெற்றுடையாள்பெரும்பேர்சடையான்பிரியாதேயாள
விற்றவிடையாளொற்றியூருடையான்றன்விரிசடையே. (௧௫)

சிந்திப்பரியனசிந்திப்பவர்க்குச்சிறந்துசெந்தேன்
முந்திப்பொழிவனமுத்திகொடுப்பனமொய்த்திருண்டு
பந்திக்கிடந்தபழவினைதீர்ப்பனபாம்புசுற்றி
யந்திப்பிறையணிந்தாடுமையாறனடித்தலமே. (௧௬)

எழுவாயிறுவாயிலாதனவெங்கட்பிணிதவிர்த்து
வழுவாமருத்துவமாவனமாநரகக்குழிவாய்
விழுவாரவர்தம்மைவீழ்ப்பனமீட்பனமிக்கவன்போ
டுழுவார்க்கமுதங்கள்காண்கவையாறனடித்தலமே. (௧௭)

மலையார்மடந்தைமனத்தனவாணோர்மகுடமன்னி
நிலையாயிருப்பனநின்றோர்மதிப்பனநீணிலத்துப்
புலையாடுபுன்மைதவிர்ப்பனபொன்னுலகம்மளிக்கு
மலையார்புனற்பொன்னிசூழ்ந்தையாறனடித்தலமே. (௧௮)

பொலம்புண்டரீகப்புதுமலர்போல்வனபோற்றியென்பார்
புலம்பும்பொழுதும்புணர்துணையாவனபொன்னனையாள்
சிலம்புஞ்செறிபாடகமுஞ்செழுங்கிண்கிணித்திரளு
மலம்புந்திருவடிகாண்கவையாறனடித்தலமே. (௧௯)

உற்றாரிலாதார்க்குறுதுணையாவனவோதிநன்னூல்
கற்றார்பரவப்பெருமையுடையனகாதல்செய்யக்
கிற்பார்தமக்குக்கிளரொளிவானகந்தான்கொடுக்கு
மற்றார்க்கரும்பொருள்காண்கவையாறனடித்தலமே. (௨௦)

ஈன்றாளுமாயெனக்கெந்தையுமாயுடன்றோன்றினராய்
மூன்றாயுலகம்படைத்துகந்தான்மனத்துள்ளிருக்க
வேன்றானிமையவர்க்கன்பன்றிருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத்துணையாயிருந்தனன்றன்னடியோங்களுக்கே. (௨௧)

வைத்தபொருணமக்காமென்றுசொல்லிமனத்தடைத்துச்
சித்தமொருக்கிச்சிவாயநமவென்றிருக்கினல்லால்
மொய்த்தகதிர்மதிபோல்வாரவர்பாதிரிப்புலியூ
ரத்தனருள்பெறலாமோவறிவிலாப்பேதைநெஞ்சே. (௨௨)

கருவாய்க்கிடந்துன்கழலேநினையுங்கருத்துடையே
னுருவாய்த்தெரிந்துன்றனாமம்பயின்றேனுனதருளாற்
றிருவாய்ப்பொலியச்சிவாயநமவென்றுநீறணிந்தேன்
றருவாய்சிவகதிநீபாதிரிப்புலியூரரனே. (௨௩)



புழுவாய்ப்பிறக்கினும்புண்ணியாவுன்னடியென்மனத்தே
வழுவாதிருக்கவரந்தரவேண்டுமிவ்வையகத்தே
தொழுவார்க்கிரங்கியிருந்தருள்செய்பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற்கங்கைசெஞ்சடைமேல்வைத்ததீவண்ணனே. (௨௪)

மண்பாதலம்புக்குமால்கடன்மூடிமற்றேழுலகும்
விண்பாறிசைகெட்டிருசுடர்வீழினுமஞ்சனெஞ்சே
திண்பானமக்கொன்றுகண்டோந்திருப்பாதிரிப்புலியூர்க்
கண்பாவுநெற்றிக்கடவுட்சுடரான்கழலிணையே. (௨௫)

கோவாய்முடுகியடுதிறற்கூற்றங்குமைப்பதன்முன்
பூவாரடிச்சுவடென்மேற்பொறித்துவைபோகவிடின்
மூவாமுழுப்பழிமூடுங்கண்டாய்முழங்குந்தழற்கைத்
தேவாதிருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (௨௬)

காய்ந்தாயனங்கனுடலம்பொடிபடக்காலனைமுன்
பாய்ந்தாயுயிர்செகப்பாதம்பணிவார்தம்பல்பிறவி
யாய்ந்தாய்ந்தறுப்பாயடியேற்கருளாயுன்னன்பர்சிந்தை
சேர்ந்தாய்திருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (௨௭)

வெம்மைநமன்றமர்மிக்குவிரவிவிழுப்பதன்மு
னிம்மையுன்றாளென்றனெஞ்சத்தெழுதிவையீங்கிகழி
லம்மையடியேற்கருளுதியென்பதிங்கறிவார்
செம்மைதருசத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (௨௮)

கருவுற்றநாண்முதலாகவுன்பாதமேகாண்பதற்கு
வுருகிற்றென்னுள்ளமுநானுங்கிடந்தலந்தெய்த்தொழிந்தேன்
திருவொற்றியூராய்திருவாலவாயாய்திருவாரூராய்
யொருபற்றிலாமையுங்கண்டிரங்காய்கச்சியேகம்பனே. (௨௯)

போற்றுந்தகையனபொல்லாமுயலகன்கோபப்புன்மை
யாற்றுந்தகையனவாறுசமயத்தவரவரைத்
தேற்றுந்தகையனதேறியதொண்டரைச்செந்நெறிக்கே
யேற்றுந்தகையனவின்னம்பரான்றனிணையடியே. (க0)

வங்கமலிகடனாகைக்காரோணத்தெம்மானவனே
யெங்கள்பெருமானோர்விண்ணப்பமுண்டதுகேட்டருளீர்
கங்கைசடையுட்கரந்தாயக்கள்ளத்தைமெள்ளவுமை
நங்கையறியிற்பொல்லாதுகண்டாயெங்கணாயகனே. (கக)

தன்னைச்சரணென்றுதாளடைந்தேன்றன்னடியடையப்
புன்னைப்பொழிற்புகலூரண்ணல்செய்வனகேண்மின்களோ
வென்னைப்பிறப்பறுத்தென்வினைக்கட்டறுத்தேழ்நரகத்
தென்னைக்கிடக்கவொட்டான்சிவலோகத்திருத்திடுமே. (கஉ)

பொன்னைவகுத்தன்னமேனியனேபுணர்மென்முலையா
டன்னைவகுத்தன்னபாகத்தனேதமியேற்கிரங்காய்
புன்னைமலர்த்தலைவண்டுறங்கும்புகலூரரசே
யென்னைவகுத்திலையேலிடும்பைக்கிடம்யாதுசொல்லே. (கங)

மாணிக்குயிர்பெறக்கூற்றையுதைத்தனமாவலிபாற்
காணிக்கிரந்தவன்காண்டற்கரியனகண்டதொண்டர்
பேணிக்கிடந்துபரவப்படுவனபேர்த்துமஃதே
மாணிக்கமாவனமாற்பேறுடையான்மலரடியே. (கச)

கருடத்தனிப்பாகன்காண்டற்கரியனகாதல்செய்யிற்
குருடர்க்குமுன்னேகுடிகொண்டிருப்பனகோலமல்கு
செருடக்கடிமலர்செல்விதன்செங்கமலக்கரத்தால்
வருடச்சிவப்பனமாற்பேறுடையான்மலரடியே. (கரு)



பொன்னார்திருவடிக்கொன்றுண்டுவிண்ணப்பம்போற்றிசெய்யு
மென்னாவிகாப்பதற்கிச்சையுண்டேலிருங்கூற்றகல
மின்னாருமூவிலைச்சூலமென்மேற்பொறிமேவுகொண்ட
றுன்னார்கடந்தையுட்டூங்கானைமாடச்சுடர்க்கொழுந்தே. (கசு)

சாம்பலைப்பூசித்தரையிற்புரண்டுநின்றாள்பரவி
யேம்பலிப்பார்கட்கிரங்குகண்டாயிருங்கங்கையென்னுங்
காம்பலைக்கும்பணைத்தோளிகதிர்ப்பூண்வனமுலைமேற்
பாம்பலைக்குஞ்சடையாயெம்மையாளும்பசுபதியே. (கஎ)

முன்னேயுரைத்தான்முகமனேயொக்குமிம்மூவுலகுக்
கன்னையுமத்தனுமாவாயழல்வண்ணநீயலையோ
வுன்னைநினைந்தேகழியுமென்னாவிகழிந்ததற்பின்
னென்னைமறக்கப்பெறுமெம்பிரானுன்னைவேண்டியதே. (கஅ)

நின்னையெப்போதுநினையவொட்டாய்நீநினையப்புகிற்
பின்னையப்போதேமறப்பித்துப்பேர்த்தொன்றுநாடுவித்தி
யுன்னையெப்போதுமறந்திட்டுனக்கினிதாவிருக்கு
மென்னையொப்பாருளரோசொல்லுவாழியிறையவனே. (க௯)

உடலைத்துறந்துலகேழுங்கடந்துலவாததுன்பக்
கடலைக்கடந்துய்யப்போயிடலாகுங்கனகவண்ணப்
படலைச்சடைப்பரவைத்திரைக்கங்கைப்பனிப்பிறைவெண்
சுடலைப்பொடிக்கடவுட்கடிமைக்கட்டுணிநெஞ்சமே. (உ0)

விண்ணகத்தான்மிக்கவேதத்துளான்விரிநீருடுத்த
மண்ணகத்தான்றிருமாலகத்தான்மருவற்கினிய
பண்ணகத்தான்பத்தர்சித்தத்துளான்பழநாயடியேன்
கண்ணகத்தான்மனத்தான்சென்னியானெங்கறைக்கண்டனே. ( )

வானந்துளங்கிலென்மண்கம்பமாகிலென்மால்வரையுந்
தானந்துளங்கித்தலைதடுமாறிலென்றண்கடலு
மீனம்படிலென்விரிசுடர்வீழிலென்வேலைநஞ்சுண்
ணேமொன்றில்லாவொருவனுக்காட்பட்டவுத்தமர்க்கே. (௪௨)

சிவனெனுநாமந்தனக்கேயுடையசெம்மேனியெம்மா
னவனெனையாட்கொண்டளித்திடுமாகிலவன்றனையான்
பவனெனுநாமம்பிடித்துத்திரிந்துபன்னாளழைத்தா
லிவனெனைப்பன்னாளழைப்பொழியானென்றெதிர்ப்படுமே. (௪௩)

பந்தித்தபாவங்களம்மையிற்செய்தனவிம்மைவந்து
சந்தித்தபின்னைச்சழப்பதென்னேவந்தமரர்முன்னாள்
முந்திச்செழுமலரிட்டுமுடிதாழ்த்தடியிணைக்கும்
நந்திக்குமுந்துறவாட்செய்கிலாவிட்டநன்னெஞ்சமே. (௪௪)

துறக்கப்படாதவுடலைத்துறந்துவெந்தூதுவரோ
டிறப்பனிறந்தாலிருவிசும்பேறுவனேறிவந்து
பிறப்பன்பிறந்தாற்பிறையணிவார்சடைப்பிஞ்ஞகன்பேர்
மறப்பன்கொலோவென்றென்னுள்ளங்கிடந்துமறுகிடுமே. (௪௫)

மேலுமறிந்திலனான்முகன்மேற்சென்றுகீழிடந்து
மாலுமறிந்திலன்மாலுற்றதேவழிபாடுசெய்யும்
பாலன்மிசைச்சென்றுபாசம்விசிறிமறிந்தசிந்தைக்
காலனறிந்தானறிதற்கரியான்கழலடியே. (௪௬)

திருச்சிற்றம்பலம்.

---



# ஐந்தாந்திருமுறை.

## கோயில்-பண் - திருக்குறுந்தொகை. (ரு - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

அன்னம்பாலிக்குந்தில்லைச்சிற்றம்பலம்
பொன்னம்பாலிக்குமேலுமிப்பூமிசை
யென்னம்பாலிக்குமாறுகண்டின்புற
வின்னம்பாலிக்குமோவிப்பிறவியே. (௧)

அல்லலென்செயுமருவினையென்செயுந்
தொல்லைவல்வினைத்தொண்டந்தானென்செயுந்
தில்லைமாநகர்ச்சிற்றம்பலவனார்க்
கெல்லையில்லதோரடிமைபூண்டேனுக்கே. (௨)

நாடிநாரணனான்முகனென்றிவர்
தேடியுந்திரிந்துங்காணவல்லரோ
மாடமாளிகைசூழ்தில்லையம்பலத்
தாடிபாதமென்னெஞ்சுளிருக்கவே. (௩)

மதுரவாய்மொழி மங்கையோர்பங்கினன்
சதுரன்சிற்றம்பலவன்றிருமலை
யதிரவார்த்தெடுத்தான்முடிபத்திற
மிதிகொள்சேவடிசென்றடைந்துய்ம்மினே. (௪)

பனைக்கைமும்மதவேழமுரித்தவன்
நினைப்பவர்மனங்கோயிலாக்கொண்டவ
னனைத்தும்வேடமாமம்பலக்கூத்தனைத்
தினைத்தனைப்பொழுதும்மறந்துய்வனே. (௫)

தீர்த்தனைச்சிவனைச்சிவலோகனை
மூர்த்தியைமுதலாயவொருவனைப்
பார்த்தனுக்கருள்செய்தசிற்றம்பலக்
கூத்தனைக்கொடியேன்மறந்துய்வனே. (௯)

ஓங்குமால்வரையேந்தலுற்றான்சிரம்
வீங்கிவிம்முறவூன்றியதாளினான்
றேங்குநீர்வயல்சூழ்தில்லைக்கூத்தனைப்
பாங்கிலாத்தொண்டனேன்மறந்துய்வனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவண்ணாமலை - திருக்குறுந்தொகை. (ரு-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

வட்டனைமதிசூடியைவானவர்
சிட்டனைத்திருவண்ணாமலையனை
யிட்டனையிகழ்ந்தார்புரமூன்றையு
மட்டனையடியேன்மறந்துய்வனே. (௧)

வானனைமதிசூடியமைந்தனைத்
தேனனைத்திருவண்ணாமலையனை
யேனனையிகழ்ந்தார்புரமெய்த
வானனையடியேன்மறந்துய்வனே. (௨)

அரக்கனையலறவ்விரலூன்றிய
திருத்தனைத்திருவண்ணாமலையனை
யிரக்கமாவென்னுடலுறுநோய்களைத்
துரக்கனைத்தொண்டனேன்மறந்துய்வனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.



## திருவொற்றியூர் திருக்குறுந்தொகை. (ரு-ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

ஒற்றியூருமொளிமதிபாம்பினை
யொற்றியூருமப்பாம்புமதனையே
யொற்றியூரவொருசடைவைத்தவ
ரொற்றியூர்தொழநம்வினையோயுமே. (௧)

ஒன்றுபோலுகந்தவேறிற்று
ஒன்றுபோலுமுறைத்துக்கணைத்தது
ஒன்றுபோலொளிமாமதிசூடிற்று
ஒன்றுபோலுகந்தாரொற்றியூரரே.

வரையிருருயர்தோளுடைமன்னனை
வரையினால்வலிசெற்றவர்வாழ்விடந்
திரையினார்புடைசூழ்திருவொற்றியூ
ருரையினாற்பொலிந்தாருயர்ந்தார்களே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருமயிலாடுதுறை-திருக்குறுந்தொகை. (ரு-ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

கொள்ளுங்காதன்மைபெய்துறுங்கோல்வளை
உள்ளமுள்கியுரைக்குந்திருப்பெயர்
வள்ளன்மாமயிலாடுதுறையுறை
வெள்ளந்தாங்குசடையனைவேண்டியே. (௧)

நிலைமைசொல்லுநெஞ்சேதவமென்செய்தாய்
கலைகளாயவல்லான்கயிலாயநன்
மலையன்மாமயிலாடுதுறையனைத்
தலையின்மேலுமனத்துளுந்தக்கவே. (௯)

பருத்ததோளுமுடியும்பொடிபட
இருத்தினானவனின்னிசைகேட்டலும்
வருத்தினான்மாமயிலாடுதுறைதொழுங்
கருத்தினார்வினைக்கட்டறுங்காண்மினே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருவேட்களம் - திருக்குறுந்தொகை. (ரு - திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

நன்றுநாடொறுநம்வினைபோயறும்
என்றுமின்பந்தழைக்கவிருக்கலாஞ்
சென்றுநீர்திருவேட்களத்துள்ளுறை
துன்றுபொற்சடையானைத்தொழுமினே. (௧)

துன்பமில்லைத்துயரில்லையாமினி
நம்பனாகியநன்மணிகண்டனார்
என்பொனாருறைவேட்களநன்னக
ரின்பன்சேவடியேத்தியிருப்பதே. (௨)

சேடனூருறையுஞ்செழுமாமலை
யோடியாங்கெடுத்தான்முடிபத்திற
வாடவூன்றிமலரடிவாங்கிய
வேடனூருறைவேட்களஞ்சேர்மினே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.



## திருவாட்போக்கி - திருக்குறுந்தொகை. (ரு - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

காலபாசம்பிடித்தெழுதூதுவர்
பாலகர்விருத்தர்பழையாரெனு
ராலநீழலமர்ந்தவாட்போக்கியார்
சீலமார்ந்தவர்செம்மையுணிற்பரே. (௧)

இரக்கமுன்னறியாதெழுதூதுவர்
பரக்கழித்தவப்பற்றுதன்முன்னமே
யரக்கனுக்கருள்செய்தவாட்போக்கியார்
கரப்பதுங்கரப்பாரவர்தங்கட்கே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

## தனித்திருக்குறுந்தொகை. (ரு - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

மாசில்வீணையுமாலைமதியமும்
வீசுதென்றலும்வீங்கிளவேனிலும்
மூசுவண்டறைபொய்கையும்போன்றதே
யீசனெந்தையிணையடிநீழலே. (௧)

நமச்சிவாயவேஞானமுங்கல்வியும்
நமச்சிவாயவேநானறிவிச்சையும்
நமச்சிவாயவேநாநவின்றேத்துமே
நமச்சிவாயவேநன்னெறிகாட்டுமே. (௨)

நடலைவாழ்வுகொண்டென்செய்தீர்நாணிலீர்
சுடலைசேர்வதுசொற்பிரமாணமே

கடலினஞ்சமுதுண்டவர்கைவிட்டா
லுடலினார்கிடந்தூர்முனிபண்டமே. (௩)

பூக்கைக்கொண்டரன்பொன்னடிபோற்றிலார்
நாக்கைக்கொண்டானாமநவில்கிலா
ராக்கைக்கேயிரைதேடியலமந்து
காக்கைக்கேயிரையாகிக்கழிவரே. (௪)

வாழ்த்தவாயுநினைக்கமடநெஞ்சந்
தாழ்க்கச்சென்னியுந்தந்ததலைவனைச்
சூழ்த்தமாமலர்தூவித்துதியாதே
வீழ்த்தவாவினையேனெடுங்காலமே. (௫)

விறகிற்றீயினன்பாலிற்படுநெய்போன்
மறையநின்றுளன்மாமணிச்சோதியா
னுறவுகோனட்டுணர்வுகயிற்றினான்
முறுகவாங்கிக்கடையமுன்னிற்குமே. (௬)

கற்றுக்கொள்வனவாயுளநாவுள
இட்டுக்கொள்வனபூவுணீருள
கற்றைச்செஞ்சடையானுளனாமுளோ
மெற்றுக்கோநமனான்முனிவுண்பதே. (௭)

கங்கையாடிலென்காவிரியாடிலென்
கொங்குதண்குமரித்துறையாடிலென்
ஓங்குமாகடலோதநீராடிலென்
எங்குமீசனெனாதவர்க்கில்லையே. (௮)

கானநாடுகலந்துதிரியிலென்
னீனமின்றியிருந்தவஞ்செய்யிலென்



னூனையுண்டலொழிந்துவானோக்கிலென்
ஞானனென்பவர்க்கன்றிநன்கில்லையே. (௯)

கூடவேடத்தராகிக்குழுவிலென்
வாடியூனைவருத்தித்திரியிலென்
ஆடல்வேடத்தனம்பலக்கூத்தனைப்
பாடலாளர்க்கல்லாற்பயனில்லையே (௧௦)

நன்றுநோற்கிலென்பட்டினியாகிலென்
குன்றமேறியிருந்தவஞ்செய்யிலென்
சென்றுநீரிற்குளித்துத்திரியிலென்
என்றுமீசனென்பார்க்கன்றியில்லையே. (௧௧)

வேதநாயகன்வேதியர்நாயகன்
மாதினாயகன்மாதவர்நாயக
னாதிநாயகனாதிரைநாயகன்
பூதநாயகன்புண்ணியமூர்த்தியே. (௧௨)

செத்துச்செத்துப்பிறப்பதேதேவென்று
பத்திசெய்மனப்பாறைகட்கேறுமோ
அத்தனென்றரியோடுபிரமனுந்
துத்தியஞ்செயநின்றநற்சோதியே. (௧௩)

நூறுகோடிபிரமர்கணொங்கினா
ராறுகோடிநாராயணரங்ஙனே
யேறுகங்கைமணலெண்ணிலிந்திரர்
ஈறிலாதவனீசனொருவனே. (௧௪)

வாதுசெய்துமயங்குமனத்தரா
யேதுசொல்லுவீராகிலுமேழைகாள்

யாதோர்தேவரெனப்படுவார்க்கெல்லா
மாதேவனலாற்றேவர்மற்றில்லையே. (க௦)

தீயினுநல்லசங்கரனுக்கன்ப
ராயவுள்ளத்தமுதருந்தப்பெறார்
பேயர்பேய்முலையுண்டுயிர்போக்கிய
மாயன்மாயத்துட்பட்டமனத்தரே. (கக)

அரக்கன்வல்லரட்டாளங்கொழித்தாரருள்
பெருக்கச்செய்தபிரான்பெருந்தன்மையை
யருத்திசெய்தறியப்பெறாதின்றிலர்
கருத்திலாக்கயக்கணத்தோர்களே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

# ஆறாந் திருமுறை.

## திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அரியானையந்தணர்தஞ்சிந்தையானையருமறையினகத்தானை யணுவையார்க்குந்தெரியாததத்துவனைத்தேனைப்பாலைத்திகழொளி யைத்தேவர்கடங்கோனைமற்றைக்கரியானைநான்முகனைக்கனலைக் காற்றைக்கனைகடலைக்குலவரையைக்கலந்துநின்றபெரியானைப்பெ ரும்பற்றப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (க)

கற்றானைக்கங்கைவார்சடையான்றன்னைக்காவிரிசூழ்வலஞ்சுழி யுங்கருதினானை, யற்றானையலந்தார்க்குமருள்செய்வானையாரூரும்



புகுவானையறிந்தோமன்றே,மற்றாருந்தன்னொப்பாரில்லாதானைவா னவர்களெப்பொழுதும்வணங்கியேத்தப், பெற்றானைப்பெரும்பற்ற ப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம்பிறவாநாளே (உ)

அருந்துணையையடியார்தமல்லறீர்க்குமருமருந்தையகன்ஞா லத்தகத்துட்டோன்றி, வருந்துணையுஞ்சுற்றமும்பற்றும்விட்டுவான் புலன்களகத்தடக்கிமடவாரோடும்,பொருந்தணைமேல்வரும்பயனைப் போகமாற்றிப்பொதுநீக்கித்தனைநினையவல்லார்க்கென்றும்,பெருந் துணையைப்பெரும்பற்றப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம்பிறவா நாளே. (௩)

அரவணையான்சிந்தித்தரற்றுமடியருமறையான்சென்னிக்கணி யாமடி, சரவணத்தான்கைதொழுதுசாருமடிசார்ந்தார்கட்கெல் லாஞ்சரணாமடி,பரவுவார்பாவம்பறிக்குமடி,பதினெண்கணங்களும் பாடுமடி, விரவுசீர்த்தென்கெடிலநாடன்னடிதிருவீரட்டானத் தெஞ்செல்வனடி. (௪)

கொடுவினையாரென்றுங்குறுகாவடிகுறைந்தடைந்தாராழாமைக் காக்குமடி,படுமுழவம்பாணிபயிற்றுமடிபதைத்தெழுந்தவெங்கூ ற்றைப்பாய்ந்தவடி, கடுமுரணேறூர்ந்தான்கழற்சேவடிகடல்வையங் காப்பான்கருதுமடி, நெடுமதியங்கண்ணியணிந்தானடிநிறைகெடி லவீரட்டநீங்காவடி. (௫)

விற்றூணொன்றில்லாதநல்கூர்த்தான்காண்வியன்கச்சிக்கம்பன் காண்பிச்சையல்லான், மற்றூணொன்றில்லாதமாசதுரன்காண்மயா னத்துமைந்தன்காண்மாசொன்றில்லாப்,பொற்றூண்காண்மாமணி நற்குன்றொப்பான்காண்பொய்யாதபொழிலேழுந்தாங்கிநின்ற, கற் றூண்காண்காளத்திகாணப்பட்டகணநாதன்காணவனென்கண்ணு ளானே. (௬)

118905

நாரணன்காண் நான்முகன்காணால்வேதன்காண் ஞானப்பெருங் கடற்கோர்நாவாயன்ன, பூரணன்காண் புண்ணியன்காண் புராணன்றான்காண் புரிசடைமேற்புனலேற்றபுனிதன்றான்காண், சாரணன்காண் சந்திரன்காண் கதிரோன்றான்காண் தன்மைக்கண்டானேகாண் தக்கோர்க்கெல்லாங் காரணன்காண் காளத்திகாணப்பட்ட கணநாதன்காணவனென்கண்ணுளானே. (எ)

மனத்தகத்தான் றலைமேலான் வாக்கினுள்ளான் வாயாரத்தன் னடியேபாடுந்தொண்டர், இனத்தகத்தானிமையவர்தஞ்சிரத்தின் மேலானேழண்டத்தப்பாலானிப்பாற்செம்பொற், புனத்தகத்தா னறுங்கொன்றைப் போதினுள்ளான் பொருப்பிடையானெருப்பி டையான்காற்றினுள்ளான், கனத்தகத்தான் கயிலாயத்துச்சியுள்ளா ன்காளத்தியானவனென்கண்ணுளானே. (அ)

தேனப்பூவண்டுண்டகொன்றையான்காண் திருவேகம்பத்தான் காண்டேனார்ந்தக்க, ஞானப்பூங்கோதையாள்பாகத்தான்காணம் பன்காண்ஞானத்தொளியானான்காண், வானப்பேருருமதியவேடி மட்டித்துநின்றான்காண் வண்டார்சோலைக் கானப்பேருடையான்காண் கறைக்கண்டன்காண் காளத்தியானவனென்கண்ணுளானே. (கூ)

பிறவாதேதோன்றியபெம்மான்றன்னைப் பேணாதாரவர்தம்மை ப்பேணாதானைத், துறவாதேகட்டறுத்தசோதியானைத் தூநெறிக்குத் தூநெறியாய்நின்றான்றன்னைத், திறமாயவெத்திசைக்குந்தானேயா கித்திருப்புன்கூர்மேவியசிவலோகனை, நிறமாமொளியானை நீசனேனா னென்னேநானினையாவாறே. (க0)

குருகாம்வயிரமாங்கூறுநாளாங் கொள்ளுங்கிழமையாங்கோ ளேதானும், பருகாவமிர்தமாம்பாலினெய்யாம்பழத்தினிரதமாம் பாட்டிற்பண்ணாம், ஒருகாலுமையாளோர்பாகனுமாமுண்ணின்ற



நாவிற்குரையாடியாங், கருவாயுலகுக்குமுன்னேதோன்றுங்கண்ணாங் கருகாவூரெந்தைதானே. (கக)

பச்சைநிறமுடையர்பாலர்சாலப்பழையர்பிழையெலாநீக்கியா ள்வர், கச்சைக்கதநாகம்பூண்டதோளர் கலவொன்றுகையேந்தியில் லந்தோறும், பிச்சைகொளநுகர்வர்பெரியர்சாலப்பிறங்குசடைமுடி யர்பேணுந்தொண்டர், இச்சைபிரிவறியரென்றுமுள்ளாரிடைமருது மேவியிடங்கொண்டாரே. (கஉ)

வடிவேறுதிரிசூலந்தோன்றுந்தோன்றும்வளர்சடைமேலிளமதி யந்தோன்றுந்தோன்றுங், கடியேறுகமழ்கொன்றைக்கண்ணிதோன் றுங்காதில்வெண்குழைதோடுகலந்துதோன்று, மிடியேறுகளிற்றுரி வைப் போர்வைதோன்றுமெழில்திகழுந் திருமுடியுமிலங்கித்தோன் றும், பொடியேறுதிருமேனிபொலிந்துதோன்றும்பொழில்திகழும்பூவ ணத்தெம்புனிதனார்க்கே. (கங)

படைமலிந்தமழுவாளுமானுந்தோன்றும் பன்னிரண்டுகணுடை யபிள்ளைதோன்றும், நடைமலிந்தவிடையோடுகொடியுந்தோன் றும்நான்மறையினொலிதோன்றும்நயனந்தோன்றும், உடைமலிந்த கோவணமுங்கீளுந்தோன்று மூரல் வெண்சிரமாலையுலாவித்தோன் றும், புடைமலிந்தபூதத்தின்பொலிவுதோன்றும்பொழில்திகழும்பூவ ணத்தெம்புனிதனார்க்கே. (கச)

மூலத்தானையெல்லார்க்கு முன்னேதோன்றி முதிருஞ்சடை முடிமேன்முகிழ்வெண்டிங்கள், வலைத்தானைவல்லசுரர்புரங்கண்மூன் றும்வரைசிலையாவாசுகிமாநாணுக்கோத்துத், துலைத்தானைச்சுடரத் தாற்றுவணீற்றுத்தூமுத்தவெண்முறுவலுமையோடாடித், திளைத் தானைத்தென்கூடற்றிருவாலவாய்ச் சிவனடியேசிந்திக்கப்பெற்றே னேனே. (கரு)

கள்ளிமுதுகாட்டிலாடி கண்டாய்காலனையுங்காலாற்கடந்தான் கண்டாய், புள்ளியுழைமானின்றோலான் கண்டாய்புலியுரிசேராடைப்புனிதன் கண்டாய், வெள்ளிமிளிர்பிறைமுடிமேற்சூடி கண்டாய்வெண்ணீற்றான் கண்டாய்நஞ்செந்தின்மேய, வள்ளிமணாளற்குத்தாதை கண்டாய்மறைக்காட்டுறையுமணாளன்றானே. (கசு)

உயிராவணமிருந்துற்றுநோக்கியுள்ளக்கிழியினுருவெழுதி, யுயிராவணஞ்செய்திட்டுன்கைத்தந்தாலுணரப்படுவாரோடொட்டிவாழ்தி, யயிராவணமேறாதானேறேறி யமரர்நாடாளாதேயாரூராண்ட, வயிராவணமேயென்னம்மானே நின்னருட்கண்ணானோக்காதாரல்லாதாரே. (கஎ)

கருவாகிக்குழம்பிருந்துகலித்துமூளைகருநரம்பும்வெள்ளெலும்புஞ்சேர்ந்தொன்றாகி, யுருவாகிப்புறப்பட்டிங்கொருத்திதன்னால் வளர்க்கப்பட்டுயிராருங்கடைபோகாரான், மருவாகிநின்னடியேமறவேனம்மான் மறித்தொருகாற்பிறப்புண்டேன் மறவாவண்ணந், திருவாரூர்மணவாளா திருத்தெங்கூராய்செம்பொனே கம்பனே திகைத்திட்டேனே. (கஅ)

முன்னமவனுடையநாமங்கேட்டாண்மூர்த்தியவனிருக்கும்வண்ணங்கேட்டாள், பின்னையவனுடையவாரூர்கேட்டாள்பெயர்த்துமவனுக்கேபிச்சியானாள், அன்னையையுமத்தனையுமன்றேநீத்தாளகன்றாளகலிடத்தாராசாரத்தைத், தன்னைமறந்தாடன்னாமங்கெட்டாடலைப்பட்டாணங்கைதலைவன்றாளே. (ககூ)

திருமணியைத் தித்திக்குந்தேனைப் பாலைத் தீங்கரும்பினின்சுவையைத்தெளிந்ததேறற், குருமணியைக்குழன்மொந்தை தாளம்வீணைகொக்கரையின்சச்சரியின்பாணியானைப், பருமணியைப்பவளத்தைப்பசும்பொன்முத்தைப்பருப்பதத்திலருங்கலத்தைப் பாவித்தீர்



க்கு, மருமணியையாரூரிலெம்மான்றன்னையறியாதடிநாயேனயர்த்தவாறே. (உ0)

இடர்கெடுமாறெண்ணுதியேனெஞ்சேநீவாநீணொளிசேர் கங்கைச்சடையாயென்றுஞ், சுடரொளியாயுள்விளங்குசோதியென்றுந்தூநீறுசேர்ந்திலங்குதோளாயென்றுங், கடல்விடமதுண்டிருண்டகண்டாவென்றுங்கலைமான்மறியேந்துகையாவென்று, மடல்விடையா யாரமுதேயாதியென்று மாரூராவென்றென்றேயலறாநில்லே. (உக)

நிலைபெறுமாறெண்ணுதியேனெஞ்சேநீவாநித்தலுமெம்பிரானுடையகோயில்புக்குப், புலர்வதன்முன்னலகிட்டுமெழுக்குமிட்டுப்பூமாலைபுனைந்தேத்திப்புகழ்ந்துபாடித், தலையாரக்கும்பிட்டுக்கூத்துமாடிசங்கராசயபோற்றிபோற்றியென்று, மலைபுனல்சேர்செஞ்சடையெம்மாதியென்றுமாரூராவென்றென்றேயலறாநில்லே. (உஉ)

புண்ணியமுநன்னெறியுமாவதெல்லாநெஞ்சமேயிதுகண்டாய் பொருந்தக்கேணீ, நுண்ணியவெண்ணூல்கிடந்தமார்பாவென்றுநுந்தாதவொண்சுடரேயென்றுநாளும், விண்ணியங்குதேவர்களும்வேதநான்கும்விரைமலர்மேனான்முகனுமாலுங்கூடி, எண்ணரியதிருநாமமுடையாயென்றுமெழிலாரூராவென்றேயேத்தாநில்லே. (உங)

சங்கரனேநின்பாதம்போற்றிபோற்றிசதாசிவனேநின்பாதம்போற்றிபோற்றி, பொங்கரவாநின்பாதம்போற்றிபோற்றிபுண்ணியனேநின்பாதம்போற்றிபோற்றி, யங்கமலத்தயனோடுமாலுங்காணாவனலுருவாநின்பாதம்போற்றிபோற்றி, செங்கமலத்திருப்பாதம்போற்றிபோற்றிதிருமூலத்தானனேபோற்றிபோற்றி. (உச)

ஒருவனாயுலகேத்தநின்றநாளோ வோருருவேமூவுருவமானநாளோ, கருவனாய்க்காலனைமுன்காய்ந்தநாளோகாமனையுங்கண்ணழ

லால்விழித்தகாலனோ,மருவலுறும்மன்னுயிர்கொன்றுதெரித்தகாலனோ மான்மறிக்கைபேச்சியோர்மாதோர்பாகர், திருவினள்சேர்வதற்கு முன்னேபின்னே திருவாரூர்கோயிலாக்கொண்டாரே. (உ௫)

பாடகஞ்சேர்மெல்லடிநற்பாவையாளு நீயும் போய்ப்பார்த்தனது பலத்தைக்காண்பான், வேடனாய்வில்வாங்கியெய்தாரோவிண்ணை வர்க்குங்கண்ணவனாய்நின்றகாலனோ, மாடமொழியாளிகைகள்மல்கு தில்லைமணிதிகழுமம்பலத்தேமன்னிக்கூத்தை,யாடுவான்புகுதற்கு முன்னேபின்னேயணியாரூர்க்கோயிலாக்கொண்டாரே. (உ௬)

பாலனாய்வளர்ந்திலாப்பான்மையானே பணிவார்கட் கங்கங்கே பற்றானானே, நீலமாமணிகண்டத்தெண்டோளானே நெருநலாயின்றாகிநாளையாகுஞ், சீலமேயிலானேநெறியேயாகுஞ்சீர்மையேகூர் மையேகுணமேநல்ல, கோலநீகொள்வதற்கு முன்னேபின்னேகுளி ராரூர்கோயிலாக்கொண்டாரே. (உ௭)

புகையெட்டும்போக்கெட்டும்புலன்களெட்டும் பூதலங்களைவெ ட்டும்பொழில்களெட்டுங், கலையெட்டுங்காப்பெட்டுங்காட்சியெட்டுங் கழற்சேவடியடைந்தார்களைகளெட்டும், நகையெட்டுநாளெட்டு கண்மையெட்டுஞ்சிதைந்தார்மனத்தகத்துமலரெட்டும், திசை யெட்டுந்தெரிப்பதற்குமுன்னேபின்னே திருவாரூர்கோயிலாக்கொ ண்டாரே. (உ௮)

கல்லாலுலகமுமாளாய்நீயேயேகம்பமேவியிருந்தாய்நீயே,கல்லா னைதன்மையறிவாய்நீயேஞானச்சுடர்விளக்காய்நின்றாய்நீயே, பொ ல்லாவினைகளறுப்பாய்நீயேபுகழ்ச்சேவடியென்மேல்வைத்தாய்நீயே, செல்வாய செல்வந்தருவாய்நீயே திருவையாறகலாத செம்பொற் சோதீ. (உ௯)

நினைத்தலைபோர் பொறையிலாயுயிர்போக்கூட்டைப்பொரு ளென்றுநிகழ்ன்னிமதியாவிக்த, வினைத்துறைக்குமாளலாமென்றுபேசு



மாங்காரந்தவிர்நெஞ்சேயமரர்க்காக, முனைத்தவருமதில்மூன்றும் பொன்றவன்றுமுடுகியவெஞ்சிலைவளைத்துச்செந்தீமூழ்க, நினைத்த பெருங்கருணையனைநித்தானையென்று நினையுமாநினைக்கானுய்ய லாமே. (௩௰)

பேசப்பொருளலாப்பிறவிதன்னைப்பெரிதென்றுசிறுமனத்தால் வேண்டாமின்றே, வாசக்குழன்மடவார்போகமென்னும் வலைப்பட்டு வீழாதேவருகநெஞ்சே, தூசக்கரியுரித்தான்றூநீறாடித்துதைந்திலங் குநூன்மார்பன்றோடாகில்லா, தேசர்க்கரியவனைத்தானையென்று நினையுமாநினைந்தக்காலுய்யலாமே. (௩௧)

தலையவனாயுலகுக்கோர்தன்மையானைத் தலையறுப்பச்சார்ந்தார்க் கின்னமுதானானை, நிலையவனாய்நின்றொப்பாரில்லாதானை நின்று னைராக்கூற்றத்தைச்சீறிப்பாய்ந்த, கொலையவனைக் கொல்யானைத் தோல்மேலிட்டகூற்றவனைக்கொடுமதில்கண்மூன்றுமெய்த, நிலை யவனைத்திருச்சோற்றுத்துறையுளானைத் திகழொளியைச்சிவனையுன்ன பயனானை. (௩௨)

நம்பனைநான்மறைகளாயினானை நடமாடவல்லானைஞானக் கூத்தா, கம்பனைக்கச்சிமாநகருளானைக்கடிமதில்கண்மூன்றினையும் பொடியாவெய்த, அம்பனையளவிலாப்பெருமையானையடியார்கட் காரமுதேயானைத்தேனைச், செம்பொனைத்திருச்சோற்றுத்துறையுளா னைத்திகழொளியைச்சிவனையுன்னபயனானை. (௩௩)

வண்டோங்குசெங்கமலக்கழுநீர்மல்குமதமத்தஞ்செஞ்சடை மேன்மதியஞ்சூடி,தண்டோள்களாயிரமும்வீசிநின்றுதிசைசோதநட மாடிச்சிவலோகனை,ருண்டார்நஞ்சுலகுக்கோருறுதிவேண்டியொற் றியூர்மேயவொளிவண்ணனார், கண்டேனென்கனவகத்திற்கண்டேற் றென்றன்கடும்பிணியுஞ்சுடுந்தொழிலுங்கைவிட்டவே. (௩௪)

பேணியநற்பிறைதவழ்செஞ்சடையினானைப்பித்தராமடியார்க்கு முத்திகாட்டு, மேணியையிடர்க்கடலுட்சுழிக்கப்பட்டிங்கிளைக்கின் றேற்கக்கரைக்கேயேறவாங்குந்,தோணியைத்தொண்டனேன்றூய சோதிச்சங்கவெண்குழையானைச்சுடர்பொற்காசி, னாணியையாவடு தண்டுறையுண்மேயவரனடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே. ()

வேண்டாமைவேண்டுவதுமில்லான்றன்னைவிசயனைமுன்னசைவி த்தவேடன்றன்னைத், தண்டாமைச்சுடர்விடுநற்சோதியானைச்சூல ப்படையானைக்காலன்வாழ்நாண்,மாண்டோடவுதைசெய்தமைந்தன் றன்னைமண்ணவரும்விண்ணவரும்வணங்கியேத்த, மாண்டானையா வடுதண்டுறையுண்மேயவரனடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே:

திருவேயென்செல்வமேதேனே வானோர்செழுஞ்சுடரேசெழு ஞ்சுடர்நற்சோதிமிக்க,வுருவேயென்னுறவேயென்னூனேயூனினுள் ளேயுள்ளத்தினுள்ளேநின்ற, கருவேயென்கற்பகமேகண்ணேகண் ணிற்கருமணியேமணியாடுபாவாய்காவா, யருவாயவல்வினைநோய டையாவண்ணமாவடுதண்டுறையுறையுமமரரேறே (௧௭)

பிறையோடுபெண்ணொருபால்வைத்தான்றான்காண்பேரவன் காண்பிறப்பொன்றுமில்லாதான்காண், கறையோடுமணிமிடற்றுக் காபாலிகாண்கட்டங்கன்காண்கையிற்கபாலமேந்திப், பறையோடு பல்கீதம்பாடினான்காணாடினான்காண்பாணியாநின்று,மறையோடு மாகீதங்கேட்டான்றான்காண்மாகடல்சூழ்கோகரணமன்னினானே.

சமரமிகுசலந்தரன்போர்வேண்டினானைச்சக்கரத்தாற்பிளப்பித் தசதுரர்போலும், நமனையொருகால்குறைத்தநாதர்போலுநாரண னையிடப்பாகத்துடைத்தார்போலுங், குமரனையுமகனாகவுடையார் போலுங்குளிர்வீழிமிழலையமர்குழகர்போலு, மமரர்கள்பின்மு துநஞ்சுண்டார்போலுமடியேனையாளுடையவடிகடாமே. (௧௯)



பத்திமையாற்பணிந்தடியேன்றன்னைப்பன்னாட்பாமாலைப்பாடப் பயில்வித்தானை,யெத்தேவுமேத்துமிறைவன்றன்னையெம்மானையெ ன்னுள்ளத்துள்ளேயூறு,மத்தேனையமுதத்தையாவின்பாலையண்ணிக் குந்தீங்கரும்பையரனையாதிப்,புத்தேளைப்புள்ளிருக்கும்வேளூரானை ப்போற்றாதேயாற்றநாள்போக்கினேனே. (௨௦)

பேராயிரம்பரவிவானோரேத்தும்பெம்மானைப்பிரிவிலாவடியார் க்கென்றும், வாராதசெல்வம்வருவிப்பானைமந்திரமுந்தந்திரமுமரு ந்துமாகித், தீராநோய்தீர்த்தருளவல்லான்றன்னைத் திரிபுரங்கடீ யெழத்திண்சிலைகைக்கொண்ட,போரானைப்புள்ளிருக்கும்வேளூரா னைப்போற்றாதேயாற்றநாள்போக்கினேனே. (௨௧)

எவரேனுந்தாமாகவிலாடத்திட்டதிருநீறுஞ்சாதனமுங்கண் டாலுள்கி,யுவராதேயவரவரைக்கண்டபோதேயுகந்தடிமைத்திறநினை ந்தங்குவந்துநோக்கி, யிவர்தேவரவர்தேவரென்றுசொல்லியிரண் டாட்டாதொழிந்தீசன்றிறமேபேணிக்,கவராதேதொழுமடியார்நெ ஞ்சினுள்ளேகன்றாப்பூர்நடுதறியைக்காணலாமே. (௨௨)

ஐவிருண்டிடறைப்புண்டாக்கைவிட்டுஆவியார்போவதுமே யகத்தார்கூடி, மையினாற்கண்ணெழுதிமாலைசூட்டிமயானத்திலிடுவ தன்முன்மதியஞ்சூடு,மையனார்க்காளாகியன்புமிக்குஅகங்குழைந்து மெய்யரும்பியடிகள்பாதங்,கையினாற்றொழுமடியார்நெஞ்சினுள்ளே கன்றாப்பூர்நடுதறியைக்காணலாமே. (௨௩)

எத்தாயரெத்தந்தையெச்சுற்றத்தாரெம்மாடுசும்மாடாமேவர் நல்லார், செத்தால்வந்துதவுவாரொருவரில்லைச்சிறுவிறகாற்றீமூட் டிச்செல்லாநிற்பர், சித்தாயவேடத்தாய்நீடுபொன்னித்திருவானைக் காவுடையசெல்வாவென்ற, னத்தாவுன்பொற்பாதமடையப்பெற்றா லல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. (௨௪)

மருந்தானை மந்திரிப்பார் மனத்துளானை வளர்மதியஞ் சடையானை மகிழ்ந்தென் னுள்ளத், திருந்தானை பிறப்பிலியைப் பிறப்பிலானை யிமையவர்தம் பெருமானை யுமையாளஞ்சக், கருந்தான மதகளிற்றி னுரிபோர்த்தானைக் கனமழுவாட் படையானைப் பலிகொண்டோர், திரிந்தானைத் திருவானைக்காவுளானைச் செழுநீர்த்திரளைச் சென்றாடினேனே. (௪௫)

தாயவன்கா ணுலகிற்குத் தன்னொப்பில்லாத் தத்துவன்காண் மலைமங்கைபங்காவென்பார், வாயவன்காண் வரும்பிறவிநோய்தீர்ப்பான்காண் வானவர்க்குந் தானவர்க்கு மண்ணுளோர்க்குஞ், சேயவன்கா ணினைவார்க்குச் சித்தமார்ந்த திருவடியே யுள்கி நினைந்தெழுவாருள்ள, மேயவன்கா ணெழிலாரும் பொழிலார் கச்சியேகம்பன் காணவனென் னெண்ணத்தானே. (௪௬)

முந்தைகாண் மூவரினு முதலானான் காண் மூவிலைவேன் மூர்த்திகாண் முருகவேட்குத், தந்தைகாண் தண்கடமாமுகத்தினாற்குத் தாதைகாண் டாழ்ந்தடியே வணங்குவார்க்குச், சிந்தைகாண் சிந்தாத சித்தத்தார்க்குச் சிவனவன்காண் செங்கண்மால்விடையொன்றேறு, மெந்தைகா ணெழிலாரும் பொழிலார் கச்சியேகம்பன் காணவனென் னெண்ணத்தானே. (௪௭)

மெய்யானைத் தன்பக்கல் விரும்புவார்க்கு விரும்பாத வரும்பாவியவர்கட்கென்றும், பொய்யானைப் புறங்காட்டிலாடலானைப் பொன்பொலிந்த சடையானைப் பொடிகொள்பூதிப், பையானைப் பையரவமசைத்தான் றன்னைப் பரந்தானைப் பவளமால்வரைபோன் மேனிச், செய்யானைத் திருநாகேச்சரத்துளானைச் சேராதார் நன்னெறிக்கட் சேராதாரே. (௪௮)

கரந்தானைச் செஞ்சடைமேற் கங்கைவெள்ளங் கனலாகித் திருமேனிக் கமலத்தோன்றன், சிரந்தாங்குகையானைத் தேவதேவைத் திகழொ



ளியைத் தன்னடியே சிந்தைசெய்வார், வருந்தாமைக் காப்பானை மன்றாய் விண்ணாய் மறிகடலாய் மால்விசும்பாய் மற்றுமாகிப், பரந்தானைப் பள்ளியின் முக்கூடலானைப் பயிலாதே பாழேநா ளுழன்றவாறே. (௪௯)

காரிலங்கு திருவுருவத் தவற்கு மற்றைக் கமலத்திற் காரணற்குங் காட்சியொண்ணாச், சீரிலங்கு தழற்பிழம்பிற் சிவந்தார் போலுஞ் சிலைவளைவித் தவுணர்புரஞ் சிதைத்தார் போலும், பாரிலங்கு புனலனல்கால் பரமாகாசம் பரிதிமதி சுருதியுமாய்ப் பரந்தார் போலும், கூரிலங்குவேற் குமரன் றாதை போலுங் குடந்தைக்கீழ்க்கோட்டத் தெங் கூத்தனாரே.

ஒன்றாய வுலகனைத்து மானார் தாமே யூழிதோ றூழியுயர்ந்தார் தாமே, நின்றாகி யெங்கு நிமிர்ந்தார் தாமே நீர்வளிதீ யாகாசமானார் தாமே, கொன்றுடைக் கூற்றையுதைத்தார் தாமே கோலப்பழனையுடையார் தாமே, சென்றோங்கித் தீர்த்தங்களானார் தாமே திருவாலங்காடுறையுஞ் செல்வர் தாமே. (௫௧)

சிவனாகித் திசைமுகனாய்த் திருமாலாகிச் செழுஞ்சுடராய்த் தீயாகி நீருமாகிப், புவனாகிப் புவனங்களனைத்துமாகிப் பொன்னாகி மணியாகி முத்துமாகிப், பவனாகிப் பவனங்களனைத்துமாகிப் பசுவேறித் திரிவானோர் பவனாய் நின்ற, தவனாய தலையாலங்காடன் றன்னைச் சாராதே சாலநாள் போக்கினேனே. (௫௨)

பிறப்பானைப் பிறவாத தன்மையானைப் பெரியானை யரியானைப் பெண்ணாணாய, நிறத்தானை நின்மலனை நினையாதாரை நினையானை நினைவோர்க்கினியோன் றன்னை, யறத்தானை யறவோனை யையன்றன்னை யண்ணலனை நண்ணரிய வமரரேத்துந், திறத்தானைத் திகழொளியைத் திருமாற்பேற்றெஞ் செம்பவளக் குன்றினைச் சென்றடைந்தேனே. (௫௩)

விண்ணாகி நிலனாகி விசும்புமாகி வேலைசூழ் ஞாலத்தார் விரும்புகின்ற, வெண்ணாகி யெழுத்தாகி யியல்புமாகி யேழுலகுந் தொழுதேத்திக்

காணநின்ற, கண்ணாகிமணியாகிக்காட்சியாகிக்காதலித்திங்கடியார்கள்பரவநின்ற, பண்ணாகியின்னமுதாம்பாசூர்மேயபரஞ்சுடரைக் கண்டடியேனுய்ந்தவாறே. (௫௪)

வானவன்காண்வானவர்க்குமேலானான்காண்வடமொழியுந் தென்றமிழுமறைகணான்கு, மானவன்காணானைந்துமாடினான்காணையன்காண்கையிலனலேந்தியாடுங், கானவன்காண்கானவனுக்கருள்செய்தான்காண்கருதுவாரிதயத்துக்கமலத்தூறுந், தேனவன்காண்சென்றடையாச்செல்வன்றான்காண்சிவனவன்காண்சிவபுரத்தெஞ்செல்வன்றானே. (௫௫)

பித்தன்காண்டக்கன்றன்வேள்வியெல்லாம்பீடழியச்சாடியருள்கள்செய்த,முத்தன்காண்முத்தீயுமாயினான்காண்முனிவர்க்கும்வானவர்க்குமுதலாய்மிக்க,வித்தன்காண்புத்தூரிலமர்ந்தான்றான்காணரிசிற்பெருந்துறையேயாட்சிகொண்ட,சித்தன்காண்சித்தீச்சரத்தான்றான்காண்சிவனவன்காண்சிவபுரத்தெஞ்செல்வன்றானே. (௫௬)

கோழிக்கொடியோன்றன்றாதைபோலுங்கொம்பனாள்பாகங்குளிர்ந்தார்போலு, மூழிமுதல்வருந்தாமேபோலுமுள்குவாருள்ளத்திருள்ளார்போலு, மாழித்தேர்வித்தகருந்தாமேபோலுமடைந்தவர்கட்கன்பராய்நின்றார்போலு,மேழுபிறவிக்குந்தாமேபோலுமின்னம்பர்த்தான்றோன்றியீசனாரே. (௫௭)

மூவிலைவேற்கையானைமூர்த்திதன்னைமுதுபிணக்காடுடைய முதலானானை, யாவினிலைக்துகந்தானையமரர்கோனையாலமுண்டுகந்தவையன்றன்னைப், பூவினின்மேனான்முகனுமாலும்போற்றப் புணர்வரியபெருமானைப்புனிதன்றன்னைக், காவலனைக்கழுக்குன்றமமர்ந்தான்றன்னைக்கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனானே. (௫௮)



தந்தையார்தாயாருடன்பிறந்தார்தாரமார்புத்திரரார்தாந்தாமாரே, வந்தவாறெங்ஙனேபோமாறேதோமாயமாமிதற்கேதுமகிழவேண்டாஞ், சிந்தையீருமக்கொன்றுசொல்லக்கேண்மின்றிகழ்மதியும்வாளரவுந்திளைக்குஞ்சென்னி, யெந்தையார்திருநாமநமச்சிவாய வென்றெழுவார்க்கிருவிசும்பிலிருக்கலாமே. (௫௯)

கல்லாகிக்களறாகிக்கானுமாகிக்காவிரியாய்க்காலாறாய்க்கழியுமாகிப், புல்லாகிப்புதலாகிப்பூடுமாகிப்புரமாகிப்புரமூன்றுங்கெடுத்தானாகிச், சொல்லாகிச்சொல்லுக்கோர்பொருளுமாகிச்சுலாவாகிச்சுலாவுக்கோர்சூழலாகி, நெல்லாகிநிலனாகிநீருமாகிநெடுஞ்சுடராய்நிமிர்ந்தடிகணின்றவாறே (௬௰)

அப்பனீயம்மைநீயையனுநீயன்புடையமாமனுமாமியுநீ, யொப்புடையமாதருமொண்பொருணீயொருகுலமுஞ்சுற்றமுமோரூருநீ, துய்ப்பனவுமுய்ப்பனவுந்தோற்றுவாய்நீதுணையாயென்னெஞ்சந்துறப்பிப்பாய்நீ, யிப்பொன்னீயிம்மணிநீயிம்முத்துநீயிறைவனீயேறூர்ந்தசெல்வனீயே. (௬௧)

ஆட்டுவித்தாலாரொருவராடாதாரேயடக்குவித்தாலாரொருவரடங்காதாரே, யோட்டுவித்தாலாரொருவரோடாதாரேயுருகுவித்தாலாரொருவருருகாதாரே, பாட்டுவித்தாலாரொருவர்பாடாதாரேபணிவித்தாலாரொருவர்பணியாதாரே, காட்டுவித்தாலாரொருவர்காணாதாரேகாண்பாரார்கண்ணுதலாய்க்காட்டாக்காலே. (௬௨)

திருக்கோயிலில்லாததிருவிலூருந்திருவெண்ணீறணியாததிருவிலூரும், பருக்கோடிப்பத்திமையாற்பாடாவூரும்பாங்கினொடுபலதளிகளில்லாவூரும், விருப்போடுவெண்சங்கமூதாவூரும் விதானமும்வெண்கொடியுமில்லாவூரு, மருப்போடுமலர்பறித்திட்டுண்ணாவூருமவையெல்லாமூரல்லவடவிகாடே. (௬௩)

திருநாமமஞ்செழுத்துஞ் செப்பாராகிற் றீவண்ணர் திறமொரு
காற்பேசாராகி,லொருகாலுந் திருக்கோயில்சூழாராகிலுண்பதன்மு
ன் மலர்பறித்திட்டுண்ணாராகி, லருநோய்கள்கெடவெண்ணீறணியா
ராகிலளியற்றார்பிறந்தவாறேதோவென்னிற்,பெருநோய்கள்மிகநலி
யப்பெயர்த்துஞ்செத்தும்பிறப்பதற்கேதொழிலாகியிறக்கின்றாரே.

நின்றாவார் பிறரன்றிநீயேயானாய் நினைப்பார்கண் மனத்துக்
கோர்வித்துமானாய், மன்றானாய்மன்னவர்க்கோரமுதமானாய்மறை
நான்குமானாயாறங்கமானாய்,பொன்றானாய்மணியானாய்போகமானாய்
பூமிமேற்புகழ்தக்கபொருளேயுன்னை, யென்றானுமென்றானுமென்
னினல்லாலேழையேனென்சொல்லியேத்துகேனே. (௬௫)

குலம்பொல்லேன் குணம்பொல்லேன்குறியும்பொல்லேன்குற்
றமேபெரிதுடையேன்கோலமாய,நலம்பொல்லேனான்பொல்லேன்
ஞானியல்லேனல்லாரோடிசைந்திலேனடுவேநின்ற,விலங்கல்லேன்
விலங்கலா தொழிந்தேனல்லேன் வெறுப்பனவுமிகப்பெரிதும்பேச
வல்லேன்,இலம்பொல்லேனிரப்பதேயீயமாட்டேனென்செய்வான்
றோன்றினேனேழையேனே. (௬௬)

சங்கநிதிபதுமநிதியிரண்டுந் தந்துதரணியொடுவானாளத்தருவ
ரேனும், மங்குவாரவர்செல்வமதிப்போமல்லோமாதேவர்க்கேகாந்த
ரல்லராகி, லங்கமெலாங்குறைந்தழுகுதொழுநோயராயாவுரித்துத்
தின்றுழலும்புலையரேனுங், கங்கைவார்சடைக்கரந்தார்க்கன்பராகி
லவர்கண்டீர்யாம்வணங்குங்கடவுளாரே. (௬௭)

மைப்படிந்தகண்ணாளுந்தானுங் கச்சிமயானத்தான்வார்சடை
யானென்னினல்லா, லொப்புடையனல்லனொருவனல்லனோரூ
ரனல்லனோருவமனில்லி, யப்படியுமந்நிறமு மவ்வண்ணமுமவனரு
ளேகண்ணாகக்காணினல்லா, லிப்படியனிந்நிறத்தனிவ்வண்ணத்த
னிவனிறைவனென்றெழுதிக்காட்டொணாதே. (௬௮)



நாமார்க்குங்குடியல்லோநமனையஞ்சோநரகத்திலிடர்ப்படோ
நடலையில்லோ,மேமாப்போம்பிணியறியோம்பணிவோமல்லோமின்
பமேயெந்நாளுந்துன்பமில்லை, தாமார்க்குங்குடியல்லாத்தன்மையா
னசங்கரனற்சங்கவெண்குழையோர்காதிற்,கோமாற்கேநாமென்று
மீளாவாளாய்க்கொய்ம்மலர்ச்சேவடியிணையேகுறுகினோமே. (௬௯)

வாராண்டகொங்கையர்சேர்மனையிற்சேரோ மாதேவாமாதே
வாவென்றுவாழ்த்தி, நீராண்டபுரோதாயமாடப்பெற்றோநீறணியுங்
கோலமேநிகழப்பெற்றோ, காராண்டமழைபோலக்கண்ணீர்சோ
ரக் கன்மனமேநன்மனமாக்கரையப்பெற்றோம், பாராண்டுபகடேறி
வருவார்சொல்லும் பணிகேட்கக்கடவோமோபற்றற்றோமே. (௭௦)

என்னுகேனென்சொல்லியெண்ணுகேனெம்பெருமான்
றிருவடியேயெண்ணினல்லாற், கண்ணிலேன்மற்றோர்களைகணில்
லேன்கழலடியேகைதொழுதுகாணினல்லா,லொண்ணுளேயொன்
பதுவாசல்வைத்தாயொக்கவடைக்கும்போதுணரமாட்டேன்,புண்
ணியாவுன்னடிக்கேபோதுகின்றேன் பூம்புகலூர்மேவியபுண்ணி
யனே. (௭௧)

தேவார்ந்ததேவனைத்தேவரெல்லாந் திருவடிமேலலரிட்டுத்தேடி
நின்று,நாவார்ந்தமறைபாடிநட்டமாடிநான்முகனுமிந்திரனுமாலும்
போற்றக்,காவார்ந்தபொழிற்சோலைக்கானப்பேராய்கழுக்குன்றத்
துச்சியாய்கடவுளேநின்,பூவார்ந்தபொன்னடிக்கேபோதுகின்றேன்
பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௭௨)

ஒருவனையுமல்லா துணராதுள்ள முணர்ச்சித்தடுமாற்றத்துள்
ளேநின்ற, விருவரையுமூவரையுமென்மேலேவியில்லாத தரவறுத்
தாய்க்கில்லேனெலக், கருவரைசூழ்கானலிலங்கைவேந்தன்கடுந்தே
ர்மீதோடாமைக்காலாற்செற்ற,பொருவரையாயுன்னடிக்கேபோது
கின்றேன்பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௭௩)

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

# திருநாவுக்கரசு சுவாமிகள் புராணசாரம்.

போற்றுதிரு வாமூரில் வேளாண் டொன்மைப்
பொருவில்குறுக் கையரதிபர் புகழனார்பால்
மாற்றருமன் பினிற்றிலக வதியாமாது
வந்துதித்த பின்புமரு ணீக்கியாருந்
தோற்றியமண் சமயமுற்றுத் துயரநீங்கத்
துணைவரருட் டரவந்த சூலைநோயாற்
பாற்றருநீ விடரெய்திப் பாடலிபுத் திரத்திற்
பாழியொழித் தரனதிகைப் பதியில்வந்தார்.

வந்துதமக் கையரருளா னீறுசாத்தி
வண்டமிழா லேறைப்திர்த்து வாக்கின்மன்றுய்
வெந்தபொடி கீடம்வேழம் வேலைநீந்தி
வியன்சூலங் கொடியிடபம் விளங்கச்சாத்தி
யந்தமிலப் பூதிமக னரவுமாற்றி
யருட்காசு பெற்றுமறை யடைப்புநீக்கி
புந்திமகிழ்ந் தையாற்றிற் கைலைகண்டு
பூம்புகலூ ரரன்பாதம் பொருந்தினாரே.



## சங்கிரகம்.

திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரிலே வேளாளகுல திலகராகிய புகழனாருக்கும் அவர்மனைவி மாதினியாருக்கும் திலகவதியார் என்னும் புத்திரியாரும், மருணீக்கியாரென்ற திருநாமத்தோடு நாயனாரும் பிறந்து கலைபயின்று வளரு நாளில் திலகவதியாருக்குப்பன்னிரண்டுவயதுசெல்ல சோழ ராஜனிடத்தில்சேனாதிபதியாயிருந்தகலிப்பகைநாயனாருக்கு விவாகஞ்செய்யும்பொருட்டுச் சிலமுதியோர்வந்து திலகவதி யாரைக் கொடுக்கும்படி பேச, புகழனாரும் சம்மதித்தனர். கலிப்பகையாரும் விவாகத்திற் கெத்தனமா யிருக்கையில், அரசனேவலால்கலிப்பகையார்,சேனையுடன்வடதேசப்பகை மன்னருடன் போருக்குச்சென்று நெடுநாள் போர்செய்து கொண்டிருந்தனர். அவரவ்விதமிருக்க, புகழனார் சுவர்க்கஞ் சேர்ந்தனர். புருடனைப்பிரிந்து வாழமனமொவ்வாது மாதி னியாரு மிறந்தனர். மக்களிருவரு மனவிலாத்துயரடைந்து, பின்பு பெற்றோருக்குச் செய்யவேண்டிய கடனை மருணீக்கி யார் செய்தனர்.

போர்விளைத்துக்கொண்டிருந்த கலிப்பகையாரும் வீர சுவர்க்கமெய்தினர். இதனைத் திலகவதியார்கேள்வியுற்று, அவருக்கென்னைக் கொடுப்பதாக என்றந்தை வாக்களித் திருத்தலால், எனதுயிரையவருடன் சேர்ப்பேனென்று சா கத்துணிய,, மருணீக்கியாராகியநாயனார் தான் முந்தி உயிர்

விடுவதாய்ப் புலம்ப, வதனைக்கண்ட திலகவதியார் தம்பி யிடத்திலுள்ள நீங்காவன்பினா லுயிர்தாங்கி நெடுநாள் தவஞ்செய்துகொண்டிருந்தார்.

அவரவ்விதமிருக்க, மருணீக்கியார் முத்திநெறியறியக் கருதி சமயசாஸ்திரங்களை யாராயத்தொடங்கி, சமண் சமயத்தைச்சார்ந்து சமணர்களில் மேம்பாடெய்தித் தருமசேன ரென்னும் பெயரும் பெற்றிருந்தனர். திலகவதியார் திருவதிகைவீரட்டானத்தைச் சேர்ந்து சிவசின்னந்தரித்து ஆலயத்தொண்டு செய்திருக்கையில் வீரட்டானேசரிடம் ஐயனே! என்னுடன்பிறந்தானைப் பரசமயப்படுகுழியினின்று மெடுத் தாட்கொள்ளவேண்டும் என்று பலமுறையும் விண்ணப்பஞ்செய்ய, ஒருநாள் சிவபெருமானார் சொப்பனத்திற் றோன்றி, "உனது தம்பி முன்னம் வாகீசனென்று முனிவன் ஒரு காரணத்தா லிக்குறிப்புமாயினன். அவனுக்குச் சூலை நோயுண்டாக்கி யாட்கொள்கின்றோம்" என்றருளினர். அவ்வண்ணமே தருமசேனர்வயிற்றிற் சூலை நோயுண்டாக்கி வருத்த வதனைத்தாளாமல் வருந்தித் தான் சமண்சமயத் திற்கற்ற மந்திரங்களாற் றடுத்தும் இதர சமணர்கள்தங்க ளாலானமட்டும் முயன்றும் வியாதியதிகரிக்கக்கண்டு நடுங்கி தமக்கைக்குச்சொல்லியனுப்பினார். தமக்கையார் யானங்கே வாரேனென்று சொல்லியனுப்பிய பதிலைக்கேட்டு, அன்றிரவு யாருக்குந் தெரியாமல் தமக்கையாரிடஞ்சென்று வணங்கி, சூலைநோய்தீரும்படி யநுக்கிரகஞ் செய்யும்



படி புலம்பினர். அதைக்கண்ணுற்று, மனஞ்சகியாராய். இது வீரட்டானேசர் திருவருளால் நேர்ந்ததாகலின் அவரைத்தொழுது பணிசெய்யென்று சொல்லி, விபூதி கொடுத்துத் தரித்துக்கொள்ளச்சொல்லித் திருப்பள்ளி யெழுச்சிகாலத்தில் தம்பியை ஆலயத்திற்கழைத்துப்போயினர். மருணீக்கியாராலயத்தைவலஞ்செய்து வணங்கி சுவாமியினது திருவருளாற் றிருப்பதிகமோதும்படி யுணர்ச்சியுண்டாக "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்னுந்திருப்பதிக மோதினர். உடனே வியாதிதீர, பிரானார் திருவருளினை நினைந்து பரவச முற்றிருக்கும்போது "நீ திருப்பதிகமோ தினமையால் நாவுக்கரசென் றுனக்குப் பெயருண்டாகுக" வென்று சுவாமி யசரீரிவாக்கருள்செய்ய, அதைக்கேட்டு மகிழ்ந்து அன்றுமுதற் சிவசின்னந்தரித்து துதி ரூபமாகிய வாசகமும், உழவாரப்பணியு முடையாராயினர்.

இதனைப் பாடலிபுத்திரத்திலிருந்த சமணர்களறிந்து அரசனிடஞ்சென்று, "தருமசேனரது தமக்கை,சடையான் சமயத்திலிருப்பதால் தாமும் அங்குபோய்ச்சேரக்கருதி, சூலைநோயுற்றதாயும் அதுநஞ்சமயமந்திர முதலியவற்றால் தீரவில்லை யென்றும் பாசாங்குசெய்து தமக்கையிடம்போய்ச்சேர்ந்தனர்" என்றார்கள். அரசன் கோபங்கொண்டு தருமசேனரையழைத்து வரும்படி மந்திரிகளுக்கு உத்தரவளித்தான். அவர்களவ்வாறே போயழைக்க நாயனார் "நாமார்க்குங்குடியல்லோம்" என்னுந்திருத்தாண்டகம் ஓதியருளி

"நாம் நீங்கள் அழைத்தபடியே வரக்கடவேமல்லேம்" என்றருளி மந்திரிகளவரை வணங்கிப் பிரார்த்திக்க அவர்களுடன் சென்றார். அரசன் வெகுண்டு சமணரதுபோதனைப்படி நீற்றறையிலிட்டான். நாயனார் "மாசில்வீணையு மாலைமதியமு" மென்னும் பதிகமோதி பிரானாரைத் தியானித்துக் கொண்டிருந்ததால் நீற்றறைவெப்பமின்றிக் குளிர்ந்திருந்தது. ஏழுநாள்கழித்து சமணர்கள் நீற்றறையைத்திறந்துபார்க்க, நாயனார் சுகமாயிருக்கக் கண்டு பிரமித்து மீண்டும் பாலுடன் விடம் கலந்துகொடுத்த வதையுமுண்டனர், பின்பு, கொல்லும்படி மதயானையைத் தூண்ட, "சுண்ணவெண் சந்தனச் சாந்து" என்னும்பதிகமோதினார். யானை நாயனாரைவணங்கிப் பாகரையுஞ் சூழ்ந்திருந்த சமணர்களையுங் கொன்றுசென்றது. அப்பால், கொலைஞரைக்கொண்டு கற்றூணிற்பிணித்து நடுக்கடலில் வீழ்த்தினார்கள். நாயனார் சுவாமியைத்தியானித்து "சொற்றுணைவேதிய" னென்னுந்திருப்பதிகமோதி, அக்கல்லே தெப்பமாகக் கெடிலநதிக்கரை சேர்ந்து திருப்பாதிரிப்புலியூர் முதலியதலங்களைத் தரிசித்துத் திருவதிகை வீரட்டானத்தைச்சேர்ந்து திருத்தொண்டு புரிந்துவந்தனர். நாயனாரதுபெருமையைப் பல்லவராஜனறிந்து சமணரது பள்ளிகளையும் பாழிகளையும் இடிப்பித்துச் சைவனாகி, குணதரவீச்சரமென்னுமொரு சிவாலயமுமேற்படுத்தினான்.

பின்பு, நாயனார் திருத்தூங்கானைமாடத்துக் கெழுந்தருளிச்சுவாமியைத்தரிசித்து, "ஐயனே சமணசமயத்திலிரு



ந்த விவ்வுடலைத் தாங்க வருவருக்கின்றேனாகலின் தேவரீருடைய முத்திரையை யடியேற்குத் தரித்தருளவேண்டும்" என்று "பொன்னார் திருவடிக்கு" என்னுந் திருப்பதிகமோதச் சிவபெருமான்றிருவருளாலொரு பூதம்வந்து சூலத்துடன் விடையிலச்சினையைத் தமது தோள்களிற்பொறிக்க மகிழ்ந்து சீகாழிக்கெழுந்தருளி, திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரெதிர்கொளக்கண்டு வணங்கி, தம்மை "அப்பரே" என்று வணங்கிய ஆளுடைய பிள்ளையாரை "அடியேன்" என்று மீட்டும் வணங்கி சுவாமியைத்தரிசித்துத் திருச்சத்திமுற்றத்தில் சுவாமியைப்பணிந்து, கூற்றுவன் வருமுன்ன மடியேன் முடியிற் றிருவடிசூட்டல்வேண்டுமென்று "கோவாய்முடுகி" என்னும் பதிகமோத, "திருநல்லூருக்கு வா" வென்று சுவாமியருள, அவ்விதமே சென்று ஆலயத்திற் சாஷ்டாங்கமாகப் பணியும்போது, சுவாமி திருவடி சூட்ட "நினைந்துருகு மடியாரை" என்னுந் திருத்தாண்டகமோதித் தொழுது மற்றுந்தலங்களையுந் தரிசித்து, திங்களூரைச்சார்ந்து அப்பூதியடிகளையனாருக்குத் தம்மிடத்துள்ள அன்பையறிந்துமகிழ்ந்தவர்மாளிகையிலமுதுகொள்ளச் சம்மதித்தனர். அவரது மனைவியார் மூத்ததிருநாவுக்கரசென்னும் புத்திரனை யிலை கொணரவனுப்ப, அங்குசர்ப்பந்தீண்ட இலைகொணர்ந்து தாயிடந்தந்துயிர் நீங்கினன். பெற்றோர்கண்டு பாம்பு கடித்த தென்று குறிப்பாலறிந்து, இறந்த மகனைமறைத்து நாயனாருக்கமுதுபடைக்க முயற்சிசெய்யும்போது நாயனாரறிந்து பதிகமோதிப்பிழைக்கச்செய்து அப்பூதியடிகளுடன் அமு

துசெய்து, திருவாரூர் முதலிய தலங்களைத் தரிசித்துத் திருப்புகலூருக்கெழுந்தருளுகையில், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரெதிர்கொள்ள அவரைவணங்கி சுவாமியைத் தரிசித்து முருகநாயனார் திருமடத்திற் றங்கியிருந்தனர். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவாரூருக்குச் சென்று மீண்டுந் திருப்புகலூருக்கு வந்தனர்.

அப்பால் இருவருந்திருவீழிமிழலைக்குச்சென்று சிவபெருமான் றந்தபடிக்காசாற் பஞ்சத்தைநீக்கி திருமறைக்காட்டையடைந்து வேதம் பூசித்து மூடிப்போன கதவைப் "பண்ணினேர் மொழியாளுமை" என்னும் பதிகமோதித் திறப்பித்து, சம்பந்தமூர்த்தி நாயனாரைவிட்டுப்பிரிந்து வடதளியென்னு மாலயத்திற்குச்சென்று சிவபெருமானைச்சமணர்கள் மறைத்திருத்தலைக்கண்டு அரசனைக்கொண்டு நிவர்த்தித்து திருப்பைஞ்ஞீலியை நோக்கிச் செல்லு மார்க்கத்திலே நாயனார்பசியால் வருந்தி வருவதையறிந்து சிவபெருமானொருசோலையையும் குளத்தையுமுண்டாக்கி, பிராமணவுருவத்தோடு பொதிசோறு வைத்துக்கொண்டிருந்து நாயனாருக்குக்கொடுக்க, வதனையுண்டு குளத்தில் ஜலமருந்தி களைநீங்கிச் சென்றார். சுவாமியும் அவருடன் சென்று திருப்பைஞ்ஞீலியைச்சமீபித்தவுடன் மறைந்தருளினார். நாயனாரதனைக்கண்டு திருவருளைவியந்து ஆலயஞ்சென்று தரிசித்துச் சோழநாட்டைக் கடந்து நடுநாட்டிலுள்ள தலங்களைத்தரிசித்துத் திருக்காளத்திக் கெழுந்தருளினார்.

அங்கு சுவாமியைத் தரிசிக்கும்போது தோன்றிய குறிப்பால் ஸ்ரீகயிலாயபதியைத்தரிசிக்கவிரும்பி, காசியையடை



ந்துவிசுவநாதரைத்தரிசித்துப் பரிஜனங்களை நிறுத்தி ஆகாரமின்றித் தனியேகாடுமலைகளைக்கடந்து பாலைவனத்திற்போகும்போது அங்கிலவெப்பத்தாற் கால் பரட்டளவுந்தேய, கைகளையூன்றிச்செல்ல மணிக்கட்டளவுந்தேய, மார்பினாலுந்திச் சென்று மார்புந்தேயவே, புரண்டுபுரண்டுசென்று சத்தியில்லாதோய்ந்து கிடந்தார். பரமசிவனார் திருவுளமிரங்கி பிராமணமுனிவராகவந்து இவ்விதம் வருந்தி வருவானேனென்று வினவ, கயிலாய தரிசனத்திற்கென்றுரைக்கக்கேட்டு மனிதர் தரிசிக்கக்கூடுமோ வென வவ்விதமுங் கயிலாய தரிசனஞ் செய்தாலன்றி மீளேனென்றனர். பரமசிவனவ்வுறுதியையறிந்து மறைந்து "நாவுக்கரசே யெழுந்திரு" என்றசரீரிவாக்கருள உடனே நாயனார் திருமேனி பழுதின்றி விளங்கக்கண்டுணர்ச்சிபெற்று "எம்பெருமானே அடியேனுக்கு ஸ்ரீகைலாசதரிசனங் கடாட்சித்தருளல்வேண்டும்" என்று துதிசெய்தனர். சுவாமி ஆதனமாயுண்டாகிய குளத்தைக்காட்டி இதில் மூழ்கித்திருவையாற்றில்வந்து கயிலாயதரிசனங்காணக்கடவை யென்று மீண்டும் அசரீரிவாக்கருள, அவ்வாறே மூழ்கித் திருவையாற்றுத்தீர்த்தக்கரையிலெழுந்து சந்நிதிக்குச்சென்று பார்வதி சமேதராய்க் கணங்கள் முனிவர்கள் புடைசூழச்சிவபெருமான் வீற்றிருந்தருளுங் காட்சியோடு கயிலாயதரிசனங்கண்டு "மாதர்பிறைக்கண்ணியானை" யென்னும் பதிகங்களோதினார்.

பின்பு கயிலாயத்தோற்றமாறி ஆலயமாயிருக்கக்கண்டு வருத்தங்கொண்டு ஒருவாறுதெளிந்து திருப்பூந்துருத்திக்குச் சென்று மடமொன்றேற்படுத்தி யதில்வீற்றிருக்கும்போது திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்வர வதனையறிந்தெதிர்சென்று அவரெழுந்தருளுஞ் சிவிகையைத்தமது தோள்கொடுத்துத் தாங்கிவந்தார். திருப்பூந்துருத்திக்கு

மிகச் சமீபித்தவுடன் "அப்பரெங்குற்றார்" என்று சம்பந்தமூர்த்திநாயனார் வினவ "அடியேன் தேவரீரைத்தாங்கிவரும் பெருவாழ்வைப்பெற்றிங்குற்றேன்" என்று அப்பரருளினார். உடனே சம்பந்தர் சிவிகையை விட்டிழிந்து பணிய, அதற்கு முன்னரே அப்பர் பணித்ததை யடியார்கள் கண்டு இருவரையும் பணிந்து மகிழ்ந்தார்கள். பிறகு இருவருமாலயஞ்சென்று சுவாமியைத் தரிசித்து மடத்திலெழுந்தருளியிருக்கையில் சம்பந்தமூர்த்திநாயனார் தாம் மதுரைக்குச்சென்றதுஞ் சமணரைவென்றதும் பாண்டியன் கூன் நிமிர்த்ததுஞ் சொல்லியருளினார். அப்பமூர்த்திகள் தொண்டைநாட்டுக்குத் தாம்சென்றது மங்குள்ள தலங்களைத் தரிசித்ததுஞ் சொல்லியருளினார்.

பிறகு திருநாவுக்கரசுநாயனார்மதுரைக்குச்சென்றுசொக்கநாதரைத்தரிசித்துப் பாண்டிநாட்டிலுள்ள தலங்களையெல்லாந் தரிசித்து திருப்புகலூரிற்சேர்ந்து உழவாரப் பணிசெய்து கொண்டிருக்குநாளில் செதுக்குமிடமெல்லாம் பொன்னும் நவரத்தினங்களு முண்டாகும்படி சிவபெருமான்செய்தருள அவைகளை யோடுகளாகமதித்துப்பொய்கையிலெறிந்து விட்டார். பின்னுமிவரை மயக்கும்படி அரம்பாஸ்திரீகளையனுப்ப அவர்கள்வந்து மயக்கமுயலுதலும் உம்மாலிங்கு குறையுடையேனோ என்று "பொய்ம்மாயப்பெருங்கடலில்" என்னுந் திருத்தாண்டகமோதினார் அவர்கள் தம்மாலியலாதென்று திரும்பினார்கள். கடைசியாக "எண்ணுகேனென்சொல்லி யெண்ணுகேனோ" வெனுந் திருத்தாண்டகமோதிச் சிவபெருமானுடைய திருவடிகளையடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

---

70

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள்

அருளிச்செய்த

# தேவாரப்பதிகங்கள்.

## ஏழாந்திருமுறை.

திருவோணகாந்தன்தளி-பண் இந்தளம். (எ-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

நெய்யும்பாலுந்தயிருங்கொண்டுநித்தல்பூசனைசெய்யலுற்றால்
கையிலொன்றுங்காணமில்லைக்கழலடிதொழுதுய்யினல்லா
லைவர்கொண்டிங்காட்டவாடியாழ்குழிப்பட்டழுந்துவேனுக்
குய்யுமாறென்றருளிச்செய்யீரோணகாந்தன்றளியுளீரே. (௧)

திங்கள்தங்குசடைகண்மேலோர்திரைகள்வந்துபுரளவீசக்
கங்கையாளேல்வாய்திறவாள்கணபதியேல்வயிறுதாரி
யங்கைவேலான்குமரன்பிள்ளைதேவியார்கோற்றட்டியாளா
ருங்களுக்காட்செய்யமாட்டோமோணகாந்தன்றளியுளீரே. (௨)

பெற்றபோதும்பெறாதபோதும்பேணியுன்கழலேத்துவார்கள்
மற்றோர்பற்றிலரென்றிரங்கிமதியுடையவர்செய்கைசெய்யீ
ரற்றபோழ்துமலந்தபோழ்துமாபற்காலத்தடிகேளும்மை
யொற்றிவைத்திங்குண்ணலாமோவோணகாந்தன்றளியுளீரே. (ரு)

வல்லதெல்லாஞ்சொல்லியும்மைவாழ்த்தினாலும்வாய்திறந்தொன்
றில்லையென்னீருண்டுமென்னீரெம்மையாளீவாளிருப்பதென்னீர்
பல்லையுக்கப்படுதலையிற்பகலெலாம்போய்ப்பலிதிரிந்திங்
கொல்லைவாழ்க்கையொழியமாட்டீரோணகாந்தன்றளியுளீரே. (சு)

ஓவணமேலெருதொன்றேறுமோணகாந்தன்றளியுளார்தா
மாவணஞ்செய்தாளுங்கொண்டரைதுகிலொடுபட்டுவீக்கிக்
கோவணமேற்கொண்டவேடங்கோவையாகவாரூரன்சொன்ன
பாவணத்தமிழ்பத்தும்வல்லார்க்குப்பறையுந்தாஞ்செய்தபாவந்தா
[னே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருஎதிர்கொள்பாடி - பண் - இந்தளம். (எ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

மத்தயானையேறிமன்னர்சூழவருவீர்காள்
செத்தபோதிலாருமில்லைசிந்தையுள்வைம்மின்கள்
வைத்தவுள்ளமாற்றவேண்டாவம்மின்மனத்தீரே
யத்தர்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே. (க)

தோற்றமுண்டேல்மரணமுண்டுதுயரமனைவாழ்க்கை
மாற்றமுண்டேல்வஞ்சமுண்டுநெஞ்சமனத்தீரே
நீற்றரேற்றர்நீலகண்டர்நிறைபுனல்நீள்சடைமே
லேற்றர்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே. (உ)



முத்துநீற்றுப்பவளமேனிச்செஞ்சடையானுறையும்
பத்தர்பத்தெதிர்கொள்பாடிப்பரமனையேபணியச்
சித்தம்வைத்ததொண்டர்தொண்டன்சடையனவன்சிறுவன்
பத்தனூரன்பாடல்வல்லார்பாதம்பணிவாரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

---

## திருப்பாச்சிலாச்சிராமம்-பண்-தக்கராகம். (எ-ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

வைத்தனன்றனக்கேதலையுமென்னாவுநெஞ்சமும்வஞ்சமொ
ன்றின்றி, யுய்த்தனன்றனக்கேதிருவடிக்கடிமையுரைத்தக்காலு
வமனேயொக்கும், வைத்தபாம்பார்த்தோர்கோவணத்தோடுபாச்சி
லாச்சிராமத்தெம்பரமர், பித்தரேயொத்தோர்நச்சிலராகிலிவரலா
தில்லையோபிரானார். (க)

அன்னையேயென்னேனத்தனேயென்னேனடிகளேயமையு
மென்றிருந்தேன், என்னையுமொருவனுளனென்றுகருதியிறையிறை
திருவருள்காட்டாய், யன்னமாம்பொய்கைசூழ்தருபாச்சிலாச்சிரா
மத்துறையடிகள், பின்னையேயடியார்க்கருள்செய்வதாகிலிவரலா
தில்லையோபிரானார். (உ)

ஏசினவல்லவிகழ்ந்தனவல்லவெம்பெருமானென்றெப்போதும்
பாயினபுகழான்பாச்சிலாச்சிராமத்தடிகளையடிதொழப்பன்னாள்
வாயினாற்கூறிமனத்தினானினைவான்வளவயனாவலாரூரன்
பேசினபேச்சைப்பொறுத்திலராகிலிவரலாதில்லையோபிரானார். ()

திருச்சிற்றம்பலம்.

திருநாட்டியத்தான்குடி - பண் - தக்கராகம். (௭-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

பூணாணாவதோரரவங்கண்டஞ்சேன்புறங்காட்டாடல்கண்டிக
ழேன், பேணீராகிலும்பெருமையையுணர்வேன்பிறவேனாகிலுமற
வேன், காணீராகிலுங்காண்பனென்மனத்தாற்கருதீராகிலுங்கரு
திடுவேனா, ணேனும்மடிபாடுதலொழியேனாட்டியத்தான்குடி
நம்பீ. (௮)

கல்லேனல்லேனின்புகழடிமைகல்லாதேபலகற்றே
னில்லேனல்லேனின்வழிநின்றார்தம்முடைநீதியைநினைய
வல்லேனல்லேன்பொன்னடிபரவமாட்டேன்மறுமையைநினைய
நல்லேனல்லேனுமக்கல்லாநாட்டியத்தான்குடிநம்பீ. (௯)

கூடாமன்னரைக்கூட்டத்துவென்றகொடிநன்கோட்புலிசென்னி
நாடார்தொல்புகழ்நாட்டியத்தான்குடிநம்பியைநாளுமறவாச்
சேடார்பூங்குழற்சிங்கடியப்பன்றிருவாரூரனுரைத்த
பாடாவாகிலும்பாடுமின்றொண்டீர்பாடநும்பாவம்பற்றறுமே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருக்கலயநல்லூர் - பண் - தக்கராகம். (௭ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

குரும்பைமுலைமலர்க்குழலிகொண்டதவங்கண்டு
குறிப்பினொடுஞ்சென்றவடன்குணத்தினைநன்கறிந்து
விரும்புவரங்கொடுத்தவளைவேட்டருளிச்செய்த
விண்ணவர்கோன்கண்ணுதலோன்மேவியவூர்வினவி



லரும்பருகேசுரும்பருவவறுபதம்பண்பாட
வணிமயில்கணடமாடுமணிபொழில்சூழயலின்
கரும்பருகேகருங்குவளைகண்வளருங்கழனிக்
கமலங்கண்முகமலருங்கலயநல்லூர்காணே. (௧)

தண்புனலும்வெண்பிறையுந்தாங்கியசெஞ்சடையன்
றாமரையோன்றலைகலனாக்காமாமுன்பாடி
புண்பலிகொண்டுழல்பரமனுறையுமூர்நிறைநீ
ரொழுகுபுனலரிசிலின்றென்கலயநல்லூரதனை
நண்புடையநன்சடையனிசைஞானிசிறுவ
னாவலர்கோனாரூரனாவினயந்துரைசெய்
பண்பயிலும்பத்துமிவைபத்திசெய்துசித்தம்
பாடவல்லாரல்லலொடுபாவமிலர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்கோளிலி - பண் - நட்டராகம். (௭ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

நீளநினைந்தடியேனுனைநித்தலுங்கைதொழுவேன்
வாளனகண்மடவாளவள்வாடிவருந்தாமே
கோளிலியெம்பெருமான்குண்டையூர்ச்சிலநெல்லுப்பெற்றே
னாளிலையெம்பெருமானவையட்டித்தரப்பணியே. (௧)

வண்டமருங்குழலாளுமைநங்கையோர்பங்குடையாய்
விண்டவர்தம்புரமூன்றெரிசெய்தவெம்வேதியனே
தெண்டிரைநீர்வயல்சூழ்திருக்கோளிலியெம்பெருமா
னண்டமதாயவனேயவையட்டித்தரப்பணியே. (௨)

பாதியோர்பெண்ணைவைத்தாய்படருஞ்சடைக்கங்கைவைத்தாய்
மாதர்நல்லார்வருத்தமதுநீயுமறிதியன்றே
கோதில்பொழில்புடைசூழ்குண்டையூர்ச்சிலநெல்லுப்பெற்றே
னாதியேயற்புதனேயவையட்டித்தரப்பணியே.

கொல்லைவளம்புறவிற்றிருக்கோளிலிமேயவனை
நல்லவர்தாம்பரவுந்திருநாவலவூரனவ
னெல்லிடவாட்கள்வேண்டிநினைந்தேத்தியபத்தும்வல்லா
ரல்லல்களைந்துலகினண்டவானுலகாள்பவரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பழமண்ணிப்படிக்கரை - பண் - நட்டராகம்.
(௭ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

முன்னவனெங்கள்பிரான்முதல்காண்பரிதாயபிரான்
சென்னியிலெங்கள்பிரான்றிருநீலமிடற்றெம்பிரான்
மன்னியவெங்கள்பிரான்மறைநான்குங்கல்லாணிழற்கீழ்ப்
பன்னியவெங்கள்பிரான்பழமண்ணிப்படிக்கரையே. (௧)

ஆடுமினன்புடையீரடிக்காட்பட்டதூளிகொண்டு
சூடுமின்றொண்டருள்ளீருமரோடெமர்சூழவந்து
வாடுமின்வாழ்க்கைதன்னைவருந்தாமற்றிருத்தச்சென்று
பாடுமின்பத்தருள்ளீர்பழமண்ணிப்படிக்கரையே. (௫.)

பல்லுயிர்வாழுந்தெண்ணீர்ப்பழமண்ணிப்படிக்கரையை
யல்லியந்தாமரைத்தாராரூரனுரைத்ததமிழ்



சொல்லுதல்கேட்டல்வல்லாரவர்க்குந்தமர்க்குங்கிளைக்கு
மெல்லியநன்பகலுமிடர்கூருதலில்லையன்பே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

---

திருமழபாடி - பண் - நட்டராகம். (௭ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

பொன்னார்மேனியனேபுலித்தோலையரைக்கசைத்து
மின்னார்செஞ்சடைமேன்மிளிர்கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியேமழபாடியுண்மாணிக்கமே
யன்னேயுன்னையல்லாலினியாரைநினைக்கேனே? (௧)

கீளார்கோவணமுந்திருநீறுமெய்ப்பூசியுன்றன்
றாளேவந்தடைந்தேன்றலைவாவெனையேன்றுகொள்நீ
வாளார்கண்ணிபங்காமழபாடியுண்மாணிக்கமே
கேளாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே? (௨.)

ஏரார்முப்புரமுமெரியச்சிலைதொட்டவனை
வாரார்கொங்கையுடன்மழபாடியுண்மேயவனைச்
சீரார்நாவலர்கோனாரூரனுரைத்ததமிழ்
பாரோரேத்தவல்லார்பரலோகத்திருப்பாரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

---

திருக்காளத்தி - பண் - நட்டராகம். (௭ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

செண்டாடும்விடையாய்சிவனேயென்செழுஞ்சுடரே
வண்டாருங்குழலாளுமைபாகமகிழ்ந்தவனே

கண்டார்காதலிக்குங்கணநாதனெங்காளத்தியா
யண்டாவுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே. (௮)

இமையோர்நாயகனேயிறைவாவென்னிடர்த்துணையே
கமையார்கருணையினாய்கருமாமுகில்போன்மிடற்றா
யுமையோர்கூறுடையாயுருவேதிருக்காளத்தியு
ளமைவேயுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே. (௯)

காராரும்பொழில்சூழ்கணநாதனெங்காளத்தியு
ளாராவின்னமுதையணிநாவலாரூரன்சொன்ன
சீரூர்செந்தமிழ்கள்செப்புவார்வினையாயினபோய்ப்
பேராவிண்ணுலகம்பெறுவார்பிழைப்பொன்றிலரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

திருக்குருகாவூர் - பண் - நட்டராகம். (எ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

இத்தனையாமாற்றையறிந்திலேனெம்பெருமான்
பித்தரேயென்றும்மைப்பேசுவார்பிறரெல்லாம்
முத்தினைமணிதன்னைமாணிக்கமுளைத்தெழுந்த
வித்தனேகுருகாவூர்வெள்ளடைநீயன்றே. (௧)

ஆவியைப்போகாமேதவிர்த்தென்னையாட்கொண்டாய்
வாவியிற்கயல்பாயக்குளத்திடைமடைதோறு
மேவியுங்குவளையுங்கமலஞ்செங்கழுநீருங்
காவியகுருகாவூர்வெள்ளடைநீயன்றே. (௨)

பாடுவார்பசிதீர்ப்பாய்பரவுவார்பிணிகளைவா
யோடுநன்கலனாகவுண்பலிக்குழல்வானே



காடுநல்லிடமாகக்கடுவிருள்நடமாடும்
வேடனேகுருகாவூர்வெள்ளடைநீயன்றே. (௯)

வளங்கனிபொழின்மல்குவயலணிந்தழகாய
விளங்கொளிகுருகாவூர்வெள்ளடையுறைவானை
யிளங்கிளையாரூரன்வனப்பகையவளப்ப
னுளங்குளிர்தமிழ்மாலைபத்தர்கட்குரையாமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

நமக்கடிகளாகிய அடிகள். பண்-கொல்லி-(எ-ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்

பாறுதாங்கியகாடரோபடுதலையரோமலைப்பாவையோர்
கூறுதாங்கியகுழகரோகுழைக்காதரோகுறுங்கோட்டிள
வேறுதாங்கியகொடியரோகடுபொடியரோவிளங்கும்பிறை
யாறுதாங்கியசடையரோநமக்கடிகளாகியவடிகளே. (௧)

இட்டிதாகவந்துரைமினோநுமக்கிசையுமாநினைந்தேத்துவீர்
கட்டிவாழ்வதுநாகமோசடைமேலுநாறுகரந்தையோ
பட்டியேறுகந்தேறரோபடுவெண்டலைப்பலிகொண்டுவந்
தட்டியாளவுங்கிற்பரோநமக்கடிகளாகியவடிகளே. (௨)

படிசெய்நீர்மையிற்பத்தர்காள்பணிந்தேத்தினேன்பணியீரருள்
வடிவிலான்திருநாவலூரன்வனப்பகையப்பன்வன்றொண்டன்
செடியனாகிலுந்தீயனாகிலுந்தம்மையேமனஞ்சிந்திக்கு
மடியனூரனையாள்வரோநமக்கடிகளாகியவடிகளே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

## திருப்புகலூர் - பண்-கொல்லி. (எ - ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

தம்மையேபுகழ்ந்திச்சைபேசினுஞ்சார்வினுந் தொண்டர்தருகி
லாப், பொய்ம்மையாளரைப்பாடாதேயெந்தைபுகலூர்பாடுமின்
புலவீர்காள், இம்மையேதருஞ்சோறுங்கூறையுமேத்தலாமிடர்கெ
டலுமாம், அம்மையேசிவலோகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (க)

மிடுக்கிலாதானைவீமனேவிறல்விசயனேவில்லுக்கிவனென்று
கொடுக்கிலாதானைப்பாரியேயென்றுகூறினுங்கொடுப்பாரிலை [கா
பொடிக்கொள்மேனியெம்புண்ணியன்புகலூரைப்பாடுமின்புலவீர்
ளடிக்குமேலமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (உ)

நரைகள்போந்துமெய்தளர்ந்துமூத்துடனடுக்கிநிற்குமிக்கிழவனை
வரைகள்போல்திரடோளனேயென்றுவாழ்த்தினுங்கொடுப்பாரிலைப்
புரைவெள்ளேறுடைப்புண்ணியன்புகலூரைப்பாடுமின்புலவீர்கா
ளரையனாயமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (௩)

செறுவினிற்செழுங்கமலமோங்குதென்புகலூர்மேவியசெல்வனை
நறவம்பூம்பொழில்நாவலூரன்வனப்பகையப்பன்சடையன்றன்
சிறுவன்வன்றொண்டனூரன்பாடியபாடல்பத்திவைவல்லவ
ரறவனாரடிசென்றுசேர்வதற்கியாதுமையுறவில்லையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

## திருப்பஞ்ஞீலி - பண் - கொல்லி. (எ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

காருலாவியநஞ்சையுண்டிருள்கண்டவெண்டலையோடுகொண்
டூரெலாந்திரிந்தென்செய்வீர்பலியோரிடத்திலேகொள்ளுநீர்



பாரெலாம்பணிந்தும்மையேபரவிப்பணியும்பைஞ்ஞீலியீர்
ஆரமாவதுநாகமோசொலுமாரணீயவிடங்கரே. (க)

சிலைத்துநோக்கும்வெள்ளேறுசெந்தழல்வாயபாம்பதுமூசெனும்
பலிக்குநீர்வரும்போதுநுங்கையிற்பாம்புவேண்டாம்பிரானிரே
மலைத்தசந்தொடுவேங்கைகோங்கமுமன்னுகாரகில்சண்பக
மலைக்கும்பைம்புனல்சூழ்பைஞ்ஞீலியிலாரணீயவிடங்கரே. (உ)

அன்னஞ்சேர்வயல்சூழ்பைஞ்ஞீலியிலாரணீயவிடங்கரை [சொன்
மின்னுநுண்ணிடைமங்கைமார்பலர்வேண்டிக்காதல்மொழிந்த
மன்னுதொல்புகழ்நாவலூரன்வன்றொண்டன்வாய்மொழிபாடல்பத்
துமின்னிசைபாடுவாருமைகேள்வன்சேவடிசேர்வரே. ()

திருச்சிற்றம்பலம்.

## திருக்கச்சூர் ஆலக்கோயில் - பண் - கொல்லிக்கௌவாணம். (எ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

முதுவாயோரிகதறமுதுகாட்டெரிகொண்டாடன்முயல்வானே
மதுவார்கொன்றைப்புதுவீசூடும்மலையான்மகடன்மணவாளா
கதுவாய்த்தலையிற்பலிநீகொள்ளக்கண்டாலடியார்கவலாரே
யதுவேயாமாறிதுவோகச்சூராலக்கோயிலம்மானே. (க)

கச்சேரரவொன்றரையிலசைத்துக்கழலுஞ்சிலம்புங்கலிக்கப்
பலிக்கென், றுச்சம்போதாவூரூர்திரியக்கண்டாலடியாருருகாரே,
யிச்சையறியோமெங்கள்பெருமானேழேழ்பிறப்புமெனையாள்வா,
யச்சமில்லாக்கச்சூர்வடபாலாலக்கோயிலம்மானே. (உ)

சாலக்கோயிலுளநின்கோயிலவையென்றலைமேற்கொண்டாடி
மாலைத்தீர்த்தேன்வினையைத்துரந்தேன்வானோரறியாநெறியானே

கோலக்கோயில்குறையாக்கோயில்குளிர்பூங்கச்சூர்வடபாலை
யாலக்கோயிற்கல்லானிழற்கீழறங்களுரைத்தவம்மானே. (௯)

அன்னமன்னும்வயல்சூழ்கச்சூராலக்கோயிலம்மானை, யுன்ன
முன்னுமனத்தாரூரனாரூரன்பேர்முடிவைத்த, மன்னுபுலவன்வயல்
நாவலர்கோன்செஞ்சொல்நாவல்வன்றொண்டன், பன்னுதமிழ்
நூல்மாலைவல்லாரவரென்தலைமேற்பயில்வாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

திருஆமாத்தூர்-பண்.கொல்லிக்கௌவாணம். எ-திருமுறை.

---

திருச்சிற்றம்பலம்.

காண்டனன்காண்டனன்காரிகையார்தக்கருத்தனை
யாண்டனனாண்டனனாமாத்தூரெம்மடிகட்காட்
பூண்டனன்பூண்டனன்பொய்யன்றுசொல்லுவன்கேண்மின்கள்
மீண்டனன்மீண்டனன்வேதவித்தல்லாதவர்கட்கே. (௧)

பாடுவன்பாடுவன்பார்ப்பதிதன்னடிபற்றிநான்
தேடுவன்தேடுவன்திண்ணெனப்பற்றிச்செறிதர
வாடுவனாடுவனாமாத்தூரெம்மடிகளைக்
கூடுவன்கூடுவன்குற்றமதற்றென்குறிப்பொடே. (௨)

காய்ந்தவன்காய்ந்தவன்கண்ணழலாலன்றுகாமனைப்
பாய்ந்தவன்பாய்ந்தவன்பாதத்தினாலன்றுகூற்றத்தை
ஆய்ந்தவனாய்ந்தவனாமாத்தூரெம்மடிகளா
ரேய்ந்தவனேய்ந்தவனெம்பிராட்டியைப்பாகமே. (௩)

ஐயனையத்தனையாளுடையாமாத்தூரண்ணலை
மெய்யனைமெய்யர்க்குமெய்ப்பொருளானவிமலனை



மையனைமையணிகண்டனைவன்றொண்டனூரன்சொற்
பொய்யொன்றுமின்றிப்புலம்புவார்பொற்கழல்சேர்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

திருநாகைக்காரோணம் - பண் - கொல்லிக்கௌவாணம்.
(எ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

பத்தூர்புக்கிரந்துண்டுபலபதிகம்பாடிப்
பாவையரைக்கிறிபேசிப்படிறாடித்திரிவீர்
செத்தார்தமெலும்பணிந்துசேவேறித்திரிவீர்
செல்வத்தைமறைத்துவைத்தீரெனக்கொருநாளிரங்கீர்
முத்தாரமிலங்கிமிளிர்மணிவயிரக்கோவை
யவைபூணத்தந்தருளிமெய்க்கினிதாநாறுங்
கத்தூரிகமழ்சாந்துபணித்தருளவேண்டுங்
கடனாகைக்காரோணமேவியிருந்தீரே. (௧)

பண்மயத்தமொழிப்பரவைசங்கிலிக்குமெனக்கும்
பற்றாயபெருமானேமற்றாரையுடையே
னுண்மயத்தவுமக்கடியேன்குறைதீர்க்கவேண்டு
மொளிமுத்தம்பூணாரமொண்பட்டும்பூவுங்
கண்மயத்தகத்தூரிகமழ்சாந்தும்வேண்டுங்
கடனாகைக்காரோணமேவியிருந்தீரென்
றண்மயத்தாலணிநாவலாரூரன்சொன்ன
வருந்தமிழ்களிவைவல்லாரமருலகாள்பவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

ஊர்த்தொகை - பண் - பழம்பஞ்சுரம். (எ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

காட்டூர்க்கடலேகடம்பூர்மலையேகானப்பேரூராய்
கோட்டூர்க்கொழுந்தேயழுந்தூரரசேகொழுநற்கொல்லேறே
பாட்டூர்பலரும்பரவப்படுவாய்பனங்காட்டூரானே
மாட்டூரறவாமறவாதுன்னைப்பாடப்பணியாயே. (அ)

கொங்கிற்குறும்பிற்குரக்குத்தளியாய்குழகாகுற்றாலா
மங்குற்றிரிவாய்வானோர்தலைவாவாய்மூர்மணவாளா
சங்கக்குழையார்செவியாவழகாவவியாவனலேந்திக்
கங்குற்புறங்காட்டாடீயடியார்கவலைகளையாயே. (கூ)

கைம்மாவுரிவையம்மான்காக்கும்பலவூர்கருத்துன்னி
மைம்மாந்தடங்கண்மதுரமன்னமொழியாள்மடச்சிங்கடி
தம்மானூரன்சடையன்சிறுவனடியன்றமிழ்மாலை
செம்மாந்திருந்துதிருவாய்திறப்பார்சிவலோகத்தாரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருமுருகன்பூண்டி - பண் - பழம்பஞ்சரம். (எ - ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

கொடுகுவெஞ்சிலைவடுகவேடுவர்விரவலாமைசொல்லித், திடுகு
மொட்டெனக்குத்திக்கூறைகொண்டாறலைக்குமிடம், முடுகுநாறிய
வடுகர்வாழ்முருகன் பூண்டிமாநகர்வாய், இடுகுநுண்ணிடைமங்கை
தன்னொடுமெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானீரே. (க)



வில்லைக்காட்டிவெருட்டிவேடுவர்விரவலாமைசொல்லிக், கல்
லினாலெறிந்திட்டுமோதியுங்கூறைகொள்ளுமிடம், முல்லைத்தாதுமண
ங்கமழ்முருகன்பூண்டிமாநகர்வாய், எல்லைக்காப்பதொன்றில்லையா
கினீரெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானீரே. (உ)

முந்திவானவர்தாந்தொழுமுருகன்பூண்டிமாநகர்வாய்ப்
பந்தணைவிரற்பாவைதன்னையோர்பாகம்வைத்தவனைச்
சிந்தையிற்சிவதொண்டனூரனுரைத்தனபத்துங்கொண்
டெந்தம்மடிகளையேத்துவாரிடரொன்றுந்தாமிலரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர் - பண் - பழம்பஞ்சரம். (எ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

பத்திமையுமடிமையையுங்கைவிடுவான்பாவியேன்
பொத்தினநோயதுவிதனைப்பொருளறிந்தேன்போய்த்தொழுவேன்
முத்தினைமாமணிதன்னைவயிரத்தைமூர்க்கனே
னெத்தனைநாள்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. (க)

ஐவணமாம்பகழியுடையடன்மதனன்பொடியாகச்
செவ்வணமாந்திருநயனம்விழிசெய்தசிவமூர்த்தி
மையணவுகண்டத்துவளர்சடையெம்மாரமுதை
யெவ்வணநான்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே (உ)

பேரூருமதகரியினுரியானைப்பெரியவர்தஞ்
சீரூருந்திருவாரூர்ச்சிவனடியேதிறம்விரும்பி
யாரூரனடித்தொண்டனடியன்சொலகலிடத்தில்
ஊரூரனிவைவல்லாருலகவர்க்குமேலாரே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

## திருவாலங்காடு - பண் - பழம்பஞ்சுரம். (௭-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

முத்தாமுத்திதரவல்லமுகிழ்மென்முலையாளுமைபங்கா
சித்தாசித்தித்திறங்காட்டுஞ்சிவனேதேவர்சிங்கமே
பத்தாபத்தர்பலர்போற்றும்பரமாபழையனூர்மேய
வத்தாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (௧)

பொய்யேசெய்துபுறம்புறமேதிரிவேன்றன்னைப்போகாமே
மெய்யேவந்திங்கெனையாண்டமெய்யாமெய்யர்மெய்ப்பொருளே
பையாடரவமரைக்கசைத்தபரமாபழையனூர்மேய
வையாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே (௨)

பத்தர்சித்தர்பலரேத்தும்பரமன்பழையனூர்மேய
வத்தனாலங்காடன்றனடிமைத்திறமேயன்பாகி
சித்தர்சித்தம்வைத்தபுகழ்ச்சிறுவனூரனொண்டமிழ்கள்
பத்தும்பாடியாடுவார்பரமனடியேபணிவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருவொற்றியூர் - பண் - தக்கேசி. (௭ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

அழுக்குமெய்கொடுன்றிருவடியடைந்தேனதுவுநான்படப்பாலதொன்றானால், பிழுக்கைவாரியும்பால்கொள்வரடிகேள்பிழைப்பனாகிலுந்திருவடிப்பிழையேன், வழுக்கிவீழினுந்திருப்பெயரல்லான்மற்றுநானறியேன்மறுமாற்றம், ஒழுக்கவென்கணுக்கொருமருந்துரையாயொற்றியூரெனுமூருறைவானே. (௧)



கட்டனேன்பிறந்தேனுனக்காளாய்க்காதற்சங்கிலிகாரணமாக, எட்டினாற்றிகழுந்திருமூர்த்தியென்செய்வானடியேனெடுத்துரைக்கேன், பெட்டனாகிலுந்திருவடிப்பிழையேன்பிழைப்பனாகிலுந்திருவடிக்கடிமை, யொட்டினேனென்னைநீசெய்வதெல்லாமொற்றியூரெனுமூருறைவானே. (௨)

கங்கைதங்கியசடையுடைக்கரும்பேகட்டியேபலர்க்குங்கனிகண்ணே, யங்கைநெல்லியின்பழத்திடையமுதேயத்தாவென்னிடரார்க்கெடுத்துரைக்கேன், சங்குலம்பியுஞ்சலஞ்சலமுரலவயிரமுத்தொடுபொன்மணிவரன்றி, யொங்குமாகடலோதம்வந்துலவுமொற்றியூரெனுமூருறைவானே. (௩)

வழித்தலைப்படுவான்முயல்கின்றேனுன்னைப்போலென்னைப்பாவிக்கமாட்டேன், சுழித்தலைப்பட்டநீர்துபோலச்சுழல்கின்றேன்சுழல்கின்றதென்னுள்ளங், கழித்தலைப்பட்டநாயதுபோலவொருவன்கோல்பற்றிக்கறகறவிழுக்கை, யொழித்துநீயருளாயினசெய்யாயொற்றியூரெனுமூருறைவானே. (௯)

ஓதம்வந்துலவுங்கரைதன்மேலொற்றியூருறைசெல்வனைநாளுஞ், ஞாலந்தான்பரவப்படுகின்றநான்மறையங்கமோதியநாவன், சீலந்தான்பெரிதும்மிகவல்லசிறுவன்வன்றொண்டனூரனுரைத்த, பாடல்பத்திவைவல்லவர்தாம்போய்ப்பரகதிதிண்ணநண்ணுவர்தாமே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

## திருப்புன்கூர் - பண் - தக்கேசி. (௭ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

அந்தணாளனுன்னடைக்கலம்புகுதவவனைக்காப்பதுகாரணமாக; வந்தகாலன்றனாருயிரதனைவவ்வினாய்க்குன்றன்வன்மைகண்டடி

யேன், எந்தைநீயெனைநமன்றமர்நலியிலிவன்மற்றென்னடியானெனவிலக்குஞ், சிந்தையால்வந்துன்றிருவடியடைந்தேன்செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (௬)

வையகமுற்றுமாமழைமறந்துவயலில்நீரிலைமாநிலந்தருகோம், உய்யக்கொள்கமற்றெங்களையென்ன வொளிகொள் வெண்முகிலாய்ப்பரந்தெங்கும், பெய்யுமாமழைப்பெருவெள்ளந்தவிர்த்துப் பெயர்த்தும்பன்னிருவேலிகொண்டருளுஞ், செய்கைகண்டுநின் றிருவடியடைந்தேன்செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (௭)

நற்றமிழ்வல்லஞானசம்பந்தனாவினுக்கரையனாளைப்போவானுங், கற்றசூதனற்சாக்கியன்சிலந்திகண்ணப்பன்கணம்புல்லனென்றிவர்கள், குற்றஞ்செய்யினுங்குணமெனக்கருதுங்கொள்கைகண்டுநின் குரைகழலடைந்தேன், பொற்றிரண்மணிக்கமலங்கண்மலரும்பொய்கைசூழ்திருப்புன்கூருளானே. (௮)

இயக்கர்கின்னரர்யமனொடுவருணரியங்குதீவளிஞாயிறுதிங்கள், மயக்கமில் புலிவானரநாகம்வசுக்கள் வானவர் தானவரெல்லாம், அயர்ப்பொன்றின்றிநின் றிருவடியதனையர்ச்சித்தார்பெறுமாரருள் கண்டு, இசைப்பொன்றின்றிநின்றிருவடியடைந்தேன்செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (௯)

கம்பமால்களிற்றின்னுரியானைக்காமற்காய்ந்ததோர்கண்ணுடையானைச், செம்பொனேயொக்குந்திருவுருவானைச்செழும்பொழிற்றிருப்புன்கூருளானை, யம்பாளியையுமையவள்கோனையூரன்வன்றொண்டனுள்ளத்தாலுகந், தன்பினாற்சொன்னவருந்தமிழைந்தோடைந்தும்வல்லவருவினையிலரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.



திருவாரூர் - பண் - தக்கேசி. (௭ - ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

பொன்னுமெய்ப்பொருளுந்தருவானைப்போகமுந்திருவும்புணர்ப்பானைப், பின்னையென்பிழையைப்பொறுப்பானைப்பிழையெலாந்தவிரப்பணிப்பானை, யின்னதன்மையனென்றறியொண்ணாவெம்மானையெளிவந்தபிரானை, யன்னம்வைகும்வயற்பழனத்தணியாரூரானைமறக்கலுமாமே. (௧)

ஒட்டியாட்கொண்டுபோயொளித்திட்டவுச்சிப்போதனைநஞ்சரவார்த்த, பட்டியைப்பகலையிருள்தன்னைப்பாவிப்பார்மனத்தூறுமத்தேனைக், கட்டியைக்கரும்பின்றெளிதன்னைக்காதலார்கடற்சூர்தடிந்திட்ட, செட்டியப்பனைப்பட்டனைச்செல்வவாரூரானைமறக்கலுமாமே. (௧௦)

ஓரூரென்றுலகங்களுக்கெல்லாமுரைக்கலாம்பொருளாயுடன்கூடிக், காரூருங்கமழ்கொன்றைநன்மாலைமுடியன்காரிகைக்காரணமாக, ஆரூரைம்மறக்கற்கரியானையம்மான்றன்றிருப்பேர்கொண்டதொண்டனாரூரன்னடிநாயுரைவல்லாரமரலோகத்திருப்பவர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவேகம்பம் - பண் - தக்கேசி. (௭ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

ஆலந்தானுகந்தமுதுசெய்தானையாதியையமரர்தொழுதேத்துஞ், சீலந்தான்பெரிதுமுடையானைச்சிந்திப்பாரவர்சிந்தையுளானை, யேலவார்குழலாளுமைநங்கையென்றுமேத்திவழிபடப்பெற்ற, காலகாலனைக்கம்பனெம்மானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே.

திங்கள்தங்கியசடையுடையானைத் தேவதேவனைச்செழுங்கடல் வளருஞ், சங்கவெண்குழைக்காதுடையானைச்சாமவேதம்பெரிதுகப் பானை, மங்கைநங்கைமலைமகள்கண்டுமருவியேத்திவழிபடப்பெற்ற, கங்கையாளனைக் கம்பனெம்மானைக்காணக்கண்ணடியேன்பெற்ற வாறே. (௪)

திருச்சிற்றம்பலம்.

---

## திருமுல்லைவாயில் - பண் - தக்கேசி. (எ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

திருவுமெய்ப்பொருளுஞ்செல்வமுமெனக்குன்சீருடைக்கழல் களென்றெண்ணி, யொருவரைமதியாதுறாமைகள்செய்துமூடியு முறைப்பனாய்த்திரிவேன், முருகமர்சோலைசூழ்திருமுல்லைவாயிலாய் வாயினாலுன்னைப், பரவிடுமடியேன்படுதுயர்களையாய்பாசுபதாப ரஞ்சுடரே. (௧)

கூடியவிலயஞ்சதிபிழையாமைக்கொடியிடையுமையவள்காண வாடியவழகாவருமறைப்பொருளேயங்கணாவெங்குற்றமென்று தேடியவானோர்சேர்திருமுல்லைவாயிலாய்திருப்புகழ்விருப்பாற் பாடியவடியேன்படுதுயர்களையாய்பாசுபதாபரஞ்சுடரே, (௨)

விண்பணிந்தேத்தும்வேதியர்மாதர்வெருவிடவேழமொன் றுரித்தாய், செண்பகச்சோலைசூழ்திருமுல்லைவாயிலாய்தேவர்தம்மர சே, தண்பொழிலொற்றிமாநகருடையாய்சங்கிலிக்காகவென்கண் கொண்ட, பண்பநின்னடியேன்படுதுயர்களையாய்பாசுபதாபரஞ் சுடரே. (௩)

சந்தனவேருங்காரகிற்குறடுந்தண்மயிற்பீலியுங்கரியின் றந்தமுந்தரளக்குவைகளும்பவளக்கொடிகளுஞ்சுமந்துகொண்டுந்தி



வந்திழிபாலிவடகரைமுல்லைவாயிலாய்மாசிலாமணியே பந்தனைகெடுத்தென்படுதுயர்களையாய்பாசுபதாபரஞ்சுடரே. (௪)

மற்றுநான்பெற்றதார்பெறவல்லார்வள்ளலேகள்ளமேபேசிக், குற்றமேசெயினுங்குணமெனக்கொள்ளுங் கொள்கையான்மிகைப லசெய்தேன், செற்றுமீதோடுந்திரிபுரமெரித்ததிருமுல்லைவாயிலாய டியேன், பற்றிலேனுற்றபடுதுயர்களையாய்பாசுபதாபரஞ்சுடரே. ()

சொல்லரும்புகழான்றொண்டைமான்களிற்றைச்சூழ்கொடி முல்லையாற்கட்டிட், டெல்லையில்லின்பமவன்பெறவெளிப்பட்டருளி யவிறைவனேயென்று, நல்லவர்பரவுந்திருமுல்லைவாயினாதனேநரை விடையேறி, பல்கலைப்பொருளேபடுதுயர்களையாய்பாசுபதாபரஞ் சுடரே. (௧௦)

விரைதருமலர்மேலயனொடுமாலும்வெருவிடநீண்டவெம்மானைத் திரைதருபுனல்சூழ்திருமுல்லைவாயிற்செல்வனைநாவலாரூர னுரைதருமாலையோரைஞ்சினோடைஞ்சுமுள்குளிர்ந்தேத்தவல்லார்க ணரைதிரைமூப்புநடலையுமின்றிநண்ணுவர்விண்ணவர்க்கரசே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவாவடுதுறை - பண் - தக்கேசி. (எ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

கங்கைவார்சடையாய்கணநாதாகாலகாலனேகாமனுக்கனலே, பொங்குமாகடல்விடமிடற்றானே பூதநாதனே புண்ணியாவினிதா செங்கண்மால்விடையாய்தெளிதேனே தீர்த்தனேதிருவாவடுதுறை யு, ளங்கணாவெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே.

மண்ணினின்மேன்மயங்கிக்கிடப்பேனைவலியவந்தென்னையாண்டு கொண்டானே, கண்ணிலேனுடம்பில்லடுநோயாற்கருத்தழிந்துனக்

கேபொறையானே, தெண்ணிலாவெறிக்குஞ்சடையானே தேவ
னே திருவாவடுதுறையு ளண்ணலேயென்னையஞ்சலென்றருளாயாரெ
னக்குறவமரர்களேறே. (உ)

ஒப்பிலாமுலையாளொருபாகமத்தமாமத்தமார்தருசடையாய்,
முப்புரங்களைத்தீவளைத்தங்கேமூவருக்கருள்செய்யவல்லானே,செப்
பவானிழற்கீழிருந்தருளுஞ்செல்வனே திருவாவடுதுறையு, ளப்பனே
யென்னையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே. (௯)

கொதியினால்வருகாளிதன்கோபங்குறையவாடியகூத்துடையானே
மதியிலேனுடம்பில்லடுநோயான் மயங்கினேன் மணியேமணவாளா
விதியினாலிமையோர்தொழுதேத்தும்விகிர்தனே திருவாவடுதுறையு
ளதிபனேயென்னையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே.()

குறைவிலாநிறைவேகுணக்குன்றேகூத்தனேகுழைக்காதுடை
யானே, யுறவிலேனுனையன்றிமற்றடியேனொருபிழைபொறுத்தாலி
ழிவுண்டோ, சிறைவண்டார்பொழில்சூழ்திருவாரூர்ச்செம்பொனே
திருவாவடுதுறையுள், அறவனேயென்னையஞ்சலென்றருளாயாரெனக்
குறவமரர்களேறே. (அ)

வானநாடனேவழித்துணைமருந்தேமாசிலாமணியேமறைப்
பொருளே,யேனமாவெயிறாமையுமென்புமேதாங்கியமார்புடையா
னே,தேனெய்பாறயிராட்டுகந்தானேதேவனே திருவாவடுதுறையு,
ளானேயென்னையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே.()

வெண்டலைப்பிறைகொன்றையுமரவும்வெறிமத்தமும்விரவிமு
ண்டித்த, விண்டமாமலர்ச்செஞ்சடையானைவீசனைத்திருவாவடு
துறையு, ளண்டவாணனைச்சிங்கடியப்பனணுக்கவன்றொண்டனூர
வத்தாளுரைத்த, தண்டமிழ்மாலைபத்தும்வல்லார்கள்சாதலும்பிறப்
புமறுப்பாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.



## திருவாரூர் - பண் - காந்தாரம். (எ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

கரையுங்கடலுமலையுங்காலையுமாலையுமெல்லா
முரையில்விரவிவருவானொருவனுருத்திரலோகன்
வரையின்மடமகள்கேள்வன்வானவர்தானவர்க்கெல்லா
மரையனிருப்பதுமாரூரெம்மையுமாள்வரோகேளீர். (க)

தனியனென்றெள்கியறியேன்றன்னைப்பெரிதுமுகப்பன்
முனிபவர்தம்மைமுனிவன்முகம்பலபேசிமொழியேன்
கனிகள்பலவுடைச்சோலைக்காய்க்குலையீன்றகமுகி
னினியிருப்பதுமாரூரெம்மையுமாள்வரோகேளீர். (உ)

எந்தையிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோவென்று
சிந்தைசெயுந்திறம்வல்லான்றிருமருவுந்திரடோளான்
மந்தமுழவமியம்பும்வளவயனாவலாரூரன்
சந்தமிசையொடும்வல்லார்தாம்புகழெய்துவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

## திருவானைக்கா - பண் - காந்தாரம். (எ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

மறைகளாயினநான்குமற்றுள்ளபொருள்களுமெல்லாந்
துறையுந்தோத்திரத்திறையுந்தொன்மையுநன்மையுமாய
வறையும்பூம்புனலானைக்காவுடையாதியைநாளு
மிறைவனென்றடிசேர்வாரெம்மையுமாளுடையாரே. (க)

வங்கமேவியவேலைநஞ்செழவஞ்சர்கள்கூடித்
தங்கள்மேலடராமையுண்ணெனவுண்டிருள்கண்ட

னங்கமோதியவானைக்காவுடையாதியைநாளு
மெங்களீசனென்பார்களெம்மையுமாளுடையாரே. (௯)

ஆழியாற்கருளானைக்காவுடையாதிபொன்னடியி
னீழலேசரணாகநின்றருள்கூரநினைந்த
வாழவல்லவன்றொண்டன்வண்டமிழ்மாலைவல்லார்போ
யேழுமாபிறப்பற்றெம்மையுமாளுடையாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவையாறு - பண்-காந்தாரபஞ்சமம். (எ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

பரவும்பரிசொன்றறியேனான்பண்டேயும்மைப்பயிலாதே
னிரவும்பகலுநினைந்தாலுமெய்தநினையமாட்டேனான்
கரவிலருவிகமுகுண்ணத்தெங்கங்குலைக்கீழ்க்கருப்பாலை
யரவத்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. (௧)

எங்கேபோவேனாயிடினுமங்கேவந்தென்மனத்தீராய்ச்
சங்கையொன்றுமின்றியேதலைநாள்கடைநாளொக்கவே
கங்கைசடைமேற்கரந்தானேகலைமான்மறியுங்கனன்மழுவுந்
தங்குந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. (௨)

கூடியடியாரிருந்தாலுங்குணமொன்றில்லீர்குறிப்பில்லீ
ரூடியிருந்துமுணர்கிலேனுமைத்தொண்டனூரனேன்
றேடியெங்குங்காண்கிலேன்றிருவாரூரேசிந்திப்ப
வாடுந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. (௧௧)

திருச்சிற்றம்பலம்.



## திருக்கேதாரம் - பண்-நட்டபாடை. (எ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

வாழ்வாவதுமாயமிதுமண்ணாவதுதிண்ணம்
பாழ்போவதுபிறவிக்கடல்பசிநோய்செய்தபறிதான்
றாழாதறஞ்செய்ம்மின்றடங்கண்ணான்மலரோனுங்
கீழ்மேலுறநின்றான்றிருக்கேதாரமெனீரே. (௧)

பறியேசுமந்துழல்வீர்பறிநரிகீறுவதறியீர்
குறிகூவியகூற்றங்கொளுநாளாலறமுளவே
யறிவானிலுமறிவானலநறுநீரொடுசோறு
கிறிபேசிநின்றிடுவார்தொழுகேதாரமெனீரே. (௨)

வாளோடியதடங்கண்ணியர்வலையிலழுந்தாதே
நாளோடியநமனார்தமர்நணுகாமுனநணுகி
யாளாயுய்ம்மினடிகட்கிடமதுவேயெனிலிதுவே
கீளோடரவசைத்தானிடங்கேதாரமெனீரே. (௫)

நாவின்மிசையரையன்னொடுதமிழ்ஞானசம்பந்தன்
யாவர்சிவனடியார்களுக்கடியானடித்தொண்டன்
தேவன்றிருக்கேதாரத்தையூரன்னுரைசெய்த
பாவின்றமிழ்வல்லார்பரலோகத்திருப்பாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்கழுக்குன்றம் - பண்-நட்டபாடை. (எ-ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

கொன்றுசெய்தகொடுமையாற்பலசொல்லவே
நின்றபாவவினைகடாம்பலநீங்கவே

சென்றுசென்றுதொழுமின்றேவர்பிரானிடங்
கன்றினோடுபிடிசூழ்தண்கழுக்குன்றமே. (௧)

இறங்கிச்சென்றுதொழுமினின்னிசைபாடவே
பிறங்குகொன்றைச்சடையனெங்கள்பிரானிடம்
நிறங்கள்செய்தமணிகணித்திலங்கொண்டிழி
கறங்குவெள்ளையருவித்தண்கழுக்குன்றமே. (௨)

பல்லில்வெள்ளைத்தலையன்றான்பயிலும்மிடங்
கல்லில்வெள்ளையருவித்தண்கழுக்குன்றினை
மல்லின்மல்குதிரடோளூரன்வனப்பினாற்
சொல்லல்சொல்லித்தொழுவாரைத்தொழுமின்களே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவாரூர் - பண் - புறநீர்மை. (௭ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

அந்தியுநண்பகலுமஞ்சுபதஞ்சொல்லி
முந்தியெழும்பழையவல்வினைமூடாமுன்
சிந்தைபராமரியாத்தென்றிருவாரூர்ப்புக்
கெந்தைபிரானாரையென்றுகொலெய்துவதே. (௧)

நின்றவினைக்கொடுமைநீங்கவிருபொழுதுந்
துன்றுமலரிட்டுச்சூழும்வலஞ்செய்து
தென்றன்மணங்கமழுந்தென்றிருவாரூர்ப்புக்
கென்றன்மனங்குளிரவென்றுகொலெய்துவதே. (௨)

மின்னெடுஞ்செஞ்சடையான்மேவியவாரூரை
நன்னெடுங்காதன்மையானாவலர்கோனூரன்



பன்னெடுஞ்சொன்மலர்கொண்டிட்டனபத்தும்வல்லார்
பொன்னுடைவிண்ணுலகநண்ணுவர்புண்ணியரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்கூடலையாற்றூர் - பண் - புறநீர்மை. (௭ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

வடிவுடைமழுவேந்திமதகரியுரிபோர்த்துப்
பொடியணிதிருமேனிப்புரிகுழலுமையோடுங்
கொடியணிநெடுமாடக்கூடலையாற்றூரி
லடிகளிவ்வழிபோந்தவதிசயமறியேனே. (௧)

வையகமுழுதுண்டமாலொடுநான்முகனும்
பையினாவரவல்குற்பாவையொடும்முடனே
கொய்யணிமலர்ச்சோலைக்கூடலையாற்றூரி
லையனிவ்வழிபோந்தவதிசயமறியேனே. (௨)

கூடலையாற்றூரிற்கொடியிடையவளோடும்
ஆடலுகந்தானையதிசயமிதுவென்று
நாடியவின்றமிழானாவலூரன்சொற்
பாடல்கள்பத்தும்வல்லார்தம்வினைபற்றறுமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவன்பார்த்தான்பனங்காட்டூர் - பண் - சீகாமரம். (௭ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

விடையின்மேல்வருவானைவேதத்தின்பொருளானை
யடையிலன்புடையானையாவர்க்குமறியொண்ணா

மடையில்வாளைகள்பாயும்வன்பார்த்தான்பனங்காட்டூர்ச்
சடையிற்கங்கைதரித்தானைச்சாராதார்சார்வென்னே. (௨)

அறையும்பைங்கழலார்ப்பவரவாடவனலேந்திப்
பிறையுங்கங்கையுஞ்சூடிப்பெயர்ந்தாடும்பெருமானார்
பறையுஞ்சங்கொலியோவாப்படிறன்றன்பனங்காட்டூ
ருறையுமெங்கள்பிரானையுணராதாருணர்வென்னே. (௩)

நெற்றிக்கண்ணுடையானைநீறேறுந்திருமேனிக்
குற்றமில்குணத்தானைக்கோணாதார்மனத்தானைப்
பற்றிப்பாம்பரையார்த்தபடிறன்றன்பனங்காட்டூர்ப்
பெற்றொன்றேறும்பிரானைப்பேசாதார்பேச்சென்னே. (௪)

பாரூரும்பனங்காட்டூர்ப்பவளத்தின்படியானைச்
சீரூருந்திருவாரூர்ச்சிவன்பேர்சென்னியில்வைத்த
வாரூரனடித்தொண்டனடியன்சொல்லடிநாய்சொல்
லூரூரனுரைசெய்வாருயர்வானத்துயர்வாரே.

திருச்சிற்றம்பலம்.

## திருப்பனையூர் - பண் - சீகாமரம். (௭ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

மாடமாளிகைகோபுரத்தொடுமண்டபம்வளரும்வளர்பொழிற்
பாடல்வண்டறையும்பழனத்திருப்பனையூர்த் [நின்
தோடுபெய்தொருகாதினிற்குழைதூங்கத்தொண்டர்கடுள்ளிப்பாட
றாடுமாறுவல்லாரவரேயழகியரே. (௧)

நாறுசெங்கழுநீர்மலர்நல்லமல்லிகைசெண்பகத்தொடு
சேறுசெய்கழனிப்பழனத்திருப்பனையூர்



நீறுபூசிநெய்யாடிதன்னைநினைப்பவர்தம்மனத்தனாகிநின்
றறுகூடவல்லாரவரேயழகியரே. (௨)

வஞ்சிநுண்ணிடைமங்கைபங்கினர்மாதவர்வளரும்வளர்பொழிற்
பஞ்சின்மெல்லடியார்பயிலுந்திருப்பனையூர்
வஞ்சியும்வளர்நாவலூரன்வனப்பகையவளப்பன்வன்றொண்டன்
செஞ்சொற்கேட்டுகப்பாரவரேயழகியரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

## திருவெண்பாக்கம் - பண் - சீகாமரம். (௭ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

பிழையுளனபொறுத்திடுவரென்றடியேன்பிழைத்தக்காற்
பழியதனைப்பாராதேபடலமென்கண்மறைப்பித்தாய்
குழைவிரவுவடிகாதாகோயிலுளாயேயென்ன
வுழையுடையானுள்ளிருந்துளோம்போகீரென்றானே. (௧)

இடையறியேன்றலையறியேனெம்பெருமான்சரணமென்பே
னடையுடையனம்மடியானென்றவற்றைப்பாராதே
விடையுடையான்விடநாகன்வெண்ணீற்றன்புலியின்றோ
லுடையுடையானெனையுடையானுளோம்போகீரென்றானே. (௨)

பொன்னவிலுங்கொன்றையினாய்போய்மகிழ்க்கீழிருவென்று
சொன்னவெனைக்காணாமேசூளுறவுமகிழ்க்கீழே
யென்னவல்லபெருமானேயிங்கிருந்தாயோவென்ன
வொன்னலரைக்கண்டாற்போலுளோம்போகீரென்றானே. (௩)

மான்றிகழுஞ்சங்கிலியைத்தந்துவருபயன்களெல்லாந்
தோன்றவருள்செய்தளித்தாயென்றுரைக்கவுலகமெல்லா
மீன்றவனேவெண்கோயிலிங்கிருந்தாயோவென்ன
வூன்றுவதோர்கோலருளியுளோம்போகீரென்றானே. (௧௦)

ஏராரும்பொழினிலவுவெண்பாக்கமிடங்கொண்ட
காராருமிடற்றானைக்காதலித்திட்டன்பினொடுஞ்
சீராருந்திருவாரூர்ச்சிவன்பேர்சென்னியில்வைத்த
வாரூரன்றமிழ்வல்லார்க்கடையாவல்வினைதானே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## கோயில் - பண் - குறிஞ்சி. (எ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

மடித்தாடுமடிமைக்கணன்றியேமனனேநீவாழுநாளுந், தடித்தாட்டித்தருமனார் தமர்செக்கிலிடும்போது தடுத்தாட்கொள்வான், கடித்தாடுங்கரதலத்திற்றமருகமுமெரியகலுங்கரியபாம்பும், பிடித்தாடிப்புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாமன்றே. (௧)

போராதுகாமத்திற்சென்றாற்போலன்றியேபிரியாதுங்கிச்
சீரார்த்தவன்பராய்ச்சென்றுமுன்னடிவீழுந்திருவினரை
யோராதுதருமனார்தமர்செக்கிலிடும்போதுதடுத்தாட்கொள்வான்
பேராளர்புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாமன்றே. ( )

பாரூருமரவல்குலுமைநங்கையவள்பங்கன்பைங்கணேற்ற
னூரூரன்றருமனார்தமர்செக்கிலிடும்போதுதடுத்தாட்கொள்வா
னாரூரன்றம்பிரானாரூரன்மீகொங்கிலணிகாஞ்சிவாய்ப்
பேரூர்பெருமானைப்புலியூர்ச்சிற்றம்பலத்தேபெற்றாமன்றே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

## திருவொற்றியூர் - பண் - குறிஞ்சி. (எ - ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

பாட்டும்பாடிப்பரவித்திரிவார்-ஈட்டும்வினைகெடுப்பார்கோயில்
காட்டுக்கலமுந்திமிலுங்கரைக்கே-யோட்டுந்திரைவாயொற்றியூரே.



பந்துங்கிளியும்பயிலும்பாவை-சிந்தைகவர்வார்செந்தீவண்ண
ரெந்தம்மடிகளிறைவர்க்கிடம்போ-லுந்துந்திரைவாயொற்றியூரே.

* பவளக்கனிவாய்ப்பாவைபங்கன் - கவளக்களிற்றினுரிவைபோர்த்தான், றவழுமதிசேர்சடையாற்கிடம்போ-லுகளுந்திரைவாயொற்றியூரே. (௭)

என்னையெழிலுநிறையுங்கவர்வான்-புன்னைமலரும்புறவிற்றிகழுந்
தன்னைமுன்னநினைக்கத்தருவா-னுன்னப்படுவானொற்றியூரே. (௮)

ஒற்றியூருமரவும்பிறையும்-பற்றியூரும்பவளச்சடையர்
ஒற்றியூர்மேலாரூரனுரைத்த-கற்றுப்பாடக்கழியும்வினையே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

## திருப்புக்கொளியூர் அவிநாசி - பண் - குறிஞ்சி. (எ - ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

எத்தான்மறக்கேனெழுமைக்குமெம்பெருமானையே
யுற்றாயென்றுன்னையேயுள்குகின்றேனுணர்ந்துள்ளத்தாற்
புற்றாடரவப்புக்கொளியூரவிநாசியே
பற்றாகவாழ்வேன்பசுபதியேபரமேட்டியே. (௧)

வழிபோவார்தம்மோடும்வந்துடன்கூடியமாணிநீ
யொழிவதழகோசொல்லாயருளோங்குசடையானே
பொழிலாருஞ்சோலைப்புக்கொளியூரிற்குளத்திடை
யிழியாக்குளித்தமாணியென்னைக்கிறிசெய்ததே. (௨)

உரைப்பாருரையுகந்துள்கவல்லார்தங்களுச்சியா
யரைக்காடரவாவாதியுமந்தமுமாயினாய்
புரைக்காடுசோலைப்புக்கொளியூரவிநாசியே
கரைக்கான்முதலையைப்பிள்ளைதரச்சொல்லுகாலனையே. (௯)

நீரேறவேறுநிமிர்புன்சடை நின்மலமூர்த்தியைப்
போரேறதேறியைப்புக்கொளியூரவிநாசியைக்
காரேறுகண்டனைத்தொண்டனாரூரன்கருதிய
சீரேறுபாடல்கள் செப்பவல்லார்க்கில்லைதுன்பமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

திருவாரூர் - பண் - செந்துருத்தி. (௭ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

மீளாவடிமையுனக்கேயாளாய்ப்பிறரைவேண்டாதே
மூளாத்தீப்போலுள்ளேகனன்றுமுகத்தான்மிகவாடி
யாளாயிருக்குமடியார்தங்களல்லல்சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர்திருவாரூரீர்வாழ்ந்துபோதீரே. (௧)

விற்றுக்கொள்வீரொற்றியல்லேன்விரும்பியாட்பட்டேன்
குற்றமொன்றுஞ்செய்ததில்லைக்கொத்தையாக்கினீ
ரெற்றுக்கடிகேளென்கண்கொண்டீர்நீரேபழிபட்டீர்
மற்றைக்கண்டான்றராதொழிந்தால்வாழ்ந்துபோதீரே. (௨)

அன்றின்முட்டாதடையுஞ்சோலையாரூரகத்தீரே
கன்றுமுட்டியுண்ணச்சுரந்தகாலியவைபோல
வென்றுமுட்டாப்பாடுமடியார்தங்கண்காணாது
குன்றின்முட்டிக்குழியில்விழுந்தால்வாழ்ந்துபோதீரே. (௩)



காரூர்கண்டத்தெண்டோண்முக்கண்கலைகள்பலவாகி
யாரூர்த்திருமூலத்தானத்தேயடிப்பேராரூரன்
பாரூரறியவென்கண்கொண்டீர்நீரேபழிபட்டீர்
வாரூர்முலையாள்பாகங்கொண்டீர்வாழ்ந்துபோதீரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

திருநொடித்தான்மலை - பண் - பஞ்சமம். (௭ - ம் திருமுறை.)

---

திருச்சிற்றம்பலம்.

தானெனைமுன்படைத்தானதறிந்துதன்பொன்னடிக்கே
நானெனபாடலந்தோநாயினேனைப்பொருட்படுத்து
வானெனைவந்தெதிர்கொள்ளமத்தயானையருள்புரிந்து
வூனுயிர்வேறுசெய்தானொடித்தான்மலையுத்தமனே. (௧)

ஆனையுரித்தபகையடியேனொடுமீளக்கொல்லோ
வூனையுயிர்வெருட்டியொள்ளியானைநினைந்திருந்தேன்
வானைமதித்தமரர்வலஞ்செய்தெனையேறவைக்க
வானையருள்புரிந்தானொடித்தான்மலையுத்தமனே. (௨)

மந்திரமொன்றறியேன்மனைவாழ்க்கைமகிழ்ந்தடியேன்
சுந்தரவேடங்களாற்றுரிசேசெயுந்தொண்டனேனை
யந்தரமால்விசும்பிலழகானையருள்புரிந்த
துந்தரமோநெஞ்சமேநொடித்தான்மலையுத்தமனே. (௯)

ஊழிதோறூழிமுற்றுமுயர்பொன்னொடித்தான்மலையைச்
சூழிசையின்கரும்பின்சுவைநாவலவூரன்சொன்ன
வேழிசையின்றமிழாலிசைந்தேத்தியபத்திவையு
மாழிகடலரையாவஞ்சையப்பர்க்கறிவிப்பதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் புராணசாரம்.

தண்கயிலை யதுநீங்கி நாவலூர்வாழ்
சைவனார் சடையனார் தநயனாய்
மண்புகழு மருட்டுறையா னோலைகாட்டி
மணம்விலக்க வன்றொண்டா யதிகைசேர்ந்து
நண்பினுட னருள்புரிய வாரூர்மேவி
நலங்கிளரும் பரவைதோ ளையந்தணைந்த
திண்குலவும் விறன் மிண்டர் திறல்கண்டேத்துந்
திருத்தொண்டத் தொகையருளாற் செப்பினாரே.

செப்பலருங் குண்டையூர் நெல்லழைத்துத்
திருப்புகலூர்ச் செங்கல்செழும்பொன்னாச்செய்து
தப்பின்முது குன்றார்தரும் பொருளாற்றிட்டுத்
தடத்தெடுத்துச் சங்கிலிதோள் சார்ந்துநாத
னைப்பிறனித் தூதுவந்தா றாகேறி
யுறுமுதலை சிறுமதலை யுமிழநல்கி
மெய்ப்பெரிய களிறேறி யருளாற்சேர
வேந்தருடன் வடகயிலை மேவினாரே.



## சங்கிரகம்.

ஸ்ரீகைலாயபதியின் பிரதிபிம்பமாகக் கண்ணாடியினின்றுந்தோன்றி, ஆலாலசுந்தரரென்ற திருநாமத்தோடு கயிலாயத்திற் சிவபெருமானுக்குத்தொண்டுசெய்யுநாளிலொருநாள் மலர்கொய்யநந்தவனஞ்சென்றபோது, அங்குமலர்கொய்துகொண்டிருந்த அநிந்திதை கமலினி யென்னும்பார்வதியாரது தோழிமார்களைக் கண்டு காதல்கொண்டு, மீண்டு மனதைச்செல்லவிடாது தடுத்து, சுவாமிசந்நிதிசேர்ந்தனர். கயிலாயபதி இதனையறிந்து, "உமையவள் தோழிகள்பாலுன்மனஞ்சென்றமையாலவர்களுடன் பூலோகத்திற்பிறந்தின்பமநுபவித்துப் பின்பு வந்து சேரக்கடவை" யென்று கட்டளையிட்டருளலும் ஆலாலசுந்தரர் மனங்கலங்கி, அடியேனதுபிழையைப்பொறுத்து நான்மானிடனாய் மயங்கும்போது தடுத்தாட்கொள்ளல்வேண்டுமென்று வேண்ட சிவபெருமான் இசைந்தருளினர்.

அக்காரணத்தால், திருநாவலூரில் சடையனாரென்னும் ஆதிசைவருக்கு அவர்மனைவியார் இசைஞானியார்வயிற்றிற் றிருவவதாரஞ்செய்து நம்பியாரூரரென்ற திருநாமத்தோடு கலைபயின்று வளர்ந்து விவாகத்திற்கிணங்கி, திருமணக்கோலம்பூண்டு புத்தூருக்குச்சென்று, விவாகச்சடங்கிலிருக்கையில், சிவபெருமான் முன்னம் கயிலையிலருளியபடி தடுத்

தாட்கொள்ளும்பொருட்டு, ஒருகிழப்பிராமண வடிவங்கொண்டு, கலியாணப்பந்தலில் சபையாருக்கெதிரில்வந்து நம்பியாரூரரை நோக்கி உன்னிடத்திலெனக்கொரு வழக்கிருக்கின்றது அதனைத்தீர்க்காது விவாகஞ்செய்துகொள்ளக்கூடாதென்றார். அவ்வழக்கென்னென்று நம்பியாரூரர் கேட்க கிழவேதியர் சபையாரைநோக்கி, இவ்வாரூரன் எனதடிமை இதுதான்வழக்கென்றார். நம்பியாரூரரிதைக்கேட்டு நகைக்க, கிழவரவரைநோக்கி, உனதுபாட்டனெழுதிக்கொடுத்த முறியோலை யிதோவிருக்க, நீ நகைப்பானேனென்றார். பிராமணர் பிறருக்கடிமையாதலிவ்வுலகில்லை, நீர்பித்தரோவென்று நம்பியாரூரர்சொல்ல, கிழவர் நீ எதைச்சொன்ன போதிலும் நமக்கடிமை செய்யவேண்டுமென்றார். நம்பியாரூரர் கோபங்கொண்டு, ஓலையைக்காட்டுமென்று சுவாமியைத் துரத்தி ஓலையைப்பறித்துக் கிழித்தெறிந்து விட்டார். உடனே கிழவனார், நம்பியாரூரரைப் பிடித்துக்கொண்டலற, அங்கிருந்தவர்கள் விலக்கி, நீரெங்கிருப்பவரென்று கேட்க, வெண்ணெய்நல்லூரிலென்றார். அவ்விதமாயின் உமது தப்பு வழக்கை யங்குள்ளோரிடஞ் சொல்லிக்கொள்வோமென்று நம்பியாரூரர்சொல்ல, யாவரும்புறப்பட்டுத் திருவெண்ணெய் நல்லூருக்குச்சென்றார்கள். கிழவேதியர் அங்கிருந்தபிராமணர்களைநோக்கி, ஓ பிராமணர்களே! இந்தநம்பியாரூரனென் அடிமையென்றுநான்காட்டிய ஓலையைப்பிடுங்கிக்கிழித் தெறிந்துவிட்டானென்றார். அதனையவர்கள்கேட்டுச் சாட்சியுண்டோவென, கிழவர்முன் கிழித்தது படியோலை, மூல



வோலையைக் காட்டுகிறேனென்று சொல்லிக் காட்டினார். காட்டிய அதில், "திருநாவலூரிலிருக்கும்ஆதிசைவப் பிராமணனாகிய ஆரூரனென்னும் பெயருள்ளநான், திருவெண்ணெய் நல்லூரிலிருக்கும் பித்தனுக்கு எழுதிக்கொடுத்தமுறியோலையாவது, இத்தேதிமுதல் நானுமெனது பரம்பரையாய் வருகின்றவெஞ்சந்ததியாரும் தொத்தடிமை செய்யும்படி மனவாக்கொத்து எழுதிக்கொடுத்தேன், இதற்கிதுவே யென் கையெழுத்து" என்றெழுதியிருப்பதோடு, அதிலெழுதியிருக்குஞ் சாட்சிகள் பெயரும் நம்பியாரூரரது பாட்டனார் கையெழுத்துமொத்திருக்கக்கண்டு, பிராமணர்கள் நம்பியாரூரரைப்பார்த்து, நீரிந்தப் பிராமணருக்கடிமைசெய்யவேண்டியது முறைமையே யென்றார்கள்.

அதனை நம்பியாரூரரேற்றுக்கொள்ள, சபையர் கிழவேதியரை நோக்கி, ஐயரே! உமக்கிவ்வூரில்மாளிகை யெங்கென, காட்டுகிறேனென்றாலயத்துட்சென்று மறைந்துவிட்டார். அதைக்கண்டெல்லோருந்திகைத்து நின்றார்கள். நம்பியாரூரர் தொடர்ந்தழைக்க, சுவாமி தேவியாரோடும்இடபத்திலெழுந்தருளி, முன்னம்கயிலையில் நடந்ததைச்சொல்லி, நாமுன்னளித்தவாக்கின்படி தடுத்தாட்கொண்டோமென்று சொல்லியருளினர். நம்பியாரூரருடனே தொழுது துதிக்க சிவபெருமான், அன்பனே நமக்குப் பாட்டே யருச்சனையாதலால் நம்மைப்பாடக் கடவையென்றருளினர். நம்பியாரூரர்பணிந்து, பெருமானே! தேவரீரது பெருமைகளையறியாத

வடிவேனென் னென்றுபாடுவேனென்ன, நீமுன்பு நம்மைப் பித்தனென்றதனாலதனையே முதலடியாகவைத்துப் பாடக் கடவையென்றருளினர். அவ்விதமே "பித்தாபிறைசூடி" என்னுந் திருப்பதிகமோதியருளினர். சிவபெருமான் றிருவுள மகிழ்ந்து, தலமெங்குஞ்சென்று பாடக்கடவையென் றருளினர்.

அவ்வாறே திருநாவலூருக்கெழுந்தருளி சுவாமியைத் தரிசித்து இருத்துறையிற்சேர்ந்து தவநெறியருளப்பெற்றுத் திருவதிகைவீரட்டானத்திற் கெழுந்தருளி, திருநாவுக்கரசு நாயனருழவாரப்பணிசெய்த தலமாதலால் அதை மிதிப்ப தற்கஞ்சி, புறத்திலிருக்குஞ் சித்தவடமடத்திலெழுந்தருளி வீரட்டானேஸ்வரரைத் தியானித்து சயனித்துக்கொண் டனர். சுவாமியொரு விருத்தபிராமணராய்வந்து, இவருடையதலைமேற் றமது திருவடியைநீட்டி நித்திரைசெய்வார் போலிருக்க நம்பியாரூரர், தன்சிரமேற்பாதநீட்டியிருப்பவ ரா ரென்று வினவினர். என்வயோதிகத்தா லேடமறியாது நீட்டினேனென்று சுவாமிசொல்ல, நாயனர் வேறோர்புறந் தலைவைத்துக்கொண்டனர். மீண்டுஞ் சுவாமி யவ்வாறே செய்ய, நாயனர் பல்காலுமென்சிரமேற் பாதம்வைக்கும் நீரார் என்றுகேட்க, என்னையறியாயோவென்று மறைந்து விட்டனர். உடனே சுவாமியென்றறிந்து, "தம்மானையறி யாத சாதியாருளரே" யென்னும் பதிகமோதி, சிதம்பரஞ் சென்று பதிகமோதிப்பணிந்தபோது நீ திருவாரூருக்குவா



வென் றசரீரிவாக்குண்டாக சீகாழிக்குப்போய், சம்பந்த மூர்த்தியார் அவதரித்ததலமாகையாலதனை மிதிப்பதற்கஞ்சி வலமாகவந்து, சிவபெருமான் றரிசனந்தந்தருளப் பதிகமோ தித்துதித்து, மற்றதலங்களையுந் தரிசித்து, திருவாரூருக் கெழுந்தருளிப் புற்றிடங்கொண்டா ரருளியவண்ணந் தம்பி ரான், றோழராகி மகாலங்காரம் பொருந்திய திருக்கோலத் தோடு நாடோறுங்காலங்களிற் சுவாமியைத் தரிசித்துக்கொ ண்டிருந்தனர்.

பார்வதிதேவியார் தோழிகளிற் கமலினியார் என்பவர், திருவாரூரிலுள்ள உருத்திரகணிகைமரபி லொருவரிடத்திற் றோன்றி, பரவையாரென்னும் பெயரோடுவளர்ந்து புற்றிடங் கொண்டாரை நாடோறுந் தரிசித்து வந்தார். அக்கமலினி யார்மீது சுந்தரமூர்த்தி நாயனர் இச்சைகொண்டு, விவாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்று சுவாமியைப்பிரார்த்திக்க, சுவாமி கிருபைகூர்ந்து அத்தலத்துளோர்க்குந் திருத்தொ ண்டர்களுக்குஞ் சொப்பனத்திற்சொல்ல, அவர்களவ்வித மே யிருவருக்கும் விவாகஞ்செய்து வைத்தார்கள். நாடோ றுந்தரிசனத்திற்குச் செல்பவரொருநாட் செல்லும்போது, தேவாசிரியமண்டபத்திற் கூடியிருக்குந் திருத்தொண்டர் களைப் பார்த்து, இவர்கட்கு நானடிமையாகும்படி தியாக ராஜரென்னைக்கருளுவாரோ வென்றெண்ணிச்செல்ல, சுவா மிதரிசனந்தந்து, "தில்லைவாழந்தணர்" என்று முதலடியெ டுத்துக்கொடுக்க, அவ்வாறே அடியேன் என்று திருத்தொ ண்டத்தொகை யோதிப்பணிந்தின்புற்றனர்.

பின்பு திருக்கோளிலிக்கெழுந்தருளிச் சுவாமியைத் தரிசித்து, குண்டையூர்க்கிழார் கொடுத்த நெற்களெல்லாந் திருவாரூரில்வந்துசேரும்படிகிருபைசெய்யும்படிப்பதிகமோத, அவ்விதமே பூதங்கள்கொண்டுவந்துசேர்க்கப் பரவையாரது திருமாளிகையில் வந்திருந்தனர். சிலநாட்சென்றுகோட்புலிநாயனாரிவரை யுபசரித்து, சிங்கடி, வனப்பகையென்னுந் தமது புத்திரிகளைப்பணிசெய்ய வங்கிகரித் தருளும்படி வேண்ட, அவர்களைப் புத்திரிகளாகப்பாவித்து திருப்பதிக்கடைக்காப்பில் தம்மைச்சிங்கடியப்ப னென்றோதி. திருவாரூருக்கு வந்துசேர்ந்தார். அங்கு பங்குனித்திருவிழா சமீபிக்க, அதற்குப்பொருள் வேண்டியிருந்ததால் திருப்புகலூருக்குச்சென்று பதிகமோதித்தரிசித்து, செங்கல்லைத்தலையணையாகவைத்துச் சயனித்துப் பொழுதுவிடிந் தெழுந்தபோது அக்கல்பொன்னாயிருக்க வதனையெடுத்துக்கொண்டு, திருப்பனையூருக்குப் புறத்தேபோகும் பொழுது சிவபெருமான்றிருக்கூத்தோடு காட்சிதந்தருளப்பணிந்து பதிகமோதி விடைபெற்றுத் திருவாரூரிற்சேர்ந்தனர்.

பின்பு சோழநாட்டிலுங் கொங்குநாட்டிலுமுள்ள தலங்களைத்தரிசித்து, மீண்டும்விருத்தாசலத்திற்கெழுந்தருளிப் பொன்வேண்டிப்பதிகமோத, சுவாமி பன்னீராயிரம்பொன் தந்தருளினார். நாயனார் "சுவாமி இப்பொன்னையெல்லா மிந்த மணிமுத்தா நதியிலிட்டுத் திருவாரூர்க்குளத்தில் வரக்கிருபை செய்தல்வேண்டும்" என்றுபிரார்த்திக்க, சுவாமி



யவ்விதமே கிருபைசெய்தார். நாயனார் திருவாரூர்க்கெழுந்தருளி, பரவையாருடன் கமலாலயதீர்த்தத்தை யடைந்து பொன்னெல்லா மெடுத்துக்கொண்டு பரவையார் மாளிகையிற் சிலநாளிருந்தார். பின்பு திருக்குருகாவூருக்குச் சமீபத்திலெழுந்தருளும்போது வன்றொண்டர் பசித்துவருகின்றனரென்று சுவாமி திருவுளமிரங்கி மார்க்கத்திலொரு சோலையுந் தடாகமுந் தண்ணீர்ப்பந்தலுமுண்டாக்கி, கட்டமுதும் வைத்துக்கொண்டொரு பிராமணர்போலிருந்து அங்கு சேர்ந்தவன்றொண்டரைநோக்கி, நீர் மிகவும் பசித்திருக்கின்றதால் நம்மிடத்துள்ள கட்டமுதைச்சாப்பிடுமென்றுகொடுக்கப் பரிசனத்தாருடனுண்டு நீருந்திச்சற்று சயனித்துக் கொண்டிருந்தனர். உடனே சுவாமி சோலைமுதலியவற்றுடன் மறைந்துவிட்டார். நாயனார் நித்திரை நீங்கியெழுந்து முன்னிருந்தவற்றைக்காணாது, பரமசிவனார் செயலென்றறிந்து திருக்கச்சூருக்கு வர, தம்முடையதொண்டர் பசியுடனிருக்கக்கண்ட சுவாமி வேதியரைப்போலவந்து நீர் பசித்திருப்பதாலிங்குள்ள பிராமணர்கள்வீட்டிலாகாரம் வாங்கி வருகிறேனென்று சொல்லிப்போ யாசித்து வாங்கிவந்தளிக்க தொண்டர்களோடு நாயனார் புசித்துப் பசியாறினார். உடனே சுவாமியும் மறைந்துவிட்டனர். சிவபெருமான்றிருவடிகளுக்கு வருத்தங் கொடுத்தோமென்று கலங்கித் துதிசெய்து மீண்டு பலதலங்களைத் தரிசித்துக்கொண்டு திருவொற்றியூரையடைந்து சுவாமிதரிசனஞ் செய்துகொண்டிருந்தார். இச்சமயத்தில்பார்வதிதேவியாரது சேடியருள் அனிந்திதை

யார் ஞாயிறு என்னும் ஊரில் ஞாயிறுகிழார் என்னும் வேளாளருக்குப் புத்திரியாராகத் திருவவதாரஞ்செய்து திருவொற்றியூரில்கன்னிமாடத்தில் பெருமானார்க்குப்பூமாலைபுனைந்து கொடுத்துக்கொண்டிருந்தார். இவர்மீது நாயனார் இச்சைகொண்டு, இவரைப்பிரிந்துபோவதில்லையென்று சுவாமிமுன் மகிழமரத்தடியிற் சபதஞ் செய்துகொடுத்து, விவாகஞ்செய்துகொண்டு சிலகாலமிருந்து திருவாரூர்வன்மீகநாதரைத் தரிசிக்கமனங்கொண்டு புறப்பட்டுச்செல்ல, சிவபெருமான்றிருவிளையாட்டால் இருகண்களுந் தெரியாமற்போயின. திருவெண்பாக்கத்தை யடைந்து ஊன்றுகோல்பெற்றுக் காஞ்சிபுரஞ்சென்று இடக்கண்பெற்றுத் திருவாரூரையடைந்து வலக்கண்ணும்பெற்று, பரவையார்பிணக்கை நீக்கும்பொருட்டு சுவாமியைத்தூதுவிடுத்து ஊடல்தீர்த்தபின் மாளிகைக்கெழுந்தருளி மகிழ்வடைந்து சுவாமியைக்காலங்கடோறுந் துதித்துவந்தனர்.

இவர் தன்நாயகியிடஞ் சுவாமியைத்தூதுவிடுத்ததைத் திருப்பெருமங்கலத்திலிருந்த ஏயர்கோன்கலிக்காம நாயனார் கேள்விப்பட்டு மிகச்சீற்றங்கொண்டிருந்தனர். இதைச் சுந்தரமூர்த்தி நாயனாரறிந்து, சுவாமியிடம் விண்ணப்பஞ் செய்ய, சிவபெருமானிருவருக்கும் நட்புண்டாக்கக்கருதி, கலிக்காமநாயனார்வயிற்றிற் சூலைநோய்விடுத்து வருத்தி அவரிடமெழுந்தருளி அன்பனே! நமது வன்றொண்டனாலன்றி இச்சூலைநோய் தீராதென்றருள, அவன்வந்து தீர்ப்பதினு



மிவ்வாறு துன்பப்படுவதே நலமென்றார். சுவாமி சுந்தரரிடம்போய் நீ யுடனேசென்று கலிக்காமன் நோயைத் தீர்க்கக்கடவை யென்றருள நாயனாருஞ்சென்றார். இவர் வருவதைக்கேட்ட கலிக்காமநாயனார் மிகத்துயரெய்தி உடைவாளால் வயிற்றைக்கிழித்துக் கொண்டிறந்தனர். வன்றொண்டர் போய்க்கண்டு இதுவென்னால்விளைந்ததால் நானுமாய்வேனென்று உடைவாளை எடுக்கும்போது சிவபெருமான்றிருவருளாற் கலிக்காமநாயனாருயிர் பெற்றெழுந் தொருவரையொருவர் தழுவி, பிறகு இருவருந் திருவாரூருக்கெழுந்தருளி சுவாமியைத்தரிசித்து கலிக்காம நாயனார் தமதூருக்குச்செல்ல இவர்திருவாரூரிலிருந்தனர்.

பின்பு திருநாகைக்காரோணஞ்சென்று திருப்பதிகமோதிப் பொன்னும், நவரத்தினங்களும், ஆபரணங்களும், வஸ்திரங்களும், குதிரைகளும், உடைவாள் முதலியனவும் பெற்று, திருவாரூருக்கெழுந்தருளி சேரமான் பெருமானாயனார்வர, சிலநாளவருடன் பரவையார் வீட்டிலிருந்து பின்பவருடன்சென்று சோழநாட்டிலும் பாண்டிநாட்டிலுமுள்ள தலங்களைத் தரிசித்து மீண்டுந் திருவாரூருக்கு வந்தார்.

சிலகாலஞ்சென்று சுந்தரமூர்த்திநாயனாரைச்சேரமான் பெருமானாயனார் பணிந்து, தமதூரக்கெழுந்தருளும்படி பிரார்த்திக்க, நாயனாரிசைந்து திருக்கண்டியூரையடைந்து, சுவாமியைத்தரிசித்து திருவையாற்றிற்குச்செல்லக் கூடாதபடிக்காவேரிநதி பெருகிவரக்கண்டு பதிகமோத வெள்ளமலை

போட்டதுபோல்நிற்க மத்தியில்தோன்றியமணல் வழியே போய்ப்பஞ்சநதீஸ்வரரைத்தரிசித்து, சேரமான் பெருமாணாயனார்நகரமாகிய கொடுங்கோளூருக்குச் சென்றுஅவர்மாளிகையிற் சிலகாலமிருந்தார். பின்புதிருவாரூருக்குப் புறப்பட சேரமானார் தமது பொக்கிஷநிதிகளைப்பொதிகட்டி ஆட்கள் வசமனுப்பினார் இவ்வாட்கள் திருமுருகன் பூண்டிக்கருகில் வரும்போது சிவபெருமானேவலாற் பூதகணங்கள்வேடராய் வந்துவழிமறித்துக்கவர்ந்துகொண்டார்கள். இதனைநாயனார் கேட்டு சந்நிதியிற்சென்று பதிகமோதி, அப்பொருளெல்லாங் கோபுரவாயிலில் வந்திருக்க அவற்றையெடுப்பித்துக்கொண்டு திருவாரூரிற்சேர்ந்தனர்.

சிலகாலஞ்சென்று, சேரமானாரைக்காணவிரும்பி, திருப்புக்கொளியூரிற் செல்லும்போது, ஒருவீட்டில்மங்கல வோசையுமற்றொருவீட்டிலழுகையோசையுமாயிருக்கக்கண்டு, நடந்ததை விசாரித்தறிந்து, பிராமணச்சிறுவன்முதலைவிழுங்கியிறந்தவாவிக்குச்சென்று பதிகமோத, அப்பிள்ளையை விழுங்கினமுதலைவந்து கக்கிவிட்டது. உடனே அடுத்தவீட்டுப் பிள்ளையைப்போ லிப்பிள்ளைக்கு முபநயனச்சடங்கு நிறைவேற்றிப்பின்புசேரமானார்நகரஞ்சேர்ந்தங்கெழுந்தருளியிருந்தனர். பின்பு அம்மலைநாட்டிலுள்ள தலங்களையெல்லாந் தரிசித்துக்கொண்டு மகோதைக்குத்திரும்பினார். அங்கு சிலநாளிருக்கையிலொருநாள் சேரமானார் ஸ்நானஞ்செய்துகொண்டிருக்கும்போது, தாம் திருவஞ்சைக்களத்துக்குப் போய் சுவாமியைத்தரிசித்து, தேவரீரது திருவடியிலடியேனைச் சேர்த்தருளல் வேண்டுமென்று பதிகமோதினார். உட



னே சிவபெருமான் தேவர்களை நோக்கி வெள்ளையானையுடன்சென்று வன்றொண்டனையழைத்துவாருங்களென்று கட்டளையிட அவர்களவ்வாறேசென்று சுந்தரமூர்த்தி நாயனாரைக்கண்டு தொழுது ஸ்ரீகயிலாயபதியின் கட்டளையைச்சொல்ல, நாயனார் சுவாமியை நினைத்து மகிழ்ந்து வணங்கி வெள்ளையானைமீதாரோகணித்துச்செல்லும்போது, தமது நண்பராகிய சேரமானாரை நினைத்துச்சென்றார். சேரமானதையறிந்து குதிரைமேலேறி திருவஞ்சைக்களத்துக்குவந்து நாயனார் சென்றதைக்கண்டு குதிரையின்காதிற் பஞ்சாட்சரமோதி அந்தரத்திற்சென்று, நாயனாரைப் பிரதட்சணஞ்செய்து வெள்ளையானைக்கு முன்னாகப்போயினார். நாயனார் ''தானெனைமுன்படைத்தா'' னென்னுந்திருப்பதிகமோதிக் கயிலாயத்துக்கெழுந்தருளி, சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கித்துதித்து, முன்னிருந்தபடி ஆலாலசுந்தரராகித் திருத்தொண்டு செய்துகொண்டிருப்பவராயினார். கயிலாயத்திற்குப் போகும்வழியிலோதிய அத்திருப்பதிகம் வருணதேவனால் திருவஞ்சைக்களத்துக்குவந்து எங்கும் விளக்கமுற்றது.

சேரமான்பெருமானாயனார் கயிலாயஞ்சென்று திருவாயிலிற்றடைப்பட்டுப், பின்புதானருளிச்செய்த ஞானவுலாவை சிவபெருமான்சந்நிதியி லரங்கேற்றச் சிவபெருமானருள் பெற்றுச் சிவகணநாதராய் சுவாமியைச்சேவிப்பாராயினார்.

பரவையாரும் சங்கிலியாரும் முறையே கமலினியாரும் அநிந்திதையாருமாகிப் பார்வதிதேவியாருக்கு முன்போல் திருத்தொண்டு செய்வாராயினார்.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள்

அருளிச்செய்த

திருநெறித்தமிழ்வேதமாகிய

# திருவாசகம்.

## எட்டாந்திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
யல்லலறுத் தானந்த மாக்கியதே—யெல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

திருச்சிற்றம்பலம்.

நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
ஏக னநேக னிறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க



பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈச னடிபோற்றி யெந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத வின்ப மருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையு ணின்ற வதனா
லவனரு ளாலே யவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய வுரைப்பனியான்
கண்ணுதலான் றன் கருணைக்கண் காட்டவந் தெய்தி
யெண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியா
யெண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
றுய்யவென் னுள்ளத்து ளோங்கார மாய்நின்ற

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்க
ளையா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
யெஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
யஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே
யாக்க மளவிறுதி யில்லா யனைத்துலகு
மாக்குவாய் காப்பா யழிப்பா யருடருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பி
னாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுட் டேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமா
னிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
யறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகு
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த வடியேற்குத்



தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச வருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
யாரா வமுதே யளவிலாப் பெம்மானே
யோராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
யின்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
யன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமைய
னாதியனே யந்த நடுவாகி யல்லானே
யீர்த்தென்னை யாட்கொண்ட வெந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தி
னோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
யாற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையு
ளூற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
வாற்றேனெம் மையா வரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே

கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானை
நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனை
தில்லையுட் கூத்தனை தென்பாண்டி நாட்டானை
யல்லற் பிறவி யறுப்பானை யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து. (௪)

திருச்சிற்றம்பலம்.

## திருச்சதகம்.

மெய்தா னரும்பி விதிர்விதிர்த் துன்விரையார் கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் றவிர்த்துன்னைப் போற்றிசய சய போற்றியென்னுங்
கைதானெகிழ விடேனுடையா யென்னைக் கண்டுகொள்ளே. (க)

நாடகத்தா லுன்னடியார் போனடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே யிடையறா வன்புனக்கென்
னூடகத்தே நின்றுருகத் தந்தருளெம் முடையானே. (௨)

ஆமாறுன் றிருவடிக்கே யகங்குழையே னன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையே னுன்புத்தேளிர்
கோமானின் றிருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே. (௩)



வெள்ளத்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளத்தா ழுறுபுனலிற் கீழ்மேலாகப்
பதைத்துருகு மவர்நிற்க வென்னை யாண்டாய்க்
குள்ளத்தா னின்றுச்சி யளவு நெஞ்சா
யுருகாதா லுடம்பெல்லாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதா னெஞ்சங் கல்லாங்
கண்ணிணையு மரமாந் தீவினையி னேற்கே. (௪)

சித்தனை நின் றனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணை நின் றிருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம்புலன்க ளார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனை செந்தாமரைக் காடனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனியனேற்கே. (௫)

தேவர்கோ வறியாத தேவதேவன்
செழும்பொழில்கள் பயந்து காத்தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோ னென்னையும்வந் தாண்டுகொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோம்
மேவினோ மவனடியா ரடியா ரோடு
மேன்மேலுங் குடைந்தாடி யாடுவோமே. (௬)

ஆடுகின் றிலைகூத் துடையான் கழற்கன் பிலையென் புருகிப்
பாடுகின் றிலைபதைப் பதுஞ்செய் கிலைபணி கிலைபாத மலர்

சூடுகின்றிலைசூட்டுகின்றதுமிலைதுணையிலிபிணநெஞ்சே
தேடுகின்றிலைதெருவுதோறலறிலைசெய்வதொன்றறியேனே. (எ)

ஈசனேயென்னெம்மானேயெந்தைபெருமானென்பிறவி
நாசனேநான்யாதுமொன்றல்லாப்பொல்லாநாயான
நீசனேனையாண்டாய்க்குநினைக்கமாட்டேன்கண்டாயே
தேசனேயம்பலவனேசெய்வதொன்றுமறியேனே. (அ)

தரிக்கிலேன்காயவாழ்க்கைசங்கராபோற்றிவான
விருத்தனேபோற்றியெங்கள்விடலையேபோற்றியொப்பி
லொருத்தனேபோற்றியும்பர்தம்பிரான்போற்றிதில்லை
நிருத்தனேபோற்றியெங்கணின்மலாபோற்றிபோற்றி. (கூ)

போற்றியோநமச்சிவாயபுயங்கனேமயங்குகின்றேன்
போற்றியோநமச்சிவாயபுகலிடம்பிறிதொன்றில்லை
போற்றியோநமச்சிவாயப்புறமெனைப்போக்கல்கண்டாய்
போற்றியோநமச்சிவாயசயசயபோற்றிபோற்றி. (க0)

கடவுளேபோற்றியென்னைக்கண்டுகொண்டருளுபோற்றி
விடவுளேயுருக்கியென்னையாண்டிடவேண்டும்போற்றி
யுடலிதுகளைந்திட்டொல்லையும்பர்தந்தருளுபோற்றி
சடையுளேகங்கைவைத்தசங்கராபோற்றிபோற்றி. (கக)

புணர்ப்பதொக்கவெந்தையென்னையாண்டுபூணநோக்கினாய்
புணர்ப்பதன்றிதென்றபோதுநின்னொடென்னொடென்னிதாம்
புணர்ப்பதாகவன்றிதாகவன்புநின்கழற்கணே
புணர்ப்பதாகவங்கணாளபுங்கமானபோகமே. (கஉ)

போகம்வேண்டிவேண்டிலேன்புரந்தராதியின்பமு
மேகநின்கழலிணையலாதிலேனெனெம்பிரா
னாகம்விண்டுகம்பம்வந்துகுஞ்சியஞ்சலிக்கணே
யாகவென்கைகண்கடாரையாறதாகவையனே. (கங)



யானேபொய்யென்னெஞ்சும்பொய்யென்னன்பும்பொய்
யானால்வினையேனழுதாலுன்னைப்பெறலாமே
தேனேயமுதேகரும்பின்றெளிவேதித்திக்கு
மானேயருளாயடியேனுனைவந்துறுமாறே. (கச)

பாடவேண்டுநான்போற்றிநின்னையே
பாடிநைந்துநைந்துருகிநெக்குநெக்
காடவேண்டுநான்போற்றியம்பலத்
தாடுநின்கழற்போதுநாயினேன்
கூடவேண்டுநான்போற்றியிப்புழுக்
கூடுநீக்கெனைப்போற்றிபொய்யெலாம்
வீடவேண்டுநான்போற்றிவீடுதந்
தருளுபோற்றிநின்மெய்யர்மெய்யனே. (கரு)

கடையவனேனைக்கருணையினாற்கலந்தாண்டுகொண்ட
விடையவனேவிட்டிடுதிகண்டாய்விறல்வேங்கையின்றோ
லுடையவனேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
சடையவனேதளர்ந்தேனெம்பிரானென்னைத்தாங்கிக்கொள்ளே. ()

என்னையப்பாவஞ்சலென்பவரின்றிநின்றெய்த்தலைந்தேன்
மின்னையொப்பாய்விட்டிடுதிகண்டாயுவமிக்கின்மெய்யே
யுன்னையொப்பாய்மன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
யன்னையொப்பாயெனக்கத்தனொப்பாயென்னரும்பொருளே. (கஎ)

சிரிப்பிப்பன்சீறும்பிழைப்பைத்தொழும்பையுமீசற்கென்று
விரிப்பிப்பனென்னைவிடுதிகண்டாய்விடின்வெங்கரியி
னுரிப்பிச்சன்றோலுடைப்பிச்சனஞ்சூண்பிச்சனூர்ச்சுடுகாட்
டெரிப்பிச்சனென்னையுமாளுடைப்பிச்சனென்றேசுவனே. (கஅ)

ளினும்யானுன்னையேத்தினுமென் பிழைக்கேகுழைந்து
வேசறுவேனைவிடுதிகண்டாய்செம்பவளவெற்பிற்
றேசுடையாயென்னையாளுடையாய்சிற்றுயிர்க்கிரங்கிக்
காய்சினவாலமுண்டாயமுதுண்ணக்கடையவனே. (க௦௦)

திருச்சிற்றம்பலம்.

## திருவெம்பாவை.

திருச்சிற்றம்பலம்.

ஆதியுமந்தமுமில்லாவரும்பெருஞ்
சோதியையாம்பாடக்கேட்டேயும்வாட்டடங்கண்
மாதேவளருதியோவன்செவியோநின்செவிதான்
மாதேவன்வார்கழல்கள்வாழ்த்தியவாழ்த்தொலிபோய்
வீதிவாய்க்கேட்டலுமேவிம்மிவிம்மிமெய்ம்மறந்து
போதாரமளியின்மேனின்றும்புரண்டிங்ங
னேதேனுமாகாள்கிடந்தாளென்னேயென்னே
யீதேயெந்தோழிபரிசேலோரெம்பாவாய். (க)

பாசம்பரஞ்சோதிக்கென்பாயிராப்பகனாம்
பேசும்போதெப்போதிப்போதாரமளிக்கே
நேசமும்வைத்தனையோநேரிழையாய்நேரிழையீர்
சீசியிவையுஞ்சிலவோவிளையாடி
யேசுமிடமீதோவிண்ணோர்களேத்துதற்குக்
கூசுமலர்ப்பாதந்தந்தருளவந்தருளுந்
தேசன்சிவலோகன்றில்லைச்சிற்றம்பலத்து
ளீசனார்க்கன்பார்யாமாரேலோரெம்பாவாய். (உ)



முத்தன்னவெண்ணகையாய்முன்வந்தெதிரெழுந்தென்
னத்தனானந்தனமுதனென்றள்ளூறித்
தித்திக்கப்பேசுவாய்வந்துன்கடைதிறவாய்
பத்துடையீரீசன்பழவடியீர்பாங்குடையீர்
புத்தடியோம்புன்மைதீர்த்தாட்கொண்டாற்பொல்லாதோ
வெத்தோநின்னன்புடைமையெல்லோமறியோமோ
சித்தமழகியார்பாடாரோநஞ்சிவனை
யித்தனையும்வேண்டுமெமக்கேலோரெம்பாவாய். (ங)

ஒண்ணித்திலநகையாயின்னம்புலர்ந்தின்றோ
வண்ணக்கிளிமொழியாரெல்லாரும்வந்தாரோ
வெண்ணிக்கொடுள்ளவாசொல்லுகோமவ்வளவுங்
கண்ணைத்துயின்றவமேகாலத்தைப்போக்காதே
விண்ணுக்கொருமருந்தைவேதவிழுப்பொருளைக்
கண்ணுக்கினியானைப்பாடிக்கசிந்துள்ள
முண்ணெக்குநின்றுருகயாமாட்டோநீயேவந்
தெண்ணிக்குறையிற்றுயிலேலோரெம்பாவாய். (௪)

மாலறியாநான்முகனுங்காணாமலையினைநாம்
போலறிவோமென்றுள்ளபொக்கங்களேபேசும்
பாலூறுதேன்வாய்ப்படிறீகடைதிறவாய்
ஞாலமேவிண்ணேபிறவேயறிவரியான்
கோலமுநம்மையாட்கொண்டருளிக்கோதாட்டுஞ்
சீலமும்பாடிச்சிவனேசிவனேயென்
றோலமிடினுமுணராயுணராய்கா
ணேலக்குழலிபரிசேலோரெம்பாவாய். (ரு)

மானேநீநென்னலைநாளைவந்துங்களை
நானேயெழுப்புவனென்றலுநாணாமே

போனதிசைபகராயின்னம்புலர்ந்தின்றோ
வானேநிலனேபிறவேயறிவரியான்
றானேவந்தெம்மைத்தலையளித்தாட்கொண்டருளும்
வான்வார்கழல்பாடிவந்தோர்க்குன்வாய்திறவா
யூனேயுருகாயுனக்கேயுறுமெமக்கு
மேனோர்க்குந்தங்கோனைப்பாடேலோரெம்பாவாய். (௬)

அன்னேயிவையுஞ்சிலவோபலவமர
ருன்னற்கரியானொருவனிருஞ்சீரான்
சின்னங்கள்கேட்பச்சிவனென்றேவாய்திறப்பாய்
தென்னாவென்னாமுன்னந்தீசேர்மெழுகொப்பா
யென்னானையென்னரையனின்னமுதென்றெல்லோமுஞ்
சொன்னோங்கேள்வெவ்வேறாயின்னந்துயிலுதியோ
வன்னெஞ்சப்பேதையர்போல்வாளாகிடத்தியா
லென்னே துயிலின்பரிசேலோரெம்பாவாய். (௭)

கோழிசிலம்பச்சிலம்புங்குருகெங்கு
மேழிலியம்பவியம்பும்வெண்சங்கெங்கும்
கேழில்பரஞ்சோதிகேழில்பரங்கருணை
கேழில்விழுப்பொருள்கள்பாடினோங்கேட்டிலையோ
வாழியீதென்னவுறக்கமோவாய்திறவா
யாழியானன்புடைமையாமாறுமிவ்வாறோ
வூழிமுதல்வனாய்நின்றவொருவனை
யேழைபங்காளனையேபாடேலோரெம்பாவாய். (௮)

முன்னைப்பழம்பொருட்குமுன்னைப்பழம்பொருளே
பின்னைப்புதுமைக்கும்பேர்த்துமப்பெற்றியனே
யுன்னைப்பிரானாகப்பெற்றவுன்சீரடியோ
முன்னடியார்தாள்பணிவோமாங்கவர்க்கேபாங்காவோ



மன்னவரேயெங்கணவராவாரவருகந்து
சொன்னபரிசேதொழும்பாய்ப்பணிசெய்வோ
மின்னவகையேயெமக்கெங்கோனல்குதியே
லென்னகுறையுமிலோமேலோரெம்பாவாய். (௯)

பாதாளமேழினுங்கீழ்சொற்கழிவுபாதமலர்
போதார்புனைமுடியுமெல்லாப்பொருண்முடிவே
பேதையொருபாற்றிருமேனியொன்றல்லன்
வேதமுதல்விண்ணோருமண்ணுந்துதித்தாலு
மோதவுலவாவொருதோழன்றொண்டருளன்
கோதில்குலத்தரன்றன்கோயிற்பிணாப்பிள்ளைகா
ளேதவனூரேதவன்பேராருற்றாராரயலா
ரேதவனைப்பாடும்பரிசேலோரெம்பாவாய். (௧௦)

மொய்யார்தடம்பொய்கைபுக்குமுகேரென்னக்
கையாற்குடைந்துகுடைந்துன்கழல்பாடி
யையாவழியடியோம்வாழ்ந்தோங்காணாரழல்போற்
செய்யாவெண்ணீறாடிசெல்வாசிறுமருங்குன்
மையார்தடங்கண்மடந்தைமணவாளா
வையாநீயாட்கொண்டருளும்விளையாட்டி
னுய்வார்களுய்யும்வகையெல்லாமுய்ந்தொழிந்தோ
மெய்யாமற்காப்பாயெமையேலோரெம்பாவாய் (௧௧)

ஆர்த்தபிறவித்துயர்கெடநாமார்த்தாடுந்
தீர்த்தனற்றில்லைச்சிற்றம்பலத்தேதீயாடுங்
கூத்தனிவ்வானுங்குவலயமுமெல்லோமுங்
காத்தும்படைத்துங்கரந்தும்விளையாடி
வார்த்தையும்பேசிவளைசிலம்பவார்கலைக
ளார்ப்பரவஞ்செய்யவணிகுழன்மேல்வண்டார்ப்பப்

பூத்திகழும்பொய்கைகுடைந்துடையான்பொற்பாத
மேத்தியிருஞ்சுனைநீராடேலோரெம்பாவாய். (கஉ)

பைங்குவளைக்கார்மலராற்செங்கமலப்பைம்போதா
லங்கங்குருகினத்தாற்பின்னுமரவத்தாற்
றங்கண்மலங்கழுவுவார்வந்துசார்தலினா
லெங்கள்பிராட்டியுமெங்கோனும்போன்றிசைந்த
பொங்குமடுவிற்புகப்பாய்ந்துபாய்ந்துநஞ்
சங்கஞ்சிலம்பச்சிலம்புகலந்தார்ப்பக்
கொங்கைகள்பொங்கக்குடையும்புனல்பொங்கப்
பங்கயப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். (கங)

காதார்குழையாடப்பைம்பூண்கலனாடக்
கோதைகுழலாடவண்டின்குழாமாடச்
சீதப்புனலாடிச்சிற்றம்பலம்பாடி
வேதப்பொருள்பாடியப்பொருளாமாபாடிச்
சோதிதிறம்பாடிச்சூழ்கொன்றைத்தார்பாடி
யாதிதிறம்பாடியந்தமாமாபாடிப்
பேதித்துநம்மைவளர்த்தெடுத்தபெய்வளைதன்
பாதத்திறம்பாடியாடேலோரெம்பாவாய். (கச)

ஓரொருகாலெம்பெருமானென்றென்றேநம்பெருமான்
சீரொருகால்வாயோவாள்சித்தங்களிகூர
நீரொருகாலோவாநெடுந்தாரைகண்பனிப்பப்
பாரொருகால்வந்தனையாள்விண்ணோரைத்தான்பணியாள்
பேரரையற்கிங்ஙனேபித்தொருவராமாறு
மாரொருவரிவ்வண்ணமாட்கொள்ளும்வித்தகர்தாள்
வாருருவப்பூண்முலையீர்வாயாரநாம்பாடி
யேருருவப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். (கரு)



முன்னிக்கடலைச்சுருக்கியெழுந்துடையா
ளென்னத்திகழ்ந்தெம்மையாளுடையாளிட்டிடையின்
மின்னிப்பொலிந்தெம்பிராட்டிதிருவடிமேற்
பொன்னஞ்சிலம்பிற்சிலம்பித்திருப்புருவ
மென்னச்சிலைகுலவிநந்தம்மையாளுடையா
டன்னிற்பிரிவிலாவெங்கோமானன்பர்க்கு
முன்னியவண்மைக்குமுன்சுரக்குமின்னருளே
யென்னப்பொழியாய்மழையேலோரெம்பாவாய். (கசு)

செங்கணவன்பாற்றிசைமுகன்பாற்றேவர்கள்பா
லெங்குமிலாததோரின்பநம்பாலதாக்
கொங்குண்கருங்குழலிநந்தம்மைக்கோதாட்டி
யிங்குநம்மில்லங்கடோறுமெழுந்தருளிச்
செங்கமலப்பொற்பாதந்தருஞ்சேவகனை
யங்கணரசையடியோங்கட்காரமுதை
நங்கள்பெருமானைப்பாடிநலந்திகழப்
பங்கயப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். (கஎ)

அண்ணாமலையானடிக்கமலஞ்சென்றிறைஞ்சும்
விண்ணோர்முடியின்மணித்தொகைவீறற்றாற்போற்
கண்ணாரிரவிகதிர்வந்துகார்கரப்பத்
தண்ணாரொளிமழுங்கித்தாரகைகடாமகலப்
பெண்ணாகியாணாயலியாய்ப்பிறங்கொளிசேர்
விண்ணாகிமண்ணாகியித்தனையும்வேறாகிக்
கண்ணாரமுதமுமாய்நின்றான்கழல்பாடிப்
பெண்ணேயிப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். ()

உங்கையிற்பிள்ளையுனக்கேயடைக்கலமென்
றங்கப்பழஞ்சொற்புதுக்குமெம்மச்சத்தா

லெங்கள்பெருமானுனக்கொன்றுரைப்போங்கே
ளெங்கொங்கைநின்னன்பரல்லார்தோள்சேரற்க
வெங்கையுனக்கல்லாதெப்பணியுஞ்செய்யற்க
கங்குல்பகலெங்கண்மற்றொன்றுங்காணற்க
விங்கிப்பரிசேயெமக்கெங்கோனல்குதியே
லெங்கெழிலென்ஞாயிறெமக்கேலோரெம்பாவாய். (௧௧)

போற்றியருளுகநின்னாதியாம்பாதமலர்
போற்றியருளுகநின்னந்தமாஞ்செந்தளிர்கள்
போற்றியெல்லாவுயிர்க்குந்தோற்றமாம்பொற்பாதம்
போற்றியெல்லாவுயிர்க்கும்போகமாம்பூங்கழல்கள்
போற்றியெல்லாவுயிர்க்கு மீறுமிணையடிகள்
போற்றிமானான்முகனுங் காணாதபுண்டரிகம்
போற்றியாமுய்யவாட் கொண்டருளும்பொன்மலர்கள்
போற்றியாமார்கழி நீ ராடேலோரெம்பாவாய். (௨௰)

திருச்சிற்றம்பலம்.

## திருவம்மானை.

திருச்சிற்றம்பலம்.

செங்கணெடுமாலுஞ்சென்றிடந்துங்காண்பரிய
பொங்குமலர்ப்பாதம்பூதலத்தேபோந்தருளி
யெங்கள்பிறப்பறுத்திட்டெந்தரமுமாட்கொண்டு
தெங்குதிரள்சோலைத்தென்னன்பெருந்துறையா
னங்கணனந்தணனாயறைகூவிவீடருளு
மங்கருணைவார்கழலேபாடுதுங்காணம்மானாய். (௧)



பாரார்விசும்புள்ளார்பாதாளத்தார்புறத்தா
ராராலுங்காண்டற்கரியானெமக்கெளிய
பேராளன்றென்னன்பெருந்துறையான்பிச்சேற்றி
வாராவழியருளிவந்தென்னுளம்புகுந்த
வாராவமுதாயலைகடல்வாய்மீன்விசிறும்
பேராசைவாரியனைப்பாடுதுங்காணம்மானாய். (௨)

கல்லாமனத்துக்கடைப்பட்டநாயேனை
வல்லாளன்றென்னன்பெருந்துறையான்பிச்சேற்றிக்
கல்லைப்பிசைந்துகனியாக்கித்தன்கருணை
வெள்ளத்தழுத்திவினைகடிந்தவேதியனைத்
தில்லைநகர்புக்குச்சிற்றம்பலமன்னு
மொல்லைவிடையானைப்பாடுதுங்காணம்மானாய். (௩)

திருச்சிற்றம்பலம்.

## திருக்கோத்தும்பி.

திருச்சிற்றம்பலம்.

பூவேறுகோனும்புரந்தரனும்பொற்பமைந்த
நாவேறுசெல்வியுநாரணனுநான்மறையு
மாவேறுசோதியும்வானவருந்தாமறியாச்
சேவேறுசேவடிக்கேசென்றூதாய்கோத்தும்பி. (௧)

நானாரென்னுள்ளமார்ஞானங்களாரென்னையாரறிவார்
வானோர்பிரானென்னையாண்டிலனேன்மதிமயங்கி
யூனாருடைதலையிலுண்பலிதேரம்பலவன்
றேனார்கமலமேசென்றூதாய்கோத்தும்பி. (௨)

தினைத்தனையுள்ளதோர்பூவினிற்றேனுண்ணாதே
நினைத்தொறுங்காண்டொறும்பேசுந்தோறுமெப்போது
மனைத்தெலும்புண்ணெகவானந்தத்தேன்சொரியுங்
குனிப்புடையானுக்கேசென்றூதாய்கோத்தும்பீ. (௮)

கண்ணப்பனொப்பதோரன்பின்மைகண்டபி
னென்னப்பனென்னொப்பிலென்னையுமாட்கொண்டருளி
வண்ணப்பணித்தென்னைவாவென்றவான்கருணைச்
சுண்ணப்பொன்னீற்றற்கேசென்றூதாய்கோத்தும்பீ. (௯)

வன்னெஞ்சக்கள்வன்மனவலியனென்னாதே
கன்னெஞ்சுருக்கிக்கருணையினாலாண்டுகொண்ட
வன்னந்திளைக்குமணிதில்லையம்பலவன்
பொன்னங்கழலுக்கேசென்றூதாய்கோத்தும்பீ. (௰)

திருச்சிற்றம்பலம்.

## திருத்தெள்ளேணம்.

திருச்சிற்றம்பலம்.

திருமாலும்பன்றியாய்ச்சென்றுணராத்திருவடியை
யுருநாமறியவோரந்தணனாயாண்டுகொண்டா
னொருநாமமோருருவமொன்றுமில்லாற்காயிரந்
திருநாமம்பாடிநாந்தெள்ளேணங்கொட்டாமோ. (௪௧)

திருச்சிற்றம்பலம்.

## திருச்சாழல்.

திருச்சிற்றம்பலம்.

பூசுவதும்வெண்ணீறுபூண்பதுவும்பொங்கரவம்
பேசுவதுந்திருவாயான்மறைபோலுங்காணேடி
பூசுவதும்பேசுவதும்பூண்பதுவுங்கொண்டென்னை
யீசனவனெவ்வுயிர்க்குமியல்பானான்சாழலோ. (௧)

என்னப்பனெம்பிரானெல்லார்க்குந்தானீசன்
றுன்னம்பெய்கோவணமாக்கொள்ளுமதுவென்னேடி
மன்னுகலைதுன்னுபொருண்மறைநான்கேவான்சரடாத்
தன்னையேகோவணமாச்சாத்தினன்காண்சாழலோ. (௨)

கோயில்சுடுகாடுகொல்புலித்தோனல்லாடை
தாயுமிலிதந்தையிலிதான்றனியன்காணேடி
தாயுமிலிதந்தையிலிதான்றனியனாயிடினுங்
காயிலுலகனைத்துங்கற்பொடிகாண்சாழலோ. (௩)

மலைமகளையொருபாகம்வைத்தலுமேமற்றொருத்தி
சலமுகத்தாலவன்சடையிற்பாயுமதுவென்னேடி
சலமுகத்தாலவன்சடையிற்பாய்ந்திலளேற்றரணியெல்லாம்
பிலமுகத்தேபுகப்பாய்ந்துபெருங்கேடாஞ்சாழலோ. (௪)

கோலாலமாகிக்குரைகடல்வாயன்றெழுந்த
வாலாலமுண்டானவன்சதுர்தானென்னேடி
யாலாலமுண்டிலனேலன்றயன்மாலுள்ளிட்ட
மேலாயதேவரெல்லாம்வீடுவர்காண்சாழலோ. (௫)

தென்பாலுகந்தாடுந்தில்லைச்சிற்றம்பலவன்
பெண்பாலுகந்தான்பெரும்பித்தன்காணேடி
பெண்பாலுகந்திலனேற்பேதாயிருநிலத்தோர்
விண்பாலியோகெய்திவீடுவர்காண்சாழலோ. (௬)

நங்காயிதென்னதவநரம்போடெலும்பணிந்து
கங்காளந்தோண்மேலேகாதலித்தான்காணேடி
கங்காளமாமாகேள்காலாந்தரத்திருவர்
தங்காலஞ்செய்யத்தரித்தனன்காண்சாழலோ. (௭)

கடகரியும்பரிமாவுந்தேருமுகந்தேறாதே
இடபமுகந்தேறியவாறெனக்கறியவியம்பேடீ
தடமதில்களவைமூன்றுந்தழலெரித்தவந்நாளி
லிடபமதாய்த்தாங்கினான்றிருமால்காண்சாழலோ. (௮)

அம்பலத்தேகூத்தாடியமுதுசெயப்பலிதிரியு
நம்பனையுந்தேவனென்றாநண்ணுமதுவென்னேடீ
நம்பனையுமாமாதேனென்மறைகடாமறியா
வெம்பெருமானீசாவென்றேத்தினகாண்சாழலோ. (௯)

அம்பரமாம்புள்ளித்தோலாலாலமாரமுத
மெம்பெருமானுண்டசதுவெனக்கறியவியம்பேடீ
யெம்பெருமானேதுடுத்தங்கேதமுதுசெய்திடினுந்
தம்பெருமைதானறியாத்தன்மையன்காண்சாழலோ. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

## திருப்பூவல்லி.

திருச்சிற்றம்பலம்.

இணையார்திருவடியென்றலைமேல்வைத்தலுமே
துணையானசுற்றங்களத்தனையுந்துறந்தொழிந்தே
னணையார்புனற்றில்லையம்பலத்தேயாடுகின்ற
புணையாளன்சீர்பாடிப்பூவல்லிகொய்யாமோ. (௧)

உணங்கத்தலைவைத்துவார்கழல்வாய்வாழ்த்தவைத்
திணங்கத்தன்சீரடியார்கூட்டமும்வைத்தெம்பெருமா
னணங்கொடணிதில்லையம்பலத்தேயாடுகின்ற
குணங்கூரப்பாடிநாம்பூவல்லிகொய்யாமோ. (௨)

திருச்சிற்றம்பலம்.



## திருவுந்தியார்.

திருச்சிற்றம்பலம்.

வளைந்ததுவில்லுவிளைந்ததுபூச - லுளைந்தனமுப்புரமுந்தீபற
வொருங்குடன்வெந்தவாறுந்தீபற (௧)

ஈரம்புகண்டிலமேகம்பர்தங்கையி - லோரம்பேமுப்புரமுந்தீபற
வொன்றும்பெருமிகையுந்தீபற. (௨)

தச்சுவிடுத்தலுந்தாமடியிட்டலு - மச்சுமுறிந்ததென்றுந்தீபற
வழிந்தனமுப்புரமுந்தீபற. (௩)

ஏகாசமிட்டவிருடிகள்போகாம - லாகாசங்காவலென்றுந்தீபற
வதற்கப்பாலுங்காவலென்றுந்தீபற. (௪)

திருச்சிற்றம்பலம்.

## திருத்தோணோக்கம்.

திருச்சிற்றம்பலம்.

பங்கயமாயிரம்பூவினிலோர்பூக்குறையத்
தங்கணிடந்தரன்சேவடிமேற்சாத்தலுமே
சங்கரனெம்பிரான்சக்கரமாற்கருளியவா
றெங்கும்பரவிநாந்தோணோக்கமாடாமோ. (௧)

ஏழைத்தொழும்பனேனெத்தனையோகாலமெல்லாம்
பாழுக்கிறைத்தேன்பரம்பரனைப்பணியாதே
யூழிமுதற்சிந்தாதநன்மணிவந்தென்பிறவித்
தாழைப்பறித்தவாதோணோக்கமாடாமோ. (௨)

திருச்சிற்றம்பலம்.

## அன்னைப்பத்து.

திருச்சிற்றம்பலம்.

வேதமொழியர்வெண்ணீற்றர்செம்மேனியர்
நாதப்பறையினரன்னேயென்னும்
நாதப்பறையினர்நான்முகன்மாலுக்கு
நாதரிந்நாதனாரன்னேயென்னும். (க)

கண்ணஞ்சனத்தர்கருணைக்கடலின
ருண்ணின்றுருக்குவரன்னேயென்னு
முண்ணின்றுருக்கியுலப்பிலாவானந்தக்
கண்ணீர்தருவராலன்னேயென்னும். (உ)

நித்தமணாளர்நிரம்பவழகியர்
சித்தத்திருப்பராலன்னேயென்னுஞ்
சித்தத்திருப்பவர்தென்னன்பெருந்துறை
யத்தரானந்தராலன்னேயென்னும். (ங)

நீண்டகரத்தர்நெறிதருகுஞ்சியர்
பாண்டிநன்னாடராலன்னேயென்னும்
பாண்டிநன்னாடர்பரந்தெழுசிந்தையை
யாண்டன்புசெய்வராலன்னேயென்னும். (ச)

கொன்றைமதியமுங்கூவிளமத்தமுந்
துன்றியசென்னியரன்னேயென்னுந்
துன்றியசென்னியின்மத்தமுன்மத்தமே
யின்றெனக்கானவாறன்னேயென்னும். (ரு)

திருச்சிற்றம்பலம்.



## குயிற்பத்து.

திருச்சிற்றம்பலம்.

கீதமினியகுயிலேகேட்டியேலெங்கள்பெருமான்
பாதமிரண்டும்வினவிற்பாதாளமேழினுக்கப்பாற்
சோதிமணிமுடிசொல்லிற்சொல்லிறந்துநின்றதொன்மை
யாதிகுணமொன்றுமில்லானந்தமிலான்வரக்கூவாய். (க)

ஏர்தருமேழுலகேத்தவெவ்வுருவுந்தன்னுருவா
யார்கலிசூழ்தென்னிலங்கையழகமர்வண்டோதரிக்குப்
பேரருளின்பமளித்தபெருந்துறைமேயபிரானைச்
சீரியவாயாற்குயிலேதென்பாண்டிநாடனைக்கூவாய். (உ)

திருச்சிற்றம்பலம்.

## திருப்பள்ளியெழுச்சி.

திருச்சிற்றம்பலம்.

போற்றியென்வாழ்முதலாகியபொருளே
புலர்ந்ததுபூங்கழற்கிணைதுணைமலர்கொண்
டேற்றிநின்றிருமுகத்தெமக்கருண்மலரு
மெழினகைகொண்டுநின்றிருவடிதொழுகோஞ்
சேற்றிதழ்க்கமலங்கண்மலருந்தண்வயல்சூழ்
திருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யேற்றுயர்கொடியுடையாயெனையுடையா
யெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (க)

புவனியிற்போய்ப்பிறவாமையி னாளும்
போக்குகின்றோமவமேயிந்தப்பூமி
சிவனுய்யக்கொள்கின்றவாறென்றுநோக்கித்
திருப்பெருந்துறையுறைவாய்திருமாலா
மவன்விருப்பெய்தவுமலரவனாசைப்
படவுநின்னலர்ந்தமெய்க்கருணையுநீயு
மவனியிற்புகுந்தெமையாட்கொள்ளவல்லா
யாரமுதேபள்ளியெழுந்தருளாயே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## கோயின்மூத்ததிருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்.

உடையாளுன்றனடுவிருக்குமுடையாணடுவுணீயிருத்தி
யடியேனடுவுளிருவீருமிருப்பதானாலடியேனுன்
னடியார்நடுவுளிருக்குமருளைப்புரியாய்பொன்னம்பலத்தெம்
முடியாமுதலேயென்கருத்துமுடியும்வண்ணமுன்னின்றே. (௧)

அரைசேபொன்னம்பலத்தாடுமமுதேயென்றுன்னருணோக்கி
யிரைதேர்கொக்கொத்திரவுபகலேசற்றிருந்தேவேசற்றேன்
கரைசேரடியார்களிசிறப்பக்காட்சிகொடுத்துன்னடியேன்பாற்
பிரைசேர்பாலினெய்போலப்பேசாதிருந்தாலேசாரோ. (௨)

சிரிப்பார்களிப்பார்தேனிப்பார்திரண்டுதிரண்டுன்திருவார்த்தை
விரிப்பார்கேட்பார்மெச்சுவார்வெவ்வேறிருந்துன்திருநாமந்
தரிப்பார்பொன்னம்பலத்தாடுந்தலைவாவென்பாரவர்முன்னே
நரிப்பாய்நாயேனிருப்பேனோநம்பியினித்தானல்காயே. (௩)

திருச்சிற்றம்பலம்.



## அடைக்கலப்பத்து.

திருச்சிற்றம்பலம்.

செழுக்கமலத்திரளனநின்சேவடிசேர்ந்தமைந்த
பழுத்தமனத்தடியருடன்போயினர்யான்பாவியேன்
புழுக்கணுடைப்புன்குரம்பைப்பொல்லாக்கல்விஞானமிலா
வழுக்குமனத்தடியேனுடையாயுன்னடைக்கலமே. (௧)

வெறுப்பனவேசெய்யுமென்சிறுமையைநின்பெருமையினாற்
பொறுப்பவனேயராப்பூண்பவனேபொங்குகங்கைசடைச்
செறுப்பவனேநின்றிருவருளாலென்பிறவியைவே
ரறுப்பவனேயுடையாயடியேனுன்னடைக்கலமே. (௨)

பிறிவறியாவன்பர்நின்னருட்பெய்கழற்றாளிணைக்கீழ்
மறிவறியாச்செல்வம்வந்துபெற்றாருன்னைவந்திப்பதோர்
நெறியறியேனின்னையேயறியேனின்னையேயறியு
மறிவறியேனுடையாயடியேனுன்னடைக்கலமே. (௩)

வழங்குகின்றாய்க்குன்னருளாரமுதத்தைவாரிக்கொண்டு
விழுங்குகின்றேன்விக்கினேன்வினையேனென்விதியின்மையாற்
றழங்கருந்தேனன்னதண்ணீர்பருகத்தந்துய்யக்கொள்ளா
யழுங்குகின்றேனுடையாயடியேனுன்னடைக்கலமே. (௪)

திருச்சிற்றம்பலம்.

## அதிசயப்பத்து.

திருச்சிற்றம்பலம்.

வைப்புமாடென்றுமாணிக்கத்தொளியென்றுமனத்திடையுருகாதே
செப்புநேர்முலைமடவரலியர்தங்கடிறத்திடைநைவேனை
யொப்பிலாதனவுவமனிலிறந்தனவொண்மலர்த்திருப்பாதத்
தப்பனாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. (௧)

பித்தனென்றெனையுலகவர்பகர்வதோர்காரணமிதுகேளீ
ரொத்துச்சென்றுதன்றிருவருட்கூடிடுமுபாயமதறியாமே
செத்துப்போயருநரகிடைவீழ்வதற்கொருப்படுகின்றேனை
யத்தனாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## வாழாப்பத்து.

திருச்சிற்றம்பலம்.

பாரொடுவிண்ணாய்ப்பரந்தவெம்பிரானே
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
சீரொடுபொலிவாய்சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
யாரொடுநோகேனார்க்கெடுத்துரைக்கே
னாண்டநீயருளிலையானால்
வார்கடலுலகில்வாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே.

வம்பனேன்றன்னையாண்டமாமணியே
மற்றுநான்பற்றிலேன்கண்டா
யும்பருமறியாவொருவனேயிருவர்க்
குணர்விறந்துலகமூடுருவுஞ்
செம்பெருமானேசிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
யெம்பெருமானேயென்னையாள்வானே
யென்னைநீகூவிக்கொண்டருளே.

பஞ்சின்மெல்லடியாள்பங்கநீயல்லாற்
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
செஞ்சவேயாண்டாய்சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே



யஞ்சினேனாயேனாண்டுநீயளித்த
வருளினைமருளினான்மறந்த
வஞ்சனேனிங்குவாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## அருட்பத்து.

திருச்சிற்றம்பலம்.

சோதியேசுடரேசூழொளிவிளக்கே
சுரிகுழற்பணைமுலைமடந்தை
பாதியேபரனேபால்கொள்வெண்ணீற்றாய்
பங்கயத்தயனுமாலறியா
நீதியேசெல்வத்திருப்பெருந்துறையி
னிறைமலர்க்குருந்தமேவியசீ
ராதியேயடியேனாதரித்தழைத்தா
லதெந்துவேயென்றருளாயே. (க)

நிருத்தனேநிமலாநீற்றனேநெற்றிக்
கண்ணனேவிண்ணுளோர்பிரானே
யொருத்தனேயுன்னையோலமிட்டலறி
யுலகெலாந்தேடியுங்காணேன்
றிருத்தமாம்பொய்கைத்திருப்பெருந்துறையிற்
செழுமலர்க்குருந்தமேவியசீ
ரருத்தனேயடியேனாதரித்தழைத்தா
லதெந்துவேயென்றருளாயே. (உ)

கமலநான்முகனுங்கார்முகினிறத்துக்
கண்ணனுநண்ணுதற்கரிய
விமலனேயெமக்குவெளிப்படாயென்ன
வியன்றழல்வெளிப்பட்டவெந்தாய்

திமிலநான்மறைசேர்திருப்பெருந்துறையிற்
செழுமலர்க்குருந்தமேவியசீ
ரமலனேயடியேனதரித்தழைத்தா
லதெந்துவேயென்றருளாயே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்கழுக்குன்றப்பதிகம்.

---

திருச்சிற்றம்பலம்.

பிணக்கிலாதபெருந்துறைப்பெரு
மானுன்னாமங்கள்பேசுவார்க்
கிணக்கிலாததோரின்பமேவருந்
துன்பமேதுடைத்தெம்பிரா
னுணக்கிலாததோர்வித்துமேல்விளை
யாமலென்வினையொத்தபின்
கணக்கிலாத்திருக்கோலநீவந்து
காட்டினாய்கழுக்குன்றிலே. (௧)

பிட்டுநேர்படமண்சுமந்த
பெருந்துறைப்பெரும்பித்தனே
சட்டநேர்படவந்திலாத
சழக்கனேனுனைச்சார்ந்திலேன்
சிட்டனேசிவலோகனேசிறு
நாயினுங்கடையாயவெங்
கட்டனேனையுமாட்கொள்வான்வந்து
காட்டினாய்கழுக்குன்றிலே. (௨)

மலங்கினேன்கண்ணினீரைமாற்றி
மலங்கெடுத்தபெருந்துறை
விலக்கினேன்வினைக்கேடனேனினி
மேல்விளைவதறிந்திலே
னிலங்குநின்றிருச்சேவடிக
ளிரண்டும்வைப்பிடமின்றியே



கலங்கினேன்கலங்காமலேவந்து
காட்டினாய்கழுக்குன்றிலே. (௩)

இயக்கிமாரறுபத்துநால்வரை
யெண்குணஞ்செய்தவீசனே
மயக்கமாயதோர்மும்மலப்பழ
வல்வினைக்குளழுந்தவுந்
துயக்கறுத்தெனையாண்டுகொண்டுநின்
றூய்மலர்க்கழறந்தெனைக்
கயக்கவைத்தடியார்முனேவந்து
காட்டினாய்கழுக்குன்றிலே. (௪)

திருச்சிற்றம்பலம்.

---

## கண்டபத்து.

---

திருச்சிற்றம்பலம்.

இந்திரியவயமயங்கியிறப்பதற்கேகாரணமா
யந்தரமேதிரிந்துபோயருநரகில்வீழ்வேற்குச்
சிந்தைதனைத்தெளிவித்துச்சிவமாக்கியெனையாண்ட
வந்தமிலாவானந்தமணிகொடில்லைகண்டேனே. (௧)

கல்லாதபுல்லறிவிற்கடைப்பட்டநாயேனை
வல்லாளனாய்வந்துவனப்பெய்தியிருக்கும்வண்ணம்
பல்லோருங்காணவென்றன்பசுபாசமறுத்தானை
யெல்லோருமிறைஞ்சுதில்லையம்பலத்தேகண்டேனே. (௨)

சாதிகுலம்பிறப்பென்னுஞ்சுழிபற்றித்தடுமாறு
மாதமிலிநாயேனையல்லலறுத்தாட்கொண்டு
பேதைகுணம்பிறருருவம்யானெனதென்னுரைமாய்த்துக்
கோதிலமுதானானைக்குலாவுதில்லைகண்டேனே. (௩)

திருச்சிற்றம்பலம்.

## பிரார்த்தனைப்பத்து.

திருச்சிற்றம்பலம்.

கலந்துநின்னடியாரோடன்றுவாளாகளித்திருந்தேன்
புலர்ந்துபோனகாலங்கள்புகுந்துநின்றதிடர்பின்னா
ளுலர்ந்துபோனேனுடையானேயுலவாவின்பச்சுடர்காண்பா
னலந்துபோனேனருள்செய்யாயார்வங்கூரவடியேற்கே. (௭)

அடியார்சிலருன்னருள்பெற்றாரார்வங்கூரயானவமே
முடையார்பிணத்தின்முடிவின்றிமுனிவாலடியேன்மூக்கின்றேன்
கடியேனுடையகருவினையைக்களைந்துன்கருணைக்கடல்பொங்க
வுடையாயடியேனுள்ளத்தேயோவாதுருகவருளாயே. (௮)

வேண்டும்வேண்டும்மெய்யடியாருள்ளேவிரும்பியெனையருளா
லாண்டாயடியேனிடர்களைந்தவமுதேயருமாமணிமுத்தே
தூண்டாவிளக்கின்சுடரனையாய்தொண்டனேற்குமுண்டாங்கொல்
வேண்டாதொன்றும்வேண்டாதுமிக்கவன்பேமேவுதலே. (௯)

கூடிக்கூடியுன்னடியார்குனிப்பார்சிரிப்பார்களிப்பாரா
வாடிவாடிவழியற்றேன்வற்றன்மரம்போனிற்பேனோ
வூடியூடியுடையாயொடுகலந்துள்ளுருகிப்பெருகிநெக்
காடியாடியானந்தமதுவேயாகவருள்கலந்தே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## குழைத்தபத்து.

திருச்சிற்றம்பலம்.

கூறுநாவேமுதலாகக்கூறுங்கரணமெல்லாநீ
தேறும்வகைநீதிகைப்புநீதீமைநன்மைமுழுதுநீ
வேறோர்பரிசிங்கொன்றில்லைமெய்ம்மையுன்னைவிரித்துரைக்கிற்
றேறும்வகையென்சிவலோகாதிகைத்தாற்றேற்றவேண்டாவோ. (௧)

வேண்டத்தக்கதறிவோய்நீவேண்டமுழுதுந்தருவோய்நீ
வேண்டுமயன்மாற்கரியோய்நீவேண்டியென்னைப்பணிகொண்டாய்



வேண்டிநீயாதருள்செய்தாயானுமதுவேவேண்டினல்லால்
வேண்டும்பரிசொன்றுண்டென்னிலதுவுமுன்றன்விருப்பன்றே. ()

நாயிற்கடையாநாயேனைநயந்துநீயேயாட்கொண்டாய்
மாயப்பிறவியுன்வசமேவைத்திட்டிருக்குமதுவன்றி
யாயக்கடவேனானோதானென்னதோவிங்கதிகாரங்
காயத்திடுவாயுன்னுடையகழற்கீழ்வைப்பாய்கண்ணுதலே. (௩)

திருச்சிற்றம்பலம்.

## பிடித்தபத்து.

திருச்சிற்றம்பலம்.

உம்பர்கட்கரசேயொழிவறநிறைந்த
  யோகமேயூற்றையேன்றனக்கு
வம்பெனப்பழுத்தென்குடிமுழுதாண்டு
  வாழ்வறவாழ்வித்தமருந்தே
செம்பொருட்டுணிவேசீருடைக்கழலே
  செல்வமேசிவபெருமானே
யெம்பொருட்டுன்னைச்சிக்கெனப்பிடித்தே
  னெங்கெழுந்தருளுவதினியே. (௧)

அம்மையேயப்பாவொப்பிலாமணியே
  யன்பினில்விளைந்தவாரமுதே
பொய்ம்மையேபெருக்கிப்பொழுதினைச்சுருக்கும்
  புழுத்தலைப்புலையனேன்றனக்குச்
செம்மையேயாயசிவபதமளித்த
  செல்வமேசிவபெருமானே
யிம்மையேயுன்னைச்சிக்கெனப்பிடித்தே
  னெங்கெழுந்தருளுவதினியே. (௨)

பானினைந்தூட்டுந்தாயினுஞ்சாலப்
  பரிந்துநீபாவியேனுடைய
வூனினையுருக்கியுள்ளொளிபெருக்கி
  யுலப்பிலாவானந்தமாய

தேனினைச்சொரிந்துபுறம்புறந்திரிந்த
செல்வமேசிவபெருமானே
யானுனைத்தொடர்ந்துசிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (௯)

புன்புலால்யாக்கைபுரைபுரைகனியப்
பொன்னெடுங்கோயிலாப்புகுந்தென்
னென்பெலாமுருக்கியெளியையாயாண்ட
வீசனேமாசிலாமணியே
துன்பமேபிறப்பேயிறப்பொடுமயக்காந்
தொடக்கெலாமறுத்தநற்சோதி
யின்பமேயுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## திருப்புலம்பல்.

திருச்சிற்றம்பலம்.

பூங்கமலத்தயனொடுமாலறியாதநெறியானே
கோங்கலர்சேர்குவிமுலையாள்கூறாவெண்ணீறாடி
யோங்கெயில்சூழ்திருவாரூருடையானேயடியேனின்
பூங்கழல்களவையல்லாதெவையாதும்புகழேனே. (௧)

சடையானேதழலாடீதயங்குமூவிலைச்சூலப்
படையானேபரஞ்சோதீபசுபதீமழவெள்ளை
விடையானேவிரிபொழில்சூழ்பெருந்துறையாயடியேனு
னுடையானேயுனையல்லாதுறுதுணைமற்றறியேனே. (௨)

உற்றாரையான்வேண்டேனூர்வேண்டேன்பேர்வேண்டேன்
கற்றாரையான்வேண்டேன்கற்பனவுமினியமையுங்
குற்றாலத்தமர்ந்துறையுங்கூத்தாவுன்குரைகழற்கே
கற்றாவின்மனம்போலக்கசிந்துருகவேண்டுவனே. (௩)

திருச்சிற்றம்பலம்.



## எண்ணப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்.

பாருருவாயபிறப்பறவேண்டும்பத்திமையும்பெறவேண்டுஞ்
சீருருவாயசிவபெருமானேசெங்கமலமலர்போ
லாருருவாயவென்னாரமுதேயுன்னடியவர்தொகைநடுவே [ஏ.
யோருருவாயநின்றிருவருள்காட்டியென்னையுமுய்யக்கொண்டரு

உரியேனல்லேனுனக்கடிமையுன்னைப்பிரிந்திங்கொருபொழுதுந்
தரியேனாயேனின்னதென்றறியேன்சங்கராகருணையினாற்
பெரியோனொருவன்கண்டுகொளென்றுன்பெய்கழலடிகாட்டிப்
பிரியேனென்னென்றருளியவருளும்பொய்யோவெங்கள்பெருமானே

பத்திலனேனும்பணிந்திலனேனுமுன்னுயர்ந்தபைங்கழல்காணப்
பித்திலனேனும்பிதற்றிலனேனும்பிறப்பறுப்பாயெம்பெருமானே
முத்தனையானேமணியனையானேமுதல்வனேமுறையோவென்
றெத்தனையானும்யான்றொடர்ந்துன்னையினிப்பிரிந்தாற்றேனே.

திருச்சிற்றம்பலம்.

## திருவெண்பா.

திருச்சிற்றம்பலம்.

வெய்யவினையிரண்டும்வெந்தகலமெய்யுருகிப்
பொய்யும்பொடியாகாதென்செய்கேன் — செய்ய
திருவார்பெருந்துறையான்றேனுந்துசெந்தீ
மருவாதிருந்தென்மனத்து. (௧)

செய்தபிழையறியேன்சேவடியேகைதொழுதே
உய்யும்வகையினுயிர்ப்பறியேன் — வையத்
திருந்துறையுள்வேலன்மடித்தென்சிந்தனைக்கேகோத்தான்
பெருந்துறையின்மேயபிரான். (௨)

இன்பம்பெருக்கியிருளகற்றியெஞ்ஞான்றுந்
துன்பந்தொடர்வறுத்துச்சோதியா — யன்பமைத்துச்

சீரார்பெருந்துறையானென்னுடையசிந்தையே
யூராகக்கொண்டானுவந்து. (ரு)

திருச்சிற்றம்பலம்.

## திருப்படையாட்சி.

திருச்சிற்றம்பலம்.

கண்களிரண்டுமவன்கழல்கண்டுகளிப்பனவாகாதே
காரிகையார்கடம்வாழ்விலென்வாழ்வுகடைப்படுமாகாதே
மண்களில்வந்துபிறந்திடுமாறுமறந்திடுமாகாதே
மாலறியாமலர்ப்பாதமிரண்டும்வணங்குதுமாகாதே
பண்களிகூர்தருபாடலொடாடல்பயின்றிடுமாகாதே
பாண்டிநன்னாடுடையான்படையாட்சிகள்பாடுதுமாகாதே
விண்களிகூர்வதோர்வேதகம்வந்துவெளிப்படுமாகாதே
மீன்வலைவீசியகானவன்வந்துவெளிப்படுமாயிடிலே. (க)

சங்குதிரண்டுமுரன்றெழுமோசைதழைப்பனவாகாதே
சாதிவிடாதகுணங்கணமோடுசலித்திடுமாகாதே
யங்கிதுநன்றிதுநன்றெனுமாயையடங்கிடுமாகாதே
யாசையெலாமடியாரடியோமெனுமத்தனையாகாதே
செங்கயலொண்கண்மடந்தையர்சிந்தைதிளைப்பனவாகாதே
சீரடியார்கள்சிவானுபவங்கடெரிந்திடுமாகாதே
யெங்குநிறைந்தமுதூறுபரஞ்சுடரெய்துவதாகாதே
யீறறியாமறையோனெனையாளவெழுந்தருளப்பெறிலே. (உ)

திருச்சிற்றம்பலம்.

## ஆனந்தமாலை.

திருச்சிற்றம்பலம்.

மின்னேரனையபூங்கழல்களடைந்தார்கடந்தார்வியனுலகம்
பொன்னேரனையமலர்கொண்டுபோற்றாநின்றாரமரரெல்லாங்



கன்னேரனையமனக்கடையாய்க்கழிப்புண்டவலக்கடல்வீழ்ந்த
வென்னேரனையேனினியுன்னைக்கூடும்வண்ணமியம்பாயே. (க)

என்னாலறியாப்பதந்தந்தாயானதறியாதேகெட்டே
னுன்னாலொன்றுங்குறைவில்லையுடையாயடிமைக்காரென்பேன்
பன்னாளுன்னைப்பணிந்தேத்தும்பழையவடியாரொடுங்கூடா
தென்னாயகமேபிற்பட்டிங்கிருந்தேனோய்க்குவிருந்தாயே. (உ)

தாயாய்முலையைத்தருவானேதாராதொழிந்தாற்சவலையாய்
நாயேன்கழிந்துபோவேனோநம்பியினித்தானல்குதியே
தாயேயென்றுன்றாளடைந்தேன்றயாநீயென்பாலிலையே
நாயேனடிமையுடனாகவாண்டாய்நான்றான்வேண்டாவோ. (ரு)

நரியைக்குதிரைப்பரியாக்கிஞாலமெல்லாநிகழ்வித்துப்
பெரியதென்னன்மதுரையெல்லாம்பிச்சதேற்றும்பெருந்துறையா
யரியபொருளேயவிநாசியப்பாபாண்டிவெள்ளமே
தெரியவரியபரஞ்சோதீசெய்வதொன்றுமறியேனே. (எ)

திருச்சிற்றம்பலம்.

## அச்சோப்பத்து.

திருச்சிற்றம்பலம்.

முத்திநெறியறியாதமூர்க்கரொடுமுயல்வேனைப்
பத்திநெறியறிவித்துப்பழவினைகள்பாறும்வண்ணஞ்
சித்தமலமறுவித்துச்சிவமாக்கியெனையாண்ட
வத்தனெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே! (க)

நெறியல்லாநெறிதன்னைநெறியாகநினைவேனைச்
சிறுநெறிகள்சேராமேதிருவருளேசேரும்வண்ணங்
குறியொன்றுமில்லாதகூத்தன்றன்கூத்தையெனக்
கறியும்வண்ணமருளியவாறார்பெறுவாரச்சோவே! (உ)

பொய்யெல்லாமெய்யென்றுபுணர்முலையார்போகத்தே
மையலுறக்கடவேனைமாளாமேகாத்தருளித்
தையலிடங்கொண்டபிரான்றன்கழலேசேரும்வண்ண
மையனெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே! (ரு)

செம்மைநலமறியாதசிதடரொடுந்திரிவேனை
மும்மைமலமறுவித்துமுதலாயமுதல்வன்றா
னம்மையுமோர்பொருளாக்கிநாய்சிவிகையேற்றுவித்த
வம்மையெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே! (௮)

திருச்சிற்றம்பலம்.

# திருக்கோவையார்.

திருச்சிற்றம்பலம்.

திருவளர்தாமரைசீர்வளர்காவிகளீசர்தில்லைக்
குருவளர்பூங்குமிழ்கோங்குபைங்காந்தள்கொண்டோங்குதெய்வ
மருவளர்மாலையோர்வல்லியினொல்கியனநடைவாய்ந்
துருவளர்காமன்றன்வென்றிக்கொடிபோன்றொளிர்கின்றதே. (க)

நிருத்தம்பயின்றவன்சிற்றம்பலத்துநெற்றித்தனிக்க
ணொருத்தன்பயிலுங்கயிலைமலையினுயர்குடுமித்
திருத்தம்பயிலுஞ்சுனைகுடைந்தாடிச்சிலம்பெதிர்கூய்
வருத்தம்பயின்றுகொல்லோவல்லிமெல்லியல்வாடியதே. (உ)

ஆவாவிருவரறியாவடித்தில்லையம்பலத்து
மூவாயிரவர்வணங்கநின்றோனையுன்னாரின்முன்னித்
தீவாயுழுவைகிழித்ததந்தோசிறிதேபிழைப்பித்
தாவாமணிவேல்பணிகொண்டவாறின்றொராண்டகையே. (ங)

குறைவிற்குங்கல்விக்குஞ்செல்விற்குநின்குலத்திற்கும்வந்தோர்
சிறைவிற்குமேதகுநீதிக்குமேற்பினல்லாளினையி
னிறைவிற்குலாவரையேந்திவண்டில்லையனேழ்பொழிலு
முறைவிற்குலாநுதலாள்விலையோமெய்ம்மையோதுநர்க்கே. (ச)

முனிவருமன்னருமுன்னுவபொன்னின்முடியுமெனப்
பனிவருங்கண்பரமன்றிருச்சிற்றம்பலமனையாய்
துணிவருசீர்மையினென்றுநீர்தெளித்தளிப்ப
கனிவருகாளிதுவோவென்றவர்நீக்குவான்னுதலே. (சு)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள்

# புராணசாரம்.

செய்யதிரு வாதவூர் வந்தருளி யமைச்சரெனச் சிறந்து நீடு, வையமிசை வழுதிவிதி கொண்டரனைக் குருந்தடியில் வணங்கி ஞான, மெய்யருட் பணியாற்றி நரிபரியாச் செய்துநதி யுடைப்பி லெங்க, ளையன்முடி மிசையுவந்து மண்சுமக்க வன்பினுருவாயி னாரே. (க)

எங்குமாகியவழகன் மேனிபிரம்படிதாங்க வேங்கிப் புத்தர், மங்கவா ரருள்செய்து மூகைபேசிடவழங்கி மணிமன்றாடு, மெங்கணா யகன்கரத்தா லெடுமெழுத் தாணியுங் கொண் டெழுதப் பாடி, யங்கண்மே வியசோதி தன்னிரண் டறக்கூடி யமர்ந்திட் டாரே. (உ)

## சங்கிரகம்.

ஸ்ரீ மாணிக்கவாசகமூர்த்திகள் செந்தமிழ்ப் பாண்டிவள நாட்டிலே அரிமர்த்தன பாண்டியராஜன் காலத்திலே, திருவாதவூரிலே, அமாத்தியரென்னும் அந்தணர் குலத்திலே; சம்புபாதாசிருதருக்கு மனைவியாராகிய சிவஞானவதியாரிடத்தே அவதரித்தருளி, வாதவூரர் என்கிற பிள்ளைத்திருநாமம்பெற்றுப் பதினாறு பிராயத்துள்ளே வேதசிவாகம முதலிய கலைகள் முற்றுங் கற்று வல்லவராயினார்.

அவ்வாதவூரருடைய நற்குணநற்செய்கைகள் அனைத்தும் மதுரையில் அரசாட்சிசெய்த அரிமர்த்தனபாண்டியன் செவிக்குப்புலப்பட்டன. புலப்பட்டவுடனே அவ்வரசன் வாதவூரரை வருவித்து ஆராய்ந்து, கேள்வியுற்றதினும்மேம்பட்டு விளங்குங் குணாதிசயங்களை வியந்து கொண்டாடிச் சிறப்புகள் செய்து, தென்னவன் பிரமராயன் என்னும் பெயருங்கொடுத்துத் தனக்குமுதன் மந்திரியாராக நியமித்தான். அம்மந்திரியார் அரசனுக்கு இனியாராய்ப் பெருஞ்செல்வராய் வாழ்ந்திருக்கும்போழ்து, பூர்வ புண்ணிய விசேடத்தால் மனந்தூயராய் நித்தியாநித்திய வுணர்வு தோன்ற, இம்மை மறுமைப்பயனை வெறுத்துப் பிறவிக்கஞ்சி வீடுபேற்றின் அவா மிக்குடையராய், அதற்குக் காரணமாகிய தத்துவஞானத்தை உபதேசிக்கத்தக்க ஞானாசாரியரைக்காண்பதற்குப் பேரவாவுற்றிருந்தனர்.

அங்ஙனமிருக்கும்போது, கீழ்க்கடற்றுறையிலேசென்று குதிரைகள் வாங்கி வரும்படி அம்மந்திரியாரை அரசன் ஏவினான். ஏவப்பட்டமந்திரியார் அளவிறந்த திரவியத்தைக்



கைக்கொண்டு, நால்வகைப் படைகளுஞ் சூழச்சென்று, மார்க்கத்தின் மத்தியிலேயுள்ள திருப்பெருந்துறை என்னுஞ் சிவக்ஷேத்திரத்தைச் சமீபித்தனர். சமீபிக்குங்கால், பரமபதியாகிய சிவபிரான் மந்திரிக்கு இருவினையொப்பு மலபரிபாகமுற்றமைநோக்கி, அவருக்கு அநுக்கிரகிக்கும்பொருட்டுத் திருப்பெருந்துறைச் சிவாலயத்திலே, அருள்வடிவாகிய குருந்தமர நீழலிலே, தம்முடைய கணநாயகர்கள் மாணாக்கராய்ச்சூழ அக்குழாத்தின் நடுப்பலே தாம் ஒரு ஆசாரியராகத்திருவுருக்கொண்டு வீற்றிருந்தருளினார். பின்பு மந்திரியார் ஆலயஞ்சேர்ந்து குருமூர்த்தியைத் தரிசித்த வளவில் அழலிடைப்பட்ட மெழுகென மனமுருகி அழுதகண்ணுந் தொழுதகையு முடையவராய்த் திருவடிக்கமலங்களிலே வீழ்ந்து, தேவரீர் அடியேனுக்கு அநுக்கிரகிக்க வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தனர். மந்திரியாரது அதிதீவிரதரசத்திநிபாதத்தைக் கண்ட தேசிகோத்தமர் திருவருள்சுரந்து விஞ்ஞானதீக்ஷைசெய்து, பாசத்தை ஒருவி, ஞானத்தாற் பசுபதியாகிய தம்மைக்கண்டு அடங்கி நிற்கும் வண்ணம் ஸ்ரீ முத்திபஞ்சாக்கரத்தைஉபதேசித்துத் திருவடிசூட்டி யருளினார். அவ்வுபதேசப்பொருளைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டையில் அமர்ந்து சிவாநுபவச் சுவாநுபூதிகமாகக்கொண்ட மெய்யன்பர் சிவாநந்த மேலீட்டினாலே குருமூர்த்தங்கொண்டருளிய சிவபெருமானது பாதாரவிந்தங்களிற்பாமாலை சூட்டத் தொடங்கினார். அப்பாடல்களைக் கேட்டருளிய சிவபிரான் திருவுளங் களிகூர்ந்து, உயர்ந்த மாணிக்கங்கள்போல அப்பாடல்களிலே வாசகங்கள் அமைந்திருந்தமை நோக்கி, அவ்வாதவூரடிகளுக்கு "மாணிக்கவாசகர்" என்று திருப்பெயர்கொடுத்து அங்கே அமர்ந்திருக்கும்படி கட்டளையிட்டுமறைந்தருளினார். பின்பு

மாணிக்கவாசகப்பிரான் குதிரைகொள்ளக்கொண்டுவந்த தனங்களையெல்லாம் அப்பதிக்கண்ணதாகிய சிவாலயத்திருப்பணிக்கும், நித்தியபூஜைக்கும், நைமித்திகமாகிய விசேடபூஜைக்கும், சிவனடியார்களுக்கும் உபயோகப்படுத்திப்பித்துப்பிடித்தார்போல் அமர்ந்தருளுங்கால், "இதுகாறுங் குதிரை வாங்கி வாராமைக்குக் காரணம் என்னை?" என்று அரசன் திருமுகம் அனுப்பினமைகண்டு, ஆலயத்திற்போய்ச் சிவசந்நிதானத்திலே விண்ணப்பஞ் செய்தபொழுது, தம்மை வழிபடும் அடியார்க்கெளியராய் அவர்வேண்டிய வேண்டியாங்கு செய்தருளும் சிவபெருமான் குருவடிவா யெழுந்தருளி அன்பனே "நாம் பரிகொண்டு வருகின்றோம் நீ செல்லுதி" என்று திருவாய் மலர்ந்தருள, உடனே மாணிக்கவாசக மூர்த்திகள் எழுந்து மதுரையம்பதி சேர்ந்து, அரசனுக்கு மகிழ்ச்சியுண்டாகும்படி "இத்தனை நாளிலே பரிகள் வரும்" என்றுவரையறைகூறினர். அங்ஙனம் வரையறைசெய்தநாள் காறும் பரிகள் வாராமைகண்டு அரசன் கோபங்கொண்டு ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகளை வருத்தப்படுத்தி முன் கொண்டுசென்ற பொன்னைவாங்கும்படி சேவகரை ஏவினன். சுவாமிகள் வருந்தும் பொழுது சிவபிரானை நோக்கி முறையிடும்பொழுது, சிவபிரான் வனத்திலே திரிகின்ற நரிகளைப்பரிகளாக்கிக் கொண்டுவந்து காட்டி, அரசனை மகிழ்வித்துத் தொண்டரை விடுவித்தனர். பின்பு அன்றிரவிற்றானே அப்பரிகள் அனைத்தும் நரிகளாய் முன்னுள்ள பரிகளுக்கும் ஊறுசெய்து நகரமெங்கும் கலங்கச்செய்து காட்டை அடைந்தன. விடிந்தவுடனே நிகழ்ந்த செய்திகளைக் கேட்டு அரசன் பெருங்கோபங்கொண்டு மந்திரியாரை வருவித்து "ஏ மந்திரியே நீ மாயவித்தையினால் நம்மைமயக்கிவிட்டாய்" என்று கூறிச்சேவகரை நோக்கி இம்மந்திரியைக்



கொடுந்தண்டஞ்செய்து குதிரை கொள்ளக் கொண்டுசென்ற பொன்னைவாங்கும்படி ஆஞ்ஞாபித்தான். உடனே சேவகர் அடிகளைக்கொடுந்தண்டஞ் செய்தபோது, சுவாமிகள் சிவபிரானை நோக்கித் துதித்தனர். அதனையுணர்ந்த சிவபிரான் வைகை நதியை மதுரைநகர்மீது பெருகிவரும்படி செய்து அதனால் எல்லா உலகங்களுக்கும் ஏககர்த்தாவான எம்பெருமான் வந்தியென்பாளுக்குக் கூலியாளாகச்சென்று மாணிக்கவாசக சுவாமிகளது மகிமையை அரசனுக்கு அறிவித்தனர். பின்பு சுவாமிகள் அரசனையுந் துறந்து பலசிவஸ்தலங்களையும் பணிந்துபாடி, ஸ்ரீசிதம்பர க்ஷேத்திரத்தை அடைந்து நடேசப்பெருமானைத் தொழுதுபாடி, அத்தில்லையெல்லைக்கு மேலைத்திசையிலேயுள்ள தபோவனத்திலே நிட்டையில் அமர்ந்தருளினர். அதன்பின் ஸ்ரீஞானதாண்டவமூர்த்தி ஆஞ்ஞைப்படி புத்தரை வாதிலேவென்று, ஊமைப்பெண்ணைப் பேசுவித்து அங்கே அமரும்போது, சிவபிரான் அந்தணராய் வந்தருளி, அதுவரையு[illegible] பாடியவைகளைத் தொகுத்துக் கூறும்படி கேட்டு அதி[illegible]செய்து திருவாசகத் திருமுறையாகவும், திருக்கோவையார் பாடும்படி கேட்டு, அதனை யதன் பின்னாகவும் தமது அருமைத் திருக்கரத்தால் வரைந்தருளி, "இங்ஙனம் மாணிக்கவாசகன் சொல்லியபடி அழகிய திருச்சிற்றம்பல முடையார் எழுதியது" என்று திருக்கைச்சாத்துயிட்டு அந்தர்த்தானமாயினர். பின்பு அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப்பிழம்பாகிய நடராஜப்பெருமான் திருவடி நிழலிலே ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகள் இரண்டறக்கலந்தனர்.

திருச்சிற்றம்பலம்.

---

உ

திருச்சிற்றம்பலம்.

திருமாளிகைத்தேவர்முதலியோரருளிச்செய்த

# திருவிசைப்பா.

## ஒன்பதாந்திருமுறை.

கோயில் - பண் - பஞ்சமம். (ஒன்பதாந் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

ஒளிவளர்விளக்கேயுலப்பிலாவொன்றேயுணர்வுசூழ்கடந்ததோருணர்வே,தெளிவளர்பளிங்கின்றிரண்மணிக்குன்றேசித்தத்துட்டித்திக்குந்தேனே, யளிவளருள்ளத் தானந்தக்கனியே யம்பலமாடரங்காக,வெளிவளர்தெய்வக்கூத்துகந்தாயைத்தொண்டனேன்விளம்புமாவிளம்பே. (க)

இடர்கெடுத்தென்னையாண்டுகொண்டென்னுளிருட்பிழம்பறவெறிந்தெழுந்த, சுடர்மணிவிளக்கினுள்ளொளிவிளங்குந் தூயநற்சோதியுட்சோதீ, யடல்விடைப்பாகாவம்பலக் கூத்தா வயனொடுமாலறியாமைப்,படரொளிபரப்பிப்பரந்துநின்றாயைத்தொண்டனேன்பணியுமாபணியே. (உ)

நீறணிபவளக்குன்றமேநின்ற நெற்றிக்கண்ணுடையதோர்நெருப்பே, வேறணிபுவனபோகமே யோகவெள்ளமே மேருவில்வீரா வாறணிசடையெம்மற்புதக்கூத்தா வம்பொன்செ யம்பலத்தரசே, யேறணிகொடியெம்மீசனே யுன்னைத் தொண்டனே னிசையுமாறிசையே. (ங)



தனதனற்றோழாசங்கராசூலபாணியேதாணுவேசிவனே,கனகநற்றூணேகற்பகக்கொழுந்தேகண்கள்மூன்றுடையதோர்கரும்பே, யனகனேகுமரவிநாயகசனக வம்பலத்தமரசேகரனே, யுனகழலிணையென்னெஞ்சினுளினிதாத்தொண்டனேனுகருமாறுகரே. (ச)

கற்றவர்விழுங்குங்கற்பகக்கனியைக்கரையிலாக்கருணைமாகடலை,மற்றவரறியாமாணிக்கமலையைமதிப்பவர்மனமணிவிளக்கைச், செற்றவர்புரங்கள்செற்றவெஞ்சிவனைத் திருவீழிமிழலைவீற்றிருந்த கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங் குளிரவென் கண்குளிர்ந்தனவே. (ரு)

மாலுலாமனந்தந்தென்கையிற்சங்கம்வவ்வினான்மலைமகண் மதலை, மேலுலாந்தேவர்குலமுழுதாளுங் குமரவேள்வள்ளிதன்மணாளன், சேலுலாங் கழனித் திருவிடைக்கழியிற்றிருக்குரா நீழற்கீழ் நின்ற, வேலுலாந்தடக்கைவேந்தனென்சேந்தனென்னுமென் மெல்லியலிவளே. (சு)

மூலமாய்முடிவாய்முடிவிலாமுதலாய்முகத்தலையகத்தமர்ந்தினிய பாலுமாயமுதாம்பன்னகாபரணன்பனிமலர்த்திருவடியிணைமே லாலையம்பாகினனையசொற்கருவூரமுதுறழ்தீந்தமிழ்மாலை சீலமாப்பாடுமடியவரெல்லாஞ்சிவபதங்குறுகிநின்றாரே. (எ)

அன்னமாய்விசும்புபறந்தயன்றேடவங்ஙனேபெரியநீசிறிய, வென்னையாள்விரும்பியென்மனம்புகுந்தவெளிமையையென்றுநான் மறக்கேன், முன்னமாலறியாவொருவனாமிருவாமுக்கணாநாற்பெருந்தடந்தோட், கன்னலேதேனேயமுதமேகங்கைகொண்டசோளேச்சரத்தானே. (அ)

அற்புதத்தெய்வ மிதனின்மற்றுண்டே யன்பொடு தன்னையஞ்செழுத்தின், சொற்பதத் துள்வைத் துள்ளமன்றருந் தொண்டருக்கெண்டிசைக்கனகம், பற்பதக்குவையும் பைம்பொன் மாளிகையும் பவளவாயவர்பணைமுலையும், கற்பகப்பொழிலு முழுதுமாங்கங்கை கொண்டசோளேச்சரத்தானே. (க)

தந்தையங்கவையார் தங்கண்மேல்வைத்த தயாவைநூறாயிரங் கூறிட், டத்திலங்கொருகூறுன் கண்வைத்தவருக்கமருலகளிக்குநின் பெருமை, பித்தனென்றொருகாற் பேசவரேனும்பிழைத்தவைபொறுத்தருள்செய்யுங், கைத்தலமடி யேன்சென்னிமேல்வைத்தகங்கை கொண்டசோளேச்சரத்தானே. (க0)

திருமகன் முருகன் றேவியேயுமையா டிருமகள் * மருமகன்றாயாள் மருமகன் மதனன் மாமனேயிமவான் மலையுடையரையர்தம்பாவை தருமலிவளருஞ் சிவபுரன்றோழன் றனபதிசாட்டியக்குடியார் [தே. திருமுகக்கழன் மூன்றேழுகைத்தலமேழிருக்கையிலிருந்தவீசனுக் செங்கணுபோற்றி திசைமுகாபோற்றி சிவபுராகருள்வீற்றிருந்த வங்கணுபோற்றி யமரனேபோற்றி யமரர்கடலைவனேபோற்றி தங்களுன்மறைநூல் சகலமுங்கற்றோர் சாட்டியக்குடியிருந்தரு மெங்கணுயனேபோற்றியேழிருக்கையிறைவனேபோற்றிபோற்றி.

பத்தியாயுணர்வோரருளைவாய்மடுத்துப்பருகுதோறமுதமொத் தவர்க்கே, தித்தியாவிருக்குந்தேவர்காளிவர்தந்திருவுருவிருந்தவா பாரீர், சத்தியாய்ச்சிவமா யுலகெலாம்படைத்த தனி முழுமுதலுமா யதற்கோர், வித்துமாயாரூராதியாய்வீதிவிடங்கராய் நடங்குலாவினரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

114

உ

திருச்சிற்றம்பலம்.

சேந்தனாருளிச்செய்த

# திருப்பல்லாண்டு.

கோயில் - பண் - பஞ்சமம். (ஒன்பதாந்திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

மன்னுகதில்லைவளர்கநம்பத்தர்கள்வஞ்சகர்போயகலப்
பொன்னின்செய்மண்டபத்துள்ளேபுகுந்துபுவனியெல்லாம்விளங்க
அன்னநடைமடவாளுமைகோனடியோமுக்கருள்புரிந்து
பின்னைப்பிறவியறுக்கநெறிதந்தபித்தற்குப்பல்லாண்டுகூறுதுமே.

மிண்டுமனத்தவர்போமின்கள்மெய்யடியார்கள்விரைந்துவம்மின்
கொண்டுங்கொடுத்துங்குடிகுடியீசற்காட்செய்மின்குழாம்புகுந்து
அண்டங்கடந்தபொருளளவில்லதோரானந்தவெள்ளப்பொருள்
பண்டுமின்றுமென்றுமுள்ளபொருளென்றேபல்லாண்டுகூறுதுமே.

நிட்டையிலாவுடனீத்தென்னையாண்டநிகரிலாவண்ணங்களுஞ்
சிட்டன்சிவனடியாரைச்சீராட்டுந்திறங்களுமேசிந்தித்து
அட்டமூர்த்திக்கென்னகநெகவூறுமமிர்தினுக்காலநிழற்
பட்டனுக்கென்னைத்தன்பாற்படுத்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே

சொல்லாண்டசுருதிப்பொருள்சோதித்ததூய்மனத்தொண்டருள்
சில்லாண்டிற்சிதையுஞ்சிலதேவர்சிறுநெறிசேராமே [ளீர்
வில்லாண்டகனகத்திரண்மேருவிடங்கன்விடைப்பாகன்
பல்லாண்டென்னும்பதங்கடந்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (ச)

சீருந்திருவும்பொலியச்சிவலோகநாயகன்சேவடிக்கீ
ழாரும்பெறாதவறிவுபெற்றேன்பெற்றதார்பெறுவாருலகி
லூருமுலகுங்கழறவுழறியுமைமணவாளனுக்காட்
பாரும்விசும்புமறியும்பரிசுநாம்பல்லாண்டுகூறுதுமே. (௫)

பாலுக்குப்பாலகன்வேண்டியழுதிடப்பாற்கடலீந்தபிரான்
மாலுக்குச்சக்கரமன்றருள்செய்தவன்மன்னியதில்லைதன்னு
ளாலிக்குமந்தணர்வாழ்கின்றசிற்றம்பலமேயிடமாகப்
பாலித்துநட்டம்பயிலவல்லானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௬)

தாதையைத்தாளறவீசியசண்டிக்குமண்டத்தொடுமுடனே
பூதலத்தோரும்வணங்கப்பொற்கோயிலும்போனகமுமருளிச்
சோதிமணிமுடித்தாமமுநாமமுந்தொண்டர்க்குநாயகமும்
பாதகத்துக்குப்பரிசுவைத்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௭)

குழலொலியாழொலிகூத்தொலியேத்தொலியெங்குங்குழாம்பெரு
விழவொலிவிண்ணளவுஞ்சென்றுவிம்மிமிகுதிருவாரூரின்
மழவிடையாற்குவழிவழியாளாய்மணஞ்செய்குடிப்பிறந்த
பழவடியாரொடுங்கூடியெம்மானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௮)

ஆரார்வந்தாரமரர்குழாத்திலணியுடையாதிரைநாள்
நாராயணனொடுநான்முகனங்கியிரவியுமிந்திரனுந்
தேரார்வீதியிற்றேவர்குழாங்கடிசையனைத்துநிறைந்து
பாரார்தொல்புகழ்பாடியுமாடியும்பல்லாண்டுகூறுதுமே. (௯)

எந்தையெந்தாய்சுற்றமுற்றுமெமக்கமுதாமெம்பிரானென்றென்று
சிந்தைசெய்யுஞ்சிவன்சீரடியாரடிநாய்செப்புரை
யந்தமிலானந்தச்சேந்தனெனைப்புகுந்தாண்டுகொண்டாருயிர்மேற்
பந்தம்பிரியப்பரிந்தவனேயென்றுபல்லாண்டுகூறுதுமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

திருமூலநாயனாரருளிச்செய்த

# திருமந்திரம்.

## பத்தாந்திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

சிவனொடொக்குந்தெய்வந்தேடினுமில்லை
யவனொடொப்பாரிங்கியாவருமில்லை
புவனங்கடந்தன்றுபொன்னொளிமின்னுந்
தவளச்சடைமுடித்தாமரையானே. (௧)

யாவர்க்குமாமிறைவற்கொருபச்சிலை
யாவர்க்குமாம்பசுவிற்கொருவாயுறை
யாவர்க்குமாமுண்ணும்போதொருகைப்பிடி
யாவர்க்குமாம்பிறர்க்கின்னுரைதானே. (௨)

அன்புசிவமிரண்டென்பரறிவிலார்
அன்பேசிவமாவதாருமறிகிலார்
அன்பேசிவமாவதாருமறிந்தபின்
அன்பேசிவமாயமர்ந்திருப்பாரே. (௩)

என்பேவிறகாயிறைச்சியறுத்திட்டுப்
பொன்போற்கனலிற்பொரியவறுப்பினும்
அன்போடுருகியகங்குழைவார்க்கன்றி
யென்பொன்மணியினையெய்தவொண்ணாதே. (௪)

## பொன்வண்ணத்தந்தாதி.

திருச்சிற்றம்பலம்.

பொன்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமேனிபொலிந்திலங்கு
மின்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணம்வீழ்சடைவெள்ளிக்குன்றந்
தன்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமால்விடைதன்னைக்கண்ட
வென்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமாகியவீசனுக்கே. (௧)

கொடிமேலிடபமுங்கோவணக்கீளுமோர்கொக்கிறகு
முடிமேற்கமழுமகலத்தினீறுமையாளுமவ்வு
முடிமேன்மதியுமுருகலர்கொன்றையுமூவிலைய
வடிவேல்வடிவுமென்கண்ணுளெப்போதும்வருகின்றவே. (௨)

திருச்சிற்றம்பலம்.

நக்கீரதேவநாயனாருளிச்செய்த

## திருமுருகாற்றுப்படை.

திருச்சிற்றம்பலம்.

குன்றமெறிந்ததையுங்குன்றப்போர்செய்ததையு
மன்றங்கமரரிடர்தீர்த்ததையு—மின்றென்னைக்
கைவிடாநின்றதையுங்கற்பொதும்பின்மீட்டதையும்
மெய்விடாவீரன்கைவேல். (௧)

உன்னையொழியவொருவரையுநம்புகிலேன்
பின்னையொருவரையான்பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பாவானோர்கொடியவினைதீர்த்தருளும்
வேலப்பாசெந்திவாழ்வே. (௩)

முருகனேசெந்திமுதல்வனேமாயோன்
மருகனேயீசன்மகனே—யொருகைமுகன்
தம்பியேநின்னுடையதண்டைக்காலெப்பொழுது
நம்பியேகைதொழுவேனான். (௪)

அஞ்சுமுகந்தோன்றிலாறுமுகந்தோன்றும்
வெஞ்சமரத்தோன்றில்வேறோன்றும்—நெஞ்சி
லொருகானினைக்கிலிருகாலுந்தோன்று
முருகாவென்றோதுவார்முன். (௭)

உ

திருச்சிற்றம்பலம்.

சேக்கிழார்நாயனாருளிச்செய்த

# பெரியபுராணம்.

## பன்னிரண்டாந்திருமுறை.

திருச்சிற்றம்பலம்.

உலகெலாமுணர்ந்தோதற்கரியவ
னிலவுலாவியநீர்மலிவேணியன்
அலகில்சோதியனம்பலத்தாடுவான்
மலர்சிலம்படிவாழ்த்திவணங்குவாம். (௧)

எடுக்குமாக்கதையின்றமிழ்ச்செய்யுளாய்
நடக்குமேன்மைநமக்கருள்செய்திடத்
தடக்கையைந்துடைத்தாழ்செவிநீண்முடிக்
கடக்களிற்றைக்கருத்துளிருத்துவாம். (௨)

ஆதியாய்நடுவுமாகியளவிலாவளவுமாகிச்
சோதியாயுணர்வுமாகித்தோன்றியபொருளுமாகிப்
பேதியாவேகமாகிப்பெண்ணுமாயாணுமாகிப்
போதியாநிற்குந்தில்லைப்பொதுநடம்போற்றிபோற்றி. (௩)

கற்பனைகடந்தசோதிகருணையேயுருவமாகி
யற்புதக்கோலநீடியருமறைச்சிரத்தின்மேலாஞ்
சிற்பரவியோமமாகுந்திருச்சிற்றம்பலத்துணின்று
பொற்புடனடஞ்செய்கின்றபூங்கழல்போற்றிபோற்றி. (௪)

தண்ணளிவெண்குடைவேந்தன்செயல்கண்டுதரியாது
மண்ணவர்கண்மழைபொழிந்தார்வானவர்பூமழைபொழிந்தா
ரண்ணலவன்கண்ணெதிரேயணிவீதிமழவிடைமேல்
விண்ணவர்கடொழநின்றான்வீதிவிடங்கப்பெருமான். (௫)

சடைமருங்கிலிளம்பிறையுந்தனிவிழிக்குந்திருநுதலு
மிடமருங்கிலுமையாளுமெம்மருங்கும்பூதகணம்
புடைநெருங்கும்பெருமையுமுன்கண்டரசன்போற்றிசைப்ப
விடைமருவும்பெருமானும்விறல்வேந்தற்கருள்கொடுத்தான். (௬)

வையகம்பொலியமறைச்சிலம்பார்ப்பமன்றுளேமாலயன்றேட,
வையர்தாம்வெளியேயாடுகின்றாரையஞ்சலிமலர்த்திமுன்போற்றுங்
கைகளோதிளைத்த கண்களோ தீக்கக்கரணமேயோ கலந்தவன்புந்தச்,
செய்தவம்பெரியோன்சென்றுதாழ்ந்தெழுந்தான்திருக்களிற்றுப்படி
மருங்கு. (௭)

ஐந்துபேரறிவுங் கண்களேகொள்ளவளப் பருங்கரணங்களான்
குஞ், சிந்தையேயாகக்குணமொருமூன்றுந்திருந்து சாத்துவிகமே
யாக, விந்துவாழ்சடையானாடுமானந்தவெல்லையிறனிப்பெருங்
கூத்தின்வந்தபேரின்பவெள்ளத்துட்டிளைத்துமாறிலாமகிழ்ச்சியின்
மலர்ந்தார். (௮)

தெண்ணிலாமலர்ந்தவேணியாயுன்றன்றிருநடங்கும்பிடப்பெற்று
மண்ணிலேவந்தபிறவியேயெனக்குவாலிதாமின்பமாமென்று
கண்ணிலானந்தவருவிநீர்சொரியக்கைம்மலருச்சிமேற்குவித்துப்
பண்ணினீடியறிவரும்பதிகம்பாடினார்பரவினார்பணிந்தார். (௯)

சொல்லுவதறியேன்வாழிதோற்றியதோற்றம்போற்றி
வல்லவந்தருளியென்னைவழித்தொண்டுகொண்டாய்போற்றி
யெல்லையில்லின்பவெள்ளமெனக்கருள்செய்தாய்போற்றி
தில்லையம்பலத்துளாடுஞ்சேவடிபோற்றியென்ன. (௧௦)

நன்மைபெருகருணெறியேவந்தணைந்துநல்லூரின்
மன்னுதிருத்தொண்டனார்வணங்கிமகிழ்ந்தெழும்பொழுதின்
முன்னுடையநினைப்பதனைமுடிக்கின்றோமென்றவர்தஞ்
சென்னிமிசைப்பாதமலர்சூட்டினான்சிவபெருமான். (௧௧)



அன்னவேலையவனையாண்டுகொண்டருளியவழகே
மின்னணிமேமறைதந்தருள்புரிவேதநாயகனை
கண்ணினாற்றிருக்கயிலையிலிருந்தநின்கோல
நண்ணினாலன்றெழுதயந்தருள்புரியெனப்பணிந்தார். (௧௨)

சிவனடியேசிந்திக்குந்திருப்பெருகுசிவஞானம்
பவமதனையறமாற்றும்பாங்கினிலோங்கியஞான
முவமையிலாக்கலைஞானமுணர்வரியமெய்ஞ்ஞானந்
தவமுதல்வர்சம்பந்தர்தாமுணர்ந்தாரந்நிலையில். (௧௩)

ஆலமேயமுதமாக்கவுண்டவர்க்களித்துக்
காலனைமார்க்கண்டற்காகக்காய்ந்தனையடியேற்கின்று
ஞாலநின்புகழேயாகவேண்டுநான்மறைகளேத்துஞ்
சீலமேயாலவாயிற்சிவபெருமானேயென்றார். (௧௪)

கைகளுந்தலைமேற்றாக்கண்ணிலானந்தவெள்ள
மெய்யெலாம்பொழியவேதமுதல்வரைப்பணிந்துபோற்றி
யையனேயடியனேனையஞ்சலென்றருளவல்ல
மெய்யனேயென்றுவீடலாலவாய்விளம்பலுற்றார். (௧௫)

வேதநெறிதழைத்தோங்கமிகுசைவத்துறைவிளங்கப்
பூதபரம்பரைபொலியப்புனிதவாய்மலர்ந்தழுத
சீதவளவயற்புகலித்திருஞானசம்பந்தர்
பாதமலர்தலைக்கொண்டுதிருத்தொண்டுபரவுவாம். (௧௬)

கொண்டுவந்துமனைப்புகுந்துகுலாவுபாதம்விளக்கியே
மண்டுகாதலினாசனத்திடைவைத்தருச்சனைசெய்தபி
னுண்டிநாலுவிதத்திலாறுசுவைத்திறத்தினிலொப்பிலா
வண்டர்நாயகர்தொண்டரிச்சையிலமுதுசெய்யவளித்துளார். (௧௭)

அல்லார்கண்டத்தண்டர்பிரானருளாற்பெற்றபடிக்காசு
பல்லாறியன்றவளம்பெருகப்பரமனடியாரானார்க்
கெல்லாமெய்தியுண்கவெனவிரண்டுபொழுதும்பறைநிகழ்த்திச்
சொல்லாற்சாற்றிச்சோறிட்டார்துயர்கூர்வறுமைதொலைத்திட்டார்.

வானவர்பூவின்மாரிபொழியமாமறைகளார்ப்ப
ஞானமாமுனிவர்போற்றநலமிகுசிவலோகத்தி
லூனமில்தொண்டர்கும்பிட்டுடனுறைபெருமைபெற்றா
ரேனையசுற்றத்தாரும்வானிடையின்பம்பெற்றார். (௧௯)

மண்ணினிற்பிறந்தார்பெறும்பயன்மதிசூடு
மண்ணலாரடியார்தமையமுதுசெய்வித்தல்
கண்ணினாலவர்நல்விழாப்பொலிவுகண்டார்த
லுண்மையாமெனினுலகர்முன்வருகெனவுரைத்தார். (௨௦)

செம்மைபெறவெடுத்ததிருத்தோடுடையசெவியனெனு
மெய்ம்மைமொழித்திருப்பதிகம்பிரமபுரமேவினார்
தம்மையுடையானைக்கூடன்சாற்றித்தாதையார்க்
கெம்மையிதுசெய்தபிரானிவனன்றேயெனவிசைத்தார். (௨௧)

நீற்றொளிநிறைவாகியமேனியுடனிறையன்புறுசிந்தையினேசுபிக
மாற்றார்புரமாற்றியவேதியரைமருதேம்பினிமாலையமாத்திரிவான்
கூற்றுயிர்வாறுவிலக்கிலொணீடியசோதிதிருப்பதிகம்
போற்றாலுலகேழின்வருந்துயரம்போமாறெதிர்நின்றுபுகன்றனரால்.

கொத்தார்மலர்க்குழலாளொருகூறுடையவர்பால்
மெய்த்தாயினுமினியானையவ்வியனுவலர்பெருமான்
பித்தாபிறைசூடியெனப்பெரிதாந்திருப்பதிகம்
இத்தாரணிமுதலாவுலகெல்லாமுயவெடுத்தார். (௨௬)

தென்னவனேக்கங்கண்டுதிருக்கழுமலத்தார்செல்வர்
தீன்னவன்னலப்பால்வெப்பையாலவாயண்ணல்நீறே
மன்னுமந்திரமுமாகிமருந்துமாய்த்தீர்ப்பதென்று
பன்னியமறைகளேத்திப்பகர்திருப்பதிகம்பாடி. (௨௭)

ஞானமெய்ந்நெறிதான்யார்க்குநமச்சிவாயச்சொலாமென்
றானசீர்நமச்சிவாயத்திருப்பதிகத்தியங்கண்
வானமுநிலனுங்கேட்கவருள்செய்திம்மணத்தில்வந்தோர்
ஊனமாம்பிறவிதீரயாவரும்புகுகவென்ன. (௨௮)



காதன்மெய்ப்பதிகநல்லூர்ப்பெருமணமேத்துக்கண்டார்
தீதுறுபிறவிப்பாசந்தீர்த்தல்செம்பொருளாக்கொண்டு
நாதனேநல்லூர்மேவும்பெருமணநம்பனேயுன்
பாதமெய்ந்நீழல்சேரும்பருவமீதென்றுபாட. (௨௯)

சொற்றுணைவேதியனென்னுந்தாய்மொழி
நற்றமிழ்மாலையாநமச்சிவாயவென்
றற்றமுன்காக்குமைந்தெழுத்தையன்போடு
பற்றியவுணர்விறைப்பதிகம்பாடினார். (௩௦)

அவ்வண்ணலாரடிகள்மறக்கினுநாமமஞ்செழுத்தறியவெப்பொழுதும், மெண்ணியநாவேயின்சுவைபெருகவிடையறாதியம்புமென்றிதனைத், தின்னிசையுணர்விற்கொள்பவர்மற்றுப்பற்றிலெனனச்செழுந்தமிழா, லன்னியவன்பிறவிப்பிணிப்பறவின்றார்நமச்சிவாயத்திருப்பதிகம். (௩௧)

என்றுமின்பம்பெருகுமியல்பினா
லொன்றுகாதலித்துள்ளமுமோங்கிட
மன்றுளாரடியாரவர்வான்புகழ்
நின்றதெங்குநிலவியுலகெலாம். (௩௨)

திருச்சிற்றம்பலம்.

திருமுறைத் திரட்டு - முற்றிற்று.

முருகக்கடவுள் துணை.

# அருணகிரிநாதசுவாமிகள்

## திருவாய்மலர்ந்தருளிய

# திருப்புகழ்.

வெண்பா.

திருப்புகழைக் கற்கத் திருப்புகழைக் கேட்கத்
திருப்புகழை நித்தஞ் செபிக்கத் — திருப்புகழை
அர்ச்சிக்க முத்தியெளி தாகுமே கூற்றைவென்று
கெர்ச்சிக்க லாமே கெடி.

வேலுமயிலுந் துணை.

## திருச்செந்தூர்.

தொந்திசரிய மயிரே வெளிறநிரை
தந்தமசைய முதுகே வளையஇதழ்
தொங்கவொருகை தடிமேல்வரமகளிர் நகையாடி-
தொண்டுகிழவ னிவனாரென இருமல்
கிண்கிணென முனுரையே குழறவிழி
துஞ்சுகுருடு படவேசெவிடுபடு செவியாகி;



வந்தபிணியு மதிலேமிடையுமொரு
பண்டிதனுமெ யுறுவேதனையுமிள
மைந்தருடைமை கடனேதெனமுடுக துயர்மேவி-
மங்கையழுது விழவேயமபடர்கள்
நின்றுசருவ மலமேயொழுகவுயிர்
மங்குபொழுது கடிதேமயிலின்மிசைவரவேணும்;
எந்தைவருக ரகுநாயகவருக
மைந்தவருக மகனேயினிவருக
என்கண்வருக எனதாருயிர்வருக அபிராம-
இங்குவருக அரசேவருகமுலை
யுண்கவருக மலர்சூடிடவருக
என்றுபரிவி னொடுகோசலைபுகல வருமாயன்;
சிந்தைமகிழு மருகாகுறவரிள
வஞ்சிமருவு மழகாஅமரர்சிறை
சிந்தஅசுரர் கிளைவேரொடுமடிய அடுதீரா-
திங்களரவு நதிசூடியபரமர்
தந்தகுமர அலையேகரைபொருத
செந்திநகரி லினிதேமருவிவளர்பெருமாளே.(௧)

துன்பங்கொண் டங்கமெலிந்தற
நொந்தன்பும் பண்புமறந்தொளி
துஞ்சும்பெண் சஞ்சலமென்பதி லணுகாதே-
இன்புந்தந் தும்பர்தொழும்பத
கஞ்சத்தந் தஞ்சமெனும்படி
யென்றென்றுந் தொண்டுசெயும்படி யருள்வாயே;
நின்பங்கொன் றுங்குறமின்சர
ணங்கண்டுந் தஞ்சமெனும்படி
நின்றன்பின் றன்படிகும்பிடு மிளையோனே-
பைம்பொன்சிந் தின்றுறைதங்கிய
குன்றெங்குஞ் சங்குவலம்புரி
பம்புந்தென் செந்திலில்வந்தருள் பெருமாளே. (௨)

## திருப்பழநி.

கொந்துத்தருகுழ லிருளோபுயலோ
விந்தைத்திருநுதல் சிலையோபிறையோ
கொஞ்சிப்பயில்மொழி அமுதோகனியோ விழிவேலோ-

கொங்கைக்குடமிரு கரியோகிரியோ
வஞ்சிக்கொடியிடை துடியோபிடியோ
கொங்குற்றியல்குல் அரவோரதமோ எனுமாதர்;

திந்தித்திமிதிமி திமிதாதிமிதோ
தக்கத்திரிகிட கிடதாகணவே
சித்திப்படிபயில் நடமாடியபா விகன்பாவே-

சிக்கைத்தயவுகள் புரிவேனுனையே
வந்தித்தருள்தரு மிருசேவடியே
சிந்தித்திடமிகு மறையாகியசீ ரருள்வாயே;

*வெந்திப்படவிரு மவுனேசனையே
மாறுபடத்திவியாரு கதிர்வேலுடையாய்
வென்றிக்கொருமலை யெனவாழ்மலையே தவவாழ்வே-

விஞ்சைக்குடையவர் தொழவேவருவாய்
கஞ்சத்தயனுட னமரேசனுமே
விந்தைப்பணிவிடை புரிபேரவர்மே லருள்கூர்வாய்;

தொந்திக்கணபதி மகிழ்சோதரனே
செங்கட்கருமுகில் மருகாகுகனே
சொந்தக்குறமகள் கணவாதிறல்சேர் கதிர்காமா-

சொம்பிற்பலவள முதிர்சோலைகள்சூழ்
இஞ்சித்திருமதில் புடைசூழருள்சேர்
அங்கப்பழநியில் முருகாஇமையோர் பெருமானே.(௧)

* வெந்திப்பு=வெதுப்பு - அதாவது சுட்டு.



## சுவாமிமலை.

மருக்குலாவிச்செறித்த குழலார்மயக்கி
மதனசுகம் விசாலே-
மயக்கிலைபெருப்பி யிதழேயருந்த
மலைபோல்முலைக்கு றுறவாகி;
பெருகாதலுற்ற தமியேனைநித்தல்
பிரியாதுபட்ச மறவாதே-
பிழையேபொறுத்து னிருதாளிலுற்ற
பெருவாழ்வுபற்ற அருள்வாயே;
குருவாயரர்க்கு முபதேசம்வைத்த
குகனேகுறத்தி மணவாளா-
குளிர்காவிருத்த வளர்பூகமெத்து
குடகாவிரிக்கு வடபாலார்;
திருவேரகத்தி லுறைவாயுமைக்கொர்
சிறுவாகரிக்கு மிளையோனே-
திருமால்தனக்கு மருகாஅரக்கர்
சிரமேதுணித்த பெருமானே.(௬)

## திருத்தணிகை.

குமிழொன்று*மொழிக் குயின்ன்†றலைக்
கொலையின்பமலர்க் கணையாலே-
குளிருந்தவளக் குலசந்த்ரவொளிக்
கொடிகொங்கையின்மூத் தனலாலே;
புயலின்கெதிரியக் கடலின்றலறப்
பொருமங்கையர்‡ருக் கலராலே-

* மொழி=மொழியையுடையான். † றலை=அலைக்க.
‡ உக்க அலராலே=தூற்றிய அலர்மொழியினாலே.

புயமொன் றமிகத் தளர்கின் றதனிப்
  புயம்வந் தணையக் கிடையாதோ;
சயிலங் குலையத் தடமுந் தகரச்
  சமனின் றலையப் பொரும்வீரா-
தருமங் கைவனக் குறமங் கையர்மெய்த்
  தனமொன் றுமணித் திருமார்பா;
பயிலுங் ககனப் பிறைதண் பொழிலிற்
  பணியுந் தணிகைப் பதிவாழ்வே-
பரமன் பணியப் பொருளன் றருளிற்
  பகர்செங் §கழுகிப் பெருமானே. (ரு)

## திருவொற்றியூர்.

ஓருருபப்பிர காசவிசு வருபப்பிர மாகநிச
  சகலப்பிர பேதசச சுபமாயா-
துலப்பிர காசமத சொலியற்ற சரசவித
  தொலைவிக்ரம மாதர்வயி றிடையூறு;
கருவிற்பிற வாதபடி யுருவிற்*பிர மோதவடி
  களை †யெத்திடி ராகவகை யதின்மீறி-
கருணைப்பிர காசவுண தருளுற்றிட ஆசில்சிவ
  கதிபெற்றிட ஞானவைவயை யொழிவேனோ;
குருகுக்குட வாரகொடி செருவுக்கிர ‡ஆதபயில்
  பிடிகைத்தல ஆதியரி மருகோனே-

§ கழுகி=இது கழுகேர் என்பதன் மரூஉ. * பிரமோத= விரும்பத்தக்க. † எத்திடி இராகவகை எனப்பிரிக்க.
‡ ஆதபயில்=ஆதப அயில்.



குமரப்பிர தாபகுக சிவசுப்பிர மாமணிய
  §குணமுட்டர வாவசுரர் குலகாலா;
¶திருவொற்றியு ருமருவு நகரொற்றியுர் வாரிதிரை
  யருகுற்றபதி மாதிசிவ னருள்பாலா-
நிகழுற்றிடு யோகதவ மிகுமுக்கிய மாதவர்க
  ளிதயத்திட மேமருவு பெருமானே. (சு)

## திருமயிலை.

களபமணி யாரமுற்ற வனசமுலை மீதுகொற்ற
  கலகமத வேள்தொடுத்த கணையாலும்-
கரிமொழிபி னார்கள்முற்று மிசைவசைகள் பேசவுற்ற
  கனவெனவு லாவுவட்ட மதியாலும்;
வளைமையணி சேடுபஞ்ச சயனஅணை மீ*துருக்கி
  வனிதைமடல் நாடிநித்த நலியாதே-
வரியளியு லாவுநீற இருபுயமொ ளாவிவெற்றி
  மலரணையில் நீயணைக்க வரவேணும்;
துளபமணி மார்பசக்ர தரனரிமு ராரிசர்ப்ப
  துயிலதர றுதரித்த மருகோனே-
சுருதிமறை வேள்விமிக்க மயிலைநகர் மேவுமுக்ர
  தோகைக்க லாபபச்சை மயில்வீரா;
அளகைவணி கோர்குலத்தில் வனிதையுயிர் மீளவைப்ப
  அருள்பாவு பாடல்சொற்ற குமரேசா-
அருவரையை நீறெழுப்பி நிருதர்தமை வேரறுத்து
  அமரர்பதி வாழவைத்த பெருமானே. (எ)

§ குணமுட்டர் அவா அசுரர் எனப்பிரிக்க.
¶ திருவொற்றியுருமருவு=இலக்குமிசேர்ந்து உற்றிருக்கும்.
* உருக்கி=உருகி.

## இராமேசுவரம்.

905. வாலவய தாகியழ காகிமத னூதிபனை
வாளிபடமோ டடிமரு ளாடிவிளை யாடிவிழல் [தேடி-
வாழ்வுசத மாகிவலு வாகி*மட கூடமொடு பொருள்
வாசபுரு சேடமல ரோடுமனை யாகிமகிழ்
வாசனைக ளாதியிட வாகிமய லாகிவிலை [போய்த்;
மாதர்களை மேவியவ ராசைதனி லேசுழல விலகாள்
தோல்திரைக ளாகிநரை யாகிகுரு டாகியிரு
கால்கள்தடு மாறிசெவி மாறிபசு பாசபதி
சூழ்மதிகள் மாறிசக மாறிதடி யோடுதிரி [புறநாளிற்-
சூலைசொறி யீளைவலி வாதமொடு நீரிழிவு
சோகைகள மாலைசுர மோடுபிணி தூறிருமல்
சூழலுற மூலகசு மாலமென நாறியுட லழிவேனோ;
ஞாலமுத லாதியரி யோமெனு†அ தாரமுளை
யாதிபிர மாவவிழ மோதிபொரு ளோதுகென [னே-
[illegible]ருசிர மோடுசிகை தூளிபட தாளமிடு மீளயோ
நாதிதழி வேணியரு பகலி யாணிமுத
லீனமக வானைமகிழ் *தோழவன மீதுசெறி [வீரா;
ஞானகுற மானைதினை காவில்மண மேவுபுகழ் மயில்
ஓலமிடு தாடகைசு வாகுவள ரேழுமாம்*
வாலியொடு நீலிபக னோடொருவி ராதனெழு [யாச-
யோதகட லேழுகிரன் ராவணகு ழாமமரில் பொடி
திசைதழல் வாளிவிடு மூரிதனு சேவகனை
பாணிதிரு மார்பணரி கேசன்மரு காவனவே [னோ-
யோதமறை ராமெசுர மேவுகும ராவமரர் பெருமா

---

* மட கூடம் = மாட கூடம்.
† அதாரம் = ஆதாரம்.

வேலுமயிலுந் துணை.

# திருவகுப்பு.

## சீர்பாதவகுப்பு.

தனனதன தனனதன தனனதன தனனதன தனனதன
தனனதன, தனதான தானதன

உததியிடை கடவுமர கதவருண குலதுரக வுபலளித
கனகரத, சதகோடி சூரியர்கள்

உதயமென வதிசயித கலபகமயிலின்மிசை யுகமுடிவி
னிருளகல, வொருசோதி வீசுவதும்

உடலுமுட லுயிருநிலை பெறுதல்பொரு ளெனவுலக மொரு
விருமனுபவன, சிவயோக சாதனையில்

ஒழுகுமவர் பிறிதுபர வசமழிய விழிசெருகி யுணர்வுவிழி
கொடுநியதி, தமனூடு நாடுவதும்

உருவெனவு மருவெனவு முளதெனவு மிலதெனவு முழலு
வன[illegible], தலையார வாரமது

உலகுவிழ வுணர்வவிழ வுளமவிழ வுயிரவிழ வுளபடியை
யுணருமவ, ரநுபூதி யானதுவும்

உரவுமுறை மனைவிமக வெனுமலையி லெனதிதய வுருவு
டைய மலினபவ, சலராசி யேறவிடும்

உறுபுணையு மறிமுகமு முயர்மரர் மணிமுடியி னுறைவதுவு
முலைவி[illegible], மடியேன் மனோரதமும்

இதழிவெகு முகககன நதியறுகு தறுகணர விமகிரண தரு
ணவுடு, பதிசேர்சடாமவுலி

இறைமகிழ வுடைமணியொ டணிசகல மணிகலென விமை
யமயி றழுவுமொரு, திருமார்பி லாடுவதும்
இமையவர்க ணகரிவிறை குடிபுகுத நிருதர்வயி றெரிபுகுத
வுரகர்பதி, யபிஷேக மாயிரமும்
எழுபிலமு மெறுமெறென முறியவட குவடிடிய விளைய
தளர் நடைபழகி, விளையாடல் கூருவதும்
இலரியகனி கடலையய ரொடியல்பொரி யமுதுசெயு மிலகு
வெகு கடவிகட, தடபார மேருவுடன்
இகலிமுது கிரிகிரி நெரியவளை கடல்கதற வெழுபுவியை
யொருநொடியில், வலமாக வோடுவதும்
எறுழ்புலி கரடியரி கரிகடமை வருடையுழை யிரலைமரை
யிரவுபக, லிரைதேர்க டாடவியில்
எயினரிடு மிதணதனி லிளகுதினை கிளிகடிய விளிதுபயில்
சிறுமிவளர், புனமீது லாவுவதும்
முதலவினை முடிவிலிரு பிறையெயிறு கயிறுகொடு முது
வடவை விழிகழல, வருகால தூதர்கெட
முடுகுவது மருணெறியி லுதவுவது நினையுமவை முடிபவரு
வதுமடியர், பகைகோடி சாடுவதும்
மொகுமொகென மதுபமுரல் குரவுவிள வினதுகுறு முறி
யுமலர் வகுளதள, முழுநீல நீவரமும்
முருகுகமழ் வதுமகில முதன்மைதரு வதும்விரத முனிவர்
சுருதரியதவ, முயல்வார்த போபலமும்
முருகசர வணமகளி ரறுவர்முலை நுகருமறு முகருமபிசர
ணமென, வருள்பாடி யாடியிக
மொழிகுழற வழுதழு துருகுமவர் விழியருவி முழுகு
வதும் வருகவென, வுகைகூவி யாளுவதும்
முடியவழி வழியடிமை யெனுமுரிமை யடிமைமுழு துல
கறிய மழலைமொழி, கொடுபாடு மாசுகவி



முதலமொழி வனைநிபுண மதுபமுக ரிதமவுன முகுளபரி
மளநிகில, கவிமாலை சூடுவதும்
மதசிகரி கதறிமுது முதலைசவ டாநெடிய மடுவில்
வெருவியொரு, விசையாதி மூலமென
வருகருணை வரதனிக லிரணியனை நுதியுகிரின் வகிருமட
லரிவடிவு, குறளாகி மாபலியை
வலியசிறை யிடவெளியின் முகடுகிழி படமுடிய வளரு
முகி லிருதனிரு, பதுவாகு பூதரமும்
மருடமொரு பதுமுறிய வடுபகழி விடுகுரிசின் மருகனிசி
சரர்தளமும், வருசாரதாசாரனும்
மடியமலை பிளவுபட மகரசல நிதிகுறுகி மறுகிமுறை யிட
முனியும், வலிவேல னீலகிரி
மருவுகுரு பதியுவதி பவதிபக வதிமதுர வசனியபி ராமிக
வரி, புமையாள்தரி சூலதரி
வனைசமது பதியமலை விசயைதிரி புரைபுனிதை வனிதை
யபிநவையனை, யபிராம நாயகிதன்
மதலையைமலை கிழவனறு பவனபய னுபயசதுர் மறையின்முத
னடுமுடிவின், மனநாறு சீறடியே. (௧)

---

## வேல்வகுப்பு.

---

தனத்தன தனத்தன தனத்தன தனத்தன தனத்த
தன தனத்தன, தனத்தன தான
பருத்தமுலை சிறுத்தவிடை வெளுத்தநகை கறுத்தகுழல்
சிவத்தவிதழ் மறச்சிறுமி, விழிக்குநிக ராகும்
பனைக்கைமுக படக்கரட மதத்தவள கசக்கடவுள் பதத்
திடுநி களத்துமுளை, தெறிக்கவர மாகும்
பழுத்தமுது தமிழ்ப்பலகை யிருக்குமொரு கவிப்புலவ
னிசைக்குருகி வரைக்குகையை, யிடித்துவழி காணும்

பசித்தலகை முசித்தழுது முறைப்படுதெ லொழித்தவுண ருரத்துதிர நிணத்தசைகள், புசிக்கவரு ணேரும்

சுரர்க்குமுனி வரர்க்குமக பதிக்கும்விதி தனக்குமரி தனக்குநரர் தமக்குமுறு, மிடுக்கண்வினை சாடும்

சுடர்ப்பரிதி யொளிப்பநில வொழுக்குமதி யொளிப்பவலை யடக்குதழ லொளிப்பவொளி, ரொளிப்பிரபை வீசும்

துதிக்குமடி யவர்க்கொருவர் கெடுக்கவிடர் நினைக்கினவர் குலத்தைமுத லறக்களையு, மெனக்கொர்துணை யாகும்

சொலற்கரிய திருப்புகழை யுரைத்தவரை யடுத்தபகை யறுத்தெறிய வுறுக்கியெழு, மறத்தைநிலை காணும்

[illegible]கிரமன் முருக்கலரி னெருக்குமதி தரித்தமுடி படைத்தவிறல் படைத்தவிறை, கழற்குநிக ராகும்

தலத்திலுள கணத்தொகுதி களிப்பினுண வழைப்பதென மலர்க்கமல கரத்தின்முனை, விதிர்க்கவளை வாகும்

தனித்துவழி நடக்குமென திடத்துமொரு வலத்துமிரு புறத்துமரு கடுத்திரவு, பகற்றுணைய தாகும்

சலத்துவரு மரக்கருடல் கொழுத்துவளர் பெருத்தகுடர் சிவத்ததொடை யெனச்சிகையில், விருப்பமொடு சூடும்

திரைக்கடலை யுடைத்துநிறை புனற்கடிது குடித்துடையு முடைப்படைய வடைத்துதிர, நிறைத்துவிளை யாடும்

திசைக்கிரியை முதற்குலிச னறுத்தசிறை முளைத்ததென முகட்டினிடை பறக்கவற, விசைத்ததிர வோடும்

சினத்தவுண ரெதிர்த்தரண களத்தில்வெகு குறைத்தலைகள் சிரித்தெயிறு கடித்துவிழி, விழித்தலற மோதும்

திருத்தணியி லுதித்தருளு மொருத்தன்மலை விருத்தனென துளத்திலுறை கருத்தன்மயி, னடத்துகுகன் வேலே. (உ)

# மயில்வகுப்பு.

தானதன தந்ததன தானதன தந்ததன தானதன தந்ததன, தந்த தனன

ஆதவனு மம்புலியு மாசறவி ளக்கியுமி ழாலமரு வம்பணியி, ரண்டு மழுதே

ஆறுமுக னைந்துமுக னேனுமுக னெங்கடவு ளாமெனமொ ழிந்துகல, வென்று விடுமே

ஆர்கலிக டைந்தமுது வானவரு ருந்தவரு ளாறிபக வன்றுயில, னேர்தன் மணிசேர்

ஆயிரபி ருந்தலைக ளாய்விரிப ணங்குருதி யாகமுழு துக்குலைய, வந்த றையுமே

வேதமுழு தும்புகலி ராமனொரு தம்பிநிசை விட[illegible]ன ரு, ந்தமையன், மைந்த னிகலாய்

வீசுமர வின்சிதறி யோடவரு வெங்கலுழன் மேவிடியெ னும்படிமு, ழங்கி விழுமே

மேதினிசு மந்தபெரு மாசுணம யங்கநக மேவுசர ணங்கொணி, லை, கெங்கு முழுமே

வேலுமென வெண்டிசையில் வாழுமர கந்த[illegible]ர வேயமுலை லுஞ்சினமு, டன்ப டருமே

போதினிலி ருந்தகலை மாதினைம ணந்தவயர் போதனைபி ணித்துமலர், கொண்டு முறையே

பூசனைபு ரிந்துகொடி யாகியகி ழோன்[illegible]துகிர் போன்முடிவி ளங்கவரு, மஞ்ச மயிலே

பூதரொடு கந்தருவர் நாதரொடு கிம்புருடர் பூரணக ணங்களொடு, வந்து தொழவே

போரிடவெ ன்றுவெகு வாரணக ணங்களும்போ யிணைமெ லும்படியெ, திர்ந்து விழுமே

கோதகலு மைந்துமலர் வாளிமத னன்பொருவில் கோலவுட [illegible]ருகி, [illegible]ந்து விழவே

கோபமொடு கண்டவிழி நாதரன் யும்பணிகள் கூடிமன மஞ்சிவலை, யென்று புகவே

கூவியிர வந்தமுனர் வாழியென நின்றுபொரு கோழி
யொடு வென்றிமுறை, யும்ப கருமே
கோலமுறு செந்தினகர் மேவுகும ரன்சரண கோகனத
மன்பொடு வணங்கு மயிலே. (க)

## கொலுவகுப்பு.

தனதன தனதன தனதன தனதன, தனத்த தனனு தனத்த
தனனு

அருமறை யுவன்முத லரியான் மகபதி, யனங்க னிமை
யா ரினத் தொருபால்
அருணனு மதியமு மனலெழு கனலியு, மிணங்கி னெருங்கும்
கணங்க ளொருபால்
வருணனு நிருதியும் வழியொடு தனதனு, மகிழ்ந்து மிகவே
புகழ்ந்த தொருபால்
வயிரவ ரொடுபதி ருவரொரு முரகரும், வரங்கள் பெறவே
யிரங்க வொருபால்
இருடிக ளெவர்களு மீனியகி னரர்களு, மிணங்கி யெதிரே
வணங்க வொருபால்
இமகர வனுமெழு விளவல்களனைவரு, மியன்ற நெறியே
முயன்ற தொருபால்
உரும்வி குறளிகு ளொடுபெரு முகமுக, நுரைத்து பரிவாய்
நிரைத்த தொருபால்
உடுவொடு கடவுள ளிருவரு முறைமுறை, யுகந்து தொ
ழுதே மிகுந்த தொருபால் (க)
அட்டதிசை முதலனை வரையுற வெருசன, மதுத்தி
யருகே யொதுங்க வொருபால்
அயன்முடி திருகிய வயவனு நியமமொ டடங்கி வலமே
தொடங்க வொருபால்
மடல்புனை புகரொடு வருபதி னொருவரு, மருங்கி னுறவே
நெருங்க வொருபால்



மருவொடு குவிரு வருநிசை வலமொடு, வசிந்து மனமே
கசிந்த தொருபால்
மிடல்நிறை விறலரி விமலர்க ளருள்சுதன், வியந்து விழை
வாய் நயந்த தொருபால்
வெயில்விரி சுடரவன் மகனெனு மதிமகன், விளம்பு முறை
யே கிளம்ப வொருபால்
உடலொளி மவுளிக னுடனுப லிடதரு, முளங்கு ளிரவே
விளங்க வொருபால்
உமைதிரு மகளிவ மகள்கலை மகளொடு, முகந்தெ வருமே
தொகுத்த தொருபால் (உ)
அதிபகி ரதியபி ரவிபக வதிசசி, யாம்பை யருமே நிரம்ப
வொருபால்
அழகிய கவுரியொ டிலகிய வலவையு, மடைத்து தயவாய்
மிடைந்த தொருபால்
மதியர சருநிறை வசியரும் வினைஞரு, மலிந்து முகமே
பொலிந்த தொருபால்
வருசிவ னடியவ ராகர வெனமுறை, முழங்கு கடல்போலே
முழங்க வொருபால்
விதிமுறை கருதியை வசைபுரி கருவிகள், விளைந்த வொ
லிவா னளைந்த தொருபால்
விதமுட னபிநய வனிதையர் சதிமுறை, விரித்த நடமே
புரிந்த தொருபால்
உதிர்தரு மலர்விரை யுறுபுகைமிர்கமத, மமிழ்ந்த மணமே
கமழ்ந்த தொருபால்
ஒழுகிய கிரிதொடு பணிதம தநிசட,ருவந்த வொளியே நிவ
ந்த தொருபால் (ங)
அரியக டெனமுக டளவிய வொருகுடை, யமர்ந்த நிழலே
சமைந்த தொருபால்
அருமட வனமென விருபுடை கவரிக, ளசைந்த வழகே
யிசைந்த தொருபால்
வரிசைசெப் பியயொடு வனமயில் சிவிறியின், வயங்கு
சிறகா லியங்க வொருபால்

மறுகட லினிலெழு மிறைமதி யருகென, வரித்த பனிநீர் சொரிந்த தொருபால்
விரியிருள் வலிதரு கிரணம தெனவொளிர் குஞ்ச முலிவீச குஞ்ச மொருபால்
வியன்மர கதமணி மிளிர்தரு கனகெதிர், விரைத்த திரையாய் நிரைத்த தொருபால்
உரியவெ ளிலையுட னுயரிய கமுகினி, லுகுத்த கனியே பகுத்த தொருபால்
உலகுன வினைதய ரவரவர் விரதமொ, டுணர்ந்து கனியே கொணர்ந்த தொருபால் (௫)
அறுசுதி ரவமென வறுமணி மவுலிக, ளடர்த்து வெயிலே படர்ந்த தொருபால்
அறுமதி யெனவரு திருமுக சததள, மலர்ந்த மலரே மலர்ந்த தொருபால்
மறுவறு கடலென மருவுப னிருவிழி, வழிந்த வருளே பொழிந்த தொருபால்
வனைதரு மகரமு மணியணி பணிகளும், வயங்கு குழையே தயங்க வொருபால்
இறுகுபொன் மலையொடு மிடைந்த னிருபுய, மிசைத்து கெடிவா ளசைந்த தொருபால்
எழில்வளை யணியப னிருகையி லயின்முத, லிலங்கு படையே துலங்க தொருபால்
உறவுரை மருவிலைய நிகர்தரு முரமிசை, புடன்கொள் புரிநூல் கிடந்த தொருபால்
ஈருமென விசைதரு மெதிர்கெடர் மவுணரு, ளுலைத்த வுடைவாள் சிறந்த தொருபால் (௬)
அனைவரு மருமறை முறையிடு பரிபுர, மலங்கு மிருதாள் குலுங்க வொருபால்
அளவறு கலவியின் முழுகிய குறமக, ளமர்ந்து வொளியாய் வளர்ந்த தொருபால்
வனைதரு மிளிருறை சதமக னருண்மகள், வதிந்து மணமே பொதிந்த தொருபால்



திருமடி யவரிடம் வலியச னதமவர, வளர்ந்த சபையே கிளர்ந்த தொருபால்
நினைவொடு பணிபவர் வினைதுகள் படவெதிர், நிலைத்து திருநீ றணிந்த தொருபால்
நிறைமல ரொடுநல கலையையு முயர்குரு, நினைத்து தரவே புனைந்த தொருபால்
நிசைகர ழுலவுச னிதியினி விரவலர், தெளிந்த தமிழே பொழிந்த தொருபால்
சிவபர கிரியினி லொருசியன் வடிவொடு, இருந்த முருகேச னிருந்த கொலுவே. (௧)

## சிவகிரி வகுப்பு.

தத்த தத்த தத்த தத்த தத்த தத்த தத்த தத்த தத்த தத்த தத்த தத்த, தனதானன.

மெத்த மெத்த வச்ர மத்தின் மெத்த மெத்த விக்ரமத்தின் மெத்த மெத்த வக்ர வெற்றி, மிகுபாசமே
விட்டு விட்டு முக்கு முக்கு கட்டு கட்டு குத்து குத்து வெட்டி வெட்டெ னச்சி னத்து, சமனுடியே
சத்த மிட்ட தட்டி கெட்டெ மிற்றி வெக்க டித்து முற்கு ளிக்க மிட்டெ லேப்பி டிக்க, வருபோதிலே
தத்த ளிக்கும் புத்தி யைத்தி டப்ப டுத்தி யொத்தி டத்த ளிப்பு முத்தி மெய்த்து லைக்க வரவேணுமே
எத்த லத்து மெப்ப திக்கு மெப்ப டிக்கு மெச்சரித்து நற்ப தத்தை யுச்ச ரிக்கு, நினையாளியே
இட்டம் வைத்த வர்க்க நுக்ர கச்ச முத்ர வித்தை யிப்ர சித்த நித்ய முத்த மிழ்க்கு, மருள்போதனே
அத்ர பத்ர சித்ர மிட்ட மிற்ப டைத்த மிற்கி லைத்த லக்கு ழற்ற பொற்கு ழத்தி, மணவாளனே
அத்த னுக்கு மைக்கி தத்த புத்ர சித்தி முத்தி யைச்செ யப்பு தச்சி வக்கி ரிக்குன், முருகேசனே.

# திருச்செந்தில்வகுப்பு.

தந்த தந்த தந்த தந்த தந்த தந்த தந்த தந்த தந்த தந்த தந்த தந்த, தனதானனை

அந்த பந்த மந்த விந்தை செஞ்சொ லின்ப பந்த நந்த நந்த மந்த வம்பொ ருந்த, தமிழ்பாடியே

தஞ்ச மென்று சென்ற சென்ற கந்த விஞ்ச நெஞ்சு நந்த தங்கள் புன்பு நின்ற நின்று, மெலிவேதியே

சிந்து சொந்த சொந்த சைந்த சைந்த வெம்பி வெம்பி சிந்தி சிந்தி பிந்த வெந்து டம்பு, யழிபோதுமா

சிந்த முன்பு ருந்த தந்தி யின்கு லங்க லங்கு பன்பொ ர்ந்த துன்ப மென்றொ ழிந்த, சுரைசேருமேன்

அந்த ரங்க வண்ட ரண்ட மண்ட லந்து லங்க நின்ற சந்த சைந்து பந்தெ முமப, ஒகாரதியார்

அங்க டங்கு மண்ட தண்ட கண்ட புத்தி சண்டை வந்த வந்த ருண்டு மண்டுடை சிந்த, வுடர்கோபனே

கந்த சந்த நங்கு கும்ப சொக்கை யிந்தி சண்டை டக்கை மங்க ளம்பு மந்த வென்றி, யணிசேயனே

செம்பு மஞ்ச முத்தி கழ்ந்தி ருந்தி நந்தி ரஞ்செ றிந்து கஞ்ச மன்று வாழ்ந்த செந்தில், முருகேசனே. (க)

# திருப்பழனிவகுப்பு.

தந்தனன தந்தனன தந்தனன தந்தனன தந்தனன தந்தனன தந்தனன தந்தனன தந்தனன தந்தனன தந்தனன, தனதானனை

எந்தவினை யும்பவமு மெந்தவிட மும்பட மெந்தவிக ழும்பிணியு மெந்தவிசும் பும்கொடிய மெந்தவினை யுஞ்சிதிக, முறுகையிலே



எந்தவிர வுந்தனிமை யெந்தவழி யும்புகுத வெந்தவிட முஞ்சனையபி லெந்தமுக மும்புகலு மெந்தமொழி யுந்தமிழு மெந்தவிசை யும்பெருமை, சிதருமலே

வந்தனைசெய் தன்சரண நம்புதல்பு ரிந்தவருள் வந்தனுதி னாந்தனிலு மெஞ்சினிலை வின்படிவ ரந்தரவு வந்தருளி தம் பெறவ தன்றிசெடி, வலிவிசியே

வஞ்சவிழி சண்டனுறு கின்றபொழு தங்குமர கந்தவென நின்கரைய வந்தெளிவு தந்துயிர்வ ருந்தபய முந்தனிமை யுந் தவிர வஞ்சலென, வரவேணுமே

தந்தனன தந்தனன டிண்டிகுடி டிண்டிகுடி குண்டமட குண்டமட மண்டமென நின்றமுர சந்தியிலே பம்பைதுடி டிண்டிமமு ழங்குமொலி, திசைவீரமே

தண்டவுமர் மண்டகரர் மண்டைகினை மென்றலகை யுண்டிமிழ்தல் கண்டமுர நிந்திரன்வ னங்குபத தண்டைசிறு கிங்கிணிபு லம்பிடவ ரும்பவனி, மயில்வாகனே

செந்தரிசை முத்தபட மென்றமரு ணங்கிறை சந்தனவ னந்துலவு மந்திருதி கொண்டபல்லிச றிந்தகமு கின்புடைய துங்கடவ ளாந்துரிபிர், மடல்சாடவே

சிந்தியவ ரம்பையல வின்கனியில் வந்தவிழு மென்கனியு டைந்தகனை விண்டநறை கொண்டுசெறு செண்பகவ னங்கள் வளர் தென்பழனி யம்பதியின், முருகேசனே. (க)

# திருப்பரங்கிரிவகுப்பு.

தான தந்தன தான தந்தன தான தந்தன தான தந்தன தான தந்தன தான தந்தன தான தந்தன தான தந்தன தான தந்தன தான தந்தன தான தந்தன தான தந்தன, தனதானன

காதியுங்குல மாவ துங்குடி யாவ துஞ்சன மாவ துங் கிளை தார முந்திர பால ரும்பிர தான முஞ்சுரு கான்மை

யும்பெறு தானமும்பகு மானமுஞ்சிவ ஞானமும்பல கோல
மும்புரி, தொழிலோவையே

தாழ்வகன்றிதவாழ்வும் வெம்பிணி சோர்வு மக்கதிலாதுர
ர்தனிலாவநத்தனர் சாவொழிந்திடு யோக முஞ்சிவ பேறு
பெற்றதி தானமுஞ்செய்த ராசகண்டறு மேலவரும்பொது
வாகுமென்றனை, திருதாளேயே

இதினெஞ்சயராத்திரைத்திரி காலமுந்தொழுவோர்விரும்
பியதேத மன்புடனேத ருங்கிரியையாக வந்து பூதத்
தமு ஞாலகடர்திட வேபு ரந்தருள் கூருமிக்கித சேவை
சய்பிய, பழுகாவைய

துறைக வந்தனை யாய்வ ணங்கிய வேளமு திக்கையு நிதிகளை
க்கிடி மீவனை வத்திரனி தாய்வ ரந்தர வேறு மென்றும மை
குத்திடு மோதி ஸன்றினை நான்வி ளம்புத னிய நிதுயி தேனி
ரங்கிலை, யறியேனோயா

ஆதி யர்தம ரோதி வித்துவு காத முய்மிரி யாகி றைந்தவ ருடை
வினைபொ ரூய சந்தி சோதி மன்பொலி திதியமப்பரு ளாக
கின்றிய பாமு ரன்சரு ளுமு யன்புவ ஞேசி றைஞ்சிடு, வெதிர
காணியா

தாட நிவ்செச் செகி னைகளை சேரு டண்ட மடாட மன்
டம தாகி [illegible] நாகினை மிதாதி னைகி[illegible] திகிரி தோவெ
ஞ்சதொனி யாரி லும்பொ[illegible] [illegible] மேச டம்புரி
பாதகம்பா, [illegible]

மாதி ரந்தனை யாக [illegible] வந்திரை மோச வம்புவி
மாகமண்டல டாக [illegible] மெரு விளறலெ பெருஞான
[illegible] மொன்றி [illegible] ருக்குகள் வானி ரம்பிய மேவ
ருகதிர், வடிவேய[illegible]

வானக திர் [illegible] மேவு கொண்டவெயுதி நின்
றவெ யாதி னைக்கணி [illegible] கோக ரஞ்செறி பகை
வக்கதம் பேசி நந்த [illegible] விஞ்சையர் குழப ரங்கிரி
முருகேசனே. (அ)